உலகத் திருக்குறள் மாநாடு - கருத்தரங்கு
சிறப்பு மலர்
2000



தமிழ்நாடு திருக்குறள் பேரவை
திருச்சிராப்பள்ளி

உலகத் திருக்குறள் மாநாடு - கருத்தரங்கு சிறப்பு மலர்

2000




தமிழ்நாடு திருக்குறள் பேரவை
திருச்சிராப்பள்ளி



திருவள்ளுவர்



தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் தலைவர், தமிழ்நாடு திருக்குறள் பேரவை



முத்தமிழ் மூதறிஞர், தமிழக முதல்வர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்



பேராசிரியர் மாண்புமிகு க. அன்பழகன் அவர்கள், கல்வி அமைச்சர்

பொருளடக்கம்

सत्यमेव जयते

OFFICER ON SPECIAL DUTY

President's Secretariat.
Rashtrapati Bhavan.
New Delhi - 110004.
20th December. 1999



Dear Shri Ezhil Muthalvan,

The President of India, Shri K.R. Narayanan, is happy to know that the Tamil Nadu Thirukkural Peravai, Thiruchirapalli is convening an International Thirukkural Conference - Seminar from 7th to 9th January, 2000.

The President extends his warm greetings and felicitations to the participants and organisers and wishes the Conference - Seminar all success.

With regards,

Yours sincerely,

S.N. Sahu


Shri Ezhil Muthalvan,
International Thirukkural
Conference - Seminar
17, Bharathidasan Road
Tiruchirapalli - 620 001.

KANCHAN GUPTA
Officer on Special Duty

PRIME MINISTER'S OFFICE
New Delhi - 110 011

सत्यमेव जयते

21st December, 1999



Dear Shri Ezhil Muthalvan,

The Prime Minister is happy to learn that Tamilnadu Tirukkural Peravai has planed to convene an International Thirukural Conference from January 7-9 2000 at Thiruchirapalli. He extends his greetings to the participating scholars and wishes the organisers all success.

With best wishes,

yours sincerely
Kanchan Gupta

Shri Ezhil Muthalvan,
International Thirukkural
Conference - Seminar
17, Bharathidasan Road
Tiruchirapalli - 620 001.

सत्यमेव जयते

SPEAKER LOK SABHA

13 Dec 1999

Message

I am happy to learn that the Tamil Nadu Thirukkural Peravai is convening an International Thirukkural Conference from 7th to 9th January 2000 at Tiruchirappalli, Tamil Nadu and a commemorative Souvenir will be brought out.

The Thirukkural written by the great Saint Thiruvalluvar which is an immortal one is serving the humanity, both individually and collectively. It serves the world, cutting across all religions, regions and nations.

On this happy occasion I congratulate the Tamil Nadu Thirukkural Peravai for organising this International Thirukkural Conference and wish the Seminar all success.

G.M.C. Balayogi

सत्यमेव जयते

MURASOLI MARAN

MINISTER OF COMMERCE & INDUSTRY

MESSAGE

I am happy to know that an International Thirukkural Conference will be held at Tiruchirapplli from 7-9 January, 2000, organised by the Tamil Nadu Thirukkural Pervai under the presidentship of Thavathiru Kundrakudi Ponnambala Adigalar. I am glad that 200 scholars from various parts of the world will attend the Conference. This is indêed a laudable effort to spread the succinct message of Thirukkural to other parts of the world.

I have pleasure in wishing the Conference all success

Murasoli Maran.
Dec, 1999



Tmt. M. Sheela Priya, I.A.S.,
SECRETARY TO THE GOVERNOR

RAJ BHAVAN
CHENNAI

Date 28.12.99

MESSAGE

Her Excellency the Governor of Tamil Nadu, Justice M. Fathima Beevi is pleased to learn that the 'International Thirukkural Conference - Seminar' is to be held at Jamal Mohamed College, Tiruchirapalli in January 2000. Her Excellency sends her best wishes for the successful conduct of the Conference and Seminar.

M. SHEELA PRIYA

Thiru. R. Balagangatharan,
Co - Ordniator,
International Thirukkural
Conference - Seminar
17, Bharathidasan Road
Tiruchirapalli - 620 001.

பசும்பொன் தா. கிருட்டிணன், எம். ஏ.,
நெடுஞ்சாலை மற்றும் துறைமுகத்
துறை அமைச்சர்

தொ. பே : 044 - 564113
தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

28.12.99



வாழ்த்துச் செய்தி

பேரன்புடையீர், வணக்கம்.

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களைத் தலைவராகக் கொண்ட திருக்குறட் பேரவை "உலகத் திருக்குறள் மாநாடு - கருத்தரங்கு" ஒன்றினை வரும் சனவரி (கி.பி. 2000) 7,8,9 ஆகிய தேதிகளில் திருச்சி மாநகரில் நடத்துவது குறித்து எனது மகிழ்ச்சியைத் தெரிவிப்பதோடு, இதற்கான ஏற்பாடுகளை முன்னின்று நடத்திடும் தங்களையும், எனது ஆருயிர்ச் சகோதரர் திரு பாலகங்காதரன் அவர்களையும், பேரவையின் ஏனைய நிர்வாகிகளையும் மனமுவந்து பாராட்ட விழைகின்றேன்.

2000-ம் ஆண்டு, வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருமானின் ஆண்டாக அமைந்துள்ளது. 1999-ம் ஆண்டையும், 2000-ம் ஆண்டையும் இணைத்திடும் வண்ணம் டிசம்பர் 31-ம் நாளும், சனவரி 1-ம் நாளும், குமரி முனையில், ஒரு இலக்கியத் திருவிழாவும், அதனையொட்டி வள்ளுவப் பெருமானின் 133 அடி உயர கற்சிலையொன்றும், இந்த நூற்றாண்டின் வாழும் வள்ளுவர், தமிழினத் தலைவர், தமிழகத்தின் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் திறந்து வைக்கின்ற வரலாற்று நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது. அண்ணன் கலைஞர் "அய்யன்" வள்ளுவனுக்கு அழியா நினைவுச் சின்னத்தை மீண்டும் ஒரு முறை படைக்கின்றார். இச்சிலை உலக அதிசயங்களில் ஒன்றாக அமையவிருக்கின்றது. குமரி முனை வருவோர் வள்ளுவனைப் பார்க்காமல், வணங்காமல் இனிப் போகமாட்டர்கள். அப்படியொரு நிகழ்ச்சி 2000-ம் ஆண்டு தொடங்கும் முதல் நாளே நடைபெறுகிறது.

அதனைத் தொடர்ந்து, தங்கள் திருக்குறட் பேரவை, உலகத் திருக்குறள் மாநாடு - கருத்தரங்கினை, திருச்சியில் நடத்திக் காட்டவிருக்கிறது. சனவரி முதல் வாரம் குமரி முனையில் அள்ளிப்பருகிய குறளின்பத்தைத் தொடர்ந்து இரண்டாவது வாரம் திருச்சியில்

குறளமுது அருந்திட தமிழ்ப்பெருங்குடி மக்கள் திரண்டிட உள்ளனர். அருமருந்தாம் அந்தக் குறளமுதத்தையும் படைத்திட தலைவர் கலைஞர் அவர்கள் வருகிறார்கள். எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்; தமிழர் இல்லத்திலும் தமிழ்; அவர்தம் உள்ளத்திலும் தமிழ் என்பதோடு, கோயில்களிலும் தமிழ்க் குடியிருக்கும் அக்கோயில்களைப் பேணிக்காக்கும் மடங்களிலும் தமிழ் மடை திறக்கும் என்ற கொள்கைக்குச் சொந்தக்காரராக விளங்கிய தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் வாரிசு. தவத்திரு பொன்னம்பல அடிகளாரின் அன்பான அழைப்பை ஏற்றுக்கொண்டு தமிழினத்தில் ஒப்பாருமிக்காருமான தலைவர் கலைஞர் அவர்கள், இந்நிகழ்ச்சியில் பங்கேற்று விழாவிற்கு மகுடம் சூட்டிட சனவரி 9-ம் நாள் வருகிறார்கள். சனவரி 7-ம் நாளும், 8-ம் நாளும் தமிழறிஞர் பலரும் குறளோவியம் தீட்டித் தங்கள் திறமைகளை வெளிக்காட்டிட இருக்கின்றார்கள். இப்படிப் பல்வேறு நிகழ்ச்சிகள் இவ்வாண்டுத் தொடக்கத்திலேயே செந்நாப்புலவர் திருவள்ளுவருக்கு இயற்கையாகவே அமைந்துவிட்டதால்தான் இவ்வாண்டினை திருவள்ளுவர் ஆண்டெனக் குறிப்பிட விரும்பினேன்.

திருக்குறட் பேரவையின் இவ்விழா எல்லா வகையிலும் சிறப்படைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மா நாட்டினையொட்டி, வெளிவரும் "மலர்" என் போன்றோர்க்கு "தண் தேன் துளிர்ப்பதோர் வெளியுறு நறுமலராய்" அமையட்டும் என வாழ்த்துகிறேன்.

அன்பன்

பசும்பொன் தா. கிருட்டிணன்

மு. தமிழ்க்குடிமகன் எம்.ஏ., பி.எச்.டி.,
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு,
இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

16. 12. 99

தி. பி. 2030, மார்கழி1.

வாழ்த்துச் செய்தி

தமிழ்நாடு திருக்குறள் பேரவை, உலகத் திருக்குறள் மாநாடு - கருத்தரங்கு, 2000 சனவரித் திங்கள் 7, 8, மற்றும் 9 ஆகிய நாட்களில் நடத்தவிருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி. விழா நிகழ்ச்சிகள் சிறப்புடன் நடைபெற எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகள்.

அன்புடன்

மு. தமிழ்க்குடிமகன்

பெறுநர்
திரு. எழிழ்முதல்வன்
17, பாரதிதாசன் சாலை
திருச்சிராப்பள்ளி - 620 001

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவாவடுதுறை - 609803
(நாகைமாவட்டம்)

ஆதீன கர்த்தர் அவர்கள் ஆதீனம்

11.12.99

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைபொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க

வாழ்த்துரை

தமிழ்நாடு திருக்குறட் பேரவை அண்மையில் ‘உலகத் திருக்குறள் மாநாடு கருத்தரங்கு’ ஒன்றனை நடத்த இருப்பதும் அதுபோழ்து சிறப்பு மலர் மலரவுள்ளதும் அறிய மகிழ்ச்சி.

மக்கள் வாழ்வாங்கு வாழும் நெறிஅருளி வாழ்வினைப் பயனுடையதாகவும் இன்பம் நிறைந்ததாகவும் செய்வது தமிழகம் உலகத்திற்குத் தந்த ஒப்பரிய செல்வம் திருக்குறள். குறள்நெறி எங்கணும் தழைய மாநாடு - கருத்தரங்கு நடைபெறுவதும் நுண்மாண் நுழைபுலம் மிக்க நல்லறிஞர்களின் அரிய படைப்புகளைக் கொண்டு மலர் வெளிவருவதும் பாராட்டுதற்கு உரியன.

மாநாடு - கருத்தரங்கு சிறப்பாக நடைபெற்று உயர்பயன் விளைக்கவும், மாநாட்டு மலர் குறள்மணம் கமழ மலர்ந்து இன்ப அன்பினைப் பெருக்கவும், அருள நம் ஆன்மார்த்த மூர்த்தி அருள்தர ஞானமா நடராசப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

பெறுநர்
திரு. எழில்முதல்வன்
17, பாரதிதாசன் சாலை
திருச்சிராப்பள்ளி - 620 001

அருளாணையின்வண்ணம்
சுப்பிரமணியதம்பிரான்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவளர்திரு காசிவாசி முத்துக்மாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்.
அதிபர், காசித்திருமடம்

திருப்பனந்தாள் 612504
(தஞ்சை மாவட்டம்)

13.12.199

வாழ்த்துரை

தமிழ் நாடு திருக்குறட்பேரவை உலகத்திருக்குறள் மாநாடு - கருத்தரங்கு நிகழ்த்தவிருப்பதறிந்து மகிழ்ச்சி.

திருவள்ளுவரின் அறம் எல்லாக் காலங்களுக்கும் பொருந்துவதாகும். பயன்பாட்டுக்கு உரியதும் ஆகும். இவ்வகை மையப் பொருண்மையுடன் விரிவான மலராக இவ்விழா மலர் வெளிவருவது மேலும் மேலும் மகிழ்வைத் தருகிறது. இப்பெரிய பணி வரலாற்றுச் சிறப்பு மிக்க பணி என்றே நாம் கருதுகிறோம்.

திருக்குறளின் பலவுரைப் பதிப்பு, பல்வேறு பதிப்புகள் தொடர்ந்து கிடைக்குமாறு நிதியம் அமைத்து நம் காசித்திருமடம் திருக்குறட் பணி செய்வது போலத் திருக்குறட் பேரவையும் மாநாடு மற்றும் மலர் வெளியீட்டுப் பணியைத் தொடர்ந்து செய்து குறள்நெறியை மக்கள் வாழ் நெறியாகக் கொள்ளச்செய்ய வேண்டுமென்பதே நம் பேரவாவாகும்.

திருக்குறளை மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரும் முயற்சியில், 'திருக்குறட் சாரம்' என அறிந்தோர் கொண்டாடும் அரியதொரு நூலாகிய 'நீதிநெறி விளக்கத்தை' அருளியவர் நம் திருமடத்தை நிறுவிய அருளாளர் குமரகுருபர அடிகளார் ஆவர். திருக்குறளைப் பின்பற்றும் நோக்கில் சிந்திக்கும் இடங்களில் எல்லாம் நீதிநெறி விளக்கத்தையும் உடன் சிந்தித்தல் புலமைப்பாலதாகும்.

தமிழர் சமயமாகிய சைவ சமயத்தின் சாத்திரங்கள் திருக்குறளை அடியொற்றி எழுந்தன. எனவே குறள்நெறி, தமிழர்நெறி என்பதற்கொப்பச் சைவ நன்னெறி எனவும் சாலும்.

மதுரை பொற்றாமரைக்குளம் தென் பக்கச் சுவரில் திருக்குறள் முழுவதும் சலவைக் கல்லில் பதித்துள்ளது இத்திருமடம்.

திருக்குறள் மாநாடு, கருத்தரங்கு சிறப்புற அமைவதாகுக எனவும், மாநாட்டு மலர் மன்பதைக்குப் பெரும் பயன் நல்கும் பொன்மலராகப் பொலிந்து, பயன்வளம் சுரப்பதாகுக எனவும், இப்புனிதப் பெரும்பணிக்கு தம்மை ஆட்படுத்திக் கொண்டநல்லறிஞர்கள் அனைவருக்கும் நலங்கள் பல்கிப் பெருகுவதாகுக எனவும் எல்லா வல்ல செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

எவரெவர் எத்திறந்தர் அத்திறத்த ராய்நின்று
அவரவர்க் காவன கூறி எவரெவர்க்கும்
உப்பாலாய் நிற்ப, மற்று எம்முடையார் தம்முடையான்
எப்பாலும் நிற்ப தென.

சுபம்.

குமரகுருபரர்

சிவசிவ

Dr. P.V. Vaidyanathan
B.E., M.Tech., Ph.D. (U.K) Dip in French
and German. M.I.S.TE
Vice - Chancellor

ANNAMALAI UNIVERSITY,
ANNAMALAINAGAR P.O. 608 002.

17. 12. 99

வாழ்த்துரை

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களைத் தலைவராக கொண்ட தமிழ்நாடு திருக்குறட் பேரவை "உலகத் திருக்குறள் மாநாடு - கருத்தரங்கு" ஒன்றனை வரும் சனவரி திங்கள் 7, 8, 9 ஆகிய தேதிகளில் நடத்த இருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

நாடு, மதம், இனம், மொழி ஆகியவற்றைக் கடந்து விளங்கும் உலகப் பொதுமறை திருக்குறள் தமிழ் மொழிக்கும், தமிழர்களுக்குமுரிய தனிச்சிறப்பு மிக்க நூலாகும். மனித வாழ்வின் நடைமுறைகளுக்குத் தேவையான அனைத்து வழி முறைகளையும், தத்துவங்களையும் உள்ளடக்கிய திருக்குறள் இதுகாறும் உலகளாவிய அளவில் பலவகையிலும் பெருமைப்படுத்தப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது. காலங்களைக் கடந்து நிற்கும் தனித்தமிழ் நூலாகிய திருக்குறள் தொடங்கவிருக்கும் மூன்றாயிரமாவது ஆண்டுகளிலும் மனித குல மேன்மைக்கு வழிகாட்டும் நூலாகக் சிறந்து விளங்கும் என்பது திண்ணம்.

உலகத் திருக்குறள் மாநாடு கருத்தரங்கு சிறப்பாக நடைபெறவும், அவ்வமயம் வெளிவரவிருக்கும் சிறப்பு மலர் அரிய பல கருத்துக்களைக் கொண்டு அழகிய முறையில் வெளிவரவும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர். பி.வி. வைத்தியநாதன்

அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி 630 003.
தமிழ்நாடு.

டாக்டர் (திருமதி) க. ருக்மணி எம்.ஏ.,பி.எல்., பி.எட்., பி.எச்.டி.,
துணைவேந்தர்

வாழ்த்துச் செய்தி

உலகப் பொதுமறையாகக் கருதப்பெறும் நூல் திருக்குறளாகும். "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று மகாகவி பாரதியார் சிறப்பித்துப் பாடுவார்.

பொதுமறையை அருளிய திருவள்ளுவரை 'தமிழ்மணி' என்று புகலாது உலகிற்கு ஒளிவழங்கத் தமிழ்நாடளித்த 'வான்மணி' என்று திரு.வி.க. கூறுவதும் கருதற்பாலது. ஆழ்ந்து அகன்ற அரிய கருத்துக்களைப் பொருத்தமாகவும் சுருக்கமாகவும் கூறும் நூல் திருக்குறளாகும்.

வள்ளுவரின் வள்ளுவம் மனித குலத்தை உய்விக்கும் ஆற்றல் பெற்ற நெறியாகும். வள்ளுவம் பாராட்டப் பெறுவதற்கு மட்டும் உரித்தன்று; பயிலப் பெறுவதற்கும் உரித்தாகும்; பயிலப்பெறுவதற்கு மட்டும் உரித்தன்று; வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய உயிரோட்டமான நெறியுமாகும். மனிதனின் சிந்தனை, சொல், செயல் அனைத்திற்கும் வள்ளுவம் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது.

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரைத் தலைவராகக் கொண்ட திருக்குறட்பேரவை "உலகத் திருக்குறள் மாநாடு - கருத்தரங்கு" (கி.பி. 2000 சனவரி 7, 8, மற்றும் 9) நடத்துவது நமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருகிறது. இரண்டாயிரமாவது ஆண்டில் மனிதகுல எழுச்சிக்கு இம்மாநாடும் கருத்தரங்கும் வித்தாக அமைய வாழ்த்துக்கள்.

வாழ்க வள்ளுவம்! வளர்க மனிதகுலம்!

பெறுநர்
திரு. எழில்முதல்வன்
17, பாரதிதாசன் சாலை
திருச்சிராப்பள்ளி - 620 001

க. ருக்மணி

புதிய நூற்றாண்டின் புத்தம்புது நிகழ்வாகத் தமிழகத்தில்
திருச்சியில் நடைபெறும்

உலகத்திருக்குறள் மாநாடு

முழு வெற்றிபெற வாழ்த்தி, ஐரோப்பா, ஜெர்மனியிலிருந்து வரும் வாழ்த்து!

மலர்களின் சேர்க்கையால் ஆகும் மாலை மனிதர்க்குப் புகழ்சேர்க்கும் அணியாய் ஆகும்.
பலர்கூடி அரங்கொன்றை அமைக்கும் காலை பணிசெய்தோர் புகழ்காக்கும் பணியும் சேரும்
தமிழன்னைக் கணிவித்த மாலையென்றே தமிழ்ப்புலவன் வள்ளுவன் நமக்களித்த
தமிழ்ச்சொத்து திருக்குறள் எனவுணர்த்த தமிழ்ச்சபை கூடுதல் பெருமையாகும்.

தமிழ்வாழ என்பதாய் உழைப்பதோடு தமிழரின் தரம் கூட உழைக்க வேண்டும்
தமிழ்பற்றிப் புகழ்மட்டும் பேசலன்றி தமிழரைப் புகழ்க்குரியர் ஆக்கவேண்டும்
தமிழ்ச்சேவை தனில் ஒன்று தமிழர் வாழ வழிகாட்டி வழிநடத்திச் செல்லலாகும்.
தமிழ்மக்கள் பேதங்கள் எதிலும் சொல்லிப் பிரியாமல் காத்திடல் கடனுமாகும்.

அழைப்பிதழ் கண்டதும் அகமகிழ்ந்தென் ஆர்வத்தைஉடன் சொல்லிக் காத்திருந்தேன்
சளைக்காமல் குறள்காட்டும் பாதைசொல்லிப் பணிசெய்யும் அவைதனைப் போற்ற நின்றேன்
உழைக்குமிந் நாட்டினில் நேரமின்றி நேரிலே வரல்தட்டிப் போகக்கூடும்
அழைப்பினை அதற்காக மறுக்கலாமோ? ஆவன செய்வதே என்றிருந்தேன்

அன்னைக்கு அணிசூட்டி மகிழ்வதில்தான் பிள்ளைக்கு எத்துணை இன்ப மென்பார்
அன்னைத்தமிழ் வளர்ச்சியின் அக்கறையெம் மெழுத்திலும் கருத்திலும் மிளிருமென்போம்
இன்றைக்கு உலகெல்லாம் நிறைந்துவிட்ட இளந்தமிழ்ச் சமுதாயம் திரும்பும்போது
இன்தமிழ்உணர்வினில் ஊறிநிற்க இனிதான வழிகள்நாம் கண்டு சொல்வோம்

தமிழ்கூறு நல்லுலகின் பொன்நிகர் நாள் திருக்குறள் மாநாடு நடத்திடும்நாள்
தமிழ்நாடு தந்தநல் தலைவரெல்லாம் திரளாகக் குறள் கூறும் தித்திக்கும் நாள்
தமிழ்மண்ணில் நான்நின்று கலந்துகொண்டால் தமிழ்சொல்லும் என்னுள்ளம் நிறைவு கொள்ளும்.
தமிழன்னை அகமதில் நானிருந்தேன் எனவுள்ளம் தவறாத மகிழ்ந்து நிற்கும்

கடல்கடந்து நின்றுநான் வாழ்த்துகின்றேன் கடமையில் முன்னிற்கும் நீவிர் வாழ்க!
மடல் வரைந்து உலகத்துத் தமிழரெல்லாம் இணைக்கின்ற உயரெண்ணும் வாழ்க; வாழ்க!
இடம்விட்டு இடம்மாறி வாழ்ந்தபோதும் இதயத்தில் தமிழ்வாழும் காலம் காக்க
இடைவிடா துழைத்திடற் காகஎன்றும் தமிழுள்ளம் அனைத்திலும் நிலைத்து வாழ்க!

தேனீக்கள் தனித்தேதன் சேர்த்தாலும் தனியாகச் சொந்தம் கொள்வதில்லை
தமிழுலகின் பணியாளர் செயற்பாடுகளும் அவ்வாறே இணைந்து வளர்ந்து
உயரவேண்டும், தமிழினத்தை உயர்த்த வேண்டும்

ஏழ்மையை ஒழித்திடல் வேண்டுமென்றால் ஏழையின் அறிவினைத் தட்டவேண்டும். ஏழ்மையைச்
சொல்லிக்கை யேந்தும் வாழ்க்கை கேவலம் என்றெண்ண வைக்கவேண்டும்
தாழ்மையை தாழ்வுமனப் பான்மையாய்க் கொள்ளும் தாழ்மனம் இலையென்று ஆக்கவேண்டும்
வாழ்வது, உண்பதும் உறங்கலும் அல்ல; தேசத்துக் குழைப்பதென் றோதவேண்டும்

எழிலன்



மலேசியா இந்து யாத்திரை கூட்டுறவு அமைப்பு

KOPERASI YATRA HINDU MALAYSIA BERHAD

(No. PENDAFTARAN: KOOP NEGARA95)

திருச்சிற்றம்பலம்

வாழ்த்துரை

பேரன்பிற்குரிய குறள்மாமணி நா. சண்முகனார் அவர்களுக்கு,

பேரன்புடையீர்! வணக்கம்.

தங்களின் பெருமதிப்பிற்குரிய உலகத் திருக்குறள் மாநாட்டு கருத்தரங்கு அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றேன். மிக்க நன்றி!.

புதிய நூற்றாண்டில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கு அதன் நோக்கங்களில் முழுவெற்றியினைப் பெற எல்லாம் வல்ல இறையருள் கிட்டுவதாக.

உலகமறையாம் திருக்குறளின் உண்மை நோக்கங்களை உலக மக்கள் அறியவும் அவற்றின் அறிவுரைகளைப் பின்பற்றி வாழ்வாங்கு வாழவும் நீங்கள் குழு உறுப்பினர்கள் எடுத்துக் கொண்டுள்ள சீரிய முயற்சிகளுக்கு என் இதய பூர்வமான நல்வாழ்த்துக்களை என் சார்பிலும் தமிழ் கூறும் மலேசியா நல்லுலகின் சார்பிலும் இத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கருத்தரங்கில் நேரில் பங்கேற்றுவது என் பெரும் விருப்பமானாலும் முக்கிய அலுவல்கள் அதற்கு இடையூறாக இருப்பதால் என்னைத் தயவு கூர்ந்து மன்னிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

வளர்க தமிழ்! வாழ்க நற்றமிழ்!!

என்றும் உங்கள் அன்பு மறவா,

எஸ். சண்முகம் P.P.A.

இயக்குனர் வாரிய உறுப்பினர்,

முகவரி,
71.-A, ஜலான்2,
தாமான் ஸ்ரீசெலாங்
68100 பத்து கேவ்ஸ்
சிலாங் கூர் தாருள் ஏசான்
மலேசியா

நுழைவாயில்

தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி; தமிழ் இலக்கியங்கள் காலத்தால் தொன்மையானது. பழமைச் சிறப்பும் பண்பாட்டு வளமும் கொண்ட தமிழில் தோன்றிய நூல்களுள் திருக்குறளுக்கு ஓர் உயர்ந்த இடமுண்டு

திருக்குறள் ஒரு வாழ்வியல் நூல்; வையத்துள் வாழ்வாங்கு வாழ உதவும் நூல்.

திருக்குறளின் நெறியைத் தமிழ் மக்கள் அனைவரும் உணரவேண்டும் என்னும் உயரிய நோக்கில் தமிழ்மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளாரால் தொடங்கப்பட்டதே தமிழ்நாடு திருக்குறள் பேரவை. அடிகளாரின் மறைவிற்குப்பின் அவர்விட்டுச் சென்ற தொண்டினை இன்று செய்து வருபவர் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் ஆவர்.

தமிழ்நாடு திருக்குறள் பேரவையால் நடத்தப்படும் முதல் உலக மாநாடு இதுவேயாகும். இது ஒரு வரலாற்றுச் சிறப்புடைய மாநாடு. இருநூற்றுக்கும் மேற்பட்ட உள்நாட்டு வெளிநாட்டுப் பேராளர்கள் கலந்து கொள்ளும் மாநாடு; அரிய ஆய்வுக் கட்டுரைகள் இந்த மாநாட்டில் அரங்கேற்றப்படுகின்றன.

இந்த மாநாட்டில் மலர் ஒன்றையும் வெளியிட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. பலருக்கு எழுதினோம்; பலரும் இசைவு தெரிவித்தனர்; இறுதியில் எதிர்பார்த்த சிலரிடமிருந்தே எழுத்தோவியங்கள் கிட்டின.

கவிதைகளும், திருக்குறள் தொடர்பான கட்டுரைகளும், பொது நிலையில் அமைந்த கட்டுரைகளும் இதில் இடம் பெற்றுள்ளன. இந்த மலருக்குப் பெருமை சேர்த்த அத்தனை தமிழ் நெஞ்சங்கட்கும் எங்கள் நன்றி பெரிதும் உரியன.

மாநாட்டிற்கும் மலருக்கும் வாழ்த்துச் செய்திகள் வழங்கிப் பெருமைப்படுத்திய பெரியோர்க்கும் எங்கள் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்பன்
எழில்முதல்வன்

உலகத் திருக்குறள் மாநாட்டு நோக்கங்கள் நிறைவேற வாழ்த்துகிறோம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத் திருக்குறள் பேரவை

சிறப்புத் தலைவர் :
வள்ளல் பாரி ஏ.ஆர். அண்ணாமலைச் செட்டியார்

தலைவர் :
அறிஞர் இரா. பாலகங்காதரன்

செயலாளர்:
குறள்மாமணி திருக்குறள் நா. சண்முகனார்

துணைத் தலைவர்கள் :
கொடைமுகில் இரா.விசுணுதாசு
பொன்மனச் செல்வர் ஜி.ஆர். வேணுகோபால்

துணைச் செயலாளர்கள் :
அல்ஹாஜ் ஏ.கே. யூசுப்
அறநெறிச் செல்வர் சி.சுப்பையா

பொருளாளர் :
திருக்குறள் சான்றோர் மு. சேதுராம பிள்ளை

தமிழ்நாடு திருக்குறள் பேரவை
முதல் உலகத் திருக்குறள் மாநாடு - கருத்தரங்கம்
ஜனவரி 7, 8, 9 2000.
கருத்தரங்கக் குழு

1. பேராசிரியர் எழில்முதல்வன்
2. பொறிஞர் இரா. பாலகங்காதரன்
3. பேராசிரியர் சி. நயினார் முகம்மது
4. திருக்குறள் நா. சண்முகனார்
5. பேராசிரியர் வே. சண்முகநாதன்
6. பேராசிரியர் அர. அப்துல் ஜப்பார்.

தமிழ்நாடு திருக்குறள் பேரவை
முதல் உலகத் திருக்குறள் மாநாடு - கருத்தரங்கம்
ஜனவரி 7, 8, 9 2000.
கருத்தரங்கக் குழு

1. பேராசிரியர் எழில்முதல்வன்
2. பொறிஞர் இரா. பாலகங்காதரன்
3. பேராசிரியர் சி. நயினார் முகம்மது
4. திருக்குறள் நா. சண்முகனார்
5. பேராசிரியர் வே. சண்முகநாதன்
6. பேராசிரியர் அர. அப்துல் ஜப்பார்.

வரவேற்புக்குழு



கலைக்காவலர்
அருட்திரு எஸ். எம். ஜார்ஜ் அடிகளார்
தலைவர்.



குறள்மாமணி,
திருக்குறள் நா. சண்முகனார்
செயலாளர்.



பாரிவள்ளல்
ஏ.ஆர். அண்ணாமலைச் செட்டியார்
பொருளாளர்



திருக்குறள் அறிஞர்
இரா. பாலகங்காதரன்
ஒருங்கிணைப்பாளர்




பெரும்புலவர், பேராசிரியர்
முனைவர் சி. நயினார்முகமது
ஒருங்கிணைப்பாளர்



அறப்பணிவள்ளல்
ஆ. லிங்கையன் செட்டியார்
துணைத்தலைவர்

வரவேற்புக்குழு



கொடைமுகில் விசுணுதாசு
துணைத்தலைவர்



பொன்மனச்செம்மல்
ஜி.ஆர்.வேணுகோபால்
துணைத்தலைவர்



அறநெறிச்செல்வர்
சி.சுப்பையா
துணைத்தலைவர்



துரை ஜவகர்லால்
துணைத்தலைவர்



முனைவர் எழில்முதல்வன்
கருத்தரங்கக் குழுத்தலைவர்




திருக்குறள் சான்றோர் அல்ஹாஜ்
ஏ.கே.யூசுப்
துணைத்தலைவர்

வரவேற்புக்குழு



முனைவர் வே.சண்முகநாதன்
துணைச்செயலாளர்



முனைவர் அர. அப்துல் ஜப்பார்
துணைச்செயலாளர்



எஸ். முருகானந்தம்
துணைச்செயலாளர்



கர்ணன் இராமசாமி
துணைச்செயலாளர்



சேவைச்செம்மல் மு.சின்னசாமி
நிதிக்குழு உறுப்பினர்



டி.ஆர். தட்சிணா மூர்த்தி
நிதிக்குழு உறுப்பினர்

வரவேற்புக்குழு



மு. சேதுராமப்பிள்ளை
நிதிக்குழு உறுப்பினர்



வழக்குரைஞர் ம.சிவசங்கரன்
பதிப்புக்குழு உறுப்பினர்



ஆர். ஏ. கோவிந்தராசு
பராமரிப்புக்குழு



ஜி. திருமூர்த்தி
புரவலர்



பேராசிரியர் ச. சம்பத்து
நிதிக்குழு உறுப்பினர்



புலவர். காசி. விசுவநாதன்
பதிப்புக்குழு உறுப்பினர்

வரவேற்புக்குழு



அல்ஹாஜ் எம்.எம். முஸ்தபா
பராமரிப்புக்குழு




டாக்டர். ஜமீர் பாட்சா
பதிப்புக்குழு உறுப்பினர்



துரை. கோவிந்தராசு
உணவுக்குழு உறுப்பினர்



கே. வெங்கடேசன்
உறையுள்குழு உறுப்பினர்



முனைவர் குமாரராசு
பராமரிப்புக்குழு உறுப்பினர்



எல். சந்தான கிருஷ்ணன்
பராமரிப்புக்குழு உறுப்பினர்

வரவேற்புக்குழு



டி.எஸ். சகதீசன்
உணவுக்குழு உறுப்பினர்



வி. இராமதாஸ் நாயுடு
உணவுக்குழு உறுப்பினர்



குரு. கலியாண சுந்தரம்
விளம்பரக்குழு உறுப்பினர்



பா. விசுவநாதன்
பராமரிப்புக்குழு உறுப்பினர்



ஜே. சுப்பிரமணியன்
பராமரிப்புக்குழு உறுப்பினர்



டி.எம்.வி. சதாசிவம் செட்டியார்
பராமரிப்புக்குழு உறுப்பினர்

வரவேற்புக்குழு



என்.வி. குணசேகரன்
பராமரிப்புக்குழு உறுப்பினர்



மாதவ மனோகரன்
பராமரிப்புக்குழு உறுப்பினர்



ஜே. பாலசுப்பிரமணியன்
போக்குவரத்துக்குழு உறுப்பினர்



வழக்குரைஞர் இராம கோவிந்தன்
பராமரிப்புக்குழு உறுப்பினர்



பொறிஞர் இரா. மோகன்
பராமரிப்புக்குழு உறுப்பினர்



மு.தங்கம்
நிதிக்குழு உறுப்பினர்

வரவேற்புக்குழு



ஆ. செந்தமிழ் செல்வன்
உறையுள்குழு உறுப்பினர்



கே. வேணுகோபால்
உறையுள்குழு உறுப்பினர்



எஸ். ஆர். குப்புராஜ்
பராமரிப்புக்குழு உறுப்பினர்



எஸ்.ஆர். விசுவநாதன்
பராமரிப்புக்குழு உறுப்பினர்



தா. கௌதமன்
பராமரிப்புக்குழு உறுப்பினர்



ஓம் சக்தி குப்தா
பராமரிப்புக்குழு உறுப்பினர்



பி.வி. தேவராசு
போக்குவரத்துக்குழு உறுப்பினர்



மு. பெரியசாமி
பராமரிப்புக்குழு உறுப்பினர்

கவிதைகள்

ஐயம் திரிபற . . .

ஈரோடு தமிழன்பன்

புதுக்கவிதையில் புதிய பரிமாணங்களை உருவாக்கிய புதுக்கவிஞர், இதுவரை வெளியிட்டிருக்கும் கவிதை நூல்கள் 20. தமிழக அரசின் 'பாவேந்தர் பாரதிதாசன் விருது' (1990), முரசொலி அறக்கட்டளையின் 'கலைஞர் விருது' (1998), இயலிசை நாடக மன்றத்தின் கலைமாமணி விருது (1999) இவர் பெற்ற சிறப்புக்கள், புதுக்கல்லூரியில் பணியாற்றி ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர், இவரது கவிதைகள் இந்திய மொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. சாகித்ய அகாதெமியின் பொதுக்குழு உறுப்பினராகவும் இருந்து வருகிறார்.

நிலாவுக்கு
அர்த்தம் சொன்னார்கள்;
முகம் என்றும் முறுவல் என்றும்
கன்னம் என்றும் புரிந்து,
நிலா என்ன வென்று புரியாமல்
போனது.

கடல்
என்பதற்குக்
கருத்துரை கேட்டேன்
கவிதை, காதலி உள்ளம்,
உப்புத்திடல், கப்பல்வீதி
இப்படிக்
கடல் விளங்காதபடி
கண்டதைக் கொண்டு
மூடிவிட்டனர்.

பூ
என்ன என்பது
எனக்குப் புரிந்த போதும்,
பொருள் சொல்ல வந்தவர்கள்
குழந்தைகள் கண்கள்; குமரிகள் சிரிப்பு,
வண்டுகள் படுக்கை; மதுக்கிண்ணம்,
வாசவிடுதி,
என்னென்னவோ சொல்லிப்
பூவுக்கு
நெடுந்தொலைவில் என்னை
இழுத்துப்போய் நிறுத்தினார்கள்.

அம்மாவை
அர்த்தப்படுத்தி வார்த்தைகளால்
கூறுபோட்டுக் கொடுத்தார்கள்.
துண்டு துணுக்குகளாய்த்
தெறித்து விழுந்தவளைத்
திரட்டிச் சேர்க்க முடியாமல்
திணறினேன்.

வள்ளுவர்க்குப்
பதவுரை பொழிப்புரை வழங்கினார்கள்.
வள்ளுவர்க்கும்
எனக்கும் நடுவில் எழுந்தன
வார்த்தை வேலிகள்.

முடிவாய்
'நான் யார்' என்று
எனக்குக் காட்டத்
திறந்தனர் தத்துவப் புத்தகம்!
விளக்கங்களில்
வெடித்துச் சிதறினேன்!

நேரில்லா வள்ளுவம்

கா. வேழவேந்தன்

கா. வேழவேந்தன் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞருள் ஒருவர்; முன்னாள் தமிழக அமைச்சர். பச்சையப்பன் கல்லூரியிலும் சட்டக் கல்லூரியிலும் படித்தவர். 'வேழவேந்தன் கவிதைகள்', 'வண்ணத்தோகை', 'நெஞ்சிலே பூத்த நிலா', 'தூறலும் சாரலும்', 'ஏக்கங்களின் தாக்கங்கள்' என்பன இவரது கவிதை நூல்கள். அறிஞர் அண்ணாவால் இலக்கிய உலகத்துக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர். டாக்டர் மு.வ.வின் மாணவர்.

அன்பு நண்பா! இலண்டனிலே இருந்தே நீயும்
ஆர்வமடல் வரைந்திருந்தாய்! சுவைத்தேன். அங்கே,
"நன்மறைநூல் 'திருக்குற'ளை உலகுக் கீந்த
நாட்டவரா நீங்கள்?" என்றே கேட்டார் என்றாய்!
'தென்தமிழன் முகவரியே குறள்தான்' என்ற
சீர்ப்பெருமை அம்மண்ணில் உணர்ந்தேன் என்றாய்!
என்னென்ன அதன்ஏற்றம் எனக்கேட் போர்க்கே
எடுத்துவைக்கச் சிலவிளக்கம் கூறு கின்றேன்:

உலகத்தின் பலபகுதி மாந்த ரெல்லாம்
உருப்படியாய் 'நாகரிகம்' பெறாத முன்னர்,
நிலம்பிடித்தே இடம்பிடித்த 'இங்கி லாந்'தின்
நெடியமொழி 'ஆங்கில'மே தோன்றா முன்னர்,
உலகையெலாம் கலக்குகின்ற 'அமெரிக் கா'வை
உயர்'கொலம்பஸ்' கண்டறியா முன்னர், ஈங்கே
உலகமதன் ஆறுகண்ட மக்க ளெல்லாம்
ஒப்புகின்ற 'திருக்குறள்நூல்' பிறந்த தன்றோ?

கல்லாமை, கள்ளாமை, கள்ளுண் ணாமை,
காணும்உயிர் கொல்லாமை, பொச்சா வாமை,
இல்லாமை, வெகுளாமை, கூடா நட்பை
ஏற்காமை, வெஃகாமை, உலகத் தோடு
நில்லாமை, நிலையாமை, புறங்கூ றாமை,
நெறிபிறழ்ந்து செல்லாமை, அழுக்கா றாமை,
நல்குரவைத் தீண்டாமை, என்றே ஈங்கே
நமைச்சூழும் 'ஆமை'களின் விளக்கம் சொன்னார்!

அறிவுடைமை, அன்புடைமை, உயிர்கள் தம்மேல்
அருள் உடைமை, பொறையுடைமை, ஒழுக்க மென்னும்
நெறியுடைமை, நாணுடைமை, வாய்மை போற்றும்
நெஞ்சுடைமை, மெய்யுடைமை, காலம் நோக்கும்
குறியுடைமை, பண்புடைமை, ஈந்து வக்கும்
கொடையுடைமை, வினைஉடைமை, மக்கட் பேற்றின்
நிறையுடைமை எனக்குறளார் அடுக்கிக் காட்டி
நெடியபல 'உடைமை'களை அடையச் சொன்னார்!

எங்கோ ஓர் மூலையிலே வான கத்தில்
எழுகின்ற 'நில'வாலே கோளம் மீது
தங்கியுள்ள கும்மிருட்டோ மறையும்; கோடித்
தமிழ்மண்ணில் பூத்திட்ட 'வள்ளு வ'த்தால்
மங்காத அறிவொளியில் உலகம் மூழ்கும்!
மனிதகுலக் கப்பல்எலாம் கரையில் சேர
தங்கஒளிக் கலங்கரையின் விளக்கைப் போலே
சரித்திசையைக் காட்டுவது 'குறள்நூல்' தானே!

திருக்குறளின் 'ஒளிக்கத'வும் திறக்கு மானால்,
சிறைச்சாலை 'இருட்கத'வும் மூடும் அன்றோ?
திருக்குறளின் செழுங்கருத்துப் பரவு மானால்
'தீங்கொடுமை, கொலை, களவு' மண்ணில் ஏது?
திருக்குறளின் அரியபொருள் நெஞ்சில் நின்றால்
தித்திக்கும் 'இல்லற'த்தில் குறைதான் ஏது?
திருக்குறளின் நெடுங்கருத்தும் ஆழப் பாய்ந்தால்,
செகம் ஆள்வோர் 'தவறூழல்' இழைத்தல் ஏது?

இத்தனைஇத் தனைச் சிறந்த 'குறட்பா நூ'லை
'இந்தியதேசிய நூ'லாய் ஆக்கு தற்கே
ஒத்துவர வில்லையப்பா தில்லிக் காரர்!
உறங்கும் அவர் விழிக்கும் வரை குரல்கொ டுப்போம்!
சொத்தென்றால் நமக்கிருக்கும் பெரிய சொத்தே
சுடரொளியாய் மின்னுகின்ற 'குறள்சொத்' தொன்றே!
இத்தரைவாழ் அறுநூறு கோடி மக்கள்
எழிற்குறளை ஏற்கும்வரை உழைப்போம்! வா, வா!

தன்னையே பாடிய தமிழ்ப் பண்பாட்டு நூல்

கவிஞர் முருகுசுந்தரம்

திருச்செங்கோட்டில் பிறந்தவர். சென்னையில் கல்லூரி மாணவராக இருந்தபோது பாவேந்தரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பும், அவரிடம் பாடம் கேட்கும் வாய்ப்பும் பெற்றவர். முப்பத்தைந்து ஆண்டுகள் தமிழ்ப் பணிசெய்து ஓய்வு பெற்றவர்.

மாணவப் பருவத்திலேயே பாவேந்தர் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்துக் குயில் ஏட்டில் தொடர்ந்து வெளியிட்டார். இவர் எழுதியும் தொகுத்தும் வெளியிட்டுள்ள 'பாவேந்தர் - ஒரு பல்கலைக்கழகம்' என்ற நூல் ஓர் அரிய வரலாற்றுப் பெட்டகம்.

தமிழக அரசின் நல்லாசிரியர் விருதும், பாரதிதாசன் விருதும் பெற்றவர். 'பனித்துளிகள்' என்ற இவரது கவிதைநூல் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் முதல் பரிசு பெற்றது. 'பாட்டுச்சிற்பி', 'பாவேந்தர் பைந்தமிழ்ச் செல்வர்' என்பவை இவருக்குச் சான்றோர் பேரவைகள் வழங்கிய பட்டங்கள்.

தமிழ்ப்பண் பாடு தன்னையே பாடி,
எழுதி வைத்த இணையற்ற அறிவுநூல்
வான்புகழ் வள்ளுவர் ஆக்கிய திருக்குறள்.

ஈட்டிமுனைக் கிரேக்கரை அறிவுச் சாணையில்
தீட்டிய பெரும்புகழ்ச் சாக்ரட் டீசும்,
கொலீசியம் நடத்தும் குத்துச் சண்டையும்
மதுவொடு மாதும் மறுத்துச், சிந்தனை
அரியணை ஏறிய அரேலியசு மன்னனும்,
மறுமையைப் பற்றிக் கவலைப் படாமல்
இம்மையில் செம்மையாய் எல்லாரும் வாழப்
புத்தி சொன்ன புத்தர் பிரானும்,
பீழை பிடித்த வாழ்வையும், பெண்டிர்
தாளையும் ஊன மாக்கிக் கொண்டு
வறுமைக்குச் சான்றாய் வாழ்ந்த சீனரின்
கண்களைத் திறந்த கன்பூ சியசும்
ஒருவராய்ப் பிறந்த உருவமே வள்ளுவர்.

காவலன் கருவூலம் காய்ந்து போனால்
மக்களைக் கொள்ளை அடிக்கலாம் என்று
மன்ன வர்க்குத் தீய அறிவுரை
சொன்னவன் அறிஞன் மாக்கிய வெல்லி.
வருணத் துக்கோர் அறமும் நீதியும்
கருணை யற்ற தண்டனைச் சட்டமும்
மனுவோ டருத்த சாத்திரம் கூறும்.
பிச்சைக்கும் இலக்கணம் கூறி வாழ்வைக்
கொச்சைப் படுத்தும் அறநூல்கள் உண்டு

பிறப்பொக்கும் என்றும், பேசும் வாய்மையே
சிறப்பிற்குச் சீரிய அளவுகோல் என்றும்
மாசற்ற உள்ளமே மக்கட் கறமென்றும்
செல்வத்துப் பயனே ஈதல் என்றும்
படிறு செய்யும் கயவரை ஓங்கிக்
கொடிறு டைத்துத் திருத்தலாம் என்றும்
உரல்போற் பருத்த உயர்கருத் துக்களை
ஊசி முனையாக்கி உள்ளத்தில் தைத்த
வள்ளுவர் அறநூல் இன்றி
இல்லை ஈங்குத் தமிழர்க்கு வாழ்வே.

தன் நோய்க்குத் தானே மருந்து

இரா. இளங்குமரன்

இலக்கண இலக்கியப் பெரும்புலவர். இதுகாறும் இவர் எழுதியுள்ள நூல்களின் எண்ணிக்கை 150 க்கு மேலாகும். 'திருக்குறள் வாழ்வியல் உரை', 'பாவாணர் வரலாறு' முதலியன குறிக்கத்தக்கவை. 42 ஆண்டுகளாகப் பணியாற்றி ஓய்வு பெற்றபின் திருச்சியை அடுத்த அல்லூரில் திருவள்ளுவர் தவச்சாலை என்னும் அமைப்பிணை நிறுவி இயக்கி வருகிறார். தமிழ்ப் பாதுகாப்புக்கு அரணாக விளங்கும் இச்செந்தமிழ் அந்தணர் பன்னூறு தமிழ்த்திருமணங்களை நடத்தியுள்ளார். நாவீறு படைத்த பேச்சாளர்.

காய்ச்சல்; கொடுங்காய்ச்சல்; கட்டிலை விட்டெழும்பி
வாய்ப்பாய் இருக்கவும் வாராப் பெருங்காய்ச்சல்:

உள்ளம் வெதும்பி உடல்வெதும்பி ஊக்கமெலாம்
பள்ளத்தில் பாய்கின்ற வெள்ளம் போல் தானோடக்

காட்டுக் குழலகத்துக் காற்றெழுப்ப ஓலமிடும்
கூட்டா இடைபோலக் கூட்டகத்து மூச்செழும்பிச்

செல்லாத் துயரம் செறிய அடுத்துள்ளோர்
அல்லல் மிக எய்தி ஆற்றும் வகைநாடிக்

கைந்நாடி பார்த்துக் கணக்காய் மருந்தீந்து
மெய்ந்நோய் அகற்றும் மருத்துவரைக் கூட்டிவர

உற்ற பிணிபோக்க ஓர்வழியும் காணாராய்ப்
பற்று துயரோடு பல்பொழுது போய்வந்தார்:

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்வல்ல ஒள்ளியர் தாம்

என்றாலும் என்நோய் முதலறிய ஏலாமல்
என்னவோ செய்திருந்தார்; என் செய்வார்? காய்ச்சல்தான்

நாளொரு வண்ணமாய் ஏறிவர நற்றாயும்
வேளருளை வேண்டி விடிபொழுதில் கோயிற்குச்

சென்றிருந்தார்: சென்ற மருத்துவரும் மீளவிலை;
பொன்னஞ் சிலம்பு புடையரற்றப் பூமுகத்து

மென்முறுவல் நீங்க அகமொடுங்கித் தென்றல்
நடைகற்று வந்ததென வந்து, நனி என்

புடையமர்ந்து 'அத்தான் பொரிகிறதே நெற்றி'யென்
றன்பு பெருக அகம்குழைய நீவித்தன்

இன்பு தவழ்கையால் தூக்கி உவந்தணைத்
தாங்கிருந்த பாலை அருந்தினாள்; அப்போதே,

ஓங்குநிலைக் காய்ச்சல் உடனிறங்கக் கண்டறிந்து
யார்தந்த மாத்திரைக்கும் போகாத என்நோயும்

நீ வந்த மாத்திரையே போவதனைக் காண்கின்றேன்;
தாக்கும் விழியுடையாய்! தாங்காப் பெருநோயைப்

போக்கும் மருந்தும் உடையாயோ? என்றந்த
நன்மருந்தின் கன்னம் தடவினேன்; நாணமுடன்

பன்முறையும் பின்பார்த்துப் பாழுலகுக் கஞ்சினளாய்ச்
சென்றாள்; செழுங்கன்னம் நெற்றியினை என்கையால்

துன்ற வருடி வருடி இனிதிருந்தேன்;
அன்னை அருத்திய ஆரமுதின் எண்ணத்தால்

பிஞ்சு விரலைச் சுவைத்திருக்கும் பிள்ளைபோல்
போனவரும் மீண்டார்; "பொரிகாய்ச்சல் போயிற்று

யானளித்த மாத்திரையின் ஆற்றலே ஆற்றல் காண்"
என்றார் மருத்துவர்; என் அன்னை, "செவ்வேளை

இன்றுயான் வேண்டிய வேண்டுதலே" என்றார்; யான்,
வள்ளுவனார் வாய்மைக் குறளை நினைத்தேன்:

"பிணிக்கு மருந்து பிற மன்; அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து."

வீ.ஆர். இராமச்சந்திர தீட்சிதரின் மொழிபெயர்ப்பு பற்றி
அறிஞர் குன்கன் ராஜா

The text and translation are given one against the other on opposite pages, so that one can very easily make use of the translation while reading the text. The text has been edited before, and a few Commentaries too are known. There have been also English translation prior to this. But the value of this new translation will be clear to any one who reads the book. The text in Roman translation is now appearing for the first time.

தொடரும் தமிழியக்கம்

அரிமதிதென்னகன்

திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்த இக்கொள்கைக் குன்று ஒய்வு பெற்ற தமிழசிரியர். இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் முத்திரை பதித்தவர். தமிழக அரசின் பாவேந்தர் விருது, புதுவை அரசின் நல்லாசிரியர் விருது, சிறுவர் இலக்கியத்துக்கான நடுவண் அரசின் தேசிய விருது முதலிய பற்பல விருதுகளைப் பெற்றுள்ளார். 'மனித நேய உரை' என்னும் பெயரில் திருக்குறளுக்கு இவர் வரைந்துள்ள எளிய உரை குறிப்பிடத்தக்கது.

பேச்சாளர்; கருத்தரங்கப்
பேராளர்; பட்டிமன்றில்
'கட்'டைப் பந்தின்
வீச்சாளர்; பாட்டரங்கில்
வீறாளர்; வெற்றிகளால்
விளை, வளத்தின்
மூச்சாளர்; என்பரெலாம்
உமக்கென்று கொடைதந்த
முத்த மிழ்க்குப்.......,
பூச்சாளர் எனவந்து
போவீரேல், ... கேடுவரில்
போக்கு வார், யார்?

மழலையர்க்கேன் ஆங்கிலத்தின்
வழிக்கல்வி? தமிழினத்தின்
மானம் எங்கே?
அழல் வளர்த்துப் பூவை, அதில்
ஆழ்த்துவதே நோக்கமெனில்
அன்னை யாகி
எழச்செய்த தமிழ்வழிதான்
இனிக்கல்வி வேண்டுமென
எழுந்த போரில்
உழக்களவும் உம்பங்கே
இல்லையெனில் எங்கே நீர்
ஒழிந்தே போனீர்?

பொன்னாடை, விருது, பொருள்,
புகழோடும் செல்வாக்கால்
பொலிய உம்மை
மின்னிடவே செய்வதெது?
மேலேற்றி விடுவதெது?
மேன்மை மிக்க
இன்னுயிராம் தமிழன்னை
இன்றைக்கோ, நாளைக்கோ
இறப்பாள் என்னும்
புன்மையினை நீக்காமல்
புழுவாகக் கிடப்பதுவோ?
போவீர், போர்க்கு!

புதிதாகத் தமிழியக்கம்
தொடர்கின்ற காலமிது
புறங்காட் டித்தான்,
கதியற்றேன் என, அன்னை
கலங்கி, அழ விடுவீரேல்
காலம் தூற்றி
விதியற்றுப் போனீரே
வெற்றுக்கு வாழ்வதுவோ?
வெட்கம் என்று
கதறிற்றே எனும் பழியைக்
காணாமல், இனமானக்
கனலாய்ச் செல்வீர்!

மோனோ லிசா

ஆ.ஐ. இரவி ஆறுமுகம்

காவல்துறை கூடுதல் இயக்குநராக விளங்கும் இவர் பொறியியலில் B.E. பட்டமும், சட்டத்துறையில் M.L. பட்டமும் பெற்றவர். "தமிழகத்தில் தீண்டாமை ஒழிப்பில் காவல் துறையின் செயற்பாடு" என்னும் பொருளாகவும், எழுத்துப் பணியைத் தொண்டாகவும் கருதி வாழும் இவர் ஓர் தமிழ்ப்பேராசிரியரின் திருமகனார் ஆவர். அண்மையில் இவர் எழுதி வெளியிட்டுள்ள "பனித்துளிக்குள் ஒரு பாற்கடல்" என்னும் நூல் அரிய கருத்துக்களின் களஞ்சியம் எனலாம்.

மோனோ லிசாவின் புன்னகையை மொழிபெயர்ப்பதில்,
காலகாலங்களாக, காலத்தினுடைய
பேனாவில் உறையும் மை வற்றிப் போய்விட்டது.
இயேசு கிறிஸ்து பெண்ணாகப் பிறந்திருப்பின்,
அவர் மோனோ லிசாவாகத் தான் பிறந்திருப்பாரோ?
தேவகுமாரரின் வடிவத்தை இவள் ஒத்திருப்பதால்,
இவள் தான் தேவதேவியோ?
வியப்புறக் கூடிய எண்ணங்களும், விசித்திரமான நினைவலைகளும்,
நயமான, நுணுக்கம் மிக்க கலைப்படைப்பின் பேரழகும்,
இழை இழையாக, அணு அணுவாக
அணிவகுத்து வெளிப்பட்ட எழில் பூசிய முகமா அவள் முகம்.
பெண்ணின் காதல் வாழ்க்கையில்
அவள் எதிர்கொள்ளும் முரண்பாடுகள் அனைத்தும்
முழுமையாகப் பிரதிபலிக்கின்றனவே -
மோனோ லிசாவின் மென் முறுவலில்!
மோனோ லிசாவின் உதட்டுப் புன்னகையில்,
நன்மையும், தீமையும், இரக்கமும், கொடூரமும்,
பாவமும், பவித்திரமும், மாற்றமும், நிலைப்பும்,
இகமும் பரமும், இம்மையும், மறுமையும்
கை கோர்த்து அல்லவா வெளிப்படுகின்றன.
சீன நாகரிகத்தின் யின்னும் (yin), யேங்கும் (yang) -
மேலை நாட்டு வடிவங் கொண்ட ஓவிய ரசவாதமா
மோனோ லிசாவின் புன்னகை.
லியோனார்டோ தரிசித்த அத்தனை பெண்களின்
ஒட்டுமொத்த சாரம் தான் மோனோ லிசா ஓவியமாக உருப்பெற்றதா?

அல்லது,
லியோனார்டோ தனது வாழ்க்கையில் எதிர்கொண்டு,
கூர்ந்து நோக்கி, வரைந்த
அவரது தாய், நண்பர்களின் மனைவியர்,
குடியானவப் பெண்கள், தெருப்பெண்கள்,
நாடக மகளிர், நடனக் கலைஞர்கள்,
நல்லிசை மாதர் என இவர்கள் அனைவரின்
உருவங்களையும் குழைத்துக், கலந்து உருவாக்கிய
ஒற்றை ஒவியம் தான் மோனோ லிசாவா?
இல்லை,
லியோனார்டோ தன்னையே பெண்ணாக
உருவகித்து வரைந்த ஒவியமா அது?
மோனோ லிசாவின்
கண்கள், நாசி, இதழ்கள், நாடி, நெற்றி
அனைத்துமே லியோனார்டோ வினுடையது தானா?
லியோனார்டோவின் ஆன்மாவே ஒவியமாக
மோனோ லிசா வடிவில் தீட்டப்பட்டதா?
அல்லது
மோனோ லிசா இறை அநுபூதி நிலையின் எல்லையற்ற வெளிப்பாடா?
ஐம்பெரும் பூதங்களும், இம் முகத்தில் தான் பிறப்பெடுத்தனவா?
அலைபாயும் அவள் கருங்கூந்தல்,
அருவி போலல்லவா அவள் தோள்களில் பாய்கிறது?
வாழுகின்ற உயிர் உணர்வை அந்த வாரிய கேசம் தந்து விடுகின்றதே.
அந்தக் கருவிழிகளின் மூலைகள்,
பிரபஞ்சக் கடலின் கருங்குழிகளா?
கரைதெரியாத கடலின் ஆழம்,
இக் கயல் கண்களில் காணக் கிடக்கிறது.
அந்த உதடுகளின் ஓரங்கள், பூமிப்பந்தின் எல்லைக் கோடுகளா?
இலக்கியங்கள் பேசும் எள்ளுப்பூ மூக்கு இதுதானோ?
மோனோ லிசா விடுக்கின்ற மூச்சுக்காற்று,
முதுகுத் தண்டுகளை எல்லாம் உருக்கி விடுகின்றதே.
சுவாசத்தின் ஸ்பரிசத்தைப் புலப்படுத்தும்
இந்த மோனோ லிசா உயிர் பெற்ற ஓவியமா?
இணைந்திருக்கும், மோனோ லிசாவின் இரண்டு கரங்களும்,
நரம்புகள் ஓடும் அவற்றின் விரல்களும்,
கட்டுக் கடங்காதவற்றையும்,
கட்டி விடும் ஆற்றல் கொண்ட பிறவிக் கயிற்றின் சுழியா?
அல்லது
சொர்க்க வாசலின் திறவுகோலை
அவை உள்ளுக்குள் ஒளித்து வைத்துள்ளனவா?
அந்த உதட்டுச் சுழிப்பு உந்திச்சுழியை அல்லவா நினைவூட்டுகிறது.
உதட்டுச் சுனையின் சுழியில், எத்தனை ஆடவருடைய உயிர்

அடித்துச் செல்லப்பட்டு அமிழ்த்தப்பட்டுள்ளது.
பிரளயத்தையும், ஊழிக்காற்றையும் விட வலியதல்லவா
இந்த உதட்டுச் சுழிப்பு.
அந்த உதட்டுச் - சுழிப்பு இதழ் மலர்களில்,
குவிந்து கிடக்கும் மகரந்தக் குவியலா?
அல்லது மரகதப் புதையலா?
அந்த உதட்டுச் சுழிப்பில் ஒளிந்திருப்பது
கம்பீரமா? ஏளனமா? கம்பீரமான ஏளனமா?
வாத்சல்யமா? வாத்சல்யமான வசந்தமா?
அல்லது
உறைந்து விட்ட ஒரு சோகமா?
அதுவும் சுவையான சோகமா?
வார்த்தைகளில் வடிக்கமுடியாத,
ஓவியத்தால் மட்டும் உணர்த்தக் கூடிய உள் அர்த்தங்களைச்
சுமக்கும் உறவற்ற உணர்வா?
உயிரின் சங்கேதமா?
கணக்கிடமுடியாத விளக்கங்களை கருவாக்கிச் சுமப்பதுவே
கலைப்படைப்பின் இலக்கணம்.
அப்படியெனின்,
கலையின் இலக்கணம் அல்லவா,
இந்த மோனோ லிசாவின்
உதட்டுச் சுழிப்பில் ஒளிந்து கிடக்கின்றது.
ஒளிந்து கிடப்பதை உணர்வதும்,
தேடிக் கண்டுபிடிப்பதும் தானே
வாழ்க்கையின் குறிக்கோள்.
உதட்டசைவு உறைந்து போனால் உருவாவது மௌனம்
மௌனம் என்ற பரிபாஷை பேசும்
மயக்க மதுக் கிண்ணம் தான்
அந்த உதட்டுச் சுழிப்பா?
மொத்தத்தில்,
மோனோ லிசாவின் இதழ்களின் ஓரத்தில் ஊற்றெடுக்கும்
அந்த மர்மப் புன்முறுவலின் பொருள் தான் என்ன?
அதன் நதி மூலம் என்ன?
பிரபஞ்ச ரகசியத்தைப் பெயர்த்தெழுதி விடலாம்.
ஆனால் மோனோ லிசாவின் உதட்டுச் சுழிப்பு விடுக்கும் மர்ம முடிச்சை,
விளங்காத புதிரை, திகைப்பூட்டும் வினாவை
யாரால் தீர்க்க முடியும்? எப்படித் தீர்வுகாண முடியும்?
யாராலும் எப்படியும் முடியாது.
காரணம் - அந்த உதட்டுச் சுழிப்பே ஒரு தீர்வு.
தீர்வுக்கு எப்படித் தீர்வு காணமுடியும்?

கவிதை வேண்டும்!

‘இராசவேலு செண்பகவல்லி

திருவரங்கத்தில் வாழ்ந்து வரும் வழக்கறிஞர். அரங்கநாதர் திருக்கோயில் தக்காராகப் பல ஆண்டுகள் பணியாற்றியவர். அரசியலில் தீவிரமாக ஈடுபட்டிருந்த இவர், தம் மனைவியாரின் மறைவிற்குப் பின் திருவரங்கத்தில் ‘செண்பகத் தமிழரங்கு’ என்னும் இலக்கிய அமைப்பை உருவாக்கித் தமிழ்த்தொண்டு செய்து வருகிறார். தம் மனைவியாரையே பாடுபொருளாகக் கொண்டு சிற்றிலக்கிய வடிவங்களில் இவர் பாடியிருக்கும் நூல்கள் மிகப்பல. வெண்பா என்னும் யாப்பில் விரைந்துபாடும் திறம் இவருக்கு இயல்பாக வாய்த்திருக்கிறது. ‘ஆசுகவியரசு’ என்று பாராட்டப்படும் இவர் மிகச்சிறந்த பேச்சாளர்; நல்ல நடிகர்; தேர்ந்த இசைவாணரும் ஆவர்.

எதுகவிதை என்றெனக்குத் தெரிந்த மட்டின்
இயம்புவதைக் கேட்டால்நீர் வியந்தே போவீர்
செதுக்கிவைத்த உணர்வுகளின் சிற்பம் என்பேன்
சிந்தனையாம் கடல்கடைந்த அமுதம் என்பேன்
சதுப்புநிலக் காட்டினிலே கால்கள் ஊன்றிச்
சதிராட்டம் செய்யுமொரு வித்தை என்பேன்
மதுவுண்ணா திருக்கின்ற போதே போதை
மயக்கத்தைக் கொடுப்பதுதான் கவிதை என்பேன்

தன்னுள்ளே இருக்கின்ற உணர்ச்சி யென்னும்
தங்கத்தைச் சூடேற்றி மெல்ல மெல்லப்
பன்முறையும் கருத்தென்னும் சுத்தி கொண்டு
பாங்காகப் பக்குவத்தை அடையத் தட்டி
இன்னமுதக் கற்பனைகள் என்னும் அந்த
இனியபொடி வைத்ததனை அத்தோ டூதிப்
பொன்நகையைச் செய்வதுபோல் கவிதைத் தட்டான்
போற்றிநமக் களிப்பதுதான் கவிதை யாகும்.

பரிதியெழும் காட்சிதனை மலர்கள் பூத்துப்
பளபளத்துச் சிரிக்கின்ற காட்சி தன்னை
விரிகடல்தன் அலைக்கரத்தை வீசி நாளும்
விளையாட்டைச் செய்கின்ற காட்சி தன்னை
விரிகுழலை விரித்தொருத்தி உலர்த்து தல்போல்
விரிவானில் முகில்காட்டும் காட்சி தன்னை
தருகின்ற இயற்கைஎழில் விளக்கம் சொல்லும்
தமிழின்பத் தேன்சிந்தும் கவிதை வேண்டும்.

பகுத்தறிவோ டான்மீகம் கலந்த ஒன்றைப்
பாவிரிக்கும் புரட்சிமிகு கவிதை வேண்டும்
வகுத்தளித்தே வள்ளுவனார் குறளில் சொன்ன
வாழ்க்கைநெறி விளக்குகின்ற கவிதை வேண்டும்
தொகுத்துவைத்த தொகைஎட்டைப் பத்துப் பாட்டை
தொய்வின்றி எடுத்தாளும் கவிதை வேண்டும்
தகுதியொடு சிறப்பெல்லாம் ஒருங்கி ணைந்த
தமிழ்நூல்கள் திறமுரைக்கும் கவிதை வேண்டும்

கொச்சைமொழி நும்கவியில் இருத்தல் வேண்டா
குறையுள்ள பாட்டாக முடித்தல் வேண்டா
கச்சிறுக்கும் மாதர்தம் அங்கம் தன்னை
கண்டபடி மனம்போல எழுதிக் காம
இச்சைதனைத் தூண்டுகின்ற பாவம் செய்யும்
இழிசெயலை வளர்க்கின்ற கவிதை வேண்டா
அச்சமின்றி எதுசெய்யின் என்ன வென்னும்
அகம்பாவப் போக்கும்தான் கவியில் வேண்டா

பூவிருக்கும் தேனுண்டு மகிழ்ந்த வண்டு
புன்னகைத்துச் சிரிப்பதனைப் பார்த்த துண்டா
நாவிருக்கும் கலைமகள்நீ செய்த பாட்டில்
நடமிட்டுக் காட்டுவதைக் கண்ட துண்டா
காவிருக்கும் செடிகொடிகள் தழுவிப் பேசும்
காதலிசைக் கீதத்தைக் கேட்ட துண்டா
ஆவலினால் நான்கேட்கும் இவற்றிற் கெல்லாம்
அன்பான விடையளிக்கும் கவிதை வேண்டும்.

சீருடைகள்

இளைய பாரதி

'மரணத்தின் நட்சத்திரங்கள்' என்ற நவீன கவிதைத் தொகுதி மூலம் அறியப்படும் இளைய பாரதி மயிலாடுதுறைக்குச் சொந்தக்காரர். பண்பட்ட பத்திரிகையாளர். புதுமைப்பித்தனின் கடிதங்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். "கலைஞர் முதல் கலாப்பிரியா வரை" என்ற நூல் இவர் கண்ட நேர்காணலின் தொகுப்பு. "கலைஞரின் தென்பாண்டிச் சிங்கம்" இவரால் திரைப்படமாக்கப்பட்டு சின்னத்திரைகளில் ஒளிபரப் பப்பட்டுள்ளது.

என் சௌகர்யத்திற்கான சட்டையை அணிய
என்னை அனுமதியுங்கள்.
என் சருமத்திற்குப் பொருத்தமான வண்ணத்தைத் தேர்ந்தெடுக்க
எனக்குச் சகல உரிமைகளும் உண்டு.
உறுத்தும் உங்களின் சீருடைகளை அணியச் சொல்லி
உத்தரவுகளால் நிர்பந்திக்காதீர்கள்.
உங்கள் சீருடைகள் புழுக்கத்தை ஏற்படுத்துகின்றன.
என் சுவாசத்தைக் கட்டுப்படுத்துகின்றன.
என் நுரையீரலை விரியவிடாமல்
இரும்புக் கவசமாய் இறுக்குகின்றன.
வேர்வையை உறிஞ்சுவதற்குப் பதிலாக
உதிரத்தை உறிஞ்சுகின்றன.
உங்கள் கொள்கைகளைப் பறைசாற்றும் நிறங்களை
நடமாடும் சுவரொட்டிபோல்
நான் அணிந்து திரிய முடியாது.
என் ரசனைக்கென்று பிரத்யேக வண்ணங்கள் உண்டு.
ஒரு குழுவுக்காக தீர்மானித்த அளவுகளில் தைக்கப்பட்ட
சீருடைகளுக்கு ஏற்ப
நான் இளைக்கவோ பெருக்கவோ முடியாது.
பருத்தியோ
பட்டோ
கம்பளியோ
என் மண்ணின் பருவங்களுக்கேற்ற ஆடைகளை
நான் தேர்வு செய்துகொள்வேன்.

கச்சிதமான அளவுகளில்
என் தையல்கலைஞன் தயார் செய்து தருவான்.
இறுக்கமாகவோ
தொளதொளவென்றோ தைக்கப்பட்ட
வெளுத்த அல்லது பழுப்பேறிய உங்களின் சீருடைகளால்
என்னைக் கோமாளியாக்காதீர்கள்.
ஒவ்வொரு உடலுக்கும் தனித்தனி அளவுகள் உண்டு.
சீருடைகள் சிந்தனைகளை அழித்து மந்தைகளாக்குகின்றன.
என் சட்டையில்
எத்தனை பொத்தான்கள் இருக்கவேண்டுமென்பதை
நீங்கள் தீர்மானிக்க முடியாது.
இதுவரை இரவல் சட்டைகளில் இளமை கழிந்தது.
இப்போதுதான் சுயமாய் வாங்க முடிகிறது.
நண்பர்களின் சட்டைகள் சினேகமுள்ளவை.
சீருடைகள் அடிமைத்தனத்தையும் விசுவாசத்தையும் வேண்டுவன.
சலுகை விலையிலோ
தள்ளுபடியிலோ தருவதைத் தரிப்பதைவிட அம்மணமே மேல்.
என் விருப்பத்திற்கான சட்டையை அணிய முடியாமல் போகலாம்.
குளிரில் விறைத்துச் சாகலாம்.
இல்லை அரைநிர்வாணமாய் அலையலாம்.
எனது நிர்வாணம் குறித்து எனக்கு வெட்கமில்லை.
நான் தமிழன் எனில்
என் நிர்வாணம் தமிழனின் நிர்வாணமன்றோ.
காலனிய ஆதிக்கத்தின் எச்சங்களை
இந்த மண்ணிற்கு மாறான அடையாளங்களை
நீங்கள் அணியுங்கள்.
உடல் என்ற சட்டையை
ஆத்மா கழற்றி
வேறு சட்டை அணிகிறது என்கிறது வேதம்.
நான் என் ஆத்மாவிற்கு
எத்தனையாவது சட்டை?

காலசர்ப்பம் கணந்தோறும்
சட்டை உரித்துக்கொண்டே இருக்கிறது.
சட்டைகள் சாஸ்வதமில்லை.
நிர்பந்திக்கப்பட்ட சீருடைகள் கிழித்தெறியப்படுகின்றன.

என் ஆடைகள்
உண்மையின் இழைகளால் நெய்யப்பட்டிருக்க வேண்டும்.
வேண்டுமானால் ஒன்று செய்து திருப்திப்பட்டுக் கொள்ளுங்கள்.
உங்கள் சீருடைகளைத்
திருஷ்டிபொம்மைகளுக்கு அணிவித்து.

வாழ்வே நீயில்லை

திருச்சி 'பா'ரதன்

திருச்சி 'பா'ரதன் குழந்தை இலக்கியப் படைப்பாளர்; இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இசைப்பாடல்களைப் புனைந்தவர்; இவரது 'கந்தன் காவியம்' என்னும் நாட்டிய நாடகம் ஏறத்தாழ 500 முறை அரங்கேற்றப்பட்டது. இவரது இசைப்பாடல்கள் தமிழகத்து முன்னணி இசைவாணர்களால் மேடையில் பாடப்பட்டுள்ளது. இவரது பாடல்களாகவே ஏறத்தாழ 180 இசை நிகழ்ச்சிகள் இதுவரை நடந்துள்ளன. இந்தியாவின் முதல் குழந்தை நாடக ஆசிரியர் என்னும் பெருமையும் இவர்க்கு உண்டு. 'தினத்தந்தி' நாளேட்டின் செய்தி ஆசிரியராக 32 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர், 'கலைமாமணி', 'நாடகப்பாவலர்', 'இசைப்பா அரசு', 'கவிஞர் திலகம்' எனப் பல பட்டங்களைப் பெற்றுள்ளார். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் இவரது 'குகநானூறு' என்னும் நூலுக்கு ரூபாய் ஐயாயிரம் பரிசு வழங்கிச் சிறப்பித்துள்ளது.


வீணை யிங்கே இருக்கக் கண்டேன் மீட்ட நீயில்லை
தேனைக் கண்டேன் உன்னைக் காணேன் தீஞ்சுவை யில்லை (வீணை)

சோலை யிங்கே அமையக் கண்டேன் சுனையே நீயில்லை
பாலின் நிலவு வீசக் கண்டேன் பாடல் நீயில்லை (வீணை)

நீண்ட தட்டில் அமுதங் கண்டேன் நினைவே நீயில்லை
வேண்டும் இறைவன் ஒருவன் கண்டேன் விளக்கு நீயில்லை (வீணை)

மேடை கண்டேன் ஆடிக் காட்ட மயிலே நீயில்லை
ஆடைக் குவியல் எதிரே கண்டேன் அழகு நீயில்லை (வீணை)

கோடிச் செல்வம் குவியக் கண்டேன் குணமே நீயில்லை
வாடும் மனதைத் துளிர்க்கச் செய்யும் வாழ்வே நீயில்லை (வீணை)



எதிர்கால உலகிற்கும் இதுஒன்றே இனிமறை!

கவிஞர் பொன்னடியான்

பொன்னடியான் பாவேந்தர் பாரதிதாசனின் அன்பு மாணவர்; அணுக்கத் தொண்டராக இறுதிவரை அவரோடு இருந்தவர். "முல்லைச்சரம்" என்னும் கவிதை ஏட்டினை கடந்த 30 ஆண்டுகட்கும் மேலாகத் தொடர்ந்து நடத்தி வருபவர். தமிழ்க் கவிஞர் மாமன்றத்தைத் தொடங்கி இன்றுவரை அதன் பொதுச்செயலாளராகப் பணிபுரிவர். எண்ணற்ற கவிதை நூல்களின் ஆசிரியர். திரைத்துறையிலும் கால்பதித்து இசைஞானி இளையராஜாவின் இசையில் பல பாடல்களை வழங்கியுள்ளார். இவர் தொடங்கி, திங்கள்தோறும் நடத்தி வரும் கடற்கரைக் கவியரங்கம் உலகத்திற்கு ஒரு புதுமை எனலாம். சுருங்கச் சொன்னால் இவர் கவிஞர்களை உருவாக்கும் கவிஞர்.

உலகுக்கே ஒருமறை
உண்மையின் திருமறை
உயிரெலாம் உய்விக்க
உருவான உயர்மறை
தலையாய தமிழ்மறை
தர்மத்தின் தனிமறை
தத்துவச்சாறான
தலையாய தலைமறை!
　　திருக்குறள் தீபத்தை ஏந்திடுவோம் - அதன்
　　தெளிவான வழிசென்று வாழ்ந்திடுவோம்!

காலத்தின் கணக்கினுள்
கவிழாத கவிமறை
கற்பனைத் திறனெலாம்
கலந்தஓர் புவிமறை!
ஞாலத்தின் இருள்போக்கும்
ஞானத்தின் ஒளிமறை
நற்குணப் பாங்கெலாம்
நவிலும்ஓர் உயிர்மறை
　　திருக்குறள் தீபத்தை ஏந்திடுவோம் - துளி
　　தீங்கும் அண்டா வாழ்க்கை வாழ்ந்திடுவோம்!

வேதங்கள் அனைத்திற்கும்
வேரான விதைமறை
விடிவிற்கும் விடிவாகி
விளைவான பொதுமறை!
பேதங்கள் பின்னாத
பிழையிலாப் பெருமறை
பிறப்பொக்கும் எல்லா
உயிர்க்கெனும் அருமறை
　　திருக்குறள் தீபத்தை ஏந்திடுவோம்! - பொது
　　நலத்தொண்டு பல செய்து வாழ்ந்திடுவோம்!

வல்லமை தருகின்ற
வாழ்வியல் வழிமறை
வற்றாத நன்னெறி
வழங்கிடும் புதுமறை
இல்லாதது இல்லைஇதில்
எனும்புகழ்ப் புகழ்மறை!
எதிர்கால உலகிற்கும்
இதுஒன்றே இனி - மறை!
　　திருக்குறள் தீபத்தை ஏந்திடுவோம்! - புதுத்
　　தெம்போடு குறள்வாழ்க்கை வாழ்ந்திடுவோம்!

பாவை ஆடிய - பதினோராடல்

ப. அரங்கசாமி

'பெரும்புலவர்', 'அமுதத் தமிழண்ணல்', 'பல்துறை வித்தகர்' எனப் பற்பல பட்டங்கள் பெற்றுள்ள இவர் 38 ஆண்டுகளாகத் தமிழ்ப்பணி ஆற்றி ஓய்வு பெற்ற முதுபெரும் தமிழ்ப்புலவர். இந்திய அரசின் பேராசிரியர் சர்மா விருதும், தமிழக அரசின் நல்லாசிரியர் விருதும் பெற்றவர். இவர் படைத்துள்ள சிற்றிலக்கியங்களுக்குக் கணக்கில்லை. தமிழகத் தமிழாசிரியர் கழகத்தின் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய இவர் அதன் இந்நாள் மதிப்பியல் தலைவராகவும் விளங்குகிறார். அண்மையில் இவர் படைத்துள்ள நூல்கள் 'முனிமொழி முப்பத்தாறு' 'அண்ணாமலை ஆற்றுப்படை' முதலியன.

ஏடெடுத்தேன் பாட்டெழுத எனக்கு முன்னே
இளநங்கை ஒருத்தியவள் வந்து நின்றாள்
பாடகத்தின் ஒலியெழுப்பும் அவளைப் பார்த்துப்
பாவைபோல் நிற்பவளே யார்நீ என்றேன்
நாடறியும் நற்புலவ நங்கை என்னை
நானிலத்தார் அறிவார் நீ அறிவா யல்லை
ஆடல்வகை பலவேயும் முறையாய்க் கற்ற
ஆடல்மகள் யானாவேன் அறிவாய் என்றாள்

ஆடல்வகை கற்றறிந்த பெண்ணே நீதான்
ஆடுகின்ற பலவாய ஆட்டம் எல்லாம்
கூடத்தில் குறுக்கேயும் நெடுக்கு மாகக்
குதித்தோடி உடல்சரியத் தாவித் தாவி
பாடலுக்கு இயைவின்றிப் பொருளும் இன்றிப்
பலவகையாய் உறுப்பசைக்கும் ஆட்டந் தானோ
நாடிமிக நீயாடும் ஆட்டம் என்றேன்
நங்கையவள் விழிநிமிர்த்தி என்னைப் பார்த்தாள்

கற்றறிந்த கவிப்புலவ என்ன சொன்னாய்
கலைவளர்த்த குலமரபில் வந்தேன் ஐயா
முற்றவுமென் முன்னோர்தாம் தேர்ந்தே கற்ற
முதுகலையாம் ஆடல்வகை முறையாக் கற்றேன்
குற்றமற அகத்துணர்வைப் புறத்தே காட்டும்
கோதறுநல் மெய்ப்பாடும் நன்றே கற்றேன்
உற்றநெறி முறைவழுவாக் கூத்தும் பாட்டும்
உணர்ந்திடுவன் அறிந்திடுக என்றே சொன்னாள்

பொற்கொடியே கூத்துவகை அறிவேன் என்றாய்
புகல்வாயோ கொடுகொட்டிக் கூத்தைப் பற்றி
நற்புலவ கேட்பாய்நீ சிவனார் அந்நாள்
நகையாலே திரிபுரத்தை எரித்த போது
விற்புருவ உமையாள்சீர் தாளம் கொட்ட
வீரமுடன் மேனிதனில் நீறு பூசி
பற்பலவாம் உருப்பெய்த்துச் செய்த ஆடல்
பறைகொட்டும் கொடுகொட்டிக் கூத்தே யாகும்
தேன்மொழியே பண்டரங்கம் கூத்தைச் சொல்வாய்
திருமகளே அக்கூத்தைச் சொல்வேன் கேட்பாய்
வான்தேரில் நான்மறையாம் குதிரை பூட்டி
வானோடு மண்ணகமும் மறைத்தே நின்ற
நான்முகன்தான் தேர்த்தட்டில் கொடிகள் கட்டி
நனிகாணச் சிவனார்தாம் ஆடி நின்ற
மேன்மையுறு கூத்தாகும் பண்டரங்கம்
மிளிர்தூக்குத் தாளம் உமை கொட்டி னாள்காண்

நல்லணங்கே அல்லியக்கூத்(து)அறைவாய் என்றேன்
ஐயாகேள் அன்றொருநாள் கஞ்சன் என்னும்

வல்லரக்கன் 'குலலயா பீடம்' என்ற
வல்யானை உருக்கொண்டு வந்த போது
வல்லமைசார் ஆற்றலுடன் கண்ணன் அந்த
வஞ்சகமார் யானையதன் கொம்பைப் பற்றி
வெல்லுறவே ஒடிப்பதற்கே ஆடி நின்ற
வீரமதே அல்லியக்கூத்(து) ஆகும் ஐயா

முல்லைப்பல் நங்காயே சொல்வாய் ஏற்ற
முறையாக மற்கூத்து என்றேன் சொன்னாள்
நல்லறிஞ வாணனெனும் அவுணன் தன்னை
நல்லுடலைக் கரியாக்கி நெருக்கிக் கொன்று
மல்லருடன் திருமால்தாம் ஆடி நின்ற
மாவெற்றிக் கூத்தேதான் மற்கூத்(து) ஆகும்
மல்லாடல் கூத்தென்றும் இதனைச் சொல்வர்
மதியார்ந்த கலைவல்லார் அறிவாய் நீயும்

தோகையளே துடிக்கூத்துச் சொல்வாய் என்றேன்
தொல்கடலின் நடுவிடத்தில் சூர பன்மன்
மாகமுயர் வேற்றுருவம் கொண்டே நிற்க
மாமலையின் கடவுளாம் முருகன் ஆங்கே
வேகமுறத் தொண் கமாம் பறைமு ழக்கி
வெல்லரிய சூரனையே வெற்றி கொண்டு
மாகடலாம் அரங்கத்தில் ஆடி நின்ற
மாகூத்தே துடிக்கூத்தாம் அறிவாய் கோவே

வானமரர் சூரனுடன் எதிர்ந்த போரில்
வலியிழந்து வானவர்தம் படைக லங்க
தானுயர்ந்த தமிழ்க்கடவுள் முருகன் ஆங்கே
தகவார் 'ஒரு முக எழிலி' யாக நின்று
வானவர்முன் தன்குடையைச் சாய்த்துச் சாய்த்து
வானவரின் துயர்நீங்க வெற்றி யோடு
ஞானத்தன் ஆற்றலுடன் ஆடி நின்ற
நற்கூத்தே குடைக்கூத்து என்ப தாகும்

வானாசுரன் மகள்உழையை காமன் மகனாம்
காளையவன் 'அநிருத்தன்' கவர்ந்து செல்ல
வானன் அநி ருத்தனைத்தன் சிறையில் வைக்க
வருத்தங்கொள் காமனுடை துயரம் தீர்க்க
வானனது 'சோ'நகரில் திருமால் சென்று
வனைபஞ்ச உலோகமுடன் மண்ணும் சேர்த்து
ஆனகுடம் கொண்டாங்கே ஆடல் செய்த
அருங்கூத்தே குடக்கூத்துப் பெயரா கும்மே.

காமன்அநி ருத்தனையச் சிறையின் மீட்டுக்
களிப்புற்ற மனத்தோடு காண்போர் நோக்கத்
தாமரிய ஆண்மைதிரி பெண்மை யான
தனிவடிவாம் பேடுருவப் புனைவி னோடு
ஏமமிகு 'சோ'நகரில் சென்று காமன்
இயைந்தவகை ஆடியதே பேடிக் கூத்து
நாமமிதைப் 'பேடாடல்' என்றும் சொல்வர்
நன்றறிவாய் பெரும்புலவ என்றே சொன்னாள்

கடுஞ்சினத்தின் அவுணரெலாம் வஞ்ச கத்தால்
காலமெலாம் செய்துவரும் கொடுமை யாலே
படுகின்ற மக்கள்துயர் நீக்கும் ஆர்வப்
பரிவோடு மாயவளாம் துர்க்கைத் தேவி
கொடுமனத்தின் அவுணரெலாம் பாம்பும் தேளும்
கொடியுவரு கொண்டியங்க அவற்றைக் கொல்லக்
கடுமரத்தால் ஆனமரக் கால்கள் கட்டிக்
காலு ழன்றே ஆடியது மரக்கால் கூத்து

அவுணர்தாம் தேவகுலம் அஞ்சு மாறு
அளவற்ற துன்பங்கள் தந்த தோடு
அவுணர்கள் படைகொண்டு தேவர் தம்மை
அழித்திடவே போர்செய்ய வந்த போது
புவனத்தார் காணினுளம் மயங்கச் செய்யும்
புகலரிய பேரழகார் கொல்லிப் பாவை
கவர்வடிவம் திருமகள்தான் பூண்டே நின்று
கனிந்தங்கே ஆடியது பாவைக் கூத்து

இந்திரனின் மனைவிஅயி ராணி இந்த
எழிலார்ந்த மண்ணுலக வளமை காண
வந்திங்கே கடைசியரின் வடிவங் கொண்டு
வானனது 'சோ' நகரின் வடக்கு வாயில்
முந்திருக்கும் வயலிடத்தே செய்த அந்த
முறையான ஆடல்தான் கடையக் கூத்து
இந்த வகை பதினோரு ஆடல் சொன்னேன்
எனவுரைத்துப் பாவையவள் விடையும் பெற்றாள்
கடைசியர் - உழவுத்தொழில்செய் மகளிர்

திருக்குறள் கட்டுரைகள்

மோப்பக் குழையும் அனிச்சம்! நோக்கக் குழையும் வருந்து!

ச. அகத்தியலிங்கம்

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முன்னைத் துணைவேந்தர். மொழியியல் துறையில் தம் ஆழமான இலச்சினையைப் பொறித்தவர். பன்னூலாசிரியர்; வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களால் போற்றப்பட்ட பெருமை இவர்க்கு உண்டு. இந்தியத் தமிழாசிரியர்கள் கழகம் என்னும் அமைப்பைத் தொடங்கி ஏறத்தாழ கால் நூற்றாண்டுக் காலம் கட்டி வளர்த்தவர்.

திருக்குறள்

திருக்குறள் சங்க இலக்கியங்களை அடுத்துத் தோன்றிய ஒரு சிறந்த இலக்கியம். சின்னஞ் சிறு குறட்பாக்களால் ஆன ஒரு செம்மையான இலக்கியம். இது உலக உண்மைகளையும் உயரிய நீதி நெறிமுறை களையும் அப்பழுக்கற்ற வாழ்க்கைக் குறிக்கோள்களையும் தன்னகத்தே கொண்டு தன்னிகரில்லாத தனியொரு இலக்கியமாக இரண்டாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வளர்ந்து வரும் ஒரு வளமான இலக்கியம். உலகப் பொதுமைகளை உயரிய கவித்துவத்தால் ஆக்கியதால் தான் திருவள்ளுவரை உலக மேதை "One of the great geniuses of the World" எனக் கூறிப் போந்தார் போப்.

திருக்குறள் பாடல் ஒவ்வொன்றும் கருவிலும் உருவிலும் செம்மையாக ஆக்கப்பட்டது. சிறந்த கரு, செம்மையான உரு என்ற இரண்டையும் ஒரு சேரக் கொண்டவை திருக்குறள் பாக்கள். இதனால் தான் போப் குறள் பற்றிக் கூறும் போது "It is Truly an apple of gold in a net work of silver" எனக் கூறுவார். பாடு பொருளிலும் பாடும் முறையிலும் அத்துணை சிறந்து விளங்குவது திருக்குறள்.

கூறும் பொருளும் கூறும் முறையும்

குறளில் எல்லாப் பாடல்களுமே சிறந்தவை. எனினும் சில பாடல்கள் மிகச் சிறந்தவை எனலாம். இதற்குக் காரணம் அவை கூறும் பொருளும் கூறப்படும் முறையும் தான்.

திருக்குறள் பாக்கள் அனைத்தும் குறள் வெண்பாவால் ஆக்கப்பட்டவை. யாப்பு நிலையில் இவை அனைத்தும் ஒரே பண்பைக் கொண்டவை தான் . ஆனால் அவற்றில் காணப்படும் சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்கள் போன்ற மொழியமைப்பில் அவை தம்முள் மாறுபட்டவை. சிறந்த சொற்கள். செம்மையான சொற்றொடர்கள், அருமையான வாக்கியங்கள், சொல்லும் செய்திகள் ஆகியவற்றில் மாறுபடும் போது சில பாக்கள் மேலும் சிறந்து விளங்கு கின்றன. திருக்குறளில் சிறந்து விளங்கும் ஒருபாடல்

மோப்பக் குழையும் அனிச்சம்; முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

என்ற தொண்ணூறாவது பாடல்

இதற்குப் பொருள் எழுதும் பரிமேலழகர் "அனிச்சப்பூ மோந்துழி அன்றி குழையாது. விருந்தினர் முகம் வேறுபட்டு நோக்கக் குழைவர்" என எழுதுவார்.

தமிழ்ப் பண்பாட்டில், ஏன் உலக மனித நேயப்பண்பாட்டில் கூட விருந்தோம்பல் என்பது சிறந்த ஒரு மனிதப் பண்பாகும். இதனால் தான் வள்ளுவர் இல்லறவியலில் விருந்தோம்பல் என ஓர் அதிகாரத்தை உருவாக்கிப் பத்துப் பாடல்களில் அதன் பல்வேறு பரிமாணத்தைப் பல நிலைகளில் விளக்குவார். இல்லறத்தின் தலையாய கடமையே விருந்தோம்பல் என்பது வள்ளுவர் கருத்தாகும். இதனால் தான் அவர்

இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு (81)

என இவ்வதிகாரத்தின் முதல் பாடலாகக் கூறினார். விருந்தோம்பல் என்பது மனிதப் பண்பாட்டில் மகத்தான ஒரு இடத்தைப் பெறுவது. இத்தகைய சிறந்த ஒரு பண்பைக் கூறும் நிலையில் தான் இப்பாடலும் சிறந்த இடத்தைப் பெறுகிறது. அதிகாரத்தின் இறுதிப் பாடலாகவும் உள்ளது.

பாடுபொருளில் மட்டுமன்றி வடிவமைப் பிலும் இப்பாடல் சிறந்து விளங்குகின்றது. வள்ளுவர் தாம் சொல்லும் கருத்துக்களில் மட்டுமன்றிச் சொல்லும் முறையிலும் தன்னேரில்லா ஒரு கவிஞராக விளங்குகிறார். இப்பாடலின் வடிவ அமைப்பு எத்துணை சிறந்துள்ளது என்பதைச் சிறிது விரிவாகக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம். எனினும் வேண்டிய இடங்களில் பாடு பொருள்பற்றியும் குறிப்பிடப்படும்.

பாடலின் கரு

வள்ளுவர் இப்பாடலில் கூற விரும்புவதெல்லாம் விருந்தோம்புபவன் முகம் திரிதல் கூடாது என்பதுதான். விருந்தோம்புபவன் முகனமர்ந்து விருந்தோம்ப வேண்டும் என்பதைக் குறிப்பாக

அகன் அமர்ந்து செய்யாள் உறையும் முகன் அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல் (84)


என்ற பாடலில் குறிப்பிட்டுள்ளார் வள்ளுவர். ஒருவன் நல்விருந்து ஓம்பினால் மட்டும் போதாது. அவன் முகன் அமர்ந்து ஓம்பவேண்டும் எனக்கூறிய வள்ளுவர் நம் பாடலின் கண் அவன் எந்த நிலையிலும் முகந்திரிந்துவிடக் கூடாது என்பதை வற்புறுத்துகிறார் எனக் கருதலாம்.

விருந்தினர் மென்மையானவர் என்பதைக் கூறிக் குறிப்பால் முகம் திரியாமையைக் கூறுகிறார் எனக் கருதுவதே பொருத்தம். இதைத்தான் பரிமேலழகர் 'இதனானே விருந்தோம்புவார்க்கு முதற்கண் இன்முகம் வேண்டும் என்பது கூறப்பட்டது' என எழுதுவார். எனவே இப்பாடல் விருந்தினரின் மென்மையைக் கூறுகிறது எனக் கருதுவதைவிட விருந்தோம்புவார் பண்பு பற்றிக் கூறுவதே எனக் கருத வேண்டும்.

உருவ அமைப்பு

இப்பாடல் சிறந்து விளங்க மிக முக்கியமான காரணம் இதன் உருவ அமைப்பு எனலாம். இப்பாடல் ஒரே மாதிரியான உள்ளமைப் பைக் கொண்ட இரண்டு வாக்கியங்களால் ஆனது.

அனிச்சம் மோப்பக் குழையும்; ஆனால் விருந்தினரோ முகம் மாறி நோக்கிய அளவிலே வாடி வதங்குவர் என்ற இரண்டு வாக்கியங்களைக் கொண்டது. இதனைக் கீழ்வருமாறு காட்டலாம். (புதை நிலை)



மேலே காட்டிய வரைபடம் இப்பாடலின் கண் காணப்படும் இரு வாக்கியங்களும் எத்தகைய

ஒரே மாதிரியான அமைப்பைக் (Structure) கொண்டுள்ளன என்பதை வெளிப்படையாகக் காட்டும். இரண்டு வாக்கியங்களும் எழுவாய், செயவென் எச்சம், பயனிலை என்ற இலக்கணக் கூறுகளைக் கொண்டுள்ளது. இரண்டாவது வாக்கியத்தில் செய்தென் எச்சம் கூடுதலாக உள்ளது.

> *அனிச்சம் மோப்பக் குழையும்.*
> *விருந்து முகம்திரிந்து நோக்கக் குழையும்*

எனக் 'குழையும்' என்ற பொதுப் பயனிலை வினையையும் கொண்டு வந்து வாக்கியங்களை ஒருமுகப்படுத்திக் கவிதையின் வனப்புக்கு மேலும் வலுவூட்டுகிறார் வள்ளுவர்.

மொழியமைப்பு

கவிதை என்பது வெறும் யாப்பினால் மட்டும் சிறந்து விளங்குவதில்லை. சிறந்த வாக்கிய அமைப்புக்களினாலும் அது வனப்புப்பெறுகிறது. இதனைத் திருவள்ளுவர் நன்கு அறிந்திருந்தார். அவருடைய பல பாடல்கள், அவற்றிலும் குறிப்பாக இரண்டு இரண்டு வாக்கியங்களைக் கொண்ட பாடல்கள் பல, இத்தகைய சிறந்த ஒரே மாதிரியான இரண்டு இரண்டு வாக்கியங்களைக் கொண்டவை.

> *தொட்டனைத் தூறும் மணற்கேணி; மாந்தர்க்குக்*
> *கற்றனைத் தூறும் அறிவு (396)*
>
> *வெள்ளத்து அனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்*
> *உள்ளத்து அனையது உயர்வு (595)*

போன்ற பாடல்கள் இத்தகைய பண்பினைக் கொண்டவை தாம். மணற்கேணி தொட்ட அனைத்து ஊறும்; அறிவு மாந்தர்க்குக் கற்ற அனைத்து ஊறும்; என்ற இரு வாக்கியங்களும் ஒரே அமைப்பையும், ஊறும் என்ற ஒரே பயனிலை வினையையும் கொண்டவை. இது போன்று தான் அடுத்தபாடலும் உள்ளது. ஒரே அமைப்பையும் ''அனைய, அனையது'' என ஒரே வகைப் பயனிலையையும் கொண்டது.

திருக்குறளின் முதல் பாடலே ஒரே விதமான இரு வாக்கியங்களையும் (எழுத்தெல்லாம் அகர முதல்; உலகு ஆதிபகவன் முதற்றே) முதல, முதற்று என்ற ஒரே வகைப் பயனிலையையும் (ஒன்று பன்மை, மற்றொன்று ஒருமை) கொண்டது தான்.

> *அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
> *பகவன் முதற்றே உலகு (1)*

என்பது பாடல். இத்தகைய அமைப்பு உத்தியைக் கையாண்டு (பலபாடல்களில் சிறு சிறு வேறுபாடுகளுடன்) அருமையான பாடல்கள் பலவற்றை உருவாக்கம் செய்துள்ளார் வள்ளுவர். சிலபாடல்களில் உடன்பாடு, எதிர்மறை (26) வேறுபாட்டைக் கொண்டு வருவார். இன்னும் சிலவற்றில் எதிர்மறை, எதிர் மறை (247) என்ற வகையைக் கையாளுவார். இவ்வாறு மாற்றி மாற்றிப் பல பாடல்களைப் பாடியுள்ளார் அவர். எனினும் இருவாக்கியங்களும் ஒரே விதமான அடிப்படை அமைப்பைக் கொண்டிருக்கும்.

மேல்நிலை, கீழ்நிலை ஒருமுகம்

மேலே காட்டப்பட்ட பாடல்களைக் கூர்ந்து நோக்கின், அவை ஒரே மாதிரியான பயனிலை களைக் கொண்டு மேல்மட்டநிலையில் மட்டும் ஒரு முகமாக இல்லாமல் கீழ்நிலையிலும் (Micro) அதாவது வாக்கியங்களின் உள்பகுதியிலும் அவை ஒரே முகமாகவே உள்ளன. நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பாடலில் இரண்டு வாக்கியங்களும் 'குழையும்' என்ற ஒரே பயனிலையைக் கொண்டிருப்பதுடன் (Macro level) வாக்கியத்தின் உள்ளேயும் செயவென் எச்சங் களைக் கொண்டிருக்கின்றன.

மோப்பக் குழையும்: நோக்கக் குழையும் என ஒரே அமைப்பைக் கொண்டுள்ளன. தொட்ட அனைத்து ஊறும் கற்ற அனைத்து ஊறும்; அகர முதல: ஆதிபகவன் முதற்றே (அகரத்தை முதலாக வுடையது: ஆதிபகவனை முதலாக உடைத்து) என

வருவது காண்க. இத்தகைய ஒருமுகப் பண்பு இருப்பதால் தான் இப்பாடல்களைப் படிக்கும்போது உணர்வும் உணர்ச்சியும் வருவதுடன் உள்ளத்தில் பதியவைப்பதற்கும் எளிமையாக உள்ளது. கேட்பதற்கும் இனிமையாக உள்ளது.

முகந்திரிந்து

மேலே காட்டப்பட்ட இருவாக்கியங்களில் இரண்டாவது வாக்கியத்தில் கூடுதலாக உள்ள 'முகந்திரிந்து' என்ற செய்தென் எச்சத்தொடர் இப்பாடலுக்கு உயிர் போன்றது. விருந்தினர் 'முகனமர்ந்து' நோக்குதல் வேண்டும் 'முகந்திரிந்து நோக்குதல் கூடாது' என்பது தான் வள்ளுவர் கருத்து. இதனைக் காட்டுவதற்காகவே இரண்டாவது வாக்கியத்தில் இத்தொடரை இணைத்துத் தம் கவிதையை ஆக்கியுள்ளார். 'முகந்திரிந்து' என்பதற்குப் பொருள் எழுதும்போது பிரியமில்லாமல் (பார்க்க) என்றும் (பரிதி) 'முகம் மாறிப் (பார்க்க)' என்றும் (காளி) முகம் வேறுபட்டு (நோக்க) என்றும் (பரிமேல்) பலவாறு எழுதுவர். முகம் மாறி அல்லது வேறுபட்டு என்பதே பொருத்தமாக உள்ளது.

வரும் இடம்

இச்சொல் பாடலில் வரும் இடம் குறிப்பிடத்தக்கது. இரண்டாவது வாக்கியத்தில் முதலாவதாக வருகிறது இது. இவ்வாக்கியத்தின் முக்கியமான பகுதியாக உள்ளமையை இது காட்டும். கவிஞர்கள் எதை எதை முதலில் சொல்ல வேண்டுமோ அது அதனை முதலில் கூறி வாக்கியங்களைத் தொடங்குவர். பாட்டின் கருத்தை இது காட்டுவதாக உள்ளது. முகந்திரிந்து நோக்கக் குழையும் என முகந்திரிதலுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலையில் தான் இதனை வாக்கியத்தின் முதலில் வைத்துள்ளார் கவிஞர்.

நான்காவது சீர்

மேலும் இது பாடலின் நான்காவது சீராக அதாவது முதல் அடியில் இறுதியில் உள்ளது. இதனால் இதன் பின்னர் ஒரு நிறுத்தம் ஏற்படுகிறது. மேலும் இது முதல் வாக்கியம் முடியும் போது ஏற்படும் நிறுத்தத்திற்கும் பின்னால் வரும்போது இது தெளிவாகக் கேட்போர் உணரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் இதன் முக்கியத்துவம் உணரப்படுகிறது. கவிதை என்பது எதை எங்கே எப்படிக் கூறவேண்டுமோ அதை அங்கே அப்படிக் கூறும் ஒரு கலையாக்கம். குறித்த பொருளை முடிய நாட்டுவதுதான் யாப்பு என்பார் தொல்காப்பியர். திருவள்ளுவர் இதனை நன்கு உணர்ந்தவர். இதனால் தான் "மோப்பக் குழையும் அனிச்சம்; நோக்கக் குழையும் விருந்து" என்ற தொடர்களுக்கு இடையே கொண்டு வந்து இரு நிறுத்தங்களுக்கு இடையே வைத்து "மோப்பக் குழையும் அனிச்சம்; முகந்திரிந்து, நோக்கக் குழையும் விருந்து" என வரும் போது முகந்திரிந்து என்பது தனியாக நின்று தன் முக்கியத்துவத்தை உணர்த்துமாறு போலக் கூறுவார் வள்ளுவர். இந்த உத்தியைப் பல பாடல்களில் பயன்படுத்திச் சொல்ல வேண்டிய கருத்தை அழுத்தமாகக் கூறுவார் வள்ளுவர்.

> *கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்*
> *நற்றாள் தொழாஅர் எனின்* (2)
>
> *பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
> *இறைவன் அடிசேரா தார்* (10)

போன்ற குறட்பாக்களில் இப்பண்பைக் காண முடியும்.

அனிச்சம் : மென்மை

விருந்தினர்களை ஓம்புவது மட்டும் போதாது; அவர்களை மிக மென்மையாக நடத்தல் வேண்டும் என்பதற்காகவே அவர்களை மென்மையானவர்களாகக் காட்டுகிறார் வள்ளுவர். இதற்காக அனிச்சப் பூவைக் கவிதையின் பகுதியாக்கி "மோப்பக் குழையும் அனிச்சம்" என்ற அருமையான வாக்கியத்தை உருவாக்குகிறார். மோப்பத்தான் அனிச்சம் வாடும் என்ற கருத்தில்

தான் இவ்வாக்கியம் பயன்படுத்தப்படுகின்றது. சிறந்த வாக்கியங்களால் செம்மையான கவிதைகள் உருவாக்கப்படுகின்றன என்பதற்கு இது ஓர் அருமையான எடுத்துக்காட்டு. அரிஸ்டாட்டில் சிறந்த ஒரு வாக்கியமே செம்மையான ஒரு கவிதையாகி விட முடியும் என்பார். வள்ளுவரின் எத்தனையோ வாக்கியங்கள் அத்தகைய பண்பை உடையவனவே. "நன்னீரை வாழி அனிச்சமே" என்ற வாக்கியமே ஒரு கவிதை போன்றது தான், அனிச்சம் என்ற சொல் சங்க இலக்கியங்களில் வந்திருப்பினும் (கலி 91.1, குறி. 62) முதன்முதலாக அதன் மென்மை பற்றிக் கூறுவது குறள்தான். இயற்கை நலன்களை உணர்ந்து உயரிய கவிதைகளை இயற்றியவர் வள்ளுவர்.

இருவாக்கியங்கள்

"மோப்பக் குழையும் அனிச்சம்: முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து'' என்ற இருவாக்கியங்களில் உருவானது இக்கவிதை முதல் வாக்கியத்தைப் போன்றே ''நோக்கக் குழையும் விருந்து" என்ற வாக்கியமும் நன்றாக ஆக்கப்பட்ட ஒரு வாக்கியம். இவ்விரண்டும் இணையும் போது சிறந்த கவிதை உருவாகி விடுகின்றது. முகந்திரிந்து என்ற தொடர் இணைந்து கவிதையின் கருத்துக்கு வளம் சேர்க்கின்றது. இவ்விரண்டு வாக்கியங்களையும் எவ்வாறு இணைப்பது என்பதிலும் வள்ளுவர் தன் கவித்துவத்தைக் காட்டுகிறார். அதை வாசகர்களின் வாசிப்புக்கு விட்டு விடுகிறார்.

ஆனால் போல. அது போல

''மோப்பத்தான் குழையும் அனிச்சம்: ஆனால் முகந்திரிந்து நோக்கவே குழையும் விருந்து" எனக் கொண்டு இரண்டுக்கும் இடையே வேற்றுமை கண்டு பொருள் கொள்ளுவார் பலர். மணக்குடவர், பரிமேலழகர், இராமானுசக்கவிராயர், சாரங்கபாணி ஆகியோர் இவ்வாறு வேற்றுமை கண்டனர். 'அனிச்சப்பூ மோந்தால் தான் வாடும்; ஆனால் விருந்தினரோ, முகம் மாறி நோக்கிய அளவிலேயே வாடி வதங்குவர்'' என உடன்பாட்டிலேயே பொருள் கூறி "ஆனால்" என்ற இணைப்புச்சொல்லை இட்டு வேற்றுமை காண்பார். மணக்குடவர் ''மோந்தால் அல்லது வாடாது" என்றும் பரிமேலழகர் ''மோந்துழியன்றிக் குழையாது" என்றும் உடன்பாட்டுச் சொற்களை எதிர்மறைச் சொற்களாக்கி வேறுபாடு கண்டு வேற்றுமையணி எனக் கூறி வேறுபாடு காண்பர். ஆனால் சாரங்கபாணியோ உடன்பாட்டிலேயே (வள்ளுவரை ஒட்டி) பொருள்கூறி இணைப்புச் சொல்லாக 'ஆனால்' என்பதைப் பயன்படுத்தி வேற்றுமை காண்பார். இதுவே பொருத்தம் எனலாம்.

வேறு பலர் (தேவநேயர், குழந்தை, பழைய உரை) உவமையணியாக்கிப் பொருள் கூறுவர். அனிச்சம் குழைவது போன்று விருந்தும் குழையும் என்ற கருத்தில் பொருள் எழுதுவர். மோப்ப, என்ற சொல் தரும் பொருளுக்கும் 'நோக்க' என்பதற்கும் இடையே வேறுபாடு காணாது உள்ள நிலையில் தான் இப்பொருள்படுகின்றது. இணைப்புச் சொல்லாகப் 'போல' என்பதைக் கொள்ளுவர்.

இன்னுஞ் சிலரோ இதனை எடுத்துக்காட்டு உவமையாகக் கொள்ளுவர். இவர்களும் (அப்பாத்துரையார் முற்கால, பிற்கால உரையாசிரியர்கள் பலரும்) இவ்வேறுபாட்டை ஒதுக்கி விட்டு ஒப்புமையாகக் கொண்டதால் தான் எடுத்துக்காட்டு உவமையாகக் கொண்டனர். (திருக்குறள் உரைக் களஞ்சியம் ப. 221)


கவிதையாக்கம்

கவிதையாக்கம் என்பது ஒரு கலையாக்கம் இதில் எத்தனையோ உத்திகள் பயன்படும். இக்கவிதையின் உருவ ஆக்கத்தில் வேகமும் விறுவிறுப்பும் இருக்கக் காண்கிறோம். கவிதைக் கருத்தை நறுக்குத் தெறித்தாற் போன்று கூறும்

வகையில் இரண்டு வாக்கியங்களாக்கி இணைப்புச் சொல்லை இல்லாமையாக்கி அதனை வாசகர்களின் தேர்வுக்கே விட்டுவிட்டார் வள்ளுவர். இதனால் தான் மூன்று வெவ்வேறு சொற்கள் இட்டு மூன்று வகையில் பொருள் கொள்ளப்படுகின்றது. கவிதை அல்லது இலக்கியத்துக்கும் அறிவியலுக்கும் இடையே உள்ள வேற்றுமைகளில் இதுவும் ஒன்று. அறிவியல் நுண்ணிய அளவில் (denote) கூறும். கவிதை பருப்பொருள் (Cannote) நிலையில் கூறும். எத்தனையோ நயங்களைக் காணுவதும் பொருள்களைக் காணுவதும் கவிதைப் பண்பு. கவிதையைப் புரிந்து கொள்ளுவதில் வாசகனுடைய பங்கு ஏராளம்!

இடம் மாற்று

இக்கவிதைக்கு மேலும் சிறப்பு தருவது இதன் கண் காணப்படும் இடம் மாற்றம் (Transformation). அனிச்சம் மோப்பக் குழையும்: (ஆனால்) விருந்து முகந்திரிந்து நோக்கக் குழையும் என இருக்க வேண்டிய வரிசை முறை (Order) மாறி "மோப்பக் குழையும் அனிச்சம்; முகந்திரிந்து நோக்கிக் குழையும் விருந்து" என ஆகியுள்ளது. எழுவாய்களாக உள்ள அனிச்சம் என்பதும் விருந்து என்பதும் பின்னால் வருகின்றன. இந்தமாற்றம் பாட்டின் வேகத்தைக் கூட்டுகின்றது. எது முக்கியமோ அதனை முன்னால் கொண்டு வந்து நிறுத்துகின்றது. மோப்பக் குழையும்; நோக்கக் குழையும் என்பன தான் இப்பாட்டின் கரு. இதனால் தான் இவற்றைப் பாடலின் அடிகளில் முன்னால் கொண்டு வந்து வாசகர் மனதில் உடனே பதியுமாறு கவிதை உருவாக்கப்படுகின்றது. தமிழ்க் கவிதையாக் கத்தில் இத்தகைய மாற்றங்களை ஏராளமாகக் காணலாம். "கண்டனென் கற்பினுக் கணியை" போன்ற இடமாற்றங்கள் ஏராளம். "அது கொல் தோழி காம நோயே'' போன்றவை சங்க இலக்கியங்கில் பரந்து கிடக்கின்றன. "கற்றதனால் ஆய பயனென் கொல், வாலறிவன் நற்றாள் தொழா அர் எனின்'' போன்றவை குறளிலும் ஏராளம்! இத்தகைய மாற்றங்கள் தரும் கவித்துவப் பண்பும் மிகமிக அதிகம்! இத்தகை மாற்றங்களால் தான் "மோப்பக் குழையும் அனிச்சம்" போன்ற பாடல்களும் உணர்வு ஊட்டும் உயரிய கவிதைகளாக மலர்கின்றன.



மோப்ப குழையும் முகந்திரிந்து நோக்க குழையும் என்ற கட்டமைப்பு (Structure) யாப்பு அமைதி பெற்றுச் சிறந்த ஒரு குறளாக நம் உள்ளங்களில் உலவி வருகின்றது! எல்லாவற்றிலும் ஒரு ஒழுங்கு! ஒருமைப்பாடு! ஒரு முகப்போக்கு!

எம்.ஆர். இராஜகோபாலன் தம் திருக்குறள் மொழிபெயர்ப்புப்பற்றி

In this rendering of Thirukkural in English, my aim was to be as faithful to the original as the idiom of a foreign language world permit. While preserving the consciseness which is characteristic of the Tamil verses, I have also striven to avoid the stiffness and uncouthness which are likely to result from too literal an adherence to the original. How far I have succeeded it is for the reader to judge.

திருக்குறள் - ஆங்கில மொழிபெயர்ப்பு

டாக்டர் வா.செ.குழந்தைசாமி

தமிழ்நாட்டு பல்கலைக் கழகங்கள் இந்திராகாந்தி தேசிய திறந்த நிலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பதினைந்தாண்டுக் காலம் துணைவேந்தராகப் பணியாற்றியவர். சாகித்ய அகாதெமி பரிசு, அறிவியல் கல்வித் துறைக்கு ஆற்றிய பணிகளுக்கான 'பத்மஸ்ரீ' விருது, தமிழக அரசின் திருவள்ளுவர் விருது முதலியன இவரைத் தேடிவந்த சிறப்புகள். ஐ.நா.சபை நீர்வளத்துறை வல்லுநர், எல்லாவற்றிற்கும் மேலாக ஓர் கவிஞர். 'குலோத்துங்கன்' என்னும் பெயரில் கவிதை எழுதி வரும் இவர் பாரதிதாசன் பரம்பரை கவிஞராக அறியப்பட்டவர்.

தமிழ் நூல்களில் மிகவும் அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருப்பது திருக்குறள். எத்தனை மொழிபெயர்ப்புகள் வந்திருக்கின்றன என்பது பற்றிய துல்லியமான விபரம் தெரியவில்லை. மாறுபட்ட தகவல்கள் கிடைக்கின்றன. மற்ற தமிழ் நூல்களினும் அதிகமான மொழிபெயர்ப்பைக் கொண்டது திருக்குறள் என்பதில் ஐயமில்லை.

மொழிபெயர்ப்பு ஓர் எளிய பணி அன்று. பல சிக்கல்கள் நிறைந்தது. தமிழ் மண்ணில் இல்லாத ஒரு மரத்தின் பெயரைத் தமிழில் மொழி பெயர்க்க இயலாது. ஒலிபெயர்க்க வேண்டும் அல்லது இடுகுறிப்பெயர், காரணப்பெயர் ஒன்றைக் காண வேண்டும். யூகலிப்டஸ் என்பதை ஒலி பெயர்த்துத் தான் எழுதுகிறோம். இப்படிப்பல சான்றுகள் கூறலாம்.

பொதுவாக ஒரு சமுதாயம் இன்னொரு சமுதாயத்தொடு தொடர்பு கொள்ளும் பொழுது அதன் தாக்கத்திற்கு உள்ளாகிறது. அந்தச் சமுதாயத்தின் பண்பாட்டை, கலை, இலக்கியம் தொடர்பான, சமயம், தத்துவம் தொடர்பான கூறுபாடுகளை அறிந்து கொள்கிறது. அவை இந்தச் சமுதாயத்தின் இலக்கியங்களில் இடம் பெறுகின்றன. அப்பொழுது சொற்களைக் கடன் வாங்குவது என்பது தவிர்க்க முடியாததாகிறது. எந்த ஒரு மொழியிலும் அதனொடு தொடர்பில்லாத அந்நியமான மற்றொரு பண்பாட்டின் கூறுபாடுகளைக் குறிப்பிட, நேரடியான சொற்கள் இருப்பது அரிது. இதையொத்த சூழ்நிலைகளில் சொற்களைக் கடன் வாங்குவது தவிர்க்க இயலாததாகிறது.

நாகரிக வளர்ச்சி பெறாத நிலையில், பல புதிய சமுதாயங்களோடு தொடர்பு கொள்ளும் தேவையில்லாத காட்டுமிராண்டி வாழ்க்கையில், சொற்களைக் கடன் வாங்குவது தேவையில்லை. ஆனால் உலகு தழுவி வாழும் ஓர் இனம், மற்ற பண்பாடுகளின் தாக்கத்தை உள்வாங்கும் பொருட்டுச் சொற்களைக் கடன் வாங்கியே தீர வேண்டும். இது வளர்ச்சியின் அறிகுறி, குறைபாடு அன்று.

சான்றாக 'தர்மா' (Dharma) என்ற வட சொல்லை எடுத்துக் கொள்வோம். அது ஒரு பொருளை மட்டும் குறிக்கும் சொல் அன்று. அது 'ஒரு சொல் - பல்பொருள்' வகையைச் சேர்ந்தது.

இந்தியப் பண்பாட்டின் பல கூறுபாடுகளைக் குறிப்பிடும் தன்மை கொண்டது. எனவே அதை ஆங்கிலத்தில் 'Charity' என்றோ 'Righteousness' என்றோ, Justice என்றோ யாரும் மொழிபெயர்ப்பதில்லை. அதை அப்படியே ஆங்கிலத்தில் Dharma என்றே கடன் வாங்கி எழுதுகிறார்கள். ஆங்கில அகராதியில் அச்சொல் Dharma என்றே இடம் பெற்றிருக்கிறது. அதைப் போலவே சாணக்கியரின் அர்த்த சாஸ்திரம் என்ற நூலை 'அர்த்த சாஸ்த்ரா' என்றுதான் குறிப்பிடுகிறார்களே தவிர, Science of Wealth என்று மொழிபெயர்ப்பதில்லை. ஏனெனில் 'அர்த்த' என்ற சொல் பல பொருள்களைக் கொண்டது. இடத்திற்கேற்பப் புரிந்து கொள்ள வேண்டிய தேவையையுடையது.

மேலே கூறப்பட்டுள்ள அணுகு முறை வட மொழி நூல்களை மொழிபெயர்க்கும் பொழுது முறையாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் தமிழ் நூல்களின் மொழிபெயர்ப்புக்கு வரும் பொழுது, ஏனோ இந்த அணுகுமுறை பயன்படுத்தப் படுவதில்லை. சான்றாகத் திருக்குறளை எடுத்துக் கொள்வோம். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் இவற்றுள் வரும் அறம் என்பது Virtue அல்லது Righteousness என்றும், பொருள் என்பது Wealth என்றும், காமம் என்பது Love என்றும் மொழிபெயர்க்கப்படுகின்றன. போப், (G.U. Pope), லாசரஸ் & ட்ரூவர் (Lazarus and Drewer); போன்ற மேலை நாட்டினரும், திரு. V.V.S. அய்யர், திரு வடிவேலு செட்டியார், திரு. டயாஸ் (S.M. Diaz), திரு. சுத்தானந்த பாரதி போன்ற நம்மனோரும் இதே அணுகுமுறையையே கையாண்டிருக் கின்றனர். ராஜாஜி மட்டும் இவர்களினின்றும் வேறுபடுகிறார். அறம் என்பதை Dharma என்றும், பொருள் என்பதை Worldly Affairs என்றும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். Dharma என்பது ஆங்கிலச் சொல் அன்று. எனினும் ஆங்கில அகராதியில் இடம் பெற்றுவிட்ட 'வடசொல்'.

'அறம்' என்பது ஒரு சாதாரண உரையாடல் சொல் அன்று. தமிழ் நாகரிகத்தின், பண்பாட்டின், ஆத்மாவைக் குறிக்கும் ஒரு மரபு வழக்கு. சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி 'அறம்' என்ற சொல்லுக்கு தருமம், புண்ணியம், தகுதியானது, சமயம், ஞானம், அறச்சாலை, நோன்பு, சாபம், தருமதேவதை, யமன் போன்ற பத்துப் பொருள்களைப் பட்டியலிடுகிறது. அறத்துப்பாலில், அறம் என்ற சொல்லின் பொருள்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் பொருந்தத்தக்க தலைப்புகள் இடம் பெற்றிருக்கின்றன. எனவே அறம் என்பதை Virtue என்றோ Righteousness என்றோ மொழி பெயர்ப்பது அறவே பொருந்தாது. அறத்துப்பாலின் பரிமாணத்தைக் குறைத்து மதிப்பிடுவதாகும். ராஜாஜி அவர்கள் பயன்படுத்தியுள்ள Dharma (தர்மம்) என்ற மொழிபெயர்ப்பு பேரளவு பொருந்துவதாகும். ஆனால் அறம் என்பதும் 'தர்மம்' என்பதும் முழுமையாக ஒன்றன்று. ஆங்கிலத்தில் 'அறத்துப்பால்' என்றே ரோமன் வரி வடிவத்தில் எழுத வேண்டும். அறம் என்பதன் முழுப்பரிமாணத்தையும் ஒரு குறிப்பின் மூலம் விளக்க வேண்டும். எப்படி Dharma என்ற வட சொல்லை அப்படியே பயன்படுத்தி, ஆங்கில அகராதியில் இடமளிக்கப்பட்டிருக்கிறதோ அதேபோல 'அறம்' என்றே ஆங்கிலத்தில் எழுதப்பட வேண்டும். அறம் என்ற தமிழ் வழக்கின் பொருள் விரிவாக விளக்கப்பட வேண்டும்.

சரியான ஆங்கில மொழிபெயர்ப்பு என்று வரும் பொழுது பொருட்பால் என்ற பகுதியில் வரும் 'பொருள்' என்ற சொல்லை Wealth என மொழி பெயர்ப்பது மிக மிகத் தவறானது என்றே கூறலாம். தமிழ்ப் பண்பாட்டில் 'பொருள்' என்ற சொல்லுக்கு மிக முக்கியமான இடம் உண்டு. அது தமிழர் வாழ்க்கை முறையோடு ஒன்றிய பல கூறுபாடுகளைத் தன்னுள் கொண்டது. சென்னைப்

பல்கலைக் கழகப் பேரகராதி 'பொருள்' என்ற சொல்லுக்கு 27 பொருள்களைக் குறிப்பிடுகிறது. அதில் Wealth என்பது ஒரு பொருள் மட்டுமே. மேலும் பொருட்பாலில் வரும் 57 அத்தியாயங் களில் வள்ளுவர் செல்வத்தைப் பற்றி மட்டுமே பேசவில்லை. இறைமாட்சியில் தொடங்கி, கல்வி, கேள்வி. மேலாண்மை, அரசியல், சமுதாயம், ஆட்சிமுறை, நிர்வாகத்தின் அங்கங்கள், தகவல் தொடர்பு, பாதுகாப்பு, படை, ஒற்றர், தூதர், தனிமனித ஒழுக்கம் எனப் புற வாழ்வு தொடர்பான வாழ்க்கைப் பரிமாணங்கள் அனைத்தைப் பற்றியும் பேசுகிறார். பொருட்பாலில் வரும் 'பொருள்' என்பதைச் செல்வம் என மொழிபெயர்ப்பது எந்த அடிப்படையிலும் ஏற்புடைத்து அன்று. ராஜாஜி 'Worldly Affairs' என்று மொழி பெயர்த்திருக்கிறார். அது Wealth என்ற மொழி பெயர்ப்பை விடப் பன்மடங்கு சிறந்த மொழி பெயர்ப்பு, ஆனால் உண்மையில் 'பொருள்' என்ற தமிழ்ச் சொல்லுக்கு நிகரான ஆங்கிலச் சொல் இல்லை. சாணக்கியர் வடமொழியில் எழுதியுள்ள அர்த்த சாஸ்திரத்தை Artha Sastra என்று தான் ஆங்கிலத்தில் எழுதுகிறார்களே தவிர The Science of Wealth என்றோ Science of Economics என்றோ மொழிபெயர்க்கவில்லை. எனவே பொருட்பால் என்பதை ஆங்கிலத்தில் Porutpal என ஒலிபெயர்த்துத் தான் எழுத வேண்டும். பொருள் என்ற சொல்லை ஆங்கிலத்தில் ஏற்று, அதற்கான விளக்கத்தை ஆங்கில அகராதியில் கொடுக்க வேண்டும்.

காமத்துப்பாலுக்கு வரும் பொழுது, Love என்ற ஆங்கிலச் சொல் பயன்படுத்தப்படுகிறது. Pleasure என்ற சொல்லையும் பயன்படுத்து வாருளர். களவியல், கற்பியல், மட லேறுதல், ஊரில் அலர் பரவுதல் போன்ற, அகத்துறைக் கூறுபாடுகள் அனைத்தும் கொண்டது காமத்துப்பால். Love அல்லது Pleasure என்ற சொல் தகுதியுடையது தானா என எண்ணிப்பார்க்க வேண்டும்.

பொதுவாகத் தமிழ் நூல்களில் வரும் அறம், பொருள், அகம், புறம், சால்பு போன்ற பல சொற்கள் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகளை உள்ளடக்கியவை. அவற்றிற்கு நேரான ஆங்கிலச் சொற்கள் இல்லை. ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்துவதன் மூலம் இச்சொற்களின் முழுப் பரிமாணங்கள் வெளிவருவதில்லை. எதிர்காலத்தில் பழந்தமிழ் நூல்கள் பெரிய அளவில் ஆங்கிலத்திலும், பிற மொழிகளிலும் மொழி பெயர்க்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. மேலே குறிப்பிடப்பட்ட அம்சங்களைத் தமிழறிஞர்கள் எண்ணிப் பார்ப்பது தேவையென்று கருதுகிறேன்.

எஸ். ஜெகத்ரட்சகன் தம் திருக்குறள் மொழிபெயர்ப்புப் பற்றி

மணக்குடவர் முதல் மாண்புமிகு கலைஞர் வரை பலர் உரை கண்டாயிற்று. ஒவ்வோர் உரையிலும் ஒரு புதுமை, ஓர் அருமை காணத்தான் முடிகிறது. நான் 1985 லேயே "திருக்குறள் கருத்துரையும் ஆங்கிலத் தொகுப்புரையும்" என்ற ஒரு நூலை பத்தாண்டுகட்கு முன்னரே வெளியிட்டேன். கடந்த ஆண்டு நானே திருக்குறள் ஆங்கில ஆக்கமும் செய்தேன். பேரா. ம.இலெ. தங்கப்பாவின் செப்பநிலையில் அது மேலும் சிறப்புற்றது. முன் பதிப்பில் பல்வேறு ஆசிரியர்களின் ஆங்கிலப் பெயர்ப்புக்களைத் தொகுத்தும் எந்த ஒன்றிலும் நிறைவின்மையால் வள்ளுவர் உள்ளம் தெள்ளெனப் புலப்படவும் கருத்தின் தெளிவு எளிதாக விளங்கவும் இவ்வாண்டு ஆங்கில ஆக்கம் செய்தேன். என் தமிழ்க் கருத்துரையையும் ஆங்கில ஆக்கத்தையும் என் மகள் திருமணத்தின் போது வெளிடுகிறேன்.

எச்சத்தாற் காணப்படும்

கம்பராமன்

'கம்பராமன்' என்று போற்றப்படும் வித்வான் எஸ்.கே.இராமராஜன் தமிழ் இலக்கண இலக்கியமென்னும் அளப்பரும் சலதியின் ஆழம் கண்டவர். சங்க இலக்கியம் முதல் அண்மைக் கால இலக்கியம் வரை அத்தனையையும் நினைவுப் பேழையில் தாங்கி நிற்பவர். வைணவ இலக்கியத் துறையில் ஆழங்காற்பட்ட புலமை உடையவர், வேலூர் கந்தசாமிக் கவுண்டர் மேல்நிலைப் பள்ளியில் அரும்பணி ஆற்றி ஒய்வு பெற்றபின் சில காலம் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்தார். 'மேகநாதம்' 'கம்பனும் ஆழ்வார்களும்' போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கன.

பழங்காலச் சான்றோர்கள் அனைவரும், மக்களை மக்களாக்குவதற்காகவே நூல்கள் இயற்றினர். அவை இறவாத வலிமையோடு புதுப்பொலிவுடன் இன்றும் நிலைத்து நிற்கின்றன. எவர் தன்னலமின்றிச் செயல்படுகிறார்களோ அவர்கள் மக்களின் இதயங்களில் நெய்படு விளக்காக நின்று இருளோட்டுகின்றனர்.

பாரத தேசத்தில் ஒவ்வொரு குடிமகனும் போற்றிப் பாராட்ட வேண்டிய நூல்கள் சிவஞான போதமும் பகவத்கீதையும் திருக்குறளுமாகும். இதனைச் சித்பவானந்தம் என்னும் நூல்

போதமும் கீதையும் பொற்பார் திருக்குறளும்
வேதமெனக் கொள்க விழைந்து.

என்று கூறுகிறது.

இம் முத்திற நூல்களும் மனித சமுதாயத்தை உயர்த்துவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. இந்நூல்களின் சிறப்பியல்புகள் அனைத்தையும் உணர்வதற்கு ஒவ்வொரு மனிதனும் முயலவேண்டும்.

இம்மூன்று நூல்களிலும் திருக்குறள் 'பொற்பார்' என்னும் அடைமொழியைப் பெற்றுள்ளது. இதனால் இதனை இயற்றிய ஆசிரியனுடைய தமிழ்மொழிப்பற்றுப் புலனாகிறது. இதுகொண்டு போதமும், கீதையும் இகழப்படவில்லை. இம்மூன்று நூல்களையும் 'வேதமெனக் கொள்க' என்று போற்றுவதால் வேதமும் சிறப்பிக்கப்படுகிறது.

வெள்ளிவீதியார் "செய்யா மொழிக்கும் திருவள்ளுவர் மொழிந்த பொய்யாமொழிக்கும் பொருள் ஒன்றே!" என்று மொழிந்ததையும், மாங்குடி மருதனார் 'வேதப்பொருளாய் மிக விளங்கி' என்று விவரித்ததையும், வண்ணக்கஞ் சாத்தனார் 'ஆரியம் வேதம் உடைத்து, தமிழ் திருவள்ளுவனார் ஒது குறட்பா உடைத்து' என்று பகர்ந்ததையும் ஆராய்ந்து ஒவ்வொரு மனிதனும் கலகமனப்பான்மையிலிருந்து விலகியிருக்க வேண்டும். நல்கூர் வேள்வியார்

"உப்பக்கம் நோக்கி உபகேசி தோள்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப இப்பக்கம்
மாதானு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு"

என்று பேசினார். உபகேசி தோள்மணந்த கண்ணபிரான் உத்தரமாமதுரைக்கு அச்சு.

வள்ளுவர் தென்மதுரைக்கு அச்சு என்று அப் பாவிற்குப் பொருள்கொள்ள வேண்டும். உபகேசி என்பது நப்பின்னையைக் குறிக்குமென்று நேமிநாத உரையாசிரியர் விவரித்தார். கண்ணபிரான் கீதையைப் பகர்ந்ததனால் வடமதுரைக்கு அச்சானான். வள்ளுவர் முப்பால் வழங்கியதால் தென்மதுரைக்கு அச்சானார். இதனால் திருக்குறளும் கீதையும் போற்றப்படுவதை அறிஞர் அறிவர்.

வேதமாகிய பசு ஆகமமாகிய பாலை வழங்கிற்று. சமயச் சான்றோர் நால்வரும் அப்பாலின் உள்ளுறை நெய்யாகிய தேவாரத்தை வழங்கினர். மெய்கண்டாரோ நெய்யின் சுவையாகிய சிவஞானத்தை வழங்கினர் என்று பழையபாடல் ஒன்று பேசுகிறது. அப்பாடலின் உள்ளுறை, வேதத்தின் சாரம் 'சிவஞானபோதம்' என்பதாகும். வேதத்தின் சாரம் திருக்குறள் என்பது உலகமறிந்த உண்மை. வேதத்தின் உண்மையை நன்குணர்ந்தவர் 'ஆரியப் பெருமன்றத்தினரே'

நம் திருக்குறள் பல்வேறு உரைகளைப் பெற்று இன்று சிறப்பிடம் பெற்றுவருவது தமிழர்கள் உள்ளத்தில் கிளுகிளுப்பை உண்டாக்கும் செய்தியாகும்.

திருக்குறளுக்குத் தோன்றிய உரைகளுள் தலைசிறந்தது. பரிமேலழகர் உரையேயாகும். இதனைச் சான்றோர் அறிவர்.

பரிமேலழகர் கூறியன அனைத்தும் வேதமன்று. அவர் உரையும் விமர்சனத்துக்குரியதே. ஆனால் விமர்சனம் செய்பவர்கள் தூய்மையும் நேர்மையும் கலந்தவராயிருந்தல் வேண்டும். இன்று அழகரை விமர்சிப்பவர்பால் இலக்கண இலக்கியப் புலமையில்லை. வெறும் கொதிப்பும் குறுகுறுப்புமே உள்ளது. இவர்களது மறுப்புரை நீண்ட நாளைக்கு எடுபடாது.

இவ்வுலகில் இறைவனும், இறைவனைச் சார்ந்த மெய்யடியார்களும், இறைவனை விளக்கும் நூல்களும் விமர்சனத்திற்குட்பட்டு இடர்ப்படுவதை உலகம் அறியும். விமர்சனம் செய்யவர்கள்பால் நேர்மையும் நெறியும் இன்மையும் அவ் விமர்சனங்கள் காகிதப் புலியாய்க் கிடப்பதை நாம் அறிவோம்.

இக்கட்டுரை பரிமேலழகரின் உரையை விமர்சனம் செய்கிறது. இதனால் பரிமேலழகர் புகழ்மங்காது; மறையாது.

வள்ளுவர் குறள்கள் அனைத்தும் ஆழ்ந்த புலமையின் அடிப்படையில் எழுந்தவையே. அவற்றிற்குப் பொருள்காணும் போது எவரும் முறைதவறிச் செல்ல இடமுண்டு.

வள்ளுவர் 'நடுவு நிலைமை' என்ற அதிகாரத்தில் அற்புதமாக ஒரு குறள் அமைந்துள்ளார். அதற்கு உரைகாணும் போது பல இடர்ப்பாட்டுக்குட்பட்டு பேராசிரியர்கள் நிலைகலங்கியுள்ளனர்.

தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்

இக்குறள் ஏதோ ஒரு நுட்பத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நுட்பத்தை விளக்க முற்பட்ட யான், என் அறியாமையைச் சான்றோர்கட்குச் சமர்ப்பிக்கிறேன்.

பரிமேலழகர் ''இவர் நடுவு நிலைமை உடையர்; இவர் நடுவு நிலைமை இலர் எனும் விசேடம் அவரவருடைய நன்மக்களது உண்மையானும் இன்மையானும் அறியப்படும்,'' என்று விளக்கினார். அப்பெருமானார் மேலும் "தக்கார்க்கு எச்சமுண்டாதலும், தகவிலார்க்கு இல்லையாதலும் ஒரு தலையாகலின், இருதிறத்தாரையும் அறிதற்கு அவை குறியாயின", என்று தெளிவுப்படுத்தினார்.

பரிதியும் பரிப்பெருமாளும் அழகரையே பின்பற்றுகின்றனர்.

காலிங்கர் 'எச்சம்' என்னும் சொல்லுக்கு 'ஒழுக்கம்' என்றும், வ.உ.சி. அவர்கள் புகழ் அல்லது இகழ் என்றும், அரசஞ்சண்முகனார் மிச்சமாய் நின்ற புண்ணிய பாவமென்றும், தேசியக் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை சந்ததி முதலாய எச்சம் என்றும் கூறினர்.

இவ்வுரைகள் பொருந்தாதவை என்று விலக்க வேண்டா. ஒரு மனிதன் தகுதியுடைய வனா? தகுதி அற்றவனா என்பதை ஆராய்வதற்குச் சுருக்கமான வழிவேண்டும். அங்ஙனமின்றி மேலும் மேலும் குழப்பத்தை விளைவிப்பது உரையாசிரியருக்கு அழகன்று.

கள்ளி வயிற்றில் அகில் பிறப்பதுபோலச் சால்பற்ற மக்கட்கு சால்புடையார் தோன்றுதலும், நல்ல மரத்தில் நரையான் தோன்றுதல்போல சால்புடையோர்க்குச் சால்பற்ற மக்கள் தோன்றுதலும் கண்கூடு.

எச்சம் என்பதற்கு 'ஆரவாரம்' என்று பொருள் கூறுவதும், 'ஒழுக்கம்' என்று பொருள் கூறுவதும். பொருத்தமாகத் தெரியவில்லை. அச்சொற்குப் பொருள்தான் யாது?

'எச்சம்' என்ற சொல் மக்கள் என்று பொருள் தருமானால் அச்சொல்லை 'மக்கள்' என்று மாற்றிய பெருந்தகையாளர்க்கு நாம் நன்றியல்லவா கூறவேண்டும்.

ஒரு மனிதன் தகுதியுடையவனா? தகுதியற்றவனா? என்பதை ஆராய அவன் மகனை ஆராய வேண்டும். அவன் மகன் தகுதியுடையவனா என்பதை பேரனைக் கொண்டு ஆராய வேண்டும். பேரனுக்கு இன்னும் திருமணமாக வில்லை. அவனுக்குத் திருமணமாகி மகன் பிறக்கும்வரை நாம் காத்திருக்க வேண்டும். இப்படிமேலும் மேலும் வளர்ந்து கொண்டு முடிவற்றுப் போதலை அறிஞர்கள் உடன்படார்.

எச்சம் என்ற சொல் ஆழ்ந்த கருத்தமைந்த சொல் 'எச்சம்' என்னும் பிராகிருதச் சொல் 'வேள்வி' எனும் பொருளைத் தருவது. இச்சொல்லே வடமொழியில் வழங்கி வருகிற 'யக்ஞம்' என்ற சொல்லுக்கு மூலமாகும்.

பழங்காலத் தமிழ்ப்புலவர்கள் தம்முடைய சொல்லாக்கத்தைப் பிராகிருதத்திலிருந்தே மேற்கொண்டனர். திருத்தக்க தேவர் சுதர்சனன் என்ற சொல்லை சுதஞ்சனன் என்றும் சத்தியசந்தன் என்ற சொல்லை சச்சந்தன் என்றும் கையாண்டதைத் தமிழகம் அறியும். அம்முறையைப் பின்பற்றி நம் வள்ளுவப் பெருந்தகை 'யக்ஞம்' என்ற சொல்லுக்குப் பதிலாக எச்சம் என்ற சொல்லை எடுத்தாண்டனர்.

கண்ணபிரான் கீதையை வழங்குவதற்கு முன்பு 'யக்ஞம்' என்ற சொல் வேள்வித் தழலின்கண் அவிசொரிதலை மட்டுமே குறித்துவந்தது. கண்ணபிரான் அச்சொல்லுக்கு விரிந்த ஆழமான பொருளை வழங்கி அந்தச் சொல்லை உயர்த்தியிருக்கிறான்.

கண்ணன் சமையல் செய்வதையே ஒரு 'யக்ஞம்', என்கிறார். கர்மயோகம் பதின்மூன்றாம் சுலோகத்தில் "யாகத்தில் மிஞ்சியதை உண்ணும் நல்லோர் எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுகின்றனர். ஆனால் தங்கள் பொருட்டே சமைக்கும் பாபிகள் பாபத்தை உண்கின்றனர்," என்று பேசியதைத் திருக்குறள் அன்பர்கள் மனதில் இருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம் வள்ளுவப் பெருந்தகையும்

வித்தும் இடல்வேணடும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்

என்று கூறியதைத் தமிழகம் அறியும்.

திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரை சிறந்திருப்பதுபோல கீதைக்கு நேர்மையான

உரைவழங்கிய பெரியவர் சுவாமி சித்பவானந்தா அவர்கள் ஆவார்கள். அப்பெருந்தகையார் எழுதிய ஒவ்வொரு தொடரும் ஆழ்ந்த கருத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சுவாமிகளின் தவப்பயனே கீதையின் விரிவுரையாக வெளிவந்துள்ளது. அப்பெருந்தகையார் - "ஆற்றுகின்ற வினையைப் பிறர்க்குப் பயன்படும்படி விரிக்குமளவு அது வேள்வியாக வடிவெடுக்கிறது. கணக்குப் பார்க்குமிடத்து மனிதன் உலகிலிருந்து நன்மைகளைப் பெறுவதைவிட அதிகம் உலகுக்கு எடுத்து வழங்க வேண்டும். பெறுவது பெரிது வழங்குவது சிறியதாயிருக்குமிடத்து அவன் கடன்பட்டவனாகிறான். உலகுக்கு ஒன்றையும் கொடாது உலகத்திலிருந்து எல்லாம் தனக்காகவென்று ஏற்றுக்கொள்ளுதலிலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பவன் திருடனாகிறான்" என்று வரைந்த பகுதி சிந்தித்து மனங்கொள்ளற்குரியது.

கண்ணபிரான் கீதையில் பலவிதமான வேள்விகளைப் பற்றிப் பேசுகிறான். கர்மயோகம் 15 ஆம் சுலோகத்தில் 'வேதம் யக்ஞத்தில் நிலை பெற்றுள்ளது' என்று பேசினான்.

ஞான கர்ம சந்நியாச யோகத்தில் பலவிதமான வேள்விகளைக் கண்ணபிரான் நமக்கு அறிமுகப்படுத்துகிறான். (23ஆம் சுலோகத்தில்) கடமையை வேள்வியாகச் செய்பவனுடைய கர்மம் முழுமையும் கரைந்து போகிறது என்றும், (25 ஆம் சுலோகத்தில்) இன்னும் சிலர் பிரம்மமாகிய அக்னியில் ஆத்மாவைக் கொண்டு ஆத்மாவை ஓமஞ் செய்கின்றனர் என்றும், (26 ஆம் சுலோகத்தில்) அடக்குதல் என்ற அக்னியில் சிலர் செவி முதலிய இந்திரியங்களை ஓமஞ் செய்கிறார்கள் மற்றும் சிலர் சப்தம் முதலிய விசயங்களை இந்திரியங்கள் என்ற அக்னியில் ஓமஞ் செய்கின்றார்கள் என்றும், (27 ஆம் சுலோகத்தில்)சிலர் இந்திரிய கர்மங்களையும், பிராண கர்மங்களையும் யோகத்தீயில் ஆகுதியாகக் கொடுக்கின்றனர் என்றும் (29 ஆம் சுலோகத்தில்) அபானவாயுவில் பிராணனையும் பிராணவாயுவில் அபானனையும் ஆகுதி செய்யும் சிலர் பிராண அபாண வாயுக்களின் போக்கைத்தடுத்துப் பிராணயாமத்தில் ஈடுபடுகின்றனர் என்றும் (30 ஆம் சுலோகத்தில்) முறையாக உண்பவர் சிலர் பிராணனில் பிராணனைப் படைக்கின்றனர் என்றும், யாகத்தை அறிந்த இவர்கள் எல்லோரும் யாகத்தால் பாபத்தைப் போக்கியவர்களாம் என்றும் (31 ஆம் சுலோகத்தில்) யக்ஞம் செய்யாதவர்க்கு இவ்வுலகே இல்லை என்றால் அவ்வுலகு ஏது என்றும் பேசியவற்றைச் சான்றோர்கள், அறிந்து உய்வு பெறுக!

கீதைக்குப் பேருரை வழங்கிய சுவாமி சித்பவானந்தர் ஐந்துவிதமான வேள்விகளை நமக்கு உணர்த்துகிறார். அவை 1. தேவ யக்ஞம் 2. ரிஷி யக்ஞம் 3. பித்ரு யக்ஞம் 4.நர யக்ஞம் 5. பூத யக்ஞம்.

1. தேவ யக்ஞம் : கடவுள் வழிபாடு இல்லாது ஒருநாளும் கழியலாகாது. இஷ்ட தேவதையை முறைப்படி அன்றன்று வாழ்த்தி வணங்கவேண்டும்.

2.ரிஷி யக்ஞம் : உலக நன்மையின் பொருட்டு சான்றோர் சிறந்த சாஸ்திரங்களை இயற்றி வைத்திருக்கின்றனர். அவர்களில் பலர் தங்கள் பெயரையும் வெளிக்குக் காட்டாது வைத்துச் சென்றனர். அவர்கள் அமைத்த தெய்வநெறி நூல்களை முறையாக ஆராய்வதும் அவைகளை மற்றவர்களுக்கு எடுத்து ஓதுவதும் ஆகிய செயல்கள் அன்னவர்களைப் போற்றுதலுக்கு ஒப்பாகும். நூல்களை ஓதுதலிலேயே ஒவ்வொரு நாளும் கழிய வேண்டும். இதற்கு பிரம்ம யக்ஞம் என்றும் பெயர் உண்டு.

3. பித்ரு யக்ஞம் : மனிதன் பெற்றுள்ள உடல் வாழ்க்கையில் தன் முன்னோர்களுக்குக் கடப்பாடு உடையவன் ஆகிறான். அவர்கள்

எவ்வுலகில் எந்நிலையில் இருப்பினும் இன்புற்றிருப்பார்களாக என்று அவர்களைக் குறித்து நித்தமும் நல்லெண்ணம் எண்ணுதல் வேண்டும். உயிரோடிருக்கும் பெற்றோர்களுக்கு நாள்தோறும் பணிவிடை செய்வதும் பித்ருயக்ஞத்தின் பிரிவினையாகும்.

4. நரயக்ஞம் : மக்களது பசியைப் போக்குதல், பிணியை நீக்குதல், வாழ்க்கையைப் பண்படுத்தல், கல்வியைப் பெருக்குதல் ஆகிய இவையாவும் நரயக்ஞத்தில் அடங்குகின்றன. காலத்துக்கேற்றாற் போன்று நரயக்ஞத்தை மாற்றியமைத்தல் வேண்டும்.

5. பூத யக்ஞம்: ஆடு மாடு முதலிய ஜீவ ஜந்துக்கள் மக்களது வாழ்க்கைக்குப் பல விதங்களில் பயன்பட்டுவருகின்றன. அவ்வுயிர்களை மக்கள் நன்கு பேணி வருதல் பூத யக்ஞமாகும்.

இந்த ஐம்பெருவேள்விகளைச் செய்பவர்களே மேலான வீட்டுலகைப் பெறுகின்றனர். மற்றவர்கள் தம்மையும் குலைத்து, சார்ந்தவர்களையும் அழிக்கின்றனர். இவ்வேள்வியைச் செய்பவன் தக்கவனாகிறான். மற்றவன் தகாதவன் ஆகிறான்.

ஒருவன் தகுதியுடையவனா? தகுதியற்றவனா? என்பதை ஆராய்வதற்கு அவனுடைய எச்சங்களே (வேள்விகளே) அளவுகோலாகின்றன.

எச்சம் என்பதற்கு வேள்வி என்று பொருள் கொண்டால் இக்குறள் விசுபரூபம் எடுக்கிறது. விசுபரூபமெடுக்கும் திருக்குறளப்பனைச் சேவித்து மகிழ்வோம். "அகலிடம் முற்றவும் ஈரடியே ஆகும் பரிசு நிமிர்ந்த திருக்குறளப்பன்'' என்று நம்மாழ்வார் பேசியது எண்ணி இன்புறத்தக்கது.

வ.வே.சு. ஐயர் தம் திருக்குறள் மொழி பெயர்ப்பு பற்றி

After a great deal of thought on the subject I have come to the Conclusion that the Authorised English Version of the Bible is the proper model to be followed by the translator of the Kural. The resemblance of the thought and diction of Tiruvalluvar to the great mater - pieces of the Bible, and especially to the Eeclesiastics, the proverbs and wisdom of solomon, and the sermons of Jesus, struck me forcibly, and I thought that if any portion of the vigour of the Kural be preserved in English, it could only be by adopting the phraseology and the turns of expression of the English version of the Hebrew and Greek Veda. The style of the English Bible lends itself, as everybody has felt, to the expression of every variety of thought, from the plain and the mai[illegible] to the most sublime and dignified that the human mind can conceive. It world have been easy for Drew as well as Pope, who were members of the Christian Church, to have adopted such a style for the translation of Tiruvalluvar. But, as it is Drew has given a feeble translation while Pope's verse do not at all do justice to the merits of the original but on the Contrary deform its grand thoughts by giving them a stilted and unnatural expression. In undertaking this translation my object has been to sow in the hearts of my countrymen the seeds of a noble and manly life. If this is fulfilled, I shall consider my labours have been amply rewarded.

திருக்குறள் இலக்கணக் கோட்பாடு

பாவலர் பாலசுந்தரம்

பாவலரேறு, கவிஞர் கோ, தொல்காப்பியச் செம்மல் என்றெல்லாம் தமிழுலகத்தால் பாராட்டப்பெறும் ச.பாலசுந்தரம் அவர்கள் இலக்கியப் படைப்பாளர்; இலக்கணத்தில் ஆழங்காற்பட்ட பெரும் புலமையர். தெளிவாகப் பாடம் சொல்லும் நல்லாசிரியர். கரந்தைப் புலவர் கல்லூரியின் துணைமுதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர் 'கரந்தைக் கோவை' முதலிய சிற்றிலக்கியங்களையும் 'புலவர் உள்ளம்' போன்ற கவிதை நாடகங்களையும் படைத்தவர். கரந்தைத் தமிழச்சங்கப் பணிகள், நூல் வெளியீடுகள் போன்றவற்றில் இவர்தம் பங்கு பெரிது. நம் காலத்தில் நமக்குக் கிடைத்த இளம்பூரணர் நச்சினார்க்கினியர் இவரே.

தெய்வப்புலவர் திருவள்ளுவர் மக்கள் அடையவேண்டும் என ஆன்றோர்களால் குறிப்பிட்டு வகுக்கப்பெற்றுள்ள அறம் பொருள் இன்பம் வீடு என்னும் ஆண்மைப் பேறுகளை எய்தும் நெறி முறைகளை ஆராய்ந்து நூல் செய்யப்புக்கு வீடு பேற்றிற்குரிய நெறிகளை அறத்தின் ஒரு பிரிவாகிய துறவறவியலுள் அடக்கி அறம் பொருள் இன்பம் என்னும் முப்பாலாகத்தம் நூல்களை இயற்றியுள்ளார். இக்கோட்பாடு தொல்காப்பிய ஆசிரியர் செய்யுள்களைப் பற்றிக் கூறுமிடத்து, "அந்நிலை மருங்கின் அறமுதலாகிய மும்முதற்பொருட்டும் உரிய என்ப" (செய்-102) எனவும், "இன்பமும் பொருளும் அறனுமென்றாங்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை" (களவி-1) எனவும் கூறியுள்ள கோட்பாடுகளை ஏற்றுப் பின் பற்றியதாகும்.

ஆசிரியர் தம் நூலை அறுவகைச் செய்யுள் களுள் ஒன்றாகிய வெண்பா யாப்பின் பிரிவாகிய குறள் வெண்பாவினால் இயற்றியுள்ளார். குறள் வெண்பாவின் மேனிலை அடிகள் ஏழு என்றும் குறுகிய நிலை ஏழு சீர்கள் என்றும் தொல்காப்பியர் செய்யுளியலுள் ''நெடு வெண்பாட்டே முந்நாலடித்தே புகழ் குறுவெண்பாட்டிற்கு அளவெழு சீரே" (செய்-151) எனக் கூறிய விதியைப் பின்பற்றி நான்கும் மூன்றுமாக ஏழு சீர் கொண்ட ஒன்றே முக்கால் அடியாக இயற்றியுள்ளார். மற்று வெண்பாவிற்குரிய சீர், தளை, அடி, ஓசை, முடிவு பற்றிய தொல் காப்பிய விதிகளை இம்மியும் பிறழாது தம் நூலை யாத்துள்ளார்.

திருவள்ளுவர் திருக்குறள் நூலைச் செய்த காலத்தைச் சான்றோர்கள் கி.மு.முதல் நூற்றாண்டு இறுதி என முடிவு செய்துள்ளனர். அக்காலத்தில் பயின்று வந்த இலக்கண நூல் தொல்காப்பியம் மட்டுமே. இப்பொழுது வழக்கில் உள்ள இலக்கண நூல்கள் யாவும் கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவையேயாகும். அதனால் திருவள்ளுவர் தம் நூலின் இலக்கணக் கோட்பாடு முழுமையும் தொல்காப்பியத்தைப் பின்பற்றியதாகும். தொல்காப்பியம் எழுத்து சொல் பொருள் என்னும் மூன்றதிகாரங்களைக் கொண்டது. பொருளதி காரத்தின் பிரிவாகவே யாப்பிலக்கணமும் அணியிலக்கணமும் அமைந்துள்ளன. அம் முறையில் எழுத்து சொல், பொருள், யாப்பு, அணி பற்றிய இலக்கணக் கோட்பாடுகளைத்

திருவள்ளுவர் ஏற்று நூல் செய்துள்ளமையை இனிச் சுருக்கமாகக் காண்போம்

எழுத்து

எழுத்திலக்கணம் என்பது எழுத்துக்களின் எண்ணிக்கை வகை ஒலியளவு அவை சொல்லாக உருப்பெற்ற வழி எய்தும் ஒலி வேறுபாடு இரண்டு சொற்கள் இணையுமிடத்து ஈறும் முதலுமாக அவை புணரும் நிலை ஆகியவற்றைக் கூறுவதாகும். அம்முறையில் தொல்காப்பியம் உயிர் 12, மெய் 18, சார்பு 3 என முப்பத்து மூன்று எழுத்துக்களைக் கூறுகின்றது. அவற்றுள் சார்பெழுத்துகள் மூன்றும் சொல்லிலும் சொற்றொடர்களிலும் எவ்வாறு செயல்படும் என்றும் முப்பத்து மூன்று எழுத்துக்களுள் மொழிக்கு முதலாக வருபவை ஈறாக நிற்பவை எவை எவை என்றும் கூறுகின்றது. அம்முறைமையிற் சிறிதும் மாறாமல் வள்ளுவர் தம் நூலைச் செய்துள்ளார். எடுத்துக் காட்டாக யகரமெய் ஆ என்னும் ஒரே உயிரை மட்டும் ஏற்று 'யா' என மொழிக்கு முதலில் வரும் என்று தொல்காப்பியம் "ஆவோடல்லது யகரம் முதலாது" என விதிக்கின்றது. சங்க இலக்கியங் களில் யவனர் யூபம் முதலிய சொற்களும் வழக்கில் யோகம் யௌனம் என்ற சொற்களும் பயின்று வந்த காலத்தில் வள்ளுவர் 'யா' ஒன்றைத் தவிர தமது நூலில் பிறவற்றைக் கையாளவில்லை. சகரம் மொழிக்கு முதலில் வராது எனினும் வடசொல்லாக அதனைக் கையாளுகின்றார். சார்பெழுத்துக்களுள் குற்றியலிகரம் மொழிக்கு இடையே அரைமாத்திரையளவினதாய் ஒற்றுப் போல நிற்கும் அலகாக எண்ணப் பெறாது என்னும் விதியைக் கடவாமல் வள்ளுவர் கையாளுகின்றார். இதனை "அருளல்லதி யாதெனின் கொல்லாமை கோறல் பிறவினை எல்லாம் தரும்' என்னும் பாவிற் காணலாம். அருளல்லதி என்பதினுள் 'தி' எண்ணப் பெறாது எண்ணின் வஞ்சியுரிச்சீராகிவிடும். குற்றியலுகரம் ஈறாக நிற்குமிடத்து உயிர்வரின் ஏற இடங்கொடுத்து இணைந்து நிற்கும். எண்ணப்பெறாது மெய்வரின் கெடாது நின்று அலகாக எண்ணப்பெறும் என்பது விதி. அவ்விதி பிறழாமல் "இரு நோக்கி வளுண்கண் உளதொரு நோக்கு நோய் நோக்கொன்றந் நோய் மருந்து (குறள்-1091) என்பதனுள் இரு நோக்கு" என்னும் சொல்லில் குற்றியலுகரம் மாத்திரையை இழந்தும் ஒரு நோக்கு என்னும் சொல்லில் குற்றியலுகரம் நேரசையாக எண்ணப் பெற்றும் நிற்றலைக் காணலாம். இவ்வாறே ஆய்தம் என்னும் சார்பெழுத்து ஒரு கால் மெய் போலவும் ஒரு கால் உயிர்போலவும் நிற்கும் என்பாராய்த் தொல்காப்பியர் "ஈரியல் மருங்கினும் இசைகெடத் தோன்றும்" என்பார். அவ்விதியை அப்படியே

அற்றால் அளவறிந் ஏற்றுதுண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு

என உயிர் போல வைத்து நிரையசை யாகவும் "வேண்டாமையன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை யாண்டும் அஃதொப்பதில்" என உயிர் போல நிரையசையாகவும், நின்றன. "அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க் கென்பு தோல்போர்த்த உடம்பு" என்பதில், அஃதிலார் என்னும் ஆய்தம் மெய் போல அமைந்து நேரசை ஒற்றாக நின்றது. இங்ஙனம் தொல்காப்பிய விதிக்கு இலக்கியமாக நிற்பதை எங்குங் காணலாம். புணர்ச்சி விதிகள் யாண்டும் வழுவின்றி அமைந்துள்ளமையும் காணலாம்.

சொல்

இலக்கிய ஆசிரியன் சொற்களை நேர்பொருளிலும் ஆகுபெயர் முதலிய குறிப்புப் பொருளிலும் கையாள வேண்டும். வான்சிறப்பு என்னுமிடத்து வான் என்பது மழையைக் குறித்தது. கூற்றங் குறித்தல், வாய்ச்சொல் என்றாற் போலப் பல்வேறிடங்களிற் குறிப்புச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். செய்யுளுள் இயற்சொல் திரிசொல், திசைச்சொல், வடசொல் என்னும் நால்வகைச் சொற்களையும் பயன்படுத்தலாம் என்பது தொல்காப்பிய மரபு. அம்முறையில் கேணி,

பெற்றம் என்றாற் போலக் குறைந்த அளவில் திசைச் சொற்களைப் பயன்படுத்துகின்றார். 4500 சொற்களுக்கு மேல் பயன்படுத்தியுள்ள ஆசிரியர் வடசொற்களை மிகக் குறைந்த அளவில் இன்றியமையாத பொருட்சிறப்பினைத் தரவேண்டுமிடத்து மட்டும் பயன்படுத்துகிறார். சில சொற்களை மொழிபெயர்த்துப் பயன்படுத்துகிறார். அவி=நெய், சமன், நாமம், மந்திரி, பாக்கியம், ஆசாரம், மாயம் என்பவை வட சொற்கள். சோகாப்பர் அதிநுட்பம் என்றாற் போல இணைத்தும் ஒருவந்தம் (ஏகதேசம்) என்றாற் போல மொழி பெயர்த்தும் பயன்படுத்தியுள்ளார். நூற்றுக்கு அரை விழுக்காட்டிற்கு மேல் வடசொற்கள் இல்லை. உற்றக்கடை, வேபாக்கு என்றாற் போல ஈறுகளை சில சொற்களில் பயன்படுத்தியுள்ளார். குறிப்பெச்சம் இசையெச்சமாகப் பல்வேறு இடங்களில் கருத்துக்களைப் பெறவைக்கின்றார். இங்ஙனம் சொல்லிலக்கணம் முழுமையும் தொல்காப்பிய நெறியிலேயே அமைந்துள்ளன.

பொருள்

தொல்காப்பியப் பொருளதிகாரம் ஆடவரும் பெண்டிரும் காதலித்து மணந்து நடத்தும் இல்லறமாகிய குடும்ப வாழ்க்கை பற்றிய இலக்கணங்களை அகத்திணையியல் களவியல் கற்பியல் பொருளியல் என்னும் இயல்களிலும் செய்யுளியலிலும், சிறுபான்மை மெய்ப்பாட்டியல் உவம இயல்களிலும் சமுதாயம், அரசு ஆட்சி, போர், வெற்றி, பாராட்டு, தெய்வம் பற்றிய இலக்கணக் கோட்பாடுகளைப் புறத் திணையியலிலும், சிறுபான்மை வேறு இயல்களிலும் கூறுகின்றது. திருவள்ளுவர் அவ் இலக்கண மரபுகளையே பின்பற்றிப் பொருட்பாலில் அரசு, அமைச்சு, தூது, ஒற்று, படையாட்சி, படைச்செருக்கு, அரண் முதலிய அதிகாரங்களிலும் பிற இடங்களிலும் கூறுகின்றார்.

கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை

என்னை முன் நில்லன் மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கல்நின் றவர்

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்

என்றாற் போலப் புறத்திணைத்துறைகள் பலவற்றை விதந்து கூறுகின்றார்.

அரண் என்னும் தலைப்பின் உழிஞைத் திணை பற்றியும் நிலையாமை அதிகாரத்தில் காஞ்சித்திணை பற்றியும் கருத்துக்கள் அமைந்துள்ளன.

காமத்துப்பாலில் முதல் ஏழு அதிகாரங்கள் களவியல் பற்றியும், பின் பதினெட்டு அதிகாரங்களில் கற்பியல் பற்றியும், தெளிவாகவும் விளக்கமாகவும் தொல்காப்பிய நெறியைப் பின்பற்றித் துறைகளை அமைத்துக் கூறுகின்றார்.

யாப்பு

இயற்சீரும் வெண்சீரும் வெண்டளையும் செப்பலோசையும் வழுவாமல் வெண்பா யாப்புத் தலைசிறந்து நிற்கிறது. தொடை நயங்கள் சிறப்பாக அமைந்துள்ளன. பெரும்பான்மையும் ஓரடியுள் மூன்றாம் சீரில் பொழிப்பு மோனையும் நான்காம் சீரில் ஒரூஉ எதுகையும் அமைத் துள்ளார்.

''பெற்றாற் பெறின் பெறுவர் பெண்டிற் பெருஞ்சிறப்பு'', ''கற்க கசடறக் கற்பவை கற்றபின்'' என்றாற் போல முற்று மோனைகளும்

காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று

என எதுகை நயமும் அடுக்குகளும் இவ்வாறே அளபெடைத் தொடைகளும் முரண் தொடைகளும் அமைய பன்னூறு பாக்களை அமைத்துள்ளார்.

அணி

தொல்காப்பியம் உவமவியலுள் கூறும் உவம இலக்கணத்தின் பல்வேறு கோணங்களே.

உருவகம், வேற்றுப்பொருள் வைப்பு, பிறிது மொழிதல் முதலிய அணிகளாகப் பிற்காலத்தில் விரித்துரைக்கப்பெற்றன. அம்முறையில் உவம அணி மிகுதியாகவும், ஏனைய அணிகள் சிறுபான்மையாகவும் திருக்குறட்பாக்களில் அமைந்துள்ளன.

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.

உடையார் முன் இல்லார் போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லாதவர்
இவை உவம அணி

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப்புனையச் சுடும்
இஃது உருவகம்

சொல்லுக சொல்லை பிறிதோர் அச்சொல்லை
வெல்லும் சொல் இன்மை யறிந்து
இது சொற்பொருள் பின் வருநிலையணி

கடலோடா கால்வல் நெடுந்தோர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கை கொள்ளும் காழ்த்த விடத்து
இவை பிறிது மொழிதலணி

முறிமேனி முத்தம் முறுவல் வெறி நாற்றம்
வேலுண்கண் வேய்த்தோள் அவட்கு
நிரல்நிறையணி

ஊடலிற் றோற்றவர் வென்றார் அது மன்னும்
கூடலிற் காணப் படும்.
இது முரண் அணி

இங்ஙனம் ஐந்திலக்கணமும் தொல்காப்பிய நெறி மரபை ஒட்டி அமைந்திருத்தலின் தொல்காப்பிய இலக்கணக் கோட்பாடே திருக்குறளின் இலக்கணக் கோட்பாடாகும் என்க.

எஸ். எம். மைக்கேல் கூறுகிறார்.

சில்லாண்டுகட்கு முன் பொழுதுபோக்காகத் "திருக்குறளினின்று சில செய்யுட்களை மொழிபெயர்த்தேன். ஆனால் சின்னாட்களுக்கு முன்புதான் அதைத் தொடுத்துச் செய்ய முடிந்தது. ஒருவருக்கும் ஏற்பட்டிராத கஷ்டங்களுக்கிடையில் இதைச் செய்து முடித்தேன்.... நமது தெய்வப் புலவரது திருக்கருத்துக்கள் சிதைவுறாது, எக்கவி வகையை அவர் கையாண்டனரோ அதே கவி வகையைக் கையாள வேண்டுமென்னும் கருத்துடன் ஆங்கிலத்திற் குறட்பாவை ஆக்கினேன். Coupletette என இதையழைக்கலாம். திருவள்ளுவப் பெரியாரின் பொருள் வளங்குன்றாமலும் அவரது சொல் நயங் கவியின்பங் குறைவுபடாமலும் இருக்க வேண்டும் என்பதே என் எண்ணம். இதற்கு முன் ஒருவரும் இவ்வாறு செய்ய முயலவுமில்லை. எனது தாழ்மையான முயற்சி பலித்ததா, இல்லையா என்பது கல்வி கேள்விகளில் வல்ல நேர்மைக் குணமுடைய பண்டிதர், பாவலர், நாவலர் மணிகள் முடிவு செய்ய வேண்டுவதொன்று. இதிற் பல குறைகளிருக்கின்றன. சிலபல இடங்களில் எதுகை நன்கமையாததே இவற்றில் முக்கியமானது. இதுபோன்ற குறைபாடுகளை மிகைப்படுத்திக் கூறவிரும்புங் கற்றோர்க்கு மற்றோர்க்கும் வணக்கமாக யான் கூறுவதாவது;. இந்நெடுவுலகின்கண் மொழிபெயர்க்க இவ்வளவு கடினமான நூல் வேறில்லையென்பதை மறவற்க; அதே கவிவடிவத்தில் அப்படிச் செய்வதென்பது இதுகாறும் ஒருவரேனும், மனத்தாலும் எண்ணத் துணியாதவொன்றென்பதை உன்னுக; மேலும் முதற்பாவலர் முதலாயோர் தாய் மொழியில் எழுதினாரெனினும் துவக்கமுதற் கடைசிவரை எதுகையை உபயோகிக்க வேண்டிய தொல்லையிலிருந்து நல்லவேளையாய்த் தம்மை விடுவித்துக் கொண்டனரென்பதையுந் தயவு செய்து நினைவு கூர்க; இக்குற்றங் குறைகள் ஒருபுறமிருக்க, என் மொழிபெயர்ப்பு மொத்தத்திற் பெருநாவலரின் திருவாக்கிற்குத் தகுதியுடையதென்னுந் திடமான நம்பிக்கையுடன் இப்பொழுது இதை உலகிற்குக் கொடுக்கிறேன்.

திருக்குறளில் அறக் கோட்பாடுகள்

சிந்தனைச் செம்மல். கு.ச. ஆனந்தன்,

அறிஞர் கு.ச.ஆனந்தன் தொழிலால் வழக்கறிஞர். திராவிட இயக்கங்களில் முனைப்போடு ஈடுபட்டுப் பின் ஒதுங்கிவிட்ட அரசியல் வாதி, அவரது "மலர்க மாநில சுயாட்சி" என்னும் நூல் அரசமைப்பு தொடர்பானது. தவிர அரசியலில் இருந்து விடுபட்டபின் திருக்குறள் தொடர்பான ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டார். தமிழக அரசின் திருவள்ளுவர் விருது அவருக்கு வழங்கப்பட்டது. எதிர்பாராத நிலையில் சில தினங்களுக்கு முன் மறைந்துவிட்டார்.

தமிழ்மொழியில் 'அறம்' என்ற சொல்லுக்குத் தரப்பட்ட பல்வேறு சொற் பொருள்கள், ஒவ்வொரு காலப் பகுதிக்கும் ஏற்றபடி, படிப்படியாக வளர்ந்து வந்துள்ளன. அறம் என்றால் என்ன? அறம் என்பது ஒரு கோட்பாடா (CONCEPT)? கொள்கையா (PRINCIPLE)?; வாழ்க்கை முறையா (WAY OF LIVING)?, அமைப்பு முறையா (SYSTEM)?; அறத்தில் முழு வரையறையை (DEFINITION)-தமிழ் இலக்கியங்கள் நமக்குத் தருவதில்லை.அறத்தின் திறனை உணர்த்துகிற பல்வேறு அறப் பகுதிகளையும் (PARTS) சிறப்புக் கூறுகளையும் (FACTORS) மட்டுமே, அவை இங்கொன்றும் அங்கொன்றுமாக எடுத்தியம்பு கின்றன.சங்க இலக்கியங்கள், திருக்குறள் நீங்கலாகப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், இரட்டைப்பாவியங்கள் (காப்பியங்கள்), பிற்கால அற நூல்கள் யாவும் 'அறம்' என்ற சொல்லின் 'விரிபொருள் மற்றும் உட்பொருள்' அடங்கிய முழுமையான வரையறையைக் காட்டாமல், அதன் . சில பகுதிகளை மட்டுமே, அஃதாவது அதன் சில கூறுகளை- வாயில்களை- மட்டுமே குறிப்பிட்டுக் காட்டுகின்றன.

பல்வேறு பொருள்களுக்கு உள்ளாக்கப்பட்ட 'அறம்' என்ற சொல்லை, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தெளிவுடன் கூடிய ஒரு வடிவம் கொடுத்து நடைமுறையாக்கத்திற்குரிய நிறைவமைதியுடன் கலைச்சொல்லாக்கி வரையறை செய்த பெருமை பேராசான் திருவள்ளுவரையே சாரும். அச் சொல் மொத்தக் ''குமுகாய அமைப்பு முறையை'' (SYSTEM OF SOCIETY) எதிரொலிக்கும் வகையில் திருக்குறளில் பயிலப்பட்டுள்ளது.

குறள் அறம் - விளக்கம்

மக்கள் குமுகாயத்தை மூலக்களனாகக் கொண்டும், அதன் நலனைக் குறிக்கோளாக வைத்தும், தனிமனிதனுக்கும்(INDIVIDUALS). அமைப்புகளுக்கும் (ORGANISATION), மாந்த நிறுவனங்களுக்கும் (HUMAN INSTITUTIONS) 'செய்வனவும்' 'தவிர்வனவும்' ஆகிய நடைமுறைகள் திருக்குறளில் வரையறை செய்யப்படுகின்றன. அந்நடைமுறைகளின் தொகுப்பான 'குமுகாய ஒழுங்குமுறையே' திருக்குறள் தருகிற அறம்; அது, ஒரு தனிநிலைக் 'கொள்கை' மட்டுமன்று; 'குமுகாய

ஒழுங்குமுறை'யுமாகும்.

திருவள்ளுவரின் ஒழுக்கமுறையும், வாழ்க்கை முறையும் ஆழ்ந்த, விரிவான, உயிரியல், உளவியல், குமுகாய இயல் ஆகியவற்றின் ஆய்வாலும் பட்டறிவினாலும் பெறப்பட்ட தெளிந்த முடிவுகளாகும். அவை வெறும் 'ஒழுக்க வியலை'(ETHICS), மட்டுமே குறியாகக் கொண்ட சில கோட்பாடுகள் அல்ல. உயர்ந்த வாழ்க்கை முறை.

சமயவியலும் குறளியலும்

மனிதனைத் தனிநிலையில் வைத்துத் திருத்துவதற்காகவே சமய நூல்களும் ஒழுக்கவியல் நூல்களும் ஒழுகலாறுகளை விதிக்கின்றன. தனிமனிதன் தன்னல அடிப்படையில் வேறோர் உலகத்தில் பெறும் விடுதலையை அல்லது இன்பத்தை நாட்டமாகக் கொண்டு, சமுதாயத்தில் உள்ள தன்னைப் போன்ற மற்றவர்களைப் பற்றிய கவலையின்றிப் பகுத்தறிவுக்குப் பொருந்தாத வெறும் நம்பிக் கையின் அடிப்படையில், தனிமனிதனின் உய்விற்காக, சில நன்னடக்கைகளைச் சமயங்கள் கூறுகின்றன. சான்றாகச் சமற்கிருதத்தில் எழுந்த 'மனுதர்மம்' போன்ற ''தர்ம சாத்திரங்களும்'' பல்வேறு சமயங்கள் வகைவகையாகத் தருகின்ற தனிமனித ஒழுகலாறுகளும், இறைக் கொள்கைகளும், முழு மாந்த குலத்திற்கு அனைத்துத் துறைகளிலும் பொதுமையையும், நலனையும் தர இயலாமல் ஓரளவு வழக்கற்றுப் (OBSELETE) போய்விட்டன.

திருவள்ளுவரோ 'சமத்துவத்தின்' அடிப்படையில் உருவாகிற ஒட்டு மொத்தமான சமுதாய நலனையே மூலமாகக் கொண்டு, தனிமனிதனைக் கூட அக்குமுகாயத்தின் ஒரு பகுதியினனாகவும், அவ்வகைத் தனி மனிதர் சேர்ந்து படைக்கும் பல நிலையங்களே இணைப்பு அமைப்புகளாகவும், ஆக்கி அவற்றிக்கெல்லாம் அடிப்படை நடக்கைகளாக அமைவுறும் நடைமுறை வழிவகைகளைத் தொகுத்து 'அறம்' எனத் தருகிறார். மனித இனத்தின் பொது நன்மையைப் பெறவும் அந்நலத்தை வளர்க்கவும், குமுகாய உறுப்பினனான ஒரு மனிதன் அல்லது குமுகாய அமைப்புகள் எப்படிச் செயற்பட வேண்டுமென்பதைக் 'குறளறம்' கற்பிக்கிறது.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் *(140)*

உலகத்தோடு - உலகம் என்ற சமுதாய ஒருங்கிணைப்புடன்; ஒட்ட - ஒத்ததாக; ஒழுகல் - நடத்தலை; கல்லார் - பயிலாதவர்கள்; பலகற்றும் - பல துறைகளிலும் கற்றிருந்தாலும்; அறிவிலாதார் - அறிவில்லாதவர்களே.

ஆகவே, குமுகாய ஒழுங்கமைப்புக்கு இயைந்த அல்லது ஒட்டிய நடத்தையே 'நன்னடத்தை', அதற்கு மாறுபட்ட நடத்தையே 'தீய நடத்தை'. திருவள்ளுரின் அறப்பகுதிகளான 'செய்வனவும், தவிர்வனவும்' இந்தக் குமுகாய நலக் கொள்கையின் விரிவாக்கங்களாகவே அமைக்கப்பட்டுள்ளன.

1. அறத்தால் வருவதே இன்பம் (39); 2. அறம் குமுகாயத்திற்கு வளர்ச்சியைத் தருகிறது (31); 3. அறத்தை மறுத்தலால் கேடு விளையும் (32); 4. அறவினை செய்க(33); 5. அழியும் காலத்தும் அறம் அழியாத் துணை(36); 6. அறம் வாழ்நாளின் வழியை அமைக்கும்(38). 1. நம்மால் இயலும் வகையில்; இடைவிடாமல் அறம் செய்க; 2. செய்தற்கிடமாகிய பலவிடங்களிலும் அறச் செயல்களைச் செய்க;. 3. பின்பு அறிந்து செய்வோம் என்னாது முன்பே அறத்தைச் செய்க (36); 4. வாழ்நாள் வீணாகாமல் நன்று செய்க (38); 6. ஒருவன் செய்யத்தக்கது அறமே; 6. நீக்கத்தக்கது பழியே.

குறளறம் பற்றிய பொதுக் கோட்பாடுகள்

திருக்குறள் 'அறம்' பற்றிய அனைத்துக் கோட்பாடுகளையும் பகுத்தும், தொகுத்தும் ஆய்வு செய்து, அதன் சரியான பொருளை உய்த்துணர்ந்தால், 'குறளறத்தின்' விளக்கமான வரையறையைப் பெறலாம்.

அறம் என்கின்ற குமுகாய அமைப்புமுறை நிலைபெற்று விளங்கவும் நடைமுறைப்படுத்தவும், 'அறம்', 'அறன்', 'அறத்தாறு', 'அறவினை' 'நன்று', 'நன்றி', 'நன்றாகும்', 'நல்ல', 'நல்லது', 'நல்லவாம்', 'நல்லாறு', 'நயன்', 'இனிது' என்ற கலைச்சொற்கள் பல குறட்பாக்களில் பயிலப்பட்டுள்ளன. அறத்திற்கு எதிரானவை: 'பழி', 'பழிப்படுவ', 'பழித்தது', 'பழிப்பது', 'தீது'. 'தீயவை', 'குற்றம்' என்ற கலைச் சொற்களால் தெளிவுபடுத்தப்படுகின்றன. அறத்தின் தொடர்நிலைக் கொள்கைகளாகவும் வகுத்தளிக்கிறார். மேற்சொன்ன கலைச் சொற்களை பயன்படுத்தாமலேயே அறம் என்ற குமுகாய அமைப்பு முறைக்குரிய வேறு பல தெளிவான கொள்கைகளையும் ஆங்காங்கே பல குறட்பாக்களில் பேசுகிறார்.

'அறன்' பற்றிய விதிகள்: அ. 'அறன்' என்ற சொல், குறிப்பிட்ட பொருளை உணர்த்தும் வகையில், ஏறத்தாழ 20 குறட்பாக்களில் எடுத்தாளப்பட்டுள்ளன. 34, 40, 45, 49, 142, 147, 148, 150, 157, 163, 173, 179, 182, 189, 366, 384, 441, 635, 644, 754.

'அறன் விதிகளாவன: 1. 'அறன்' என்ற சொல், பொதுவாக குமுகாய உறுப்பினனாக இயங்கும் தனிமனிதனின் ஒழுக்கமுறைகள், ஒழுகலாறுகள், நடக்கைகள், பண்புவிதிகள் போன்றவற்றை வலியுறுத்துகின்றன. தனி அமைப்புகள் (ORGANISATIONS). மாந்த நிறுவனங்கள் (HUMAN INSTITUTIONS) ஆகியவற்றின் ஒழுகலாறுகள் மற்றும் நடக்கைகளையும் 'அறன்' என வரும் குறட்பாக்கள் விதிக்கின்றன.

'அறன்' குறட்பாக்கள் விதிக்கின்ற ஒழுங்குமுறை விதிகளைச் 'செய்தே தீர வேண்டும்' என வலியுறுத்தும் பான்மையில் உரிமைக் கட்டளை ஏவுரைகளாக (MANDATORY DIRECTIONS) அமைக்கப்பட்டுள்ளன. அந்த ஒழுகலாறுகள் நிலையானவை; அடிப்படையானவை. குறிக்கோள் தன்மை கொண்டவை; காலம், இடம், இனம் போன்ற நிலைகளுக்கேற்பப் பெரும்பாலும் நடைமுறையில் மாற்றத்திற்கு ஆட்படாதவை. இவற்றிற்கு விதிவிலக்காக ஒன்றிரண்டு குறட்பாக்கள் இல்லாமலும் இல்லை.

'அறம்' அறம் என்ற சொல் குறிப்பிட்ட விதிமுறைகளை நடைமுறைப்படுத்தம் வகையில் 21 குறள்களில் கையாளப்பட்டுள்ளது. அவையாவன: 23, 31, 32, 35, 36, 39, 76, 77, 93, 96, 130, 181, 185, 204, 249, 288, 296, 297. 501, 1018, 1047.

'அறம்' விதிகளாவன: 'அறம்' என்று பயிலப்பட்டுள்ள குறட்பாக்கள், பொதுவான சமுதாய ஒழுங்குமுறைக்குரிய (SOCTAL ORDER) ஒழுகலாறுகளையும், நடக்கைகளையும் விதிக்கின்றன. அவற்றில் தனிமனிதர், நிறுவனங்கள், அமைப்புகள் போன்ற பல கூறுகளும் அடங்கும். 'அறம்' என எடுத்தாளப்பட்ட குறட்பாக்கள் வலியுறுத்தும் விதிகள் மிக மிக அடிப்படையானவை, குறிக்கோள் தன்மை கொண்டவை. அவை வகுக்கும் நடக்கைகளைச் செய்தே தீர வேண்டும் என்ற உரிமைக்கட்டளை ஏவுரைகளாக (MANDATORY DIRECTION) அமைக்கப்பட்டுள்ளன. அறம் வலியுறுத்தும் விதிகள் பொதுவாக நிலையானவை; காலம், இடம், இனம் போன்றவைகளுக்கு ஏற்ப மாற்றத்திற்கு ஆட்படுபவை அல்ல. சில விதிவிலக்குகளும் இருக்கலாம்.

' துணை அறங்கள்: 'அறத்தாறு', 'அறவினை', 'நன்று', 'நல்லாறு', 'ஆறு', 'நன்றாகும்', 'நன்மை', 'இனிது' போன்ற சொற்கள்

கையாளப்பட்ட குறட்பாக்கள் வலியுறுத்துகிற, நடைமுறைக் கொள்கைகளை 'துணை அறங்கள்' அல்லது 'சார்பு அறங்கள்' எனக் கூறலாம். அறம் மற்றும் அதன் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு இவை துணையாக நிற்கின்றன. இவற்றை 'அற வாயில்கள்' என்றும் கூறலாம். இவை நெகிழ்வுத் தன்மையைக் கொண்டவை. இடம், காலம், இனம், சூழல் ஆகியவற்றிற்கேற்ப மாற்றத்திற்கு ஆட்படுபவை.

அறவினை: *அறவினை என்றால் அறச் செயல்.*

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல் (33)

இயலும் வகைகளிலெல்லாம் அறச் செயல்களைத் தடையின்றிச் செய்க. இயலும் இடங்களிலெல்லாம் செய்க. இக்குறட்பா இயன்ற அளவில் அறச் செயல்களைச் செய்க எனப் பரிந்துரைக்கும் பான்மையில் அமைந்துள்ளது. ''அறவினை'' எனப் பயிலப்பட்ட 33, 321, 909 ஆகிய மூன்று குறட்பாக்களில் அறச் செயல்களைச் செய்வது தவிர்க்க இயலாதது எனக் காட்டப்படுகிறது.

நன்று, நன்றி, நன்றாகும், நன்மை, நல்ல, நயம்: 'நன்று' என்ற சொற்பயிற்சி கொண்ட 28 குறட்பாக்களாவன: 92, 108, 109, 111, 113, 128, 150, 157, 197, 222, 236, 253, 259, 308, 323, 379, 422, 456, 469, 655, 673, 715, 815, 908, 932, 967, 1038, 1072 ஆகிய எண்ணுடையவை. 'நன்றி' என்ற சொல் பயிலப்பட்டுள்ள 11 குறட்பாக்களாவன: 67, 97, 102, 104, 110, 117, 138, 439, 652, 685, 994. நன்றி என்ற சொல் 'நன்மை' என்ற பொருளிலேயே பயன் படுத்தப்பட்டுள்ளது.

'நன்றாகும்' என்ற சொல் 'நலமாகும்' என்ற பொருளில் 328, 456, 125 ஆகிய 3 குறட்பாக்களில் கையாளப்பட்டுள்ளது. 'நன்மை என்ற சொல் 'நலன்' மற்றும் 'நன்மை' என்ற பொருளில் 103, 194, 292, 511 ஆகிய 4 குறட்பாக்களில் இடம் பெறுகிறது. 'நல்ல' என்ற சொல் 'நன்மையுடையது', 'நல்லன' என்ற பொருளில் 213, 300, 379 ஆகிய 3 குறட்பாக்களில் வருகின்றது. 'நயன்' என்ற சொல் 'நயன்மை' (நீதி), 'நேர்மை' ஆகிய பொருளில் 97, 103, 192, 194, 197, 215, 259, 860, 912, 994 ஆகிய 10 குறட்பாக்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.

பழி, பழிப்படுவ, பழிப்பது, பழித்தது- விதிகள்: அறத்திற்கு எதிர்ச்சொல் பழி; அறத்திற்கெதிரானவைகளை எல்லாம் பழி என்ற சொல்லின் மூலமாக 16 குறட்பாக்களில் ஆசான் விளக்குகிறார். 'பழி' என்ற சொல் 40, 44, 62, 137, 145, 146, 172, 186, 433, 506, 618, 657,794, 865,1015,1051 ஆகிய குறட்பாக்களில் பயிலப் பட்டுள்ளன. ''பழிப்படுவ'' என்ற சொல் 172-ஆம் குறட்பாவிலும், ''பழிப்பது'' என்ற சொல் 49-ஆம் குறட்பாவிலும், ''பழித்தது'', 'பழிக்கும்' என்ற சொற்கள் முறையே 280, 656 ஆகிய குறட்பாக்களிலும் இடம் பெறுகின்றன. இக் குறட் கொள்கைகள் பொது அறத்திற்கு ஊறுவிளைக்கும் எதிர்நிலை நடக்கைகளைக் கோடிட்டுக் காட்டுகின்றன. குமுகாய நன்மைக்காவும், தனி மனித வளர்ச்சிக்காகவும் 'தவிர்வனவற்றை' வலியுறுத்துகின்றன. இவை நிலையானவை, ஒரு வகையில் பொதுமை அறத்தின் தெளிவுரை களாகவும் அமைகின்றன.

குற்றம்: குமுகாயத்தில் எவையெவை ஒதுக்கப்பட வேண்டுமோ அவை 'குற்றம்' என்று சொற்பயிற்சி கொண்ட குறட்பாக்களில் மூலமாக விளக்கப்படுகின்றன. ஒரு சிறந்த குமுகாய அமைப்பு, எவற்றையெல்லாம் முற்றிலும் வெறுத்து ஒழிக்கின்றதோ அவையே குற்றங்கள் எனத் திருவள்ளுவரால் விளக்கப்படுகின்றன. எனவே ஒருவகையில் இவை சிறந்த அற அமைப்பை

உருவாக்குவதற்காகத் தரப்பட்ட எதிர்மறை விதிகள் எனலாம்.

குற்றம் பயிலப்பட்ட 19 குறட்பாக்கள்: 171, 188, 190, 272, 434, 436, 502, 504, 549, 604, 609, 793, 846, 868, 924, 957, 980, 1025, 1029. இக்குற்றங்கள் எக்காலத்தும் எவ்விடத்தும் முறையாக ஒழிக்கப்பட வேண்டுபவை.

குறளறம் என்பது மனித இன 'வாழ்க்கை முறை' அல்லது "குமுகாய ஒழுங்குமுறை" மனித இனத்தை மேல்நிலை இன்ப வாழ்வுக்கு இட்டுச் செல்வதற்குரிய ஒழுங்கமைதியும், நிலைத்த நன்மையும் கொண்ட முற்போக்கான அடிப்படை நடைமுறைக் கொள்கைகளின்(வழிவகைகளின்) திரட்சி தருகிற ஓர் இயங்காற்றல் கொண்ட குமுகாய ஒழுங்கு அமைப்பு முறை (COMPREHENSIVE SOCIAL ORDER) அல்லது முழுமையான குமுகாய இயங்கு முறையே (DYNAMIC SYSTEM) குறளிய அறம்.

குறளறம் தரும் வழிவகைகள் அடிப்படையானவை; நடைமுறைக்கு ஏற்றவை; இன்பத்தை தருபவை; தனிமனித ஒழுகலாறுகள்-உரிமைகள் ஆகியவற்றிற்கும் ஒட்டுமொத்தமான சமுதாய நலன்களுக்குமிடையே 'சமநிலை இயல்பை' (BALANCED HARMONY) ஏற்படுத்தி அதனைப் பேணிக் காக்கிறது குறளறம்.

இடநெருக்கடி கருதிப்பல்வகை அறக் கோட்பாடுகளைக் கூறும் குறட்பாக்களில் எண்கள் மட்டும் தரப்பட்டுள்ளன. அவற்றில் அடங்கி யிருக்கும் அறக் கருத்துக்கள் இங்கு தொகுத்துத் தரப்படவில்லை.


இவ்வகையில் பல்வேறு நுணுக்க முறைகளைப் பயண்படுத்திக் குறிக்கோள் அறங்கள் எவை? நடைமுறை நிலைகள் எவை? செய்தே தீர வேண்டியவை எவை? செயலாக் கத்திற்குத் தகுதி பெற்ற ஒழுகலாறுகள் எவை என்பனவற்றையெல்லாம் மிகமிக நுண்மையாகத் திருவள்ளுவர் எடுத்தியம்புகிறார்.

குறளிய அறமே குறளியத்தின் மூலக்கூறு.

டாக்டர் எம். சுவாமி நாதன் தம் திருக்குறள் மொழிபெயர்ப்புப் பற்றி...

While I was reading Thirukkural, with the commentaries by Parimelazhegar, Kalingar and others, it occured to me that I should translate Kural in English which will facilitate my understanding of Kural well. That is how I began translating Thirukkural in English, in prose form, more as a mental exercise to me. Then, I had no idea of publishing it.

Though I came to know that there were many English translations of Thirukkural by learned anthors I had not read any of them before. I wanted only to translate and not to write a commentary in English. So my attempt to translate Thirukkural is not to fill up a void, but solely for my mental satisfaction.



குறள் வழி குடி இயல்

அ.கி. வேங்கடசுப்ரமணியன்

பணி ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி; மிகச் சிறந்த அரசியல் சமுதாயச் சிந்தனையாளர். மக்கள் விழிப்புணர்வு இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டவர். அண்மைக் காலமாக அவர் 'தினமணி' நாளிதழிலும் பிறவற்றிலும் எழுதிவரும் சிந்தனைக் கட்டுரைகள் படிப்போருள்ளத்தில் உள்ளக் கிளர்ச்சியையும் அறிவுத் தெளிவையும் ஊட்டி வருகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் இருக்கும் நாம் இந்த நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார, அரசியல், விஞ்ஞான மாற்றங்களைக் கண்டு வியக்காமல் இருக்க முடியாது. குறிப்பாக அரசியலில் மிகப் பெரிய மாற்றத்தை இந்த நூற்றாண்டு சந்தித்து உள்ளது. இந்த மாற்றம் மக்களாட்சியில் ஏற்பட்டுள்ள மாபெரும் வளர்ச்சியாகும். நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் இருந்ததை விட மிக அதிக அளவில் மக்களாட்சி முறை உலகெங்கும் பரவி உள்ளது, நூற்றாண்டின் முதல் பாதியில் பாசிசம், நாசிசம் சில ஆண்டுகளுக்கு ஓங்கி இருந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் அந்த சக்திகள் தோல்வி அடைந்தன. காலனி ஆதிக்க முறையில் இருந்தும் பல நாடுகள் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் விடுதலை பெற்றன. நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் கம்யூனிச ஆட்சி முறையும் தோல்வி அடைந்து மக்களாட்சி முறை தலைதூக்கி உள்ளது. மிகப் பெரிய கம்யூனிஸ்ட் நாடான சீனாவிலும் மக்களாட்சியின் மகத்துவம் உணரப்பட்டுள்ளது. எனவே இந்த நூற்றாண்டின் பல்வேறு காலகட்டத்தில் பல வேறு நாடுகளில் மக்களாட்சி முறைவும், குடியரசும் மேலோங்கி உள்ளது. இந்தத் தருணத்தில் எக்காலத்திற்கும் எவ்விடத்திற்கும் ஏற்புடைய பொதுமறையாம் திருக்குறளில் குடியியல் எவ்வாறு வகுக்கப்பட்டுள்ளது என்று ஆராய்ந்து பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

திருக்குறளில் பொருட்பாலில் முதல் அதிகாரத்தின் முதல் குறளிலேயே அரசின் ஆறு அங்கங்களில் ஒன்றாக ''குடி'' வலியுறுத்தப் படுகிறது.

படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு (381)

இங்கு கூழ் என்பது, அக்காலகட்டத்தில் வேளாண்மையே மிக முக்கிய தொழிலாகவும், உணவு தானியங்களே முக்கிய செல்வமாகவும் இருந்ததால் உணவுக்குக் காரணமான செல்வத் தையே குறிப்பதாகும். வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் முடி ஆட்சியே நடைமுறையாக இருந்து வந்துள்ளது. அரசும் குடிமக்களும் ஒருவரை ஒருவர் சார்ந்து இருந்து வந்துள்ளனர். அரசனின் நல்லாட்சியை நோக்கியே மக்களெல்லாம் வாழ்ந்து வந்தனர். இதைத்தான் "மன்னவன் கோல் நோக்கி வாழும்குடி'' என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

ஆனால் அதே நேரத்தில் மன்னனது உண்மையான செல்வத்தை மக்கள் தான் உருவாக்குகின்றனர். அவர்கள் உருவாக்கும் செல்வத்தில் தான் மன்னன் அரசு நடத்துகின்றான் என்பதையும் வள்ளுவர் "உழவு" என்ற அதிகாரத்தில் கீழ்க்கண்டவாறு தெளிவுபடுத்துகிறார்.

பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர் (1034)

இவ்வாறு அரசனின் குடியும் ஒருவரை ஒருவர் சார்ந்து ஒருவர் நிழலில் ஒருவர் இருப்பது அரசனின் ஆட்சி செங்கோலாக இருக்கும் பொழுதுதான். அது கொடுங்கோல் ஆட்சியாக இருந்தால் அரசன் தன்னிடம் ஏற்கெனவே இருக்கும் செல்வத்தையும், அந்தச் செல்வத்தை உருவாக்கும் மக்களையும் ஒருங்கே இழப்பான் என்றும் வள்ளுவர் எச்சரிக்கின்றார்.

கூழும் குடியும் ஒருங்குஇழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு. (554)

கொடுங்கோல் மன்னனுக்கு அரசின் இதர அங்கங்களான படை, அமைச்சு, நட்பு, அரண் இருக்க முடியும். ஆனால் இவை மட்டும் இருந்தால் அரசு முழுமையாகாது. அரசு முழுமை பெற, கூழும் குடியும் தான் மிக முக்கியம் என்பதை வள்ளுவர் கூறாமல் கூறுகிறார்.

பொருட்பால் முழுவதையுமே அரசின் ஆறு அங்கங்களையும் கொண்டு தொகுத்து அரசுஇயல், அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல், நட்பியல், குடியியல் என்று உரையாசிரியர்கள் வரிசைப்படுத்தி உள்ளனர். அரசு இயலில் அரசின்/அரசனின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. அரசியலில் உள்ள அதிகாரங்களில் தலைப்புகளில் முக்கியமானவை கல்வி, கேள்வி, அறிவுடைமை, குற்றம் கடிதல், பெரியோரைத் துணைக்கோடல், தெரிந்து செயல்வகை, வலியறிதல், காலம் அறிதல், இடனறிதல், தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல், சுற்றம் தழால், செங்கோன்மை, ஆள்வினை உடைமை, ஊக்கம்உடைமை, சிற்றினம் சேராமை, பொச் சாவாமை, வெருவந்த செய்யாமை, மடி இன்மை முதலியன ஆகும். இவற்றைக் கூர்ந்து கவனித்தால் அரசின் இலக்கணம் முழுவதும் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது என்று வலியுறுத்துவன வாக இருக்கின்றன. கல்வி, கேள்வி, அறிவுடைமை ஆகியவையும் இவ்வாறு செயல் புரிவதற்காகவே வலியுறுத்தப்படுகின்றன. எனவே அரசு அல்லது அரசனின் முக்கியமான தன்மை (Orientation) செயல் அடிப்படையில் (Doing) உள்ளது.

குடியியலில் எடுத்துக்கொண்டோமேயானால் அதில் உள்ள முக்கிய அதிகாரங்களின் தலைப்புகள்: மானம், பெருமை, சான்றாண்மை, பண்புடைமை, நன்றியில் செல்வம், நாண் உடைமை, கயமை ஆகியவை ஆகும். இவைகளைக் கூர்ந்து கவனித்தால் குடிமக்களின் முக்கியமான தன்மை (Orientation) எப்படி ஒருவர் இருக்க வேண்டும் (Being) என்ற அடிப்படையில் உள்ளது. அரசு இயலில் எவ்வாறு அரசு செயலாற்ற வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. குடிஇயலில் மக்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப் படுகிறது. சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால் குடிமக்கள் 'நல்லவர்'களாக இருக்க வேண்டும் என்றும் அரசன் 'வல்லவனாக' இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகிறது.

வள்ளுவர் வாழ்ந்த காலம் முடியாட்சிக் காலம், ஆனால் தற்காலம் குடிஆட்சிக் காலம். முடியாட்சியில் மன்னன் (Soverign), குடி (Subject) என்பது தனித்தனியாக வேறுபட்ட நிலைகளாகும். மக்களாட்சியில் குடியே அரசு; அரசே குடி. நாட்டிலுள்ள எல்லா மக்களும் ஒரே நேரத்தில் அரசராகவும் (Soverign), குடி மக்களாகவும் (Citizens) இருக்கின்றார்கள். எனவே மக்களாட்சியில் மக்கள், அரசு இயலில் கூறப்பட்ட அரசனுக்குரிய இலக்கணங்களையும், குடி இயலில் கூறப்பட்ட குடிகளுக்கான இலக்கணங்களையும்

ஒருங்கே கொண்டவர்களாக இருக்க வேண்டும். அதாவது அவர்கள் நல்லவர்களாகவும், அதே நேரத்தில் வல்லவர்களாகவும் இருக்க வேண்டும். அப்போது தான் அந்த நாடு வலிவும், பொலிவும் பெறும். மக்களை யார் இவ்விதம் வல்லவர் களாகவும் நல்லவர்களாகவும் மாற்றுவார்கள். மக்கள் ஆட்சியில் வெளி நாட்டவர் யாரும் இதைச் செய்ய முடியாது. மக்கள் தான் இதைச் செய்ய வேண்டும். இதைத் தான் "குடிசெயல்வகை" என்ற அதிகாரத்தில் வள்ளுவர் வலியுறுத்துகின்றார். இதைச் சில உரையாசிரியர்கள் தான் பிறந்த குடியை அல்லது குலத்தை மேம்படுத்துவது என்று கொண்டுள்ளார்கள். அவ் வாறின்றி தான் வாழும் மொத்த சமுதாயத்தையும் மேம்படுத்தி அறிவார்ந்த குடிமக்களை (Enlightened Citizens) உரு வாக்குவது என்ற பொருளில் எடுத்துக் கொள்வதே பொருந்தும்.

தனது நாட்டு மக்களை மேம்படுத்துவதற் கான செயல்களைச் செய்ய சோர்வடைய மாட்டேன் என்று ஒருவன் முயலும் பெருமையைப் போல் மேலானது ஒன்றும் இல்லை என்று வள்ளுவர் "குடிசெயல்வகை" அதிகாரத்தின் முதல் குறளிலேயே வலியுறுத்துகிறார்.

கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுஉடையது இல் (1021)

இவ்வாறு செயலாற்றுவது தான் உண்மையான ஆண்மை. போர்க்களத்தில் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் வீரனைப்போல் இவர்களும் பெரும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார்கள். இவ்வாறு பொறுப்பை ஏற்றுக் கொள்பவர்களை உலகத்தாரும் சுற்றமாக விரும்பிச் சூழ்ந்து கொள்வார்கள். ஆனால் இவ்வாறு பொறுப்பேற்பவர்களுக்கு ஓய்வே கிடையாது. அவர்களுக்குத் தொண்டு செய்வதற்கு உரிய காலம் என்று ஒன்று கிடையாது. எந்த நேரமும், எந்தக் காலமும் அவர்கள் தொண்டாற்றத் தயாராக இருக்க வேண்டும். தனது சொந்த கௌவரத்தையும் அவர்கள் அதிகமாக பாராட்டக் கூடாது. இவ்வாறு தொண்டாற்றுபவர்களின் உடல் துன்பத்திற்கே இருப்பிடமாகலாம்.

மக்கள் மேம்படுத்துவது மேற்சொன்னபடி இன்னல்கள் நிறைந்ததாக இருந்தாலும் மனம் தளரத் தேவையில்லை. ஏனென்றால், 'என் மக்களை மேம்படுத்துவேன்' என்று முற்படு பவருக்கு தெய்வமே, ஆடையை இறுகக் கட்டிக் கொண்டு தானே முன்வந்து துணை செய்யும். அவ்வாறு செய்ய முயல்பவருக்கு அவர் ஆராய்ச்சி செய்யாமலேயே அச்செயல் தானே நிறைவேறும்.

குடிசெயல் வகையின் பல்வேறு தன்மைகளை மேற்கூறியபடி வள்ளுவர் விவரிக்கின்றார். அது இன்றியமையாதது; மிகப் பெருமை உடையது; அது எளிதானதல்ல; இடர்பாடு உடையது; ஆனால் முயன்றால் முடியாதது அல்ல; முயன்றால் தெய்வமே முன்வந்து உதவி செய்யும் என்றெல்லாம் எடுத்துரைக்கும் வள்ளுவர் இறுதியாக ஒரு எச்சரிக்கையும் கொடுக்கின்றார்.

இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்துஊன்றும்
நல்ஆள் இல்லாத குடி (1030)

துன்பம் வரும் காலத்தில் தன்னைத் தாங்கவல்ல ஆண்மக்கள் இல்லாத சமூகம் அழிந்து விடும் என்று எச்சரிக்கின்றார். நமது நாடு இப்போது இருக்கின்ற நிலையில் மிக இன்றியமையாத தொண்டு நாட்டை, நாட்டு மக்களை மேம்படுத்துவது தான். இப்போது நமக்குத் தேவை "கருமம் செய்ய கைதூவேன் என்னும் நல் ஆட்கள் தான்". அத்தகைய நல்ல மனிதர்கள் இருக்கின்றார்களா? இருந்தால் இந்த ஈடில்லா தொண்டிலே ஈடுபட முன்வருவார்களா?

திருவள்ளுவர் கூறும் சொல்வன்மை

மு. ஆனந்தகிருஷ்ணன்

தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத் துணைத்தலைவர், தமிழ்நாடு அறிவியல் அகாதெமியின் தலைவர், தொலைத் தொடர்புக் கல்வி துணைக் குழுத்தலைவர் ஆகிய பதவிகளை வகித்துவரும் இவர் மிகச்சிறந்த கல்வியாளர். மின் சோட்டா பல்கலைக் கழக விருது, பிரேசில் குடியரசுத் தலைவரின் அறிவியல் சிறப்பு விருது, முதலிய விருதுகளைப் பெற்றுள்ளார். நான்கு நூல்களையும் நூற்றுக்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

ஆழ்ந்த சிந்தனைக்குத் தூண்டுகோலாக விளங்கும் திருக்குறள் அரிய கருத்துக்களை சுருக்கமாகவும் தெளிவாகவும் அளிக்கும் சொல்வன்மை பெற்று தனிப்பெருமையுடன் திகழ்கிறது. சொல்வன்மையின் தேவையைப் பற்றி விளக்குவதற்கென திருவள்ளுவர் ஒரு அதிகாரம் வகுத்திருப்பது (அதி.65) குறிப்பிடத்தக்கது. தனிமனிதனின் உயர்வுக்கும் சமூக சிந்தனை வளர்ச்சிக்கும் புரட்சிகரமான மாற்றங்களுக்கும் சொல்வன்மையின் தன்மைகளும் பயனும் இன்றைக்கும் பொருத்தமானதாக விளங்கு கின்றன. மற்ற பல அதிகாரங்களிலும் சூழ்நிலைகளுக் கேற்ப சொல்வன்மையின் இலக்கணங்களைத் திருவள்ளுவர் விளங்கியிருப்பதைக் காண்கிறோம்.

நாவன்மையை ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த செல்வம் எனக் குறிப்பிடுகிறார் திருவள்ளுவர். ''ஆக்கமும் கேடும் அதனால் வருவதால்'', சொற்களைப் பிழையின்றி பயன்படுத்தவேண்டும். நல்ல சொல்வன்மைக்கு அடையாளம், கேட்டவரைத் தன்வயப்படுத்துதலும் நேரிடையாகக் கேளாதவர் களைக் கேட்கத் தூண்டுதலும் ஆகும். இதனால் தான் ''திறனறிந்து சொல்லுக சொல்லை'' என்கிறார்.

ஒரு கருத்தை விளக்குகையில் ஒரே பொருளைக் குறிக்கும் பல சொற்களைப் பயன்படுத்த வேண்டிய நிலை வரும். ஆனால் அந்தக் கருத்தை விளக்க எல்லாச் சொற்களையும் விட எந்தச் சொல் பொருத்தமானதாக இருக்கும் என்பதை அறிந்து அதனைப் பயன்படுத்த வேண்டும். சொல்வன்மையை வளர்க்க உகந்த ஒரு வழி ''பிறர்சொல் பயன்கோடல்'' என்கிறார். தன் கருத்துக்களை சோர்வடையாமலும் அஞ்சாமலும் நன்கு விளக்குபவர்களை மற்றவர் களால் வெல்ல முடியாது என்கிறார்.

கருத்துக்களை ஒழுங்காகக் கோர்த்து ''இனிது சொல்லுதல்'' மூலம் மற்றவர்களை விரைந்து ஏவல் செய்து நம் சொல்படி நடக்க வைக்கலாம். சில பேச்சாளர்கள் சொல்ல வந்ததை கோவையாக முன்கூட்டியே சிந்திக்காமல் அங்குமிங்கும் தாவும்போது நமக்கு அலுப்பு ஏற்படுகின்றது. ஒரு சில சொற்களில் கருத்துக் களைக் கூறும் திறமையற்றவர்கள், நீட்டி

நெடுநேரம் பல சொற்களைப் பயன்படுத்துவார்கள் என்கிறார்.

இத்தகைய சொல் வன்மையின் முக்கியமான பயன் தாம் கற்ற நூற்பொருளைப் பிறர் உணருமாறு விரித்துரைத்தல் என்பதை இந்த அதிகாரத்தின் கடைசிக் குறளில் குறிப்பிடுகிறார்.

இணர்ஊழ்த்தும் நாறா மலர்அனையர் கற்றது
உணர விரித்துஉரையா தார். (650)

அதாவது பள்ளிகளில் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சொல்வன்மை எந்த அளவுக்குத் தேவை என்பதை இந்த அதிகாரம் விளக்குகின்றது. ஆசிரியர்கள் நாவன்மையை ஒரு செல்வமாகக் கருதுவதோடு, பொருத்தமான சொற்கள் மூலம் இனிமையாக அச்சமின்றி நல்ல கருத்துக்களைத் தெளிவாகக் கூறி, கேட்கும் ஆர்வத்தினை வளர்க்கக் கூடிய வகையில் செயல்படவேண்டும் என்று பணிக்கிறார் திருவள்ளுவர்.

ஆசிரியர்கள் மட்டுமின்றி மற்றவர்களும் சொல்வன்மையை சூழ்நிலைக்கேற்ப பயன்படுத்த வேண்டும் என்று திருக்குறளின் வேறு பல அதிகாரங்களில் கூறக் காண்கிறோம். "இனியவை கூறல்" என்ற அதிகாரத்தில் முகமலர்ச்சியுடன் கூடிய அன்பு கலந்த, இன்சொற்கள் மூலம் கிடைக்கக் கூடிய பெரும் பயன்களை விளக்குகின்றார். உயர்ந்த சொல்வன்மை உடையவர் வன்சொற்களைத் தவிர்ப்பர் என்பதை,

இன்சொல் இனிதுஈன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது (99)

என்ற குறளில் காண்கிறோம். கடும் சொற்களை "அழுக்காறு, அவா, வெகுளி" ஆகியவற்றோடு ஒப்பிடுகிறார். வன்சொற்களால் விளையும் தீமைகளை,

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு (126)

என்ற குறளால் விளக்குகிறார்.

மகிழ்ச்சி தரும் வகையில் பேசுவதன் மூலம் நட்பை வளர்க்க முடியும்; புறம் கூறுவதன் மூலம் பிரிவினை விளையும் என்கிறார். பயனில்லாத வெற்றுச் சொற்களை கேட்பவர்கள் வெறுப்பார்கள். பலர் முன்னிலையில் வெட்டிச் சொற்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். இது நல்ல பண்புடையவர்க்கு அடையாளம் அல்ல என்பதை,

பயன்இல்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கள் பதடி எனல் (196)

என்ற குறளில் குறிப்பிடுகிறார்.

சொல்வன்மையைப் பயன்படுத்தும்போது வாய்மையும் நிறைந்திருக்க வேண்டும்; மற்றவர்கட்கு ஒரு சிறிதும் தீமை அளிக்கக் கூடாது என்கிறார். இதனாலேயே,

தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும் (682)

என்கிறார்.

அரசியலில் பல்வேறு பிரச்சனைகளை சந்திக்கும்போது உள்நாட்டில் மக்கள்தொடர்பும் தலைவர்களிடம் உரையாடுதலும் இன்றியமையாதது. அவ்வாறே வெளியுலகத் தொடர்புகள், அரசியல், வணிகம் போன்ற துறைகளில் செம்மையாகச் செயல்பட வேண்டும். இதற்கு அடிப்படையாக,

அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுஉரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று (682)

என்று குறிப்பிடுகிறார்.

குழுமியிருக்கும் அவையோரின் தன்மைக் கேற்பவும், அவையின் பொருளுக்கு ஏற்றவாறும் பேச்சு அமைய வேண்டும் என்கிறார். தொடர்பு இல்லாத பேச்சு கேட்பவரின் மனதில் பதியாது. 'அவை அறிதல்' என்ற அதிகாரத்தில் பேச்சாளர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும்

என்று விளக்கும் திருவள்ளுவர்,

> அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
> தொகைஅறிந்த தூய்மை யவர் (711)

என்கிறார். அதே நேரத்தில் அவையில் அமர்ந் திருப்பவரது கேள்விகளுக்கு அஞ்சாது விடையளிக்கக் கூடிய அளவுக்குக் கற்றறிந்த பின்னரே பேசவேண்டும் என்பதை,

> ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
> மாற்றம் கொடுத்தல் பொருட்டு (725)

என்ற குறள் மூலம் விளக்குகிறார்.

வாழ்வில் சீரிய முன்னேற்றம் அடைந்த அனைவருக்கும் உள்ள பொதுப்பண்பு சொல் வன்மையும் சொல்நயமுமாகும். வியக்கத்தக்க சமூக, பொருளாதார, மத மற்றும் அரசியல் கொள்கை மாற்றங்கள் செய்தவர்களின் அடிப்படை ஆயுதமாக சொல்வன்மையே விளங்குகிறது. மேற்கண்ட திருவள்ளுவரின் கருத்துக்கள் அனைவருக்கும் வழிகாட்டியாக என்றென்றும் விளங்கும்.

திருக்குறள் காமத்துப்பால் பற்றி ஜி.யூ. போப் கூறுகிறார்...


Some thing must be said regarding the Third Book on 'Love'.

Of this Mr Drew said, that ' it could not be translated into any European Language without exposing the translator to infamy'. But this is only true in regard to certain of the commentaries upon it, which are simply detestable. I am persuaded that it is perfectly pure in its tendency, and in to intention of its wise and high - sounded composer. Its title is 'Kamattu - Pal,' the division which treates of kama', and this means Lust or Love.

Kama is the Hindu Cupid. Hindu ideas differ from our own. The prejudice kept me from reading the third part of the Kural for some years; but the idea occured to me very forcibly that he who wrote :

> *'Spotless be thou in mind!*
> *This only merits virtues name;*
> *All else mere pomp and idle sound,*
> *no real worth can claim'*

could not have covered himself with the spotted infamy of singing a song of lust, Thus I ventured at length to read and study it, rejecting commentaries, when I was able to apreciate its spirit, and, as the result, I translate it, believing that I shall be regarded as having done good service in doing so.



திருக்குறள் - தெலுங்கு ஆக்கங்கள்

மு.கு. ஜகந்நாதராஜா

பன்மொழிப்புலவர்; தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆங்கிலம் முதலிய மொழிகளைக் கற்றுத் துறையோய பெரும்புலவர். மிகச்சிறந்த கவிஞர்; ஆராய்ச்சியாளர்; மொழிபெயர்ப்பாளர். தமிழுக்கும் பிற இந்திய மொழிகளுக்கும் பாலமாக விளங்கும் இவர் 25 நூல்களைத் தமிழாக்கம் செய்துள்ளார். பிராகிருத மொழி நூலாகிய 'கதாசப்த சதி', தெலுங்கு காவியமாகிய 'ஆமுக்த மால்யத' வடமொழி காவியாலங்காரமாகிய 'ஔசித்ய விசாரசர்ச்சா' முதலிய நூல்களை இவர் தமிழில் மொழிபெயர்த்திருப்பது குறிப்பிடத்தக்கது. 'குறிஞ்சிப்பாட்டு' 'முத்தொள்ளாயிரம்' 'திருக்குறள்' போன்ற தமிழ் நூல்கள் இவரால் தெலுங்கில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மொழிப்பெயர்ப்புக்கான சாதித்ய அகாதமியின் பரிசினைப் பெற்ற இவர், கடந்த நாற்பதாண்டுக் காலமாக இராஜபாளையத்தில் மணிமேகலை மன்றத்தின் வாயிலாகச் செய்துவரும் தமிழ்ப்பணியை அறியாத தமிழர்கள் யார்?

தமிழ் மொழியின் இலக்கிய வளமும் தத்துவ வளமும் இணைந்து சாரமாகத் திகழ்ந்த சிறப்புடைய நூல் திருக்குறளாகும். புலன் கடந்த மெய்ப்பொருள் நாட்டத்தை விட, தனிமனிதனும் சமுதாய மனிதனும் எப்படி வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று வழிகாட்டிய நூல் தமிழுக்கே அணிகலனாகத் திகழும் நூல் திருக்குறள். மணிமேகலை ஆசிரியர் சாத்தனாரும், கம்பரும் வியந்து பாராட்டிய பழம் பெரும் சிறப்புமிக்க நூல். திருக்குறளின் சிறப்பை அனைவரும் அறிவர். திருக்குறள் தமிழகம் மட்டுமின்றி உலகமே வியந்து பாராட்டும் சிறப்புடைய நூலாகும். மனித வாழ்விற்குரிய நல்லறங்களை எல்லாம் தொகுத் துரைத்து சுருங்கச் சொல்லி விளங்க வைத்த சிறப்புடைய இலக்கியமும் தத்துவமும் இணைந்த தீந்தமிழ்ப் பனுவல் அது. அதன் அருமையை உணர்ந்து உலகமொழிகள் அனைத்திலும் மொழியாக்கம் செய்து பாராட்டிப் பயன்பெறுகின்றனர்.

தென்மொழிகளில் பழம்பேரிலக்கியச் சிறப்புடைய மொழிகள் தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளாகும். இந்த மும்மொழிகளிலும் இலக்கிய உறவு, மொழிபெயர்ப்புக்கள் மூலமாக வளம்பெற வேண்டும். அவ்வகையில் திருக்குறளை அதிகமாகப் பாராட்டி பற்பலரும் தெலுங்கில் மொழி பெயர்த்துப் பயன்பெற்றுள்ளனர். திருக்குறளை அதிகம் பாராட்டி பலர் மொழி பெயர்த்துச் சிறப்புற்ற இந்திய மொழி தெலுங்கேயாகும். அவ்வகையில் தெலுங்கில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள திருக்குறள் நூல்கள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

தெலுங்கில் கிடைக்கும் முதல் மொழி பெயர்ப்பு நூலாக கனுபார்த்தி வெங்கட்ராம வித்யானந்த (1832 - 1898) எனும் அறிஞர் பெயரில் வந்த ''திரிவர்கத தீபிக'' என்ற நூல் சிறப்புற்றிலங்குகிறது. இது வெண்பா யாப்பைப் போன்ற ''சுந்தபத்தியம்'' எனும் யாப்பில் அமைந்துள்ளது. இரண்டிரண்டு குறள்களை ஒரே செய்யுளில் அமைத்துள்ளார்.

சொக்கம் நரசிம்ஹ நாயுடு எனும் அறிஞர் 189இல் திரிவர்க்கமு (முப்பால்) என்ற பெயரில் மொழிபெயர்த்தார். இதுவும் அழகும் சிறப்பும் வாய்ந்த மொழிப்பெயர்ப்பாகத் திகழ்கிறது.

தெலுங்கு தேசியக் கவிஞரும் சுதந்திரப் போராட்ட வீரருமான கரிமெள்ள சத்திய நாராயண அவர்கள் திருக்குறள் அறத்துப்பாலை மட்டும் பரிமேலழகர் உரையுடன் தெலுங்காக்கம் செய்து வெளியிட்டார்.

கரிமெள்ள சத்திய நாராயணா (1893 - 1952) பாரதியைப் போல வறுமையில் வாடியும் சுதந்திர கீதங்களை இசைத்து தெலுங்கு பாரதியாகத் திகழ்ந்தார். நாலடியாரையும் தெலுங்காக்கம் செய்தார். இவரது தெலுங்காக்கம் தனித்தன்மை வாய்ந்தது. குறட்பாக்களை தமிழ் குறள் யாப்பிலேயே தெலுங்கிலும் செய்துள்ளார். இது ஒரு புதுமையாகும். பரிமேலழகர் உரையினையும் அழகாக தெலுங்காக்கம் செய்தார். புகழ்மிக்க இந்தநூல் மறு பதிப்பு இதுவரை வெளிவரவில்லை.

திருக்குறளை-துவிபத எனும் ஈரடிச் செய்யுள் யாப்பிலேயே பெரும்புலமை சான்ற பூதலப்பட்டு ஸ்ரீ ராமுலுரெட்டி (1892 - 1971) அவர்கள் திருக்குறளை "தரிவர்கதமு" (முப்பால்) என்ற தலைப்பில் தெலுங்கில் மொழியாக்கம் செய்து 1955 இல் வெளியிட்டார். சிலப்பதிகாரம், மணிமேகலை 1957ஆம் ஆண்டில் தெலுங்கில் வந்தது. கம்பராமாயணம், பெரியபுராணம், நாலடியார் ஆகிய அருந்தமிழ்ச் செல்வங்களையும் தெலுங்காக்கம் செய்து தமிழ் தெலுங்கு உறவுக்கு இலக்கியப் பாலம் அமைத்த முதல்வராகப் போற்றப்படுகிறார்.

கவிரேகர செட்டிலட்சுமி நரசிம்மம் எனும் அறிஞர் திருக்குறளைத் தெலுங்கில் மொழி பெயர்த்துள்ளார். சல்லா லட்சுமி நாராயண சாஸ்திரி (சி.ஆர். சர்மா தகப்பனார்) திருக்குறளை தெலுங்கில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். முதிகண்டி ஜக்கன்ன சாஸ்திரி சுதந்திரப் போராட்ட வீரர் ஆவார். திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பினை தெலுங்கில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். வ.வே.சு. அய்யரது ஆங்கில மொழிபெயர்பினையே இவர் தெலுங்காக்கம் செய்து தனுகு, பல்லடூரு கிரந்த மண்டலியார் 1952இல் வெளியிட்டுள்ளனர்.

நடகுதிடி குப்புசாமி அய்ய என்பவர் திருக்குறளைத் தெலுங்காக்கம் செய்துள்ளார். கவி செட்டிலட்சுமி நரசிம்மம் எனும் புகழ்மிக்க தெலுங்கு கவிஞரும் தெலுங்காக்கம் செய்துள்ளார். சாகித்ய அகாடமி தென்மண்டலச் செயலராகவும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தெலுங்குத் துறைத்தலைவராகவும் திகழ்ந்து தமிழ், தெலுங்கு உறவுப்பாலமாகத் திகழ்ந்து புகழ்பெற்ற டாக்டர். சல்லா ராதாகிருஷ்ண சர்மா அவர்கள் திருக்குறள் என்ற பெயரில் 1989இல் தமிழ் மூலமும் தெலுங்கு யாப்புவடிவ மொழி பெயர்ப்புடனும் சுருக்கமான கருத்துரையுடன் அழகிய முறையில் வெளியிட்டு இருமொழி உறவுக்கு இணையற்ற தொண்டாற்றியுள்ளார். 1966இல் சாந்தி ஸ்ரீ பதி சாஸ்திரி அவர்கள் 'ஸ்ரீ பதிலு' என்ற பெயரில் குறளின் தெலுங்காக்கம் வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீ வித்யானந்த ராமாலிங்காச்சாரியா அவர்கள் 1979இல் ஸ்ரீ சூக்துலு என்ற தலைப்பில் திருக்குறள் முழுவதும் ஈரடிச் செய்யுள் வகையான துவிபதவில் மொழிபெயர்த்து விரிவுரையுடன் பிற இலக்கிய ஒப்புமைக் கருத்துகளையும் எடுத்துக்காட்டி மொழியாக்கம் செய்து வெளியிட்டுள்ளார். இந்நூல் திருக்குறளின் ஆழ்ந்த கருத்துக்களை தெலுங்கர்கள் நன்குணரும் வகையில் அமைந்து சிறப்புறுகிறது.

புகழ்மிக்க தெலுங்கு கவிஞரும், தெலுங்கிலக்கிய வரலாறு எழுதிப் புகழ் பெற்றவரும், ஆய்வாளரும் திரைப்படப் பாடலாசிரியருமாகிய ஆருத்ர எனும் பாகவதுல சிவசங்கர சாஸ்திரி அவர்கள் திருக்குறளை தஷிண வேதமு (தென்மறை) என்ற பெயரில் மொழிபெயர்த்து 1989 இல் ஹைதராபாத்

தெலுங்குப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. ஆட்டவெலதி எனும் தெலுங்கு யாப்பில் குறட்பாக்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன எளிய இனிய நடையில் அமைந்துள்ள தெலுங்காக்கம் இது. இந்நூலுக்கு டாக்டர்.சி.ஆர். சர்மா அவர்களும், நானும் முன்னுரை வழங்கியுள்ளோம். ஆருத்ராவின் இத்தெலுங்காக்கம் பாராட்டப் பெற்ற படைப்பாகும்.

டாக்டர். காலி குணசேகர், எம்.ஏ., அவர்கள் ஸ்ரீவாணி என்ற பெயரில் குறளைத் தெலுங்காக்கம் செய்துள்ளார். 1993இல் இந்நூல் புத்தூர் நிவேதித பப்ளிகேஷின்ஸ் வெளியிட்டுள்ளது. தேட்டகீதி அல்லது ஆடவெலதி எனும் இருவகை செய்யுள்களில் இம்மொழிபெயர்ப்பு நன்கமைந் துள்ளது. திருக்குறள் என்ற தலைப்பில் தெலுங்கில் குருசரண் திரு தூதலூரி ஜகந்நாதம் அவர்கள் ஆட்டவெலதி எனும் தெலுங்கு யாப்பில் குறளை செய்யுள் அமைப்பில் தெலுங்காக்கம் செய்துள்ளார். இந்நூல் 1986இல் வெளிவந்தது.

தமிழ் மூலத்தைப் பின்பற்றாமல் ஆங்கில மொழிபெயர்ப்பை பின்பற்றிய சிறப்பற்ற சில தெலுங்காக்கங்களும் வெளிவந்துள்ளன.

இறுதியாக நான் மொழிபெயர்த்த திருக்குறள் தேட்டகீதுலு என்பதையும் குறிப்பிட வேண்டும். தேட்டகீதி என்னும் தெலுங்கு யாப்புவடிவில் தேர்ந்தெடுத்த குறட்பாக்களை தெலுங்கில் மொழிபெயர்த்துள்ளேன். மூலத்தின் சொல்லமைப்பையும் பின்பற்றி கருத்துச் சிதைவின்றி அமைந்த தெலுங்காக்கம் இதுவாகும்.

மூலப் பாடலின் கருத்து மட்டுமன்றி சொல்நயமும் நடையமைதியும் அமைய வேண்டும் என்ற நோக்கில் மொழிபெயர்த்துள்ளேன். தேட்டகீதி என்ற யாப்பில் அமைந்த மொழி பெயர்ப்பாகும். ஓரடிக்கு ஐந்து சீர்கள் கொண்டு எதுகை மோனைகளில் ஏதேனும் ஒன்று வருமாறு அமைந்த யாப்பு இது.

கவிஞனின் சுதந்திரத்திற்கு இடையூறின்றி எக்கருத்தையும் எளிதில் விளக்க உதவும் யாப்பு இது. இந்த யாப்பில் மொழிபெயர்த்த குறளில் ஒன்றை மட்டும் எடுத்துக் காட்டி அமைகிறேன்.

நீங்கில் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீ யாண்டுப் பெற்றா ளிவள் (1104)

இக்குறளின் தெலுங்காக்கம்

தவ்வு காஜனகால் சியுதாய சலுவ
னிச்சுசிச்சிதி எச்சட புச்சுகொஎனனொ

இதன் பொருள்

தவ்வு காசன	- தூரமாகச் செல்ல
கால்சியு	- சுட்டெரித்தும்
தாய	- அருகணைய
சலுவ	- குளிர்ச்சி
இச்சு	- தருகிற
சிச்சுசிது	- தீ இதனை
எச்சட	- எங்கே
புச்சு கொனெனொ	- பெற்றாளோ?

மூலக்கருத்து சிதையாதது மட்டுமன்றி எதுகை மோனைகள் அதிகம் வந்து எழில் பெறுதல் காண்க. மொழிபெயர்ப்பும் மூலத்தைப் போன்ற எழில் மிக்கதேயாகும்

சிலர் அதன் செவ்வி தலைப்படுவார்.

எழில்முதல்வன்

பேராசிரியர் எழில்முதல்வன் (டாக்டர் மா. இராமலிங்கம்) படைப்பாளர்; திறனாய்வாளர், 'புதிய உரை நடை' என்னும் தம் நூலுக்காக நடுவண் அரசின் சாகித்ய அகாதெமி பரிசையும், தமிழக அரசின் நல்லாசிரியர் விருதையும், பாவேந்தர் பாரதிதாசன் விருதையும் பெற்றவர். 'இலக்கிய தீபம்' 'திறனாய்வுக் குரிசில்' 'சிலம்பாய்வுச் செம்மல்' 'குறள் ஞாயிறு' முதலிய பட்டங்களைப் பெற்றுள்ள இவர் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக நிற்பவர். பாரதிதாசன் பல்கலைக் கழகத் தமிழியல் துறையின் தலைவர்.

I

மொழி பெயர்ப்பு என்பது அரிய கலை; கவிதையை அதன் உணர்ச்சியும் கற்பனையும் இன்னபிற அழகுகளும் கெடாமல் மொழிபெயர்த்தல் அரிதினும் அரிது. கவிதையின் செவ்வியை உள்ளபடியே நுகர வேண்டுமானால் மொழி பெயர்ப்பை அணுகிப் பயனில்லை. மூலமொழியைத் தான் கற்றல் வேண்டும். திருக்குறளின் பல்வேறு மொழிபெயர்ப்புகளை மருங்கு வைத்து ஒருங்கு நோக்குங்கால் இந்த எண்ணமே வலுப்படுகிறது. காமத்துப்பாலில் வரும் ஒரு குறட்பாவின் மொழி பெயர்ப்புகளை அடிப்படையாகக் கொண்டு சிந்தித்த போது எழுந்த எண்ண அலைகளே இக்கட்டுரை என்க.

II

மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார். *(1289)*

என்பது புணர்ச்சி விதும்பல் என்னும் அதிகாரத்தில் இடம் பெறும் ஒன்பதாவது குறட்பா. தலைமகனும் தலைமகளும் புணர்ச்சிக்கண் விரைதல் என்பது இவ்வதிகாரத்தின் பொருள்.

தலைவி ஊடல் கொண்டு நிற்கிறாள். தலைவன் அவளது ஊடலைத் தணிக்க முயல்கிறான். எனினும் அவன் முயற்சி வெற்றி பெறவில்லை. அந்நிலையில் தலைமகன் தன் நெஞ்சிற்கு மொழிவதாகப் பாடல் அமைந்துள்ளது. இக்குறளுக்கு உரைகண்ட உரையாசிரியர்கள் பலரும் இது யார் கூற்று என்று வரையறுப்பதில் இடர்ப்படுவதாக உணர்கிறோம். தலைமகன் தன் நெஞ்சிற்குக் கூறுவதாகப் பரிமேலழகரும், தலைமகள் தன் நெஞ்சிற்குக் கூறுவதாக மணக்குடவரும், தலைவியிடம் தலைவன் கூறுவதாகக் காளிங்கரும், தலைவன் தோழிக்குக் கூறுவதாகப் பழைய உரைக்காரரும் துறை கொண்டுள்ளனர் / துறைகண்டுள்ளனர்.

இக்குறள் சுட்டும் பொருள் இதுவே. மலரைவிடக் காமம் மென்மையுடையதாகும். அவ்வுண்மையை உணர்ந்து அதன் நல்ல பயனைப் பெறக் கூடியவர் சிலரே. இக்குறளில் பயின்று வரும் செவ்வி என்னும் சொற்குப் பரிமேலழகர் தரும் விளக்கம் நுட்பமும் ஒட்பமும் மிக்கது. குறிப்பும் வேட்கையும் நுகர்ச்சியும் இன்பமும் ஒரு காலத்தின் கண்ணே ஒத்து நுகர்தற்குரியார்

இருவர் அதற்கேற்ற இடமும் காலமும் உபகரணங்களும் பெற்றுக் கூடி நுகர்வதே செவ்வி தலைப்படுதல் எனலாம். இவற்றுள் யாதானும் ஒன்றால் சிறிது வேறுபடினும் அது செவ்வி ஆகா. காமம் இத்தன்மைத்தாக இருப்பதால் திருவள்ளுவர் அதனை 'மலரினும் மெல்லிது' என்று பேசுகிறார். தொட்ட அளவானே மணச்செவ்வி அழிவதாய மலர் எல்லாவற்றினும் காமம் மெல்லிது என்று உணர்த்தவே மலரினும் மெல்லிது என்று சிறப்பும்மை கொடுத்துத் திருவள்ளுவர் பேசுகிறார். சுருங்கச் சொன்னால் காதல், ஊடல், உணர்தல், புணர்தல் ஆகிய அனைத்தினுமே மென்மையும் பக்குவமும் இன்றியமையாதவை என்பதே அவர் கருத்து ஆம். இவையின்றேல் விலங்குகளின் புணர்ச்சிக்கும் மாந்தனின் புணர்ச்சிக்கும் வேறுபாடு இரா.

இப்பாடலின் ஆழ் பொருளை நாமக்கல் கவிஞர் தம் உரையில் மிக எளிதாக விளக்குகிறார். அவரது சொற்கள் வாயிலாகவே அதைக் காண்போ; "செவ்வி - பக்குவ காலம். தலைப்படுதல் - மேற்கொள்ளல். மலர் மிகவும் நுட்பமான பொருள். அந்த நுட்பத்தை உணர்ந்து அது கசங்கி விடாதபடி அனுபவித்தால் அது நெடுநேரம் கண்ணுக்கு அழகும் மூக்குக்கு மணமும் தரும். மேலும் அம்மலர் மொட்டாக இருக்கும் போது முகர்ந்தால் கசங்குமேயல்லாமல் முழு மணம் கிடைக்காது. அன்றி, அது மலர்ந்து நெடுநேரமாகி வாடுகிற சமயத்திலும் கண்ணுக்கும் அழகு தராது; மூக்குக்கு நல்ல மணம் தராது. ஆகையால் மலரைப் பருவகாலமறிந்து அனுபவிக்க வேண்டும். அதைப் போலவே காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலரும் மலராகிய காமமும் அதன் பருவ காலம் அறிந்து அனுபவித்தால்தான் இன்பமுள்ளதாக இருக்கும். ஆனால், உலகத்தில் பெரும்பாலும் மக்கள் காமத்தைக் காலம் நேரம் கருதாமலேதான் அனுபவிக்கிறார்கள் அது குற்றம். 'மலரினும் மெல்லிது' என்பது, மலரின் வாழ்வு ஒரு நாளைய வாழ்வு. ஆனால் காமம், காதலன் காதலி இருவருக்கும் நெடுநாள் உதவக்கூடியது. ஆதலால் அதை மலரைக் கையாள்வதைக் காட்டிலும் கவனத்துடன் கையாள வேண்டும் என்பதைக் குறிப்பது. நாமக்கல் கவிஞர் தரும் இவ்விளக்கம் உளவியலோடும் பாலியலோடும் அறவியலோடும், அறிவியலோடும் இணைத்துப் பார்க்க வேண்டிய ஒப்பற்ற விளக்கம்.

III

இனி, இக்குறளின் பல்வேறு ஆங்கில மொழிபெயர்ப்புக்களைக் காணலாம்.

1. Sexual delight is more delicate than
a flower, and few are those who
understand its real nature.

(John Lazarus)

2. Love is tender as an opening flower;
In season due
To gain its perfect bliss is rapture
known to few

(G.U.Pope)

3. Even tenderer than a flower is love;
and few there be who know
its delicacy and deal with it gently.

(V. V. S. Aiyar)

4. Sexual bliss is tenderer than a flower;
and few are those who attain its real
nature.

unknown Translator

(G. Vadivelu Chettiar Edition)

5. Tenderer and more soft than a flower is
love; only a few its delicate charms know

(A. Ranganatha Mudaliar).

6. Love is softer than blossom; very few
are there in the world who know its

beauty and elegance.

(M.S. Purnalingam Pillai)

7. More tender than a flower is love
and few are they who enjoy it fully.

(V.R.R. Dikshitar)

8. Softer than a flower is love; and few
are they that enjoy it in season.

(M.R. Rajagopalan)

9. Than even a tender flower is Love, of
delicacy more true
A few but joy its seasoned bliss
with all its fitness due.

(K.M.Balasubramaniyan)

10. Flower - soft is love; a few alone
know its delicacy so fine.

(Suddhanantha Bharathiar)

11. (He to himself When faced with unappeasable sulks)
More delicate than a flower is love;
there are few who can seize the
opportune moment.

(G.Vanmikanathan)

12. The bliss of love is finer than flower
some alone experience its power.

(T.S. Ramaligam Pillai)

13. Love is softer than a flower, but
few are adepts in the tender art.

(K.R.Srinivasa Iyengar)

14. Love is more tender than a flower,
And few there be that feel.

(P.S. Sundaram)

15. Love is more delicate that a flower.
Very few understand this and
enjoy its treasures accordingly.

(S.Jagatrakshagan)

16. The Concupiscience is more
Tender than a flower
knowing its tenderness
A few alone enjoy its bliss.

(C.R. Acharya)

எனக்குக் கிட்டியவரை 16 மொழி பெயர்ப்புகளை மேலே தந்துள்ளேன். (வேறு சில கிட்டவில்லை) இவற்றின் தரத்தையும் திறத்தையும் இனி காண முயல்வோம்.

IV

இக்குறளில் இடம் பெறும் சொற்கள் ஒவ்வொன்றும் பொருளாழம் மிக்கவை. காமம் என்னும் சொல்லுக்குப் பெரும்பாலான மொழிபெயர்ப்பாளர்கள் Love என்னும் சொல்லையே நிகரனாகக் (Equivalent) கொள்கின்றனர். ஜான் லாசரஸ் 'Sexual delight' என்றும், பெயர் விளையாப் புலவர் (கோ. வடிவேலுச் செட்டியார் பதிப்பு) 'Sexual bliss' என்றும், டி.எஸ். இராமலிங்கம் பிள்ளை 'The bliss of love' என்றும் சி.ஆர்.ஆசார்யா 'Concupiscence' என்றும் மொழிபெயர்க்கின்றனர். காதற்கும் காமத்திற்கும் வேறுபாடுண்டு. 'கமம் நிறைந்தியலும்' என்னும் தொல்காப்பிய நூற்பா நினைவுக்கு வருகிறதல்வா? அணையுடைத்தாற் போன்று நிறைந்து பெருகி முறுகி நிற்கும் காதலுணர்வே காமமாகும். 'Love' என்னும் சொல்லைவிட 'Sexual bliss' என்பதே பொருத்தமான நிகரன் ஆகும். இனைவிழைவு, மட்டுமீறிய சிற்றின்ப வேட்கை என்னும் பொருளுடைய 'Concupiscence' என்னும் சொல் ஈண்டு பொருந்தாது. திருவள்ளுவர் வெறும் உடல் காரணமாக எழும் சிற்றின்ப நாட்டத்தை மட்டுமே இங்கு பேசவில்லை.

'செவ்வி' என்பதும் பொருண்மை வளம் படைத்த சொல். அதற்குப் பரிமேலழகர் தந்த

விளக்கத்தை முன்னரே கண்டோம். ஜான் லாசரசும், பெயர் விழையாப் புலவரும் 'real nature' எனவும், மிகப்பலர் 'delicacy' என்றும் எம்.எஸ்.பி. 'beauty or elegance' என்றும், கே.ஆர்.எஸ் 'tender art' எனவும், டி.எஸ்.ஆர். 'power' என்றும், நிகரன்களைத் தெரிவு செய்கின்றனர். கோ.வன்மீக நாதன் செவ்வி என்பதற்குத் தனி நிகரனைப் பயன்படுத்தாமல் 'செவ்வி தலைப்படுதல்' என்பதனை ஒரே தொடராகக் கொண்டு 'Seize the opportune moment' என்று மொழி பெயர்க்கிறார்.

தலைப்படுதல் என்பதனைத் தனியே கொண்டு மொழிபெயர்ப்பாளர்கள் 'understand', 'deal with', 'know', 'enjoy', 'attain', 'experience' எனப் பல சொற்களால் விதந்தோதுகின்றனர். ('Experience' என்னும் சொல் வினைவடிவம் கொண்டது) கே. ஆர். எஸ். 'being adept' என்னும் பொருள்பட எழுதுகிறார்.

மெல்லிது என்பதற்கு 'tender', 'soft', 'delicate', என்னும் சொற்களே பேரளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலே காட்டிய நிகரன்களைப் பொதுவாக நோக்க 'Sexual delight', 'Sexual bliss', 'enjoy', 'attain', 'delicate' என்பன இயங்காற்றல் நிகரன்களாக (Dynamic Equivalents) விளங்குவது ஒருதலை.

செவ்வி தலைப்படுதல் என்பதனை ஒரே தொடராக்கி மொழிபெயர்த்த கோ.வன்மீக நாதனின் மொழிபெயர்ப்பு முறை போற்றத்தக்கது. எனினும் அவர் 'Seize the opportune moment' என்று எழுதிச் செல்வது பொருந்துமாறில்லை. ஒத்து நிற்றற்கு உரியனவெல்லாம் தலைக்கூடிய நிலையில் தம்மை இழந்த லயத்தில் கூடுவதன்றோ செவ்வி தலைப்படுதலாம்! அத்தகு மீயுயர் பொருள் இம் மொழிபெயர்ப்பில் கிட்டுகிறதா என்று உன்னுக.

எல்லா உரையாசிரியர்களுமே இது யார் கூற்று என்னும் விளக்கம் தராமலே எழுதிப் போக வன்மீக நாதன் மட்டுமே அடைப்புக் குறிக்குள் கூற்று முறையைக் குறித்துப் போகிறார்.

மேலே காட்டப்பட்ட மொழிபெயர்ப்புகளுள் 2, 9, 10, 12, 13, 16 ஆகிய ஆறு மட்டும் செய்யுள் வடிவில் இயன்றவை. கவிதைக்குள்ள கட்டுப்பாடு உரைநடையில் இல்லை. கட்டுப்பட்ட நிலையில் ஒன்றனை மொழிபெயர்க்கத் தொடங்கினால் சிலவற்றை வெட்டிப்போடவும், ஒட்டிப்போடவும் வேண்டும். 'வெட்டிப் போடுதலும்' 'ஒட்டுப் போடலும்' உள்ள நிலையில் 'இழப்பு' (Loss) நேர்வது இயற்கையே. டி.எஸ்.இராமலிங்கம் பிள்ளை தம் மொழிபெயர்ப்பில் 'flower' என்பதற்கு ஏற்ற ஒலி இயைபுடைய சொல் வேண்டுமென்பதாலேயே 'power' என்னும் சொல்லை தேடி எடுத்துவந்து பதிக்கிறார். ஒலி நலத்தால் அச்சொல் நம் செவிப்புலனை இன்புறுத்தினாலும் 'சக்தி' தன் சக்தியை இழந்து நிற்றலைக் காண்கிறோம். யாப்பினை நிறைவு செய்வதற்காகவே 'opening flower' என்றும், 'In season due' என்றும் நீட்டிப் பாடவேண்டிய நிர்ப்பந்தம் போப்புக்கு நேர்கிறது. கே.எம்.பாலசுப்புரமணியத்தின் மொழிபெயர்ப்பும் யாப்புக்கு முதன்மை தந்ததால், 'seasoned bliss with all its fitness due' என விளக்கவுரைப் போக்கில் நெடிது விரிகிறது. போப்பும், கே.எம்.பியும் செய்திருப்பது உரைப்பாங்கு மொழிபெயர்ப்பே (Interpretative Translation) என்பது வெளிப்படை. சுத்தானந்த பாரதியாரோ முன்னிருவர் போலன்றி, குறுகிய அடியானமைந்த யாப்பைத் தெரிவு செய்ததால் சொற்களையும் குறுக்கவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. மரக்காலுக்குள் நெல்லை அமுக்கி அமுக்கி அளக்க முடியுமா? தவிடாக இருந்தால் ஓரளவு முடியும். அப்படிப்பட்ட நிலைதான் சுத்தானந்த பாரதிக்கு ஏற்பட்டிருக்கிறது. திருக்குறளை நீளமாக மொழிபெயர்த்தவர்கள் அதற்கு நியாயம் செய்யவில்லை என்று பி.எஸ்.சுந்தரம் குற்றம் சாட்டுகிறார். ("Those who translate the Kural at length do not do it the *least*

justice, for its soul is brevity and with it *least* is most just") அவரும் கூட திருவள்ளுவருக்கு இந்த இடத்தில் நியாயம் செய்திருப்பதாகக் கூறமுடியாது. 'செவ்வி தலைப்படுவார்' என்னும் உயிர்நிலைத் தொடர் அவரது மொழிபெயர்ப்பில் உயிரற்ற வெறுங்கூடுபோல் ஆகிவிட்டது. கே.ஆர்.சீனிவாச ஐயங்காரின் மொழிபெயர்ப்பில் இயக்கம் தெரியாவிட்டாலும் உயிர் இருப்பது புலனாகிறது. பி.எஸ். சுந்தரத்திடம் அதுவும் காணோம்.

V

நாம் மேலே கண்ட மொழிபெயர்ப்புகளுள் வ.வே.சு.ஐயர், வி.ஆர்.ஆர்.தீட்சிதர், பெயர் விழையாப் புலவர் (கோ.வடிவேலு செட்டியார் பதிப்பு) ஆகிய முவரின் மொழிபெயர்ப்பு மட்டுமே பொருள் இழப்பிற்குப் பெரிதும் ஆளாகாமல் மூல மொழியோடு நெருங்கி நிற்கின்றன. பொருள் இழப்பின்மை, மூ.மொ.நெருக்கம் என்னும் இரு தகுதிப்பாட்டின் அடிப்படையில் நாம் நிறைவு பெற்றாலும், திருவள்ளுவரின் குறளைச் சொல் சொல்லாக, திரும்பத் திரும்ப, உரத்தும் வாய்விட்டும், மேலே மிதந்தும், ஆழத்துள் மூழ்கியும் படித்துப் படித்து தியான சமாதி கூடும் போது நாம் பெறும் இன்பம் மொழிபெயர்ப்பில் எப்படி வரமுடியும்? ட்ரூ என்பார் காமத்துப்பாலை அதன் அழகும் நலனும் சிதையாமல் எந்த ஐரோப்பிய மொழியிலும் பெயர்த்துவிட முடியாது என்று கூறியது ("It could not be translated into any European language without exposing the translater to infamy") உண்மையே அல்லவா?

VI

இதுகாறும் கண்டவாற்றால் ஓர் உண்மை புலனாகிறது. அழகு ஊறித் ததும்பும் ஆற்றல் மிக்க உயர் கவிதைகளை எந்த அன்னிய மொழியிலும் அப்படி அப்படியே மொழிபெயர்த்துத் தருதல் யாராலும் இயலாது. விதிவிலக்காகச் சிலரால் முடியலாம். மூலமொழியில் பயிற்சியும் தெளிவும் வேண்டும்; பெறும் மொழியில் தேர்ந்த திறன் வேண்டும்; சொற்களை அளந்து காணும் சூட்சுமம் தெரிய வேண்டும் அதனோடு அனுபூதி நிலையில் ஒன்ற வேண்டும். அனுபவித்ததை வெளிப்படுத்தும் ஆர்வமும் திறப்பாடும் வேண்டும். இத்தனையும் இருந்தால் மட்டுமே கவிதை மொழிபெயர்ப்பில் வல்லாளர் ஆகமுடியும். மொழிபெயர்ப்பும் மலரை அனுபவிப்பது போன்ற நிலையே! சிலர் மட்டுமே செவ்விதலைப்படமுடியும். தமிழுக்கு இப்போது தேவைப்படுவது செவ்வி தலைப்படுவாரின் மொழிபெயர்ப்புத் திருத்தொண்டேயாம்!.

முனைவர் ஏ.சி. ஆசாரியா தம் மொழிபெயர்ப்புப் பற்றி

The Poems mentioned in this treatise (Thirukkural) are grape - stlye (a style which seems to be easy but tough in understanding). Though all are double luied and very simple to look at, their meanings go deeply like a fathomloss occean. Understanding them and giving suitable equivalents and composing is so difficult a task. Even, then, as far as possible, I have justly justified in this matter. Though the rhythemic alliteration in every poem, is composed suitable far four - lined poem, It is, of course, very even if they are taken as complete (double lined ones). Readers may take them four footed ones.

வள்ளுவம் - அறிவியல் முப்பால்

நெல்லை சு. முத்து

நெல்லை சு. முத்து அவர்கள் இந்திய விண்வெளித்துறை விஞ்ஞானி; சிறந்த கவிஞர்; இலக்கியத் திறனாய்வாளர்; அறிவியல் மற்றும் இலக்கிய மொழிபெயர்ப்பாளர். அறிவியல் துறையில் இருந்து கொண்டே இலக்கியப் பணியையும் செய்து வருபவர். இதுவரை ஏறத்தாழ 30 நூல்களை எழுதியுள்ளார். 'கவிமாமணி', 'அறிவியல் மாமணி', 'அறிவியல் சாதனையாளர்' எனப் பல பட்டங்களைப் பெற்றவர். இவரது படைப்புகள் இடம்பெறாத தமிழேடுகளே இல்லை எனலாம்.

இந்தியாவைப் பொருத்தமட்டில் கி.மு.1600 முதல் ஓராயிரம் ஆண்டுகள் வாய்மொழி ஓது காலம்-வேதகாலம். அதனைத் தொடர்ந்து 'விவாத விஞ்ஞானம்' (Science of Debate) கி.மு. 600 முதல் கி. பி 100 வரை வளர்ந்தது.

கி.மு. 623- கி.மு. 543 ஆண்டுகள் புத்தர் காலகட்டம். நேப்பாளத்திற்கு அருகே கபிலவாஸ்து எனும் நகரில் சாக்கிய குலத்தில் பிறந்தவர் கௌதம சித்தார்த்தன். மன்னர் குடும்பத்திலிருந்து புத்தமதம் பிறந்தது.

இதிகாச நாயகன் இராமர் பிறந்த அயோத்தி உத்தரப் பிரதேசத்தில் உள்ளது. தசரதன் அரண்மனையில் இன்றைக்குள்ள 'இந்து' மதம் தோன்றியது.

கி.மு. 600 ஆம் ஆண்டுவாக்கில் பீகாரைச் சார்ந்த மகதத்தில் வைசாலி எனுமிடத்தில் சித்தார்த்தர்-திரிசலாதேவித் தம்பதியர்க்கு மகனாகத் தோன்றினார் வர்த்தமானர். அவரை 'நிகண்ட நாத புத்த' என்றே பாலி திரிபிடகங்கள் குறிப்பிடுகின்றன. பிற்காலத்தில் மகாவீரர் என்று புகழ்பெற்றவர் இவரே. அங்கும் அரச போகம் துறந்தபோதே சமண மதம் உதயமானது.

பறைக்கிராத மொழி

புத்தர் உபதேசங்கள் சமஸ்கிருத மொழியில் இல்லை. அவை பெரும்பாலும் அன்றைய மகத நாட்டு மக்கள் வழக்காகிய பிராகிருத ('பறைக் கிராதர்) மொழியிலேயே அமைந்திருந்தன. அதிலும் வட்டார மொழிச் சுளிவுகள் தோன்றி மாகதி, மகராஷ்டிரீ, பைசாசி போன்ற பிரிவுகள் ஏற்பட்டன. அவற்றைச் செம்மைப்படுத்திய ஆரியப் பண்டிதர்களால் 'ஒருங்கிணைந்த (சமஸ்) கிராத மொழியாக-'சமஸ்கிருத' வடமொழி உருவாயிற்று.

மகதத்தில் வழங்கிய 'மாகதி' மொழி-அந்நாட்டுத் தலைநகரமான 'பாட்லிபுத்ர' நகரின் பேரால் மருவி 'பள்ளிப் புத்த'எனச் சுருங்கி 'பாலி' என்றாயிற்று.

இங்கு பௌத்த வசனங்களையும், திரிபிடங்களையும் சுட்டுதற்கு கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் புத்தகோசர் எனும் அந்தணர் கையாண்டது இந்தப் பாலி மொழியே.

புத்தர் தம் 'கடவுட் பள்ளி' (மதுரைக் காஞ்சி. 467) மற்றும் தென்னிந்தியக் குகைகளில் காணப்படும் 'சமணர் கற்படுக்கை' 'பாளி' எனப்பட்டது. படுக்கச் செல்லும் முன் கால் கை

கழுவ வேண்டும்'' என்ற ஒழுக்கத்தினை 'கழாஅக்கால் பள்ளியுள் வைத்து அற்றால்" (குறள். 840) என எடுத்தாளுகிறார் வள்ளுவர். இவை எல்லாம் 'பாலி' மொழி வரலாற்று நிபுணர்தம் ஆய்வுக்குரியன.

அசோகன் காலத்தின் தொகுக்கப்பட்டதும், இலங்கையில் வட்ட காமினி (கி.பி 100) என்பவரால் எழுத்துரு தந்து படைக்கப்பட்டதுமான பாலி திரிபிடகங்களும் தமிழகப் புத்தப் பிக்குகள் பற்றிக் குறிப்பிடுகின்றன.

அசோகன் மகன் மயிந்தனும், மகள் சங்கமித்திரையும் இலங்கை செல்லும் வழியில் தமிழகத்திலும் தங்கிப் பௌத்தப் பிரச்சாரம் செய்திருக்கக் கூடும்.

சாத்தன் என்ற பெயர் தாங்கிய பௌத்தக் கவிஞர்கள் தமிழகத்தில் வாழ்ந்திருந்தனர் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். உறையூர் முதுகண்ணன் சாத்தனார், உறையூர்க் கதுவாய்ச் சாத்தனார்,கருவூர் பூதஞ்சாத்தனார், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என ஊருக்கோர் சாத்தனார் ஏறத்தாழ இருபதிற்கும் மேற்பட்டோர் சங்க இலக்கியத்தில் இடம் பெறுகின்றனர். அதிலும் 'செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தன்' என்ற பெயரிலும் ஒரு பௌத்தர் இருந்திருக்கிறார்.

திராவிட மொழி

அதே வேளையில் தெற்கே பிராகிருத மொழிப் பிரிவுகளாக ஆந்தரீ, திரவிடீ ஆகியன வளர்ந்தோங்கின.

கி.மு. 485 ஆம் ஆண்டு 'திரமிள சங்க' என்ற அமைப்பு வழி மதுரையிலிருந்து தமிழ் வளர்ச்சிக்குச் சமணர்கள் பாடுபட்டனர்.

அன்றியும் கி.பி இரண்டாம் நூற்றாண்டினைச் சார்ந்த கருணபுண்டரீகம் என்ற மகாயான புத்தநூல் கி.பி. 421 ஆம் ஆண்டு மத்தியப் பிரதேசத்தை சார்ந்த தருமக்ஷேமர் என்னும் அந்தணரால் சீனமொழியில் மொழிபெயர்க்கப் பட்டது.

இந்நூலில் 'த்ராமிட மந்த்ரா பத' என்ற சொல்லாட்சி இரண்டு இடங்களில் வருகிறது.

அவ்வாறே 'சர்வக்ஞ தாரணி' என்ற நூலில் 'இயம் த்ராவிட மந்த்ரபத சர்வக்ஞ தகர தாரணி, என்றொரு குறிப்பு வருகிறது. இந்நூலினை ஆராய்ந்த இஷியாம்தா எனும் ஜப்பானிய அறிஞர் ''தாரணி என்பது திராவிடமூலம் என்பதனை புத்தர்கள் அறிந்திருந்தனர் என்ற உண்மை நிருபணம் ஆகிறது'' (Isshi Yamda, "The White Lotus of Compassion", Heritage Publishers, New Delhi, 1989) என்று உறுதிப்படுத்துகிறார்.

ஓதும் இயல்புடையது 'வேதம்'. அதிலிருந்து 'வித்து' (தாது), வித்யா'(கல்வி), வித்தை, வைதிகம் போன்ற கலைச்சொற் பொருள்கள் உருவாயின.

ஆயினும் ஏக தெய்வ வழிபாட்டை வெறுத்தொதுக்கிய புத்தம்-சமணம் ஆகிய இரண்டு மதங்களுக்கும் இடையே கடும்போட்டி. இவ்விரண்டு நெறிகளும் ஒரே மாதிரி இயங்கினாலும் தருக்கச் சாத்திரத்தில் வல்லவர்கள் சமணர்களே.

பஞ்சாஸ்தி காயம்

மகாவீரருக்கு இரு நூற்றாண்டு முந்தியவர் பார்ஸீவ ('பார்ஸி') நாதர். இவரும் இருபத்து நான்கு சமணத் தீர்த்தங்கரர்களில் ஒருவர். கி.மு. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த பார்ஸீவ நாதர் என்ற தீர்த்தங்கரர் ஜீவன், புத்தவமீ, தருமாஸ்தி காயம், அதருமாஸ்தி காயம், ஆகாசாஸ்தி காயம் போன்ற பஞ்சாஸ்தி காயங்களைத் தருக்க நெறி மூலம் நிறுவியவர்.இவற்றுடன் காலம் எனும் தத்துவமும் இணைத்து 'ஷட் திரவியம்' (அறு பொருள்கள்) சமணர்தம் கொள்கை என்றறிகிறோம்.

சமண சமயம் முதல் நூற்றாண்டு வாக்கில் சந்திரகுப்தன் ஆட்சியில் கடும் பஞ்சம் நிலவிற்று. அவ்வமயம் பஞ்சத்துக்கு அஞ்சி பத்திரபாகு எனும்

சமணர் தலைமையில் தென்னாடு புகுந்த தீர்த்தங்கரர்களில் பிற்காலத்தில் திகம்பரம், சுவேதாம்பரம் ஆகிய இருபிரிவுகள் தோன்றின.

அதன்வழி சுவேதாம்பர ஆகமங்கள் வட நாட்டில் எழுந்தவை என்றும், திகம்பர போதநூல்கள் தென்னாட்டில் உதித்தன என்றும் வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். சமணர் பள்ளிகள் தமிழகமெங்கும் உருவாயின.

சமணர் துதிப்பாடலில் "மங்களம் குந்தோ குந்தார்யோ ஜைனதர் போஸ்து மங்களம்" என்று இடம்பெறும் குந்த குந்தாச்சர்யர் பத்திரபாகுவின் சீடர். ஏறத்தாழ கி.பி. முதலாம் நூற்றாண்டினர். இவர் எழுதிய 'பாரச அனுவேக்கா' அணுக் கொள்கையினை ஏற்கிறது.

ஆயின் இவருக்கு பத்ம நந்தி, வக்கிரக் கிரீவர், க்ருத்தபிச்ச, ஏலாச்சார்ய போன்ற வேறு பல பெயர்களும் உண்டாம். இவரே திருவள்ளுவர் என்ற கருத்தும் சமணரிடை உண்டு என்பர்.

இவர்தம் நூல்களில் முக்கியமானது 'பஞ்சாஸ்தி காயம்'. இதில் ஜீவன்-ஆன்மாவாகிய விசை ஆற்றலையும், புத்கலம்(ஆங்கிலத்தின் 'பர்ட்டிகல்'-Particle) அணுமயமான பொருண்மையையும், தருமாஸ்தி காயம் இயக்க ஆற்றலையும் (Kinetic energy), அதருமாஸ்தி காயம் நிலை ஆற்றலையும்(Potential energy). ஆகாயம் என்பது வெற்றிடத்தையும் குறிக்கும்.

பிராகிருத மொழியில் இந்தச் சுலோகங்கள் கூறப் பெற்றுள்ளன. எழுத்து வரிவடிவம் தமிழ்ப் பிராமி இனம் என்று கொண்டாலும் ஒலிப்பு பிராகிருதம் என்க. திராவிட மொழிப் பிரிவினில் இவை தமிழாயினவோ என்பது சிந்தனைக்குரியது.

"மீனுக்குத் தண்ணீர் நடமாட இடந்தருவது போல ஜீவனும், புத்கலமும்(ஆற்றலும் பொருளும்) இயங்கிட இயக்க ஆற்றல் உதவுகிறது"(தருமாஸ்தி காயம்-சுலோகம் 85).

மேலும் "ஸ்திதி க்ரியா யுக்தனாம் காரண போதும் து ப்ருதிவீவ" என்றொரு சுலோகம் பூமி நிலைத்து நிற்பதற்குக் காரணமான நிலம் அதாவது - புவியீர்ப்பு விசை பற்றிப் பேசுகிறது.

அன்றியும் குந்த குந்தாச்சாரியரின் 'சமய சாரம்' என்ற பிறிதொரு நூல் உள்ளுணர்வு சார்ந்த ஞானம் - அதன் எதிரான உலகியல் அறிவாகிய 'வி-ஞானம்' (விஞ்ஞானம்) மற்றும் புலன்களுக்கு அப்பாற்பட்ட மெய்ஞ்ஞானம் என்றெல்லாம் விரிவாக விளக்குகிறது.

அவர்தம் மற்றொரு 'ரயண சாரம்' எனும் நூல் "சோதிடம், மந்திரம், பேய், பிசாசு ஒட்டுதல் முதலியன வினைகள் நடத்திப் பணம் ஈட்டுதல் சமணர்க்கு இழுக்கு" என்று வலியுறுத்துகிறது.

அனைத்திற்கும் அப்பால் 'நியம சாரம்' என்ற நூலில் அணுக்கொள்கை தெளிவாக விவரிக்கப்படுகிறது.

"பரமாணு - ஸ்கந்தம் எனத் துகள் (புத்கலம்) இருவகைப்படும்" என்பது சமணர் கருத்து. உண்மையில் 'பரமாணு' ஆங்கிலத்தில் 'ஆட்டம்' (Atom) ஆகும். ஸ்கந்தம் அதன் தொகுப்பான அணுத்திரள் (radical) அல்லது மூலக்கூறு (molecule) எனலாம்.

அதிலும் பரமாணுவும் இருவகை (நியம சாரம் சுலோகம்20) இக்கருத்தினை - மின்னணுத் துகளாகவும் (corpuscle), அலையாகவும் ,, ஆகிய இருமை நிலைகளில் இயங்கும் என்று கி.பி 1927 ஆம் ஆண்டின் "ஹீசன்பர்க் திண்ணமின்மைக் கோட்பாடு" (Hiesenburg's Theory of Uncertatinty) என்ற நவீன இயற்பியல் பாடத்துடன் ஒப்பிட்டு நோக்கலாம்.

அவ்வாறே,ஸ்கந்தமும் ஆறு வகைப்படுமாம்.

1. 'அதி தூல தூல' வகை இதனை உடைக்கலாம்; உடைத்த துண்டுகள் தாமாக இணையாது (tangible an breakable). எடுத்துக் காட்டு: மண் திணிந்த நிலம் போன்ற திடப் பொருள்.

2. 'தூல'ப் பொருள் இது உடைத்தாலும் ஒட்டிக் கொள்ளும் (tangible but unbreakable); எண்ணெய், நெய் போன்ற திரவப்பொருள்கள் இவ்வகை.

3. 'தூல சூக்குமம்' (intangible) - தொட்டுணர இயலாதவை. சான்று - நிழல், வெயில், வானம் முதலியன.

4. 'சூக்குமத் தூலம்' - (Perceptible and visible) - கண்ணுக்குப் புலப்படுவதும், உணரப்படக் கூடியதுமானது. நெருப்பு போன்றவை.

5. 'சூக்குமம்' (Perceptible but invisible) மிக நுட்பமானது. இதனைக் காண இயலாது; ஆயின் தொடலாம், முகரலாம், கேட்கலாம், சுவைக்கலாம். எடுத்துக்காட்டு: வாயுக்கள், காற்று முதலியன.

6. 'அதி சூக்குமம்' (imperceptible) - புலனறிவுக்கு அப்பாற்பட்டது - மனம்

மேற்குறித்த ஆறுவகைகளில் பொருள் சார்ந்த பஞ்சபூதங்களின் தன்மைகளும், மனவாற்றலும் அறிவியல் ரீதியில் அருமையான வகைப்படுத்தப்பட்டுள்ளன.

''பூதங்கள் ஐந்து'' (குறள்.271) என்று வள்ளுவர் குறிப்பிடும் - நிலம், நீர், வளி, தீ, வான் ஆகியன முறையே திண்மம் (Solild), நீர்மம் (Liquid), வளிமம் (Gas), மின்மம் (Plasma state), வெறுமம் (Emptiness) எனும் இயற்பியலில் பொருள் நிலைகள்.

''தனக்கென்று ஆதி, மையம், அந்தம் உடையதும், புலன்களால் அறியப்படாததும், பிரிக்க இயலாததும், அழிவற்றதுமான பொருளே பரமாணு'' என்று நியம சாரத்தின் மற்றொரு சுலோகம் (26) சுட்டுகிறது.

கி.பி 1808 ஆம் ஆண்டு ஜான் டால்டன் எனும் ஆங்கில ஆசிரியர் கண்டறிவித்த அணுக்கொள்கை (Dalton's Atomic Theory) இது தானே. 'பிரிக்க இயலாதது' என்ற பொருள்படும் கிரேக்கச் சொற்கோவையே இன்று அறிவியலில் 'அதோமாஸ்' (A-tomos) என்றாகி ''ஆட்டம்'' (Atom) என்றானது. வடமொழியில் 'அதுவம்' எனில் இரண்டாகப் பிளக்க முடியாதது அல்லவா? ('அத்துவைதம்' இந்தியாவினில் தனியொரு மார்க்கம்)

அன்றியும் ஆல்பெர்ட் ஐன்ஸ்டீனுக்கு முன்பே நம் தமிழகச் சமணச் சித்தர்கள் சார்பியல் கோட்பாடு (Theory of Relativity) பற்றி எழுதிச் சென்றுள்ளனர்.

மேலும் 'நியம சாரம்' நூல்- ''ஜீவன், புத்கலம், அதருமம், தருமம், ஆகாசம் ஆகிய திரவியங்கள் மாற்றமுறுவதற்குக் காரணமே காலம் ஆகும்'' (சுலோகம்.33) என்றுணர்த்துகிறது. பாருங்கள்.

ஜீவன் என்பது விசை (Force) அல்லது ஆற்றல் (Energy) சார்ந்தது. புத்கலம் என்பது பொருண்மை (Mass) தொடர்புடையது. இவ்விரண்டையும் இணைப்பது காலம் எனும் நுட்பத்தில் இயங்கும் ஒளிவேகம் (E=mc2).

வேகமான பொருளின் பொருண்மை குறையும். மந்தகதியில் சலிக்கும் பொருள் கனமாக இருக்கும்.

இன்னொரு புதுப்பொருள். தருமம்-அதருமம் பற்றியது. இவ்விரண்டும் இயக்க ஆற்றல், நிலை ஆற்றல்கள். விரைந்து பாயும் அதிவேகப் பொருளுக்கு 'தரும' இயக்க ஆற்றல் (K.E=1\2 mv2) அதிகம். உயர்ந்த இடத்தில் இருக்கும் 'அதரும'ப் பொருள் மீது புவிஈர்ப்பு ஆற்றல் மிகுந்திருக்கும் (P.E.=mgh).

சமீபத்தில் கல்கத்தா, இந்திய அருங்காட்சியத்திலுள்ள நாணயம் ஒன்று ஆய்வர் கவனத்தை ஈர்த்தது. ''காசின் முன்புறத்தில் அமர்ந்த நிலையில் ஒரு முனிவரின் திருவுருவம் காணப்படுகிறது. அவர் பீடத்தின்மேல் பத்மாசனமிட்டுத் தியான நிலையில் அமர்ந்திருக்கிறார். வலது கை வலது தொடைமீதும்,

இடது கை சின்முத்திரை நிலையிலும் உள்ளன. இடையில் தட்டுச் சுற்றாக வேட்டியும், இடது தோளில் மடித்துப்போட்ட துண்டும் அணிந்திருக்கிறார். மழித்த தலை: தலைக்கு மேலே ஒரு குடை; அவருக்கு முன் ஒரு சிக்குப்பலகையில் விரித்த நிலையில் ஓர நூல் வைக்கப்பட்டுள்ளது. காசின் பின்புறத்தில் ஐந்து முனை நட்சத்திரம் புள்ளிகளாலான வட்டத்துக்குள் பொறிக்கப்பட்டுள்ளது." என்றும், இரட்டை வராகன் எனும் அந்தத் தங்க நாணயத் தடயங்கள் அடிப்படையில் "திருக்குறளில் 'ஆதி பகவன்', 'மலர்மிசை ஏகினான்', 'அறவாழி அந்தணன்' போன்று வரும் சொற்றொடர்கள் வள்ளுவப்பெருமான் சமண சமயத்தினர் என்று கொள்வதற்கு வலுவான சான்றுகளாகும்." என்று நிறுவுகிறார் தொல்லாய்வியல் அறிஞர் பேராசிரியர் ஐராவதம் மகாதேவன். ('தினமணி சுடர்', 04-03-1995)

தலைமேல் குடை 'பல குடைநீழலும் தம் குடைக்கீழ் காணும்' (குறள். 1034) வேளாளர்தம் நிலையின் குறியீடாகலாம். ஐந்து முனை நட்சத்திரம் பஞ்சாஸ்தி காயம் என்கிற ஐந்து நிலைகளைக் குறிக்கும்.

திருக்குறளிலேயே மிக அதிக இடங்களில் சுட்டப்பெறும் எண் 'ஐந்து' என்க. அதிலும் ஐம்புலன்கள் பற்றியே செய்திகளே அனேகம்.

இன்னும் சில வேறுபாடான 'ஐந்து'க்களுக்கும் உள்ளன.

"பொருள், கருவி, காலம், வினை, இடனொடு ஐந்தும்" (குறள்.675) என்கிற வகையில் ஒரு ஆய்வுக்கூடத்தில் ஆய்வுப் பொருள் (Subject), ஆய்வு உபகரணம் (Instrument), ஆய்வுக்கேற்ற காலம் (Time), ஆய்வு வினை (Action), ஆய்வுக்குரிய இடம் (Place) ஆகியவை 'வினைசெயல் வகை'யில் இன்றியமையாதன.

சமண நெறித் தருக்கவாதியரான தீர்த்தங்கரர்கள் வித்தியாதரர்கள் ஆயினர். 'மதிநுட்பம்' (குறள்.636) சார்ந்த நவீனத் தொழில்நுட்பச் சிந்தனை உதித்தது. பழுதாக வினைகள் செய்யாமலும், அவ்வாறே ஆற்றிய வினையில் ஏதேனும் சிறு பழுது உற்ற பின்னால் மனம் தளராமலும் இயங்கும் 'வினைத்திட்பம்' (குறள். 662) அவர்களிடம் எழுந்தது.

உழவர்தம் ஏர்ப்படை (872, 1031), பசு மட்கலம் (660), உடுக்கை (788), மன்னர் கவிகை (389), யானையை அடக்க உதவும் தோட்டி (24), வேல் (500), கருவி (537, 631, 675), அணிகலன்களாகிய நன்கலம் (.60), கணங்குழை (081), துகில் (087), இசைக்கருவிகளான குழல், யாழ் (66), வட்டு ஆடும் அரங்கு (401), கூத்து ஆட்டு அவைக்குழாம் (332), இருள்போக்கும் விளக்கு (299), கட்டடக்கலை தொடர்புடைய வான் சுதை (714), வல் அரண் (737), அடைக்கும் தாழ் (71), வணிகம் சார்ந்த 'சமன்செய்து சீர்தூக்கும் கோல்' (118), நிறுத்தல் எடையாகப் பயன்படுத்தப் பெறும் குன்றிமணி (குறள்.277), பொன் உரைத்துப் பார்க்க உதவும் கட்டளைக்கல் (505), அரம் (888), நிலவாகனங்களில் சாகாடு (சகடம், குறள்.475), நெடுந்தேர் (496), கடலில் பரதவர் உபயோகிக்கும் ஏமப் புணை (Rescue boat, 306), ஏமாப்பு இல்தோணி (068), காற்று செலுத்தும் நாவாய் (Navy, 496), தூண்டில் (931) - போன்ற பல்வேறு தொழில் நுட்பங்கள் திருக்குறளில் சுட்டப்பெறுகின்றன.

வள்ளுவர் காலகட்டத்தில் இந்தியத் துணைக்கண்டத்தில் தென்னகம் இவ்விதம் பல அறிவியல், தொழில்நுட்பத் துறைகளில் செழித்தோங்கி இருந்தது.

பொய்யா மொழிப் புலவர் திருவள்ளுவனார் கண்ட அறம்-பொருள்-இன்பம் ஆகிய முப்பால்களும் முறையே இன்றைய அறிவியல்-தொழில்நுட்பம்-பயன்பாடு எனும் மூன்று நிலைகளே என்ற விஞ்ஞானக் கண்ணோட்டம் சிறக்கச் செய்வோம்.

காலமும் திருக்குறளும்

சு. கிருஷ்ணமூர்த்தி

கல்கத்தாவில் வாழ்ந்து வரும் இவர் புதுக்கோட்டை மண்ணுக்கு உரியவர். ஆங்கிலம், வங்காளம் முதலிய மொழிகளில் நிறைபுலமை பெற்றவர். இந்திய அரசின் தணிக்கைத் துறையில் சேர்ந்த இவர் 1955 ஆம் ஆண்டு முதல் கல்கத்தாவில் பணியாற்றி துணைத் தணிக்கை இயக்குநராக (Deputy Director of Audit) உயர்ந்து, பணி ஓய்வு பெற்றார். இருபத்தைந்துக்கும் மேற்பட்ட வங்க மொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகிய இரண்டனையும் முறையே வங்க மொழியிலும் ஆங்கிலத்திலும் பெயர்த்துள்ளார். மொழிபெயர்ப்பிற்கான சாஹித்ய அகாடமி பரிசினைப் பெற்றவர்.

திருக்குறள், சிலப்பதிகாரம், கம்ப இராமாயணம் இவை மூன்றும் தமிழ் இலக்கியத்தின் மும்மணிகள் ஆகும். எனினும் திருக்குறளுக்கும் மற்ற இரு நூல்களுக்கு மிடையே ஒரு முக்கியமான வேற்றுமை உண்டு. மற்ற இருநூல்களிலும் அறநெறிகள் வற்புறுத்தப் பட்டிருந்தாலும் அவற்றுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்காமல் அந்த நூல்களைத் தூய இலக்கியமாக வாசிக்க இயலும். ஆனால் திருக்குறளைச் சிறந்த இலக்கியத்தரம் வாய்ந்ததாயினும் தமிழ்ச் சமூகம் நெடுங்காலமாக அதில் இடம் பெற்றுள்ள அறநெறிகளுக்கே அதிக மதிப்பு அளித்து வந்துள்ளது. ஆகவேதான் திருக்குறளுக்குத் 'தமிழ் மறை', 'பொது மறை' என்ற பெயர்கள் வழங்குகின்றன. பல்வேறு மொழிகளில் இதன் மொழிபெயர்ப்புக்கு முக்கியகாரணமும் இதன் அறநெறி உள்ளடக்கமேயாகும். இதே காரணத்தால் தான் இதற்கு மேலும் மேலும் உரைகள் எழுதப்படுகின்றன. இதைப் பாராட்டி எண்ணற்ற கட்டுரைகள், நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

திருக்குறளில் இடம் பெற்றுள்ள கருத்துக் களெல்லாமே எல்லாக்காலத்துக்கும் பொருந்துபவை என்றே அறிஞர்கள் கூறியும் எழுதியும் வருகிறார்கள். இந்தக்கருத்தை ஆராய்வதே இச் சிறுகட்டுரையின் நோக்கம்.

தொடக்கத்திலேயே வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு. நான் ஒரு தமிழன், தமிழிலக்கிய ரசிகன், ஆனால் பண்டிதனல்ல, ஆகவே என் கருத்துக்கள் ஒரு சாதாரண வாசகனின் கருத்துக்களேயாகும். திருக்குறளின்பால் எனக்குள்ள மதிப்பு வேறெவருடையதையும் விடச் சற்றும் குறைந்ததல்ல.

எந்த ஒரு படைப்பையும் மதிப்பீடு செய்யும் போது அதைக் கண்மூடித்தனமாகப் பாராட்டவோ, கண்டிக்கவோ கூடாது. அதன் வரையறைகளை ஏற்றுக் கொண்டு அதன் நிறைகுறைகளை ஆய்வதே உண்மையான மதிப்பீடாகும்.

எந்த நூலும் சூனியத்தில் படைக்கப்படுவதில்லை. அதைப் படைப்பவரும் மற்ற மனிதர்களைப்போல் ஒரு சமூகத்தின் சட்ட திட்டங்கள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்களின் தாக்கத்துக்கு உட்பட்டவர். இந்தத் தாக்கம் அவர் படைக்கும் நூலில் இடம் பெறுவது தவிர்க்கவியலாதது. அவர் ஒரு பெரும் மேதையாகவோ, சாதாரணக் கற்பனைத் திறன் கொண்டவராகவோ

இருந்தால் சமகாலக் கூறுகளை விஞ்சிய எதிர் கால சாத்தியங்களைத் தம் படைப்பில் கோடி காட்டலாம். எனினும் அவரது படைப்பு முழுதும் அவரது சமகால வரையறைகளைக் கடந்து எல்லாக் காலத்துக்கும் பொருத்தமாக இருக்கும் என்று எதிர்பார்ப்பது சரியல்ல.

இக்காலத்துக்கும் பொருந்தாக சில கருத்துக்கள் திருக்குறளில் இடம் பெற்றுள்ளன.

திருவள்ளுவர் காலத்துக்கு முன்பே ஆரியப்பண்பாட்டுத் தாக்கத்தால் வருணாசிரம சாதிப் பாகுபாகு தமிழ்நாட்டில் பரவிவிட்டது. அப்போது தமிழ் நாட்டில் பரவியிருந்த பௌத்த, சமண சமயத்தினர் கூட இந்தப் பாகுபாட்டை ஏற்றுக்கொண்டனர் என்பது சிலப்பதிகாரத்தி லிருந்து தெரியவருகிறது. சமணரான காந்தியடிகள் அந்தணர்களை மரியாதையோடு குறிப்பிடுகிறார்.

உயிர்க்கொலை, அசைவ உணவு இவைபற்றிய திருக்குறள் கருத்துகள் கடுமையானவை. இக்கருத்துக்கள் சமண சமயத்தில் மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்ததால் திருவள்ளுவர் ஒரு சமணர் என்று பரவலாகக் கருதப்படுகிறது. நான்கு வருணத்தினரில் பின்மூவரைப் பற்றித் திருக்குறளில் குறிப்பு இருப்பதாகத் தெரிய வில்லை. ஆனால் அந்தணர் குறிப்பிடப்படுகிறார். 'கடவுள் வாழ்த்து' அதிகாரத்தில் இடம் பெறும் 'அந்தணர்' என்ற சொல் கடவுளைக் குறிக்கிறது. ஆனால் முப்பதாவது குறளில் வரும் 'அந்தணர்' என்ற சொல்லும் நூற்றுமுப்பதுத் நான்காம் குறளில் பார்ப்பான்' என்ற சொல்லும் பார்ப்பனச் சாதியைக் குறிக்கின்றன.

'சாதி இரண்டொழிய வேறில்லை' என்று அவ்வையார் கூறியதுபோல் திருக்குறள் சாதிப்பாகுபாட்டை எதிர்க்கவில்லை. ஆகவே திருவள்ளுவர் அதை ஏற்றுக் கொண்டார் அல்லது பொறுத்துக்கொண்டார் என்று கொள்வதில் தவறில்லை, இது தற்காலச் சிந்தனைக்கு முரண் பட்டதாகும்.

இந்த சந்தர்ப்பத்தில் சைவஉணவு வாழ்க்கை முறைபற்றிச் சிலவார்த்தைகள். மனித இனம் தன் தொடக்ககாலத்தில் பச்சை இறைச்சியும் காய்கனிகளும் உண்டு வாழ்ந்தது. நெருப்பு கண்டுபிடிக்கப்பட்ட பின் இறைச்சியைப் பக்குவப்படுத்தி உண்ணப்பழகியது. வேத காலத்தில் அந்தணர்கள் கூட இறைச்சியுண் பவர்களாக இருந்தமை போன்றவற்றை அறிகிறோம். பிற்காலத்தில் பௌத்த, சமணசமயங்களில் குறிப்பாக, சமணத்தின் தாக்கத்தால் பழைய மதத்தைச் சேர்ந்தவர்கள் தங்களைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. அப்போது சமயகுருக்களாக விளங்கிய அந்தணர்கள் தாங்களும் அசைவ உணவைத் தவிர்த்துச் சைவ உணவு முறையை மேற்கொண்டனர். அதனால் தான் திருவள்ளுவர் அந்தணரை 'அறவோர்' என்று போற்றுகிறார்.

சைவ உணவு வாழ்க்கை முறை மனித இனத்தின் பரிணாம வளர்ச்சியில் ஓர் உயர் நிலை என்பதை அசைவ உணவு உண்பவர்களும் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆகவேதான் அவர்கள் நோன்புக்காலத்தில் அசைவ உணவைத் தவிர்க்கிறார்கள். தற்கால ஆய்வாளர்களும் சைவ உணவு முறையைப் பாராட்டுகிறார்கள். எனினும் இந்த வாழ்க்கைமுறை மனித இனம் முழுவதுக்கும் பொதுவாக அமைவது சாத்தியமில்லை. இந்த நோக்கில் 'கொல்லாமை', 'புலால் மறுத்தல்' பற்றிய திருக்குறள் கருத்துகள் தற்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் பொருந்துவன அல்ல.

''திருக்குறள் எல்லாக் காலத்துக்கும் பொருந்தும்'' என்று மேடைகளில் முழங்கி விட்டுப் பிறகு பிரியாணி ஒட்டலில் நுழைபவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள்.

திருவள்ளுவர் முன்பிறப்பில் நம்பிக்கை யுள்ளவர். எனவே ஊழின் வலிமையை நம்புபவர்.

அவரது இந்த நம்பிக்கை 'ஊழ்' அதிகாரத்தில் அழுத்தமாக வெளிப்படுகிறது. 'ஆள்வினை உடைமை' என்ற அதிகாரத்தில் (குறள் 619, 620) அவர் முயற்சியால் ஊழையும் வெல்லலாம் என்று கூறினாலும் அக்கூற்று மனிதமுயற்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காகவேயன்றி ஊழின் வலிமையை மறக்க அல்ல.

'அறத்தாறிதுவென வேண்டா' என்று தொடங்கும் குறளில் (குறள் 37) திருவள்ளுவர் முன்வினைப் பயனையே குறிப்பிடுகிறார் என்பது பரிமேலழகர் கருத்து. ஆனால் இக்கருத்தை ஏற்க விரும்பாத தற்கால உரையாசிரியர்கள் இக்காலத்துக்குப் பொருந்தும் வகையில் இக்குறளுக்குப் பொருள்காண முயல்கிறார்கள்.

உரையாசிரியர்கள் ஓர் இலக்கியப் படைப்புக்குப் பல்வகை விளக்கங்கள் தந்து அதன் இலக்கியச் சுவையைக் கூட்டுகிறார்கள். இத் தகைய விளக்கங்கள் படைப்பாளிக்கே தோன்றி யிருக்க வாய்ப்பில்லா விடினும் நம்மால் இவற்றை ரசிக்கமுடிகிறது. ஆனால் திருக்குறள் முதற்கண் ஓர் அறநூல். இத்தகைய நூலில் ஆசிரியர் தெளிவாக வெளியிட்டுள்ள கருத்துக்கு மாறுபட்ட விளக்கத்தை வலிந்து தருவது ஏற்புடைத்தா என்பது சிந்திக்கத்தக்கது.

முன்பிறவி, ஊழ்வலி ஆகியவை பற்றித் திருக்குறள் கருத்துகள் இக்காலத்துக்குப் பொருந்தா என்பதைச் சொல்லத்தேவையில்லை.

இத்தகைய இன்னொரு பொருந்தாக் கருத்து பெண்மை பற்றியதாகும். திருவள்ளுவர் பெண்ணைக் குடும்பப்பெண் அல்லது இல்லாள் என்ற நோக்கில் தான் பார்க்கிறார், பாராட்டுகிறார். அதாவது பெண் என்பவள் குடும்பத்தின் ஓர் உறுப்பு மட்டுமே. அவளது இடம் ஆணுக்கு அடுத்த படிதான். ஆணின் தொடர்பின்றி பெண்ணுக்கு ஒரு தனி ஆளுமை உண்டென்றோ, ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை உண்டென்றோ திருவள்ளுவர் கருதவில்லை. மாறாக அவர் 'பெண்வழிச்சேறல்' என்ற அதிகாரத்தில் மனைவிக்கு அடங்கி நடக்கும் கணவனை ஏசுகிறார்.

கற்பு விஷயத்திலும் திருவள்ளுவரின் கருத்து தற்காலத்துக்குப் பொருந்துவதல்ல, 'பிறனில் விழையாமை'யை அவர் போற்றுகிறார், வரைவின் மகளிரைச் சாடுகிறார். எனினும் கற்ற இருபாலருக்கும் பொருந்தும் என்று எங்கும் கூறவில்லை. கற்பு என்பது பெண்ணுக்கே உரியது என்ற குறிப்பு அவனது 'வாழ்க்கைத் துணைநலம்' அதிகாரத்தில் வெளிப்படுகிறது.

திருக்குறளின் பெருமையை வானளாவிப் பாராட்ட விரும்புவோருக்கு மிகவும் சங்கட அளிக்கும் குறள் இது.

தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை (55)

தெய்வத்தைத் தொழாமல் கணவனையே தொழும் பெண்ணுக்கு மழையை வருவிக்கும் திறன் கூட இருப்பதாக நம்புகிறார் திருவள்ளுவர். இக்கருத்து இப்போது பொருந்தாதுதான். ஆகவே தற்கால உரையாசிரியர்கள் 'கடவுளுக்குப் பதிலாகக் கணவனையே தொழும் பத்தினி உரிய காலத்தில் பெய்யும் மழை போன்றவள்' என்று விளக்கம் தந்து சமாளிக்கிறார்கள். இந்த விளக்கம் குறளின் இலக்கியச் சுவையைக் கூட்டலாம். எனினும் இது வலிந்து தரப்படும் விளக்கம் என்பது தெளிவு.

ஆகவே திருவள்ளுவராலும் தம்சமகால சமூகத்தின் தாக்கத்தைத் தவிர்க்க இயலவில்லை, ஆகவே இக்காலத்துக்குப் பொருந்தாத சில கருத்துகள் அவரது நூலில் இடம் பெற்றுவிட்டன என்று தெரிகிறது. இந்த உண்மையை ஏற்றுக் கொண்டே நாம் திருக்குறளையும் திருவள்ளு வரையும் பாராட்ட வேண்டும்.

எண்ணும் எழுத்தும்

ந. சுப்புரெட்டியார்

திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தின் முன்னைத் தமிழ்ப் பேராசிரியர். இதுவரை இவர் எழுதியிருக்கும் நூல்களின் எண்ணிக்கை நூற்றுக்கு மேல். மதுகாப் பல்கலைக்கழகம் அண்மையில் அவருக்கு டி.லிட் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தது. தமிழக அரசின் திரு.விக விருது பெற்றவர். தாம் ஈட்டிய பொருளில் ஏறத்தாழ ஒரு இலட்சம் ரூபாய்களைக் கொண்டு பல்கலைக் கழகங்களில் இவர் அறக்கட்டளை நிறுவியுள்ளார். பிறப்பால் சைவர், எனினும் வைணவ இலக்கியத்தின் ஆழம் கண்டவர்.

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்பது ஔவைப்பாட்டியின் அருள்வாக்கு' இது,

எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு (392)

என்ற 'கல்வி' தலைப்பில் வரும் குறளினின்றும் பிறந்தது. ஈண்டு உயிர்க்கு எண், எழுத்து ஆகிய இரண்டும் இன்றியமையாதவை என்று வற்புறுத்தப் பெறுகின்றது. இவை இரண்டிலும் 'எண்' முதலில் குறிப்பிடப் பெற்றிருப்பதால் அதன் அருமை மேலும் வற்புறுத்தப் பெறுகின்றது.

அன்றாட வாழ்வில்

அன்றாட வாழ்வில் எண்தான் முதலிடம் பெறுகின்றது. அதனால் தான் அதற்கு முதலிடம் அளித்து வள்ளுவர் முதலாவதாகக் குறிப்பிட்டார் என்று கருதலாம். குறளில் அதிகார எண்கள், பேருந்து எண்கள், காவலர்கள் எண்கள், பள்ளி கல்லூரிகளில் மாணாக்கர்கள் எண்கள், வங்கி கணக்கு எண்கள், வீட்டு எண்கள், வருமான வரிக்கணக்கு எண்கள், தெருப்பெயரின் எண்கள் போன்றவற்றில் ஆட்கள் இடங்கள் இவற்றின் பெயர்களை விட எண்களே முதலாவதாக இடம் பெறுகின்றன. கற்றவர்கள் கல்லாதவர்கள் உட்பட பாரிமுனை, அண்ணாசதுக்கம், அடையாறு முதலான இடங்களைக் குறிப்பிடாமல் பேருந்து எண்களையே சொல்லிவினவுகின்றனர். இங்கெல்லாம் பெயர்களை விட எண்களே முதலிடம் பெறுகின்றன என்பதை அறிகின்றோம். வங்கிகளிலும் பெயர்களைவிட எண்களையே கூறுமாறு கேட்கின்றனர். ஆகவே, எல்லாவற்றிலும் பெயர்களை விட எண்களே சிறப்பிடம் பெறுவதைக் காண முடிகின்றது.

எண்ணின் சிறப்பு

ஈண்டு ஒன்று முதல் தொடங்கிவரும் எண்கள் சிறப்பிடம் பெறுவதை நோக்குவோம்.

ஒன்று: கடவுள் ஒருவர் 'ஒன்றோ எண்ணின் ஒன்றேயாம்' என்பது கம்பன் வாக்கு.

இரண்டு: துவைதம், இது வைணவ தத்து வங்களில் ஒன்று. துவைதம் இரண்டு. இரட்டை மணிமாலை.

மூன்று: மும்மூர்த்திகள் - நான்முகன், சிவன், திருமால், மும்மலங்கள் - ஆணவம், கன்மம், மாயை பதி, பசு, பாசம் சைவதத்துவம். சித்து, அசித்து, ஈசுவரன் வைணவ தத்துவம்; முத்திநிலைகள்-

சாலோகம், சாமீபம், சாரூபம்; இறைவன் நிலைகள்- . அருவம், உருவம்; அருவுருவம் (சைவம்). மூவகைக்காரணங்கள்- முதற்காரணம், துணைக் காரணம், நிமித்த காரணம் திருமந்திரம், துவையம், சரமசுலோகம் (வைணவம்) மும்மணிக் கோவை.

நான்கு: நால்வர் - சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர். நான்மறை - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம், நால்வகை நெறிகள் - அடிமை நெறி, மகன்மைநெறி, தோழமைநெறி, நன்னெறி (சைவம்); சரியை, கிரியை, யோகம், ஞானம் (சைவம்); அறம், பொருள், இன்பம் வீடு (குறிக்கோள்) என்பவை. நான்மணிமாலை.

ஐந்து: ஐந்தெழுத்து மந்திரம் (சிவாய நம), பஞ்ச பாண்டவர்கள், பஞ்சசமஸ்காரம் (தாபம், புண்ட்ரம், நாமம், மந்திரம், நாயகம்), ஐம்பொறிகள், ஐம்புலன்கள், கன்மேந்திரியங்கள், ஞானேந் திரியங்கள், ஐம்பெரும் பூதங்கள், ஐம்பெருங்குழு, பஞ்சலிங்கம் (கரணம், திதி, நட்சத்திரம், யோகம், வாரம் என்ற ஐந்தினை விளக்கும் நூல்), பஞ்சவேள்விகள் (தேவ, பூத, பிதுர், நர, பிரமம் வேள்விகள்), பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை இறைவன் நிலைகள் (வைணவம்).

ஆறு: அறுசுவை (இனிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, கைப்பு, துவர்ப்பு, புளிப்பு); சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என சமயங்கள்; காமம், குரோதம், மதம், மோகம், உலோபம், மார்ச்சரியம் என்ற பகைகள்; மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுபடை என்று சுறுவகைப் படை; முருகனது ஆறு படைவீடுகள் ஆறுமுகம்.

ஏழு: ஏழுமலையான் ஏழுகுலபர்வதங்கள்: இமயம், மந்தரம், கைலாயம் வடவிந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி; பூ , புவ, சுவ, மக, ஐந, தப, சத்திய மேல் ஏழு உலகங்கள்; அதல, விதல, சுதல, நிதல,தராதல, ரசாதல, மகாதல கீழ் ஏழு உலகங்கள்; . சப்தரிஷிகள்; அத்திரரி, வசிட்டார்; காசியர், கௌதம், பரத்வாசர், விசுவாமித்திரர், சமதக்கினி என்பவர்கள். சப்த தாண்டவம்: ஆனந்தத் தாண்டவம், சந்தியா தாண்டவம், கௌரி தாண்டவம், திரிபுரதாண்டம், முனிவர் பொருட்டு நடித்ததாண்டவம், சங்காரத் தாண்டவம் என்பன. ஏழுதீவுகள்: சம்பு, பிலட்சம்,குசம், கிரௌஞ்சம், சாகம், சான்மலி, புட்கரம் என்பன. ஏழுநரகங்கள்; அள்ளல், இரௌரவம், கும்பிபாகம், கூடாசலம், செந்துத்தானம், பூதி, மாபூதி என்பன. ஏழுநாகங்கள்: தக்மன், காமன், காலன், வசு, வாசுகி, அனந்தன், கபிலன் என்பன. ஏழுநகரங்கள்; அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்பன. ஏழுமேகங்கள்; சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவரத்தம், சங்காரித்தம், துரோணம்; காளமுகி, நீலவருணம் என்பன. சப்த வடங்க தலம் திருவாரூர், திருநாகைக் காரோணம், திருநள்ளாறு, திருமறைக்காடு, திருக்காறாயல், திருவாய்மூர், திருக்குவளை என்பன.

எட்டு: எட்டெழுத்து மந்திரம் (ஓம் நமோ நாராயணாய). எட்டுகுல பர்வதங்கள்: இமயம், மந்தரம், கைலாயம், விந்தியம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம் என்பன. எட்டுத்திக்கு: கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு என்பன. எட்டுத்திக்குப் பாலகர்கள்: இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பவர்கள். எட்டுவசுக்கள் ஆனலன், அணிலன், ஆபத்தசைவன், சோமன், தரன், துருவன், பிரத்யூஷன், பிரபாசன் ஆகியோர். எண்வகை சித்திகள் (அட்டமாசித்தி): அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன. எட்டுயானைகள் (அட்டதிக்கஜம்): ஐராவதம், புண்டரிகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்ரதீபம் என்பன. எட்டுத்தொகை (நூல்கள்). எண்சுவை: நகை அழுகை, இளிவால், மருட்கை,

அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பன. எண்பேராயம்: காணத்தியலவர், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானைவீரர், இவுளிமாந்தர் என்பவர்கள் எண்சுவடி.

ஒன்பது: ஒன்பதுவாசல் - உடலிலுள்ள ஒன்பது துவாரங்கள் ஒன்பது கோள்கள் (நவக்கிரகங்கள்). நவரசங்கள்: சிருங்காரம், கருணம், வீரம், ரௌத்திரம், ஹாஸ்யம் பயானகம், பீபத்சம், அற்புதம், சாந்தம் ஆகியவை, நவவித சம்பந்தம்: தந்தை, தனயன், இரட்சிப்பவன், இரட்சிக்கப் படுபவன்; அடிமை , அடிமை கொள்பவன், நாயக - நாயகி, சொத்துக்குரியவன், சொத்து, அறிபவன், அறியப்படுபவன், சரீரம், சரீரத்தை உடையவன், தாங்குகிறவன், தாங்கப்படும் பொருள், போகத்தை அனுபவிப்பவன், போகப்பொருள், என்ற உறவுகள். நவமணிகள் (இரத்தினங்கள்): கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைரம், வைடூரியம் என்பன. நவமணிமாலை. வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற நான்கு வகைப்பாக்களும், தாழிசை, துறை, விருத்தம் என்ற மூவகைப் பாவினங்களும் கலந்து ஒன்பது பாட்டுகள் பொருந்திய வகையினையுடையது.

பத்து: பதிகம், தசகம் பத்துப் பாடல்களைக் கொண்டது. பதிற்றுப்பத்து (நூல்), பத்துப்பாட்டு (நூல்) பத்து பத்துப்பதிகங்களையுடைய ஒருபகுதி (திருவாய்மொழி, திருமொழி).

பதினொன்று: ஏகாதச உருத்திரர்கள். பதினொரு உருத்திரர்கள், ஏகாதசி, பதினொன்றாம் திதி.

பன்னிரண்டு: ஆழ்வார்கள் பன்னிருவர். பன்னிரண்டு தாரு முறைகள். பன்னிரண்டுலக்கனம்.

பதிநான்கு: பதிநான்கு சாத்திரங்கள்: திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறிவிளகம், சங்கற்ப நிவாகரணம் ஆகியவை. பதிநான்கு உலகங்கள்.

பதினாறு: மார்க்கண்டன் வயது. பதினாறு பேறுகள்: மாடு (செல்வம்), மனை, மனைவி, மக்கள், கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், நிலம், நீர், வயது, வாகனம், பொன்பொருள், போகம், புகழ் என்பன.

'கலையாத கல்வியும்' என்று தொடங்கும் அபிராமி அந்தாதிப்பாட்டில் இவை குறிப்பிடப் பெற்றுள்ளன.

பதினெட்டு: ஆடிப்பதினெட்டு பகவத்கீதையில் 18 அத்தியாயங்கள். பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், பதினெண் சித்தர்கள். பதினெண் கணத்தவர்: அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசியர், போகபூமியர் ஆகியோர்.

இருபது: இருபா இருபஃது முன்னர் வெண்பாவையும், பின்னர் ஆசிரியப்பாவையும், முறையாகவைத்து அவை ஒன்றோடொன்று சொல் சொல் தொடர் நிலை நீங்காத வகையில் பாடப் பெறுவது.

இருபத்தைந்து: வெள்ளிவிழா ஆண்டு விழா கொண்டாடப் பெறும். திருக்குறள் இன்பத்துப்பால் அதிகாரம் இருபத்தைந்து.

இருபத்தாறு: வைணவ தத்துவம், மனம், மெய், வாய், கண், செவி, மூக்கு என ஞானேந்திரியங்கள் 6; வாக்கு, கால், கை எருவாய், கருவாய் என்றகன் மேந்திரியங்கள் 5; தன்மாத்திரைகள் 5; பிருதிவி, அப்பு, தேயு, வாயு ஆகாயம் என்னும் பூதங்கள் 5; பிரகிருதி மகாக், ஆங்காரம் என மூன்று. ஆகமிச்ரதத்துவம் இருபத்து நான்கு; ஆன்மா ஒன்று, பரமான்மா ஒன்று, ஆக வைணவ தத்துவம் இருபத்தாறு.

முப்பத்தாறு: உலகம் முப்பத்தாறு தத்துவங்களாலானது (சைவம்). ஆன்ம தத்துவம் 24; வித்யாதத்துவம் 7; சிவதத்துவம் 5, ஆக இவை முப்பத்தாறு.

ஐம்பது: பொன்விழா ஆண்டு

அறுபது: மணிவிழா ஆண்டு

அறுபத்து மூன்று: நாயன்மார்களின் தொகை

அறுபத்து நான்கு: சிவ பெருமானின் திருவிளையாடல்களின் தொகை.

எழுபது: முத்து விழா ஆண்டு.

எழுபத்தைந்து: பவளவிழா ஆண்டு

எண்பது: சதாபிஷேக ஆண்டு

தொண்ணூற்றாறு: தத்துவங்கள் 36; தாத்துவிகங்கள் 60; பிரபந்த வகைகள் 96.

நூறு: சதகம் நூறு பாடல்களைக் கொண்டது. இலக்கியங்கள் பொதுவாக நூறுபாடல்களால் அமையும்.

நூற்று எட்டு: ஆழ்வார்களால் மங்களாசாசனம் பெற்ற திருத்தலங்களின் எண்ணிக்கை.

இருநூற்று முப்பத்தேழு: தேவாரவைப்புத் தலங்களின் தொகை

இருநூற்று எழுப்பத்து நான்கு: தேவாரப் பாடல்கள் பெற்ற திருத்தலங்களின் எண்ணிக்கை.

நானூறு: குறந்தொகை, நற்றிணை, அகம், புறம் இவை 400 பாடல்களைக் கொண்டவை. கோவை நூல்களும் 400 பாடல்களாலாக்கப் பெற்றவை.

ஐந்நூறு ஐங்குறுநூறு: 500 பாடல்களைக் கொண்டவை.

ஆயிரத்தெட்டு: இறைவனின் திருநாமங்கள்.

இவற்றுள் விடுபட்டவை சில இருக்கும். இங்ஙனம் எண்களைச் சொன்னாலே போதும். அவைகுறிக்கும் பொருள்கள் உடனே மனத்திற்குத் தட்டுப்படும். இதனால் வள்ளுவப்பெருந்தகை எண்ணுக்கு முதல் இடம் கொடுத்தூர் என்பது துணியப்படும்; தெளியவும்படும்.

அரங்கநாத முதலியார் செய்த திருக்குறள் மொழிபெயர்ப்பு பற்றி

The translation of Kural is no easy undertaking, This masterpiece of Thiruvalluvar owes its greatness not only to its sublime and wonderful thoughts but also to its epigrammatic and poetic form. Unique in thought and form it is a work that can be best appreciated only when read in original; but it is such a treasure house of truths and morals that it is necessary to bring it with, in the reach of the world at large, Tamil and non - Tamil. With this view several translations have been attempted in the past with varying degrees of success. Mr. A. Ranganatha Mudaliar, in his retirement, has also undertaken this laudable able and difficult work. I have gone through his translation though yet only superficially, and I hope to be able soon to devote more attention to it. He must be congratulated on the result of his labours. He has brought out, as best as any translation can, the true spirit of the originial and has not produced a mere translation of its language. I commend his work to the attention of the public.

Diwan Bhadur S. Kumaraswamy Reddiar

திருவள்ளுவரின் மருத்துவக் கோட்பாடு

இரா. கலைக்கோவன்

தொழிலால் கண் மருத்துவர்: ஆர்வத்தால் வரலாற்றுத் துறையில் தடம் பதித்தவர். இலக்கியம், வரலாறு, கல்வெட்டியல், கோயிற்கலை போன்ற துறைகளில் ஆராய்ந்து புதிய முடிவுகளைக் கண்ட பேரறிஞர், தமிழிலும் எம்.ஏ., பி.எச்.டி., போன்ற பட்டங்களைப் பெற்றவர். எல்லாவற்றிற்கும் மேலாக இவர் தமிழறிஞர் டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் திருமகனார். இதுவரை ஐந்து ஆராய்ச்சி நூல்களை எழுதியுள்ளார். இவரது ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெறாத ஏடுகளே தமிழில் இல்லை எனலாம்.

மருத்துவம் இன்றைக்கு வெகுவாக முன்னேறியிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. நோய்களைப் பற்றிய அறிவும், அந்நோய்களுக்கான காரணிகளைப் பற்றிய தெளிவும், அவற்றை வெல்லக்கூடிய வழி களைப்பற்றிய தொடர்ந்த ஆய்வுப் போக்குகளும், அவை வழிவளரும் நலப்படுத்தும் திறனும் என மருத்துவத்துறை இன்று கற்பனையில் எண்ணிப் பார்க்க முடியாத வளர்ச்சியைப் பெற்று, சிகரத்தை நோக்கிச் சாதனைகளைப் படைத்துக் கொண்டிருக் கிறது.

இப்படி இமயமாய் வளர்ந்து கொண்டிருக் கும் மருத்துவத் துறையின் இன்றைய அடிப்படைக் கொள்கைகளில் சில, இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன் வாழ்ந்த தமிழறிஞர் ஒருவரின் சிந்தனையிலும் தோன்றியிருப்பதைப் பார்க்கும் போது வியக்காமலும் மலைக்காமலும் இருக்க முடியவில்லை.

துன்றதுறையாய்ச் சிந்தித்து மனிதன் நெறியோடு வாழ்வதற்கு வழிகாட்டிய வள்ளுவப் பெருந்தகை, மனிதனின் நலவாழ்வையும் கருத்தோடு எண்ணிப் பார்த்திருக்கிறார். அதற்கென்று 'மருந்து' என ஓர் அதிகாரமே தனியாகத் தந்தபோதிலும், பல அதிகாரங்களில் ஆங்காங்கே இந்நலவாழ்வுக் கோட்பாடுகளைப் பொதிந்து வைத்திருக்கிறார். இன்றைக்கு அரசும், சமுதாய நலம் நாடும் சேவை நிறுவனங்களும் செய்து கொண்டிருக்கும் அல்லது செய்ய நினைத்திருக்கும் முயற்சிகளைக் கூட அம் மாமனிதர் தம் குறட்பாக்களில், நலவாழ்வே குறியாய்க் கொண்டு நயந்து காட்டியிருக்கிறார். அவற்றுள் ஒன்றுதான்,

நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

என்னும் குறள்.

இது மருந்து அதிகாரத்தின் எட்டாவது குறளாக அமைந்துள்ளது. இன்றைக்கு மருத்துவக் கல்லூரிகளில் வழங்கப்படும் மருத்துவக் கல்வியின் அடிப்படைக் கோட்பாடுகளை, இந்த இரண்டு வரிகளில் புடம் போட்டு வைத்திருக் கிறார் திருவள்ளுவர். இவ்வரிகளில் வந்து விழுந்திருக்கும் ஒவ்வொரு சொல்லும், அழுத்தமும் ஆழமுமான பொருள் பொதிந்த சொல்லாகும்.

'நோய்நாடி' என்ற சொற்றொடரை முதலில் பார்ப்போம். மருத்துவத்துறையில் நோய் நாடுதல் இன்றைக்கும் தலையாய கோட்பாடாகவே மதிக்கப்படுகிறது. மருத்துவமனையைத் தேடிவரும் நோயாளியிடம், அவனுக்கு வந்திருக்கும் நோய் எத்தகையது, அது தோன்றி, வெளிப்பட்டு, முற்றிய வரலாறு, அந்நோய் அம்மனிதனின் உள்ளிலும் புறத்திலும் உண்டாக்கியிருக்கும் மாறுபாடுகள் ஆகியவற்றைத்தான் ஒரு மருத்துவன் முதற்கண் காணல் வேண்டுமென மருத்துவநூல்கள் இன்றைக்கும் மன்றாடி வேணடிக்கொள்கின்றன. பொதுஆய்வு என்னும் தலைப்பின் கீழ் அந்நோய் அவனை ஆட்கொண்ட முழு விவரமும் பெறப்படு கிறது. இது இரண்டாம் நிலை.

மூன்றாவது நிலையாக அம்மனிதன் சொல்லும் நோய்ச் செய்திகளின் அடிப்படையில், சில கேள்விகளின் மூலம் மருத்துவர் அந்நோயைத் தெரிந்து தெளிகிறார். பொதுஆய்வு, நோய் வரலாறு, நோய் வெளிப்பாடுகள் என்னும் இம்மூன்றும் வள்ளுவரின் இரண்டு சொற்களில் அழகாய் அடைக்கலம் புகுவதைப் பார்க்கிறோம்.

அடுத்துவரும் சொற்களாக, 'நோய் முதல்நாடி' என்னும் மூன்று சொற்கள் அமைகின்றன. வளர்ச்சியடைந்து விரிந்து பரந்திருக்கும் மருத்துவ உலகில், இன்றைக்கும் 'முதல் நாடுதல்' தலையாய கடமையாகும்.

நோய் முதல் அறியாத மருத்துவரால் நோயைக்களையும் மருத்துவத்தைச் செய்ய முடியாது. உயிர் வேதியியல், நுண்ணுயிரியல் நுண்மியியல், நோய் இயங்கியல் என்னும் நான்கு பெரும் மருத்துவத் துறைகளும் நோய்முதல் நாடலுக்காகவே செயற்படுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்தத் துறைகளோ, இவற்றின் செயற்பாடுகளோ இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் இந்தத் துறைகளின் தேவை, 'காரணியைக் காண வேண்டும்', என்ற நிலையில் கருதப்பட்டிருக்கிறது. இவற்றின் முதற் படிகளை மனித மனம் கண்டு, வளர்ச்சி நிலை களை எண்ணிப் பார்த்து, இவற்றின் முக்கியத்து வத்தைப் பெரிதும் உணர்த்திருக்கிறது என்பதைத் தான் வள்ளுவரின், 'நோய் முதல் நாடி' நமக்கு உணர்த்துகிறது. கிரேக்க ஞானி ஹிப்போ கிரேட்டஸின் மருத்துவச் சிந்தனைகளை வள்ளுவம் இந்நிலைகளில் பெரிதும் ஒத்துப் போகிறது.

தொண்ணூறுகளில் இணையற்ற வளர்ச்சி கண்டிருக்கும் ஆய்வுக்கூட நெறிகள், கருவிகள் இவையும் கூட நோய் முதல் நாடுதலில் அடைக் கலமாகிவிடும். இதய மின்னலை வரை படம், எக்ஸ் கதிர்ப்படம், மூளை மின்னலை வரைபடம் என்று தொடங்கி ஸ்கேன் வரையிலும் வந்திருக்கும் அத்தனைக் கருவிகளும், மனிதனின் நோய்க் காரணம் காணவே பயன்படுகின்றன என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. முயற்சிகள் பெருகியிருக் கின்றன உண்மைதான்; முறைகள் வளர்ந்திருக் கின்றன; யாரும் மறுக்கவில்லை. ஆனால் அடிப்படைக் கொள்கை மாறவேயில்லை. இன்னும் சொல்லப்போனால் அந்தக் கொள்கையின் பரந்து பட்ட பரிணாம வளர்ச்சியே இன்றைய அறிவியல் முதிர்ச்சி.

முடிப்பு வரியில் வள்ளுவர் காட்டும் வழி, 'அது தணிக்கும் வாய்நாடி' என்பதாகும். 'அது தணிக்கும் மருந்து நாடி' என்று அப்பெருமகனார் கூறவில்லை. 'வாய்நாடி' என்றுதான் சொல்கிறார். எத்தனை தெளிவான சிந்தனை. எவ்வளவு உயர்வான முன்னோக்கு! நோய்முதல் நாடிய பின், அது தனிக்கும் வாய் நாடல் வேண்டும். இன்றைக்கும் அப்படித்தான்! ஆய்வுக்கூட அறிக்கைகள், கருவி வழி விளக்கப் படங்கள் கிடைத்ததும் மருத்துவர் அந்நோயைத் தீர்க்கும் முறைகளைச் சிந்தித்து முடிவுக்கு வருகிறார்.

தொற்று நோய்களுக்கு முனைப்பான மருத்துவம் தேவை. நாள்பட்ட நோய்களுக்குத்

தொடர்ந்த மருத்துவம் இன்றிமையாதது. சில நேரங்களில் மருத்துவம், மருந்து மாத்திரை களுடன் நிற்கும். சில நேரங்களில் ஊசிகள், அறுவை எனத் தொடரும். உடற்பயிற்சி, உணவுக் கட்டுப்பாடு கூட சில நோய்களுக்கு மருத்துவ முறைகளாகும். இரத்த உயர் அழுத்த நிலையில் உணர்வுக் கட்டுப்பாடு, அமைதி காணல் என்பன அறிவுறுத்தப்படுகின்றன. 'வாய்நாடல்' இதுபோல் பல்நோக்குடையதாய் அமைகிறது. மருத்துவம் வளர்ச்சி நிலைகளைக் கண்டு, பல்கிப் பெருகிவிடும் என்பதை அந்நாளிலேயே வள்ளுவர் உணர்த்திருந்தாரோ என்று கூட நினைக்கத் தோன்றுகிறது. இல்லையென்றால் மிகச் சுருக்க மான மருத்துவ முறைகளே அமைந்திருந்த இரண்டாம் நூற்றாண்டில், எப்படி இப்படியொரு முன்னோக்கும் சிந்தனை தோன்றியிருக்க முடியும்.

குறளை முடிக்கிறார், 'வாய்ப்பச் செயலென்று' கூறி, நோய் நாடி, நோயின் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடிய பிறகும் கூட, மருத்துவர், அவர் விருப்பம் போல் மருத்துவம் செய்துவிடக் கூடாதாம், வாய்ப்பச் செய்ய வேண்டுமாம். எத்தனை பொதிந்த சொற்கள். 'வாய்ப்ப' என்பது நோயாளியைச் சுட்டுகிறது; நோயையும் சுட்டுகிறது. நோயாளிக்கும், நோய்க்கும் ஏற்ப மருத்துவம் அமைய வேண்டும். தனியர்களைப் பொறுத்து மருத்துவ முறைகள் மாறுபடுகின்றன. சிலருக்கு ஊசியென்றாலே அச்சம். அவர்களை ஊசியைக் காட்டி அச்சுறுத்துவது தேவையற்றது. மாத்திரை களினாலேயே முயலலாம். அவசியம் தேவை என்ற நிலையில் மட்டுமே ஊசிகள் வேண்டும். அதுபோலவே ஒவ்வாமை; பலருக்கும் பல பொருள்களுக்கு ஒவ்வாமை உண்டு, பெனிசிலின் ஒவ்வாமை, சல்பா ஒவ்வாமை என்று மருந்து களுக்கு ஒவ்வாமை மட்டுமல்ல, சிலருக்கு ஊசி போட்டால், ஊசி போட்ட இடம் சிவந்து விடும். இது ஊசியிலுள்ள உலோகத்துக்கு மனித உடல் காட்டும் ஒவ்வாமை வெளிப்பாடாகும். போட்ட ஊசியை எடுப்பதற்கு முன்பே, மருந்து ஒவ்வாமையால் இறந்தவர்கள் உண்டு. அதனால்தான் வள்ளுவர் மிகமிக எச்சரிக்கையாக, 'வாய்ப்பச் செயல்' என்று அறிவுறுத்துகிறார். அதே நேரம் நோயாளியின் நோய்க்குத் தக்கவாறும் மருத்துவம் அமைய வேண்டும். நோயாளியின் நோய்க்கு அறுவைதான் மருத்துவமென்றால், அவர் அஞ்சுகிறார் என்பதற்காகச் செய்யாமல் விட்டுவிடக்கூடாது. அவருக்கு அறுவையின் தேவையை எடுத்துக்கூறி, விளங்கச்செய்து, துணிவூட்டி அறுவைக்கு அவரை ஒப்புக் கொள்ளுமாறு செய்து நோய் தீர்க்க வேண்டும். 'வாய்ப்பச் செயல்' இதுதான்.

வள்ளுவரின் நோய்நாடி எனத் தொடங்கும் இந்தக் குறட்பா ஒவ்வொரு மருத்துவ மனையிலும் இடம்பெற வேண்டும். அப்போதுதான் தமிழ்மண்ணின் மருத்துவச் சிந்தனைகள் எத்தகு சிறப்புக்குரியன, எந்த அளவிற்கு முன்னோக்குத் தன்மையுடைவை என்பது அனைவர்க்கும் விளங்கும்.

டி.எஸ். ராமலிங்கம் பிள்ளையின் மொழிபெயர்ப்புப் பற்றி

Thiru T.S. Ramalingam Pillai is the former Law Secretary to the Govt. of Tamil Nadu and had also been a member of the Legal Terms Commission Constituted by Govt of India. So, in all respect he is apt to translae Tirukkural. He has long been indulged in the study of Tirukkural, which resulted in bringing out this translation and he has done it well.

திருக்குறளும் காந்தீயமும்

கு. தனபாலன்

உலகின்கண் கோடிக்கணக்கான உயிரினங்கள் உள்ளன. அத்தனையிலும் மனிதப் பிறவியே உயர்ந்தது என்று ஆன்றோர்கள் கூறியுள்ளனர்."அரிதரிது மானுடராய்ப் பிறத்தல் அரிது" என்றாள் ஔவை மூதாட்டி.

அவ்வாறு அவர்கள் கூறுவதற்குக் காரணத்தை நாம் எண்ணி ஆராய வேண்டும். மனிதன் தன்னுடைய அறிவு மேம்பாட்டைக் கொண்டு மற்றைய உயிரினங்களை வென்று இன்புற முடியும் என்பதால் அப்படிக் கூறவில்லை. வாழ்வின் குறிக்கோளாகிய உறுதிப் பொருள்களை இவனால்தான் அடைய முடியும் என்ற காரணத்தினாலேயே அவ்வாறு சான்றோர் கூறினர்.

'வீடு' அடைதலே வாழ்வின் பயன், வீடு என்பது 'சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து' ஆதலின் அதை அடையும் வழியை மட்டும் நமக்கு நம்முடைய பெரியோர்கள் காட்டியுள்ளனர். உறுதிப் பொருள்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினுள் அறமே தலையாயது. அறமே இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றையும் பயக்க வல்லது. இதைப் புரிந்து கொண்டு வாழ்ந்தால் இம்மையில் 'இசைபட வாழ்தல்' முடிவில் வீடு பேறு ஆகிய இரண்டு இன்பங்களையும் அடையலாம். இதனைக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் தசரதன் கூற்றாக வைத்துக் கூறுகிறார். தன்னுடைய அரசவையில் குலகுரு வசிட்டர், மந்திரி சுமந்திரன் முதலியோர் உள்ளிட்டவர்களிடம் வேண்டிக் கொள்ளும் பொழுது,

இம்மையின் உதவி, நல் இசை நடாய நீர்
அம்மையும் உதவுதற்கு அமைய வேண்டுமால்

என்று கூறுகிறான். இதிலிருந்து புகழ் இம்மைப் பயன் என்பதும் வீடு மறுமைப் பயன் என்பதும் நூற் கொள்கை என்று அறிகிறோம். இதையே திருக்குறளும் 'நத்தம் போல் கேடு' என்றும் 'நிலமிசை நீடு வாழ்வார்' என்றும் கூறுகிறது.

நம்முடைய பெரியோர்கள் காட்டிச் சென்ற இந்த வழியில் நின்று புகழையும் வீடு பேற்றையும் அடைந்த ஆன்றோர்களில் நாம் கண்கூடாகக் கண்டவர் மகாத்மா காந்தியடிகளே ஆவார். அவருக்கு முன்னர் வாழ்ந்த அடியார்களைப் பற்றி நூல்களில் நாம் படிக்கிறோம். ஆனால் அவர்கள் 'செயற்கரிய செய்த பெரியார்'கள் ஆகையால் அவர்களை சாதாரண மனிதர்களாகிய நம்மால் பின்பற்ற முடியாது. திருநீலகண்டரையும், இயற்பகையாரையும், சிறுத்தொண்டரையும், கண்ணப்பரையும் போல் நம்மால் தியாகங்கள் செய்ய இயலாது. ஆனால் மகாத்மாவும் திருவள்ளுவரும் நமக்குக் காட்டுகின்ற வழி எளிமையான வழியே,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

என்கிறார் திருவள்ளுவர்.

மகாத்மா தம்முடைய சுயசரிதையைப் பற்றிக் குறிப்பிடுகையில்

ஒருவருக்குச் சாத்தியமாவது எல்லோருக்குமே சாத்தியமாகும் என்றும், தான் பாகுபட்டு

வந்திருப்பதன் நோக்கம், என்னை நானே அறிய வேண்டும். கடவுளை நேருக்கு நேராகக் காண வேண்டும். மோட்சத்தை அடைய வேண்டும் என்பவைகளே என்றும், அவருடைய அனுபவங்கள், குழந்தைகளும் புரிந்து கொள்ளக் கூடிய விஷயங்கள் என்றும் எழுதுகிறார்.

எனவே திருவள்ளுவரும் மகாத்மாவும் நமக்குக் கூறும் வழிகள் எளிமையானவை, நமக்கு ஏற்றவை. நம்மால் பின்பற்றத் தக்கவை என்று நாம் கொள்ளலாம்.

பிறக்கும் பொழுது எல்லோரும் சமமே. ஆனால் வாழ்வில் செய்கின்ற செயல்களது வேறுபாட்டால், பெருமை சிறுமை எனப்பட்ட சிறப்பியல்புகள் ஒவ்வா.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

என்றும் கூறுகிறார் திருவள்ளுவர். அதே நெறியில் ஒழுக்கதையும், சத்தியத்தையும் தான் தம்முடைய தவநெறியாகக் கொண்டு வாழ்ந்தார் மகாத்மா காந்தியடிகள். தவம் செய்வதற்குத் துறவு நெறி ஒன்றுதான் சிறந்தது என்ற பண்டைய கோட்பாட்டை வள்ளுவரும் ஏற்கவில்லை, மகாத்மாவும் பின்பற்றவில்லை.

அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தூற்றின்
போஒய்ப் பெறுவ தெவன்

என்பது திருக்குறள்.

"க்ருஹம் தபோவனம்" அதாவது 'வீடே தவச்சாலை' என்பது ஸ்ரீமத் பகவத்கீதை. அதே நெறியில் நின்று தம்முடைய வாழ்க்கைத் துணைவியாராகிய 'பா' வுடன் சேர்ந்து இல்லறத் துறவியாக மனிதகுல மேம்பாட்டுக்காகப் பாடுபட்டார் மகாத்மா.

மொழி, இன, தேசிய எல்லைகளைக் கடந்த மனிதநேயமும் ஆன்மநேயமும் காந்திக்கும் வள்ளுவருக்கும் உரியது. திருக்குறளில் தமிழைப் பற்றியோ, தமிழகத்தை ஆண்டுவந்த மன்னர்களைப் பற்றியோ, தம்மை ஆதரித்த பெரியோர்களைப் பற்றியோ, மற்றப் புலவர்களைப்போல், குறிப்பிட்டுக் கூறவில்லை. அவருடைய நோக்கம் உலகளாவியது. அதனால் தான் 'உலகு' என்ற சொல்லை முதற்குறளிலே அமைத்தார். மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும், வள்ளுவரை உலகுக்குப் பொதுவானவர் என்றே குறிப்பிடுகிறார்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

என்கிறார்.

தோண்டினால் சுரப்பது மணற்கேணி கற்பதனால் சுரப்பது அறிவு. தூய அறிவினனான இறைவனை வணங்குவதே அறிவின்பயன். எல்லா உயிர்களையும் தம்முடைய உயிரைப்போல எண்ணி உரிமையோடு உவகையடைவதுதான் இறைவனை உள்ளபடி வணங்குவதும், பிற உயிர்களுக்கு ஏற்படும் துன்பத்தைத் தனக்கு ஏற்பட்ட துன்பமாகக் கருதி வருந்துவதும், அதைத் துடைக்க முயல்வதுமே உண்மையான ஆன்மீக நெறி.

அறிவினா னாகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய் போல் போற்றாக் கடை

என்கிறார் வள்ளுவர்.

மகாத்மா காந்தியடிகளுடைய ஆன்மீகப் பயணத்தின்போது பொதுமக்கள் மேல் ஏற்பட்ட அனுதாபத்தால் செய்த தொண்டே அவருடைய அவர் தானாக விரும்பி ஏற்றுக் கொள்ளவில்லை. நல்லவர்களைக் காக்கும் பொருட்டு இறைவன் அவதரித்துத் தொண்டுகள் செய்தது போன்றதே அண்ணாலாரின் அரசியல்பணி, பிறிதின் நோயைத் தன் நோய் போல் போற்றிய மகாத்மா தம்முடைய ஒழுக்க நெறியை அரசியலில் கையாண்டும், கற்பித்தும் உலகப் புகழ் பெற்றார்.

மகாத்மாவின் ஆன்மநேய வள்ளல் பாரியின் ஆன்மநேயம் போன்றது. வாடிக்கிடப்பது ஒரு முல்லைக் கொடிதானே என்று விட்டு விடாமல் தன்னுடைய தேரை அதற்குக் கொடுத்து அந்தச் சிற்றறிவுயிரையும் தன்னுயிருக்கு இணையாகப் போற்றினான் பாரி, அந்த முல்லைக் கொடியிடம் எந்தக் கைமாறையும் எதிர்பார்க்கவில்லை.

பூத்தலை அறாப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள் எனக்கொடுத்த

பாரி என்று பாராட்டப்படுகிறான்

அதேபோல் மகாத்மா காந்தியடிகளும்

ஆன்மநேயம் கொண்டவர். நம்முடைய நாட்டில் பல மாநிலங்களில் பசுவை 'பூக்கா' என்கிற ஒரு முறையில் மிகவும் கொடுமைப்படுத்திப் பால்கறந்தனர். தாய்க்குச் சமமான பசுவுக்கு இழைக்கப்படும் கொடுமையைக் கண்டு மனம் பொறுக்காததால்தான் மகாத்மா பால் அருந்துவதை விட்டார். பால் அருந்தித்தான் ஆகவேண்டும் என்று மருத்துவர்கள் வற்புறுத்திய பொழுது ஆட்டுப்பாலை உண்டார்.

ஆன்ம நெறியைப் பின்பற்றுபவனுக்கு இலக்கணமே, பணிவுதான். இதை ''நைச்சியானுஸந்தானம்'' என்று வைணவர் உரைப்பர். திருவள்ளுவர் 'பணிவுடைமை' என்று ஒரு அதிகாரமே படைத்துள்ளார்.

அடக்கமாகிய அறம் ஒருவனை தேவருலகத்து உய்க்கும் அடக்கம் அமரருள் உய்க்கும் என்கிறார்.

''ஆன்மீக நெறியில் நிற்பவர், எல்லோரும் தம்முடைய காலால் மிதிக்கும் தூசியும் தன்காலில் மிதிக்கும் தூசியாகத் தன்னைக் கருத வேண்டும்'' என்கிறார் மகாத்மா. மகாத்மா காந்தியடிகள் எங்குமே தன்னை உயர்த்திக் கொண்டது கிடையாது, எல்லோருக்கும் தொண்டனாகவே தன்னைக் கருதினார், தொண்டாற்றினார்.

தேசபக்தரும், பத்திரிகை ஆசிரியருமான ஜி.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் நோய்வாய்ப் பட்டிருந்தார். சென்னைக்கு வந்த காந்தியடிகள் அவரைப் பார்க்கச் சென்றார். அவருக்கு ஆறுதல் கூறிக்கொண்டே அவருடைய புண்களில் இருந்து வழிந்த சீழையும் இரத்தத்தையும் மகாத்மா காந்தியடிகள் தம்முடைய மேல் துண்டால் துடைத்து விட்டார். அவர் நெகிழ்ந்து போனார். தேசத் தொண்டராகிய ஜிசுப்பிரமணிய ஐயருக்கு மகாத்மா தொண்டரானார். அந்த அளவுக்குப் பணிவு!

குன்னூரில் மகாத்மா ஒய்வெடுக்கச் சென்றார். அவரோடு காங்கிரஸ் தொண்டர்களும் சென்றிருந்தார்கள். அவர்கள் உணவு உண்ட எச்சில் இலைகளை, பங்களாவை சுற்றிலும் தாறுமாறாக எறிந்திருந்தார்கள். அந்தப் பக்கமாக வந்த மகாத்மா அந்த இலைகளைப் பொறுக்கி எடுத்து இடத்தைச் சுத்தம் செய்யலானார். வெறும் சொல்லோடு நின்றுவிடவில்லை, அதைச் செயற்படுத்தியும் வாழ்ந்தார் மகாத்மா,

மனிதனுடைய ஆன்ம முன்னேற்றத்துக்கு மூன்று தடைக் கற்கள் உண்டு. அவைகளை 'வஞ்சனை மிக்க முக்குறும்புகள்' என்பர் பெரியோர். உயர் பிறப்பாலும், செல்வத்தாலும், கல்வியாலும் உண்டாகும் செருக்குகளே முக்குறும்புகள், இவற்றைக் கடக்க வேண்டும், இவற்றைப் பிறருடைய நன்மைக்காகப் பயன்படுத்தினால் அவை ஆன்ம வளர்ச்சிக்கு உதவும்.

அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான்

என்று உயர்குடிப்பிறப்பு பிற உயிர்களுக்கு அன்பு செய்வதில்தான் உள்ளது என்கிறார் திருவள்ளுவர். காந்தியடிகள் எல்லோரிடமும் அன்பு செலுத்தியதற்கு விளக்கம் தேவையில்லை,

மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகையான் கண்படின்

என்றும்

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால்
ஊருணி நீர் நிறைந்தற்றே

என்றும்வற்புறுத்தினார், இவ்வாறு செல்வத்தைப் பிறர் நலத்துக்குச் செலவிட்டு செல்வச் செருக்கை விடச் சொன்னார் திருவள்ளுவர்.

மகாத்மா காந்தியடிகள் தாம் ஈட்டிய பொருளையும் தமக்காகப் பிறர் கொடுத்த பரிசு களையும் பொருளையும் பொதுப்பணிக்கே அர்ப் பணித்தார். தம் உணவு, உடை, உறையுள் ஆகியவற்றில் ஏழையாகவே வாழ்ந்தார். அவர் மேற் கொண்டு வாழ்ந்த வறிய வாழ்க்கையை உலகம் போற்றியது.

1947 ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசுக் குடும்பத்தில் நடந்த திருமணத்துக்கு மகாத்மா

காந்தியடிகளிடம் ஏதாவது பரிசுப் பொருள் தருமாறு மௌண்ட் பேட்டன் கோரினார். ஆனால் மகாத்மாவோ தான் ஒரு ஏழை, தனக்கென்று எந்தப் பொருளும் இல்லை அதனால் பரிசுப்பொருள் அளிக்க இயலவில்லை என்று கூறிவிட்டார். ஆனால் மௌண்ட் பேட்டன் விடுவதாக இல்லை, அவர் மீண்டும் காந்தியடிகளை வற்புறுத்தினார். மகாத்மா தன் கையால் நூற்கப் பெற்ற நூலைக் கொண்டு ஒரு சிறிய மேஜை விரிப்பு நெய்து அதைப் பரிசாக அனுப்பினார். அரச குடும்பம் அதை மிகவும் புனிதமான பரிசாக எண்ணிப் போற்றியது, மகாத்மாவின் வறுமை புனிதமானதாகப் போற்றப்பட்டது.

கல்விச்செருக்கை அறவே ஒழித்தவர் மகாத்மா. கல்விக்கு அழகு அடக்கமே. அடக்க மில்லாத கல்வியைத் திருவள்ளுவர் நிந்திக்கிறார்.

ஓதி உணர்ந்தும் பிறர்க்கு உரைத்தும் தானடங்காப்
பேதையில் பேதையார் இல்

மகாத்மா தம்முடைய எழுத்திலும் பேச்சிலும் கல்விச் செருக்கைக் கைக்கொண்டதில்லை. பாமர மக்களுக்கு உதவுவதற்கே தம்முடைய கல்வியைப் பயன்படுத்தினார்.

படித்தவர்கள் அல்லது மாணவர்கள் செருக்கோடு நடந்து கொண்டால் மகாத்மா அவர்களை இரக்கம் இல்லாமல் கண்டிப்பார். சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் தம்முடைய மகனோடு ஆங்கிலமொழியில் கடிதப் போக்குவரத்துச் செய்து வந்ததை அறிந்த காந்தியடிகள் வருந்திக் கண்டித்துள்ளார்.

ஆன்ம ஞானம் அடைந்த ஒருவன் ஆரம்பத்தில் மற்ற உயிர்களை நேசிக்க வேண்டும். ஆன்மீகத்தின் நிறைவான நிலை என்னவென்றால் மற்ற உயிர்கள் அச்சமின்றி ஆன்மீகவாதியிடம் பழகி, தங்கள் தன்மைகளையும் கவலைகளையும் மறக்க வேண்டும். எல்லா உயிர்களாலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய நிலையை எய்துவதே ஆன்மீக வளர்ச்சியின் முதிர்ந்த நிலை.

வித்யா விநய யம்பந்நே ப்ராஹ்மணே கவிஹஸ்திநி
சுநி சைவ ச்வபாகே ச பண்டிதா: ஸமதர்சிந:

கீதை 5:18

என்கிறது கீதை, கற்றறிந்து அடங்கிய பிராமணனிடமும், பசுவினிடமும், யானையினிடமும், நாயினிடமும், நாயைத் தின்னும் புலையனிடமும் சமமான பார்வையுடையவனே ஆன்மீக ஞானி என்பது இதன்பொருள். இது துவக்கம்.

மகாத்மா காந்தியடிகள் நவகாளி யாத்திரை மேற்கொண்டிருந்த பொழுது, ஒரு நாய் அவருடைய குழுவின் பின் தொடர்ந்து வந்தது. பழக்கமில்லாத அந்த நாயை மற்றவர்கள் துரத்தினார்கள். ஆனால் மகாத்மா அதை விரட்ட வேண்டாம் என்றார். அந்த நாய் மகாத்மாவைத் தன்னோடு அழைத்துச் சென்றது. அங்கே சூறையிடப்பட்ட வீடும் சற்றுத் தொலைவில் கொல்லப்பட்டு இறந்த அந்த வீட்டினரின் புதைகுழிகளும் இருந்தன. அவற்றை மகாத்மாவிடம் அந்த நாய் காட்டி, கலவரத்தால் தன்னுடைய எஜமானர்களுக்கு நேர்ந்த கொடுமையைச் சொல்லாமல் சொல்லித் தன்னுடைய துக்கத்தை வெளியிட்டது. அதுவரை உணவு கொள்ளாமல் இருந்த அந்த நாய் மகாத்மா கொடுத்த உணவை உண்டு தன்நோன்பை முடித்தது, ஆறுதல் அடைந்தது.

இராமனிடத்தில் பறவைகள் விலங்குகள் முதலியனவும் கற்களும் கூட அன்பு காட்டின என்று கம்பன் பம்பைப் படத்தில் கூறுகிறான். கண்ணன் குழலூதிய போது எல்லா உயிரினங்களும் அவனிடம் ஒட்டி உறவாடியதைப் பெரியாழ்வார் பாடியருளியுள்ளார். அதே வண்ணமாக மகாத்மாவிடமும் உலகம் முழுவதும் அன்பு கொண்டது, ஆறுதல் கண்டது.

இப்படி வாழ்வியல் நெறியை நமக்குக் கற்பித்தும் வாழ்ந்தும் காட்டிய திருவள்ளுவருக்கும் காந்தியடிகளுக்கும் நாம் ஆற்றும் கைமாறு யாரோ?

கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு.

உலகின் தலைசிறந்த நீதி இலக்கியம்

சண்முக. செல்வகணபதி

திருவையாறு அரசர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வரும் இவர் பல்கலை வித்தகர். செந்தமிழ் அரசு, விரிவுரைச் செம்மல், முத்தமிழ் நிறைஞர், தமிழிசைச் செம்மல் முதலிய விருதுகளைப் பெற்றவர் பத்துக்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். ஒப்பியல் இலக்கியத் துறையில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார். வளர்ந்துவரும் இளம் தலைமுறை அறிஞர்களுள் இவருக்குத் தனியிடம் உண்டு.

வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை - ஒள்ளிசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்

உமாபதி சிவாச்சாரியார்.

தண்டமிழின் மேலாம் தரமுடைய நூல்கள் ஆறனுள் திருக்குறளும், திருக்குறளுக்கு எழுதப்பட்ட பரிமேலழகர் உரையும் இடம் பெற்றுள்ளன. அகரத்தில் தொடங்கி 'ன' கரத்தில் முடிகின்றது. நான்மறையின் மெய்ப்பொருளை அறம் பொருள் இன்பமென்னும் முப்பொருளில் தந்துள்ளது. பல்வேறு மொழிகளுள் மொழி பெயர்க்கப்பட்டு எடுத்தாளாத தமிழ் இலக்கியம் இல்லை என்ற அளவிற்குப் பெருமை கொண்டுள்ளது. தமிழில் தோன்றிய நீதி இலக்கியங்களில் சிற்ப்பானதொன்றாக விளங்கு வதோடு தொன்மையான உலக மொழிகளில் தோன்றிய நீதி இலக்கியங்களில் கூறும் பொருளாலும், கூறும் முறையாலும், கூற எடுத்துக் கொண்ட வடிவ அமைப்பாலும் தலைசிறந்த நீதி இலக்கியமாகத் திகழ்கிறது.

தொல்காப்பியம் 'முதுமொழி' (தொல். செய். 177) என்ற செய்யுள் வகைக்குக் கூறிய எளிமை, தெளிவு, நுட்பம், சுருங்கச்சொல்லி விளங்க வைத்தல் என்ற இலக்கண அமைதியோடு கருதிய பொருளைத் தெளிவு படக்கூறுதலும் நீதி இலக்கியத்திற்குரிய தகுதிகளாகும். பெருங் கதையில் 'நீதிப் பெருமை நூலோதியு மேராய்' (2:1:26) என்ற தொடரின் மூலம் 'நீதி நூல்' என்ற தொடராட்சித் தொடங்கலாயிற்று, திருக்குறளிலோ, அதற்கு முன்னுள்ள இலக்கியங்களில் 'நீதி' என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை. இது ஒரு வடசொல் இதற்கு இணையாக 'நயன்' (குறள் 97) என்ற சொல்லைத் திருவள்ளுவர் கையாள் கிறார். செய்வதும், தவிர்ப்பதும், பெறுவதும், உய்வதும் அறிந்தொழுகல் நீதி என்று கருதுவர்.

மனிதனின் உணர்ச்சி (Feeling) விருப்பு (Willing) அறிவு (Knowledge) ஆகிய மனப் பண்புகளுள் அறிவாற்றலைத் தூண்டும் நிலையில் நீதி இலக்கியம் அமையுமென்று க.த. திருநாவுக்கரசு கூறுகிறார். கருத்து, வடிவம், கற்பனை, உணர்ச்சி என்ற நான்கு கூறுகளுள் கருத்துக்கு அதிக முக்கியத்துவம் தரும் நிலையில் நீதி இலக்கியம் அமையும். இன்புறுத்துவதைவிட அறிவுறுத்தலை மையமாகக் கொண்டு அமையும்.

கவிஞன் அறிந்தவற்றுள் சிறந்தவற்றையும், சிந்தித்ததனுள் சிறந்தவற்றையும் வாழும் மனிதனுக்குத் தேவையானவற்றையும் மனிதகுலம் மாண்புறக் கூறுவான்.

திருக்குறள் கருத்துக்களுக்கு முக்கியத் துவம் தரும் நீதிநூலாக மட்டும் அமையாமல், அறிவுறுத்துவதையும் மகிழ்விப்பதையும் ஒருங்கே பெற்ற நீதி இலக்கியமாகவும் திகழ்கிறது. திருக்குறளின் ஒருபகுதியாக விளங்கும் காமத்துப்பால் கலையுணர்வும், கவின் உணர்வும் பெற்ற சிறந்த இலக்கியப்பகுதியாகும். அறத்துப்பால், பொருட்பால் பகுதிகளிலும் கலையழகும், கருத்தழககு குன்றாத வகையில் படைத்துள்ளார். செய்க, செய்யற்க, செயின் இன்னபயன் விளையும், செய்யாது விடின் இன்ன தீமை விளையும் என்று உடன்பாடு எதிர்மறை முகத்தான் கருத்துக்களை நயம்பட உரைத் துள்ளார். கருத்துக்களை மட்டும் உணர்த்தும் நிலையில் அமைவனவற்றை மூதுரை Gnomic literature என்றும், கருத்துக்களைக் கலை நயத்துடன் உணர்த்துதலை நீதி இலக்கியம் Dieactic literature என்றும் அழைப்பர். திருக்குறள் மூதுரையாக அமையாமல் நீதி இலக்கியமாகத் திகழ்கிறது.

உலகில் நீதி இலக்கியங்கள்

உலகத்தொன்மையான மொழிகளாக கிரேக்கம், இலத்தீன், சீனம், சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகள் உள்ளன. இவ்வைந்து மொழிகளிலும் தலைசிறந்த நீதி இலக்கியங்கள் உள்ளன. தமிழில் உள்ள தலைசிறந்த நீதி இலக்கியமான திருக்குறளை ஏனைய நான்கு மொழிகளில் காணப்படும் தலைசிறந்த நீதி இலக்கியங்களோடு ஒப்பிடும் பொழுது திருக்குறளின் மேன்மையையும் உயர்ச்சியையும் அறிய முடியும். இம்மொழி இலக்கியங்களோடு திருக்குறளை ஒப்பிட்ட முன்னோடி ஆசிரியராக க.த. திருநாவுக்கரசு விளங்குகிறார்.

கிரேக்கம்

கிரேக்க நாகரிகம் மிகவும் தொன்மை யானது. கலை, அறிவியல், மெய்ப் பொருளாய்வு, அரசியல் முறைகளைப் போற்றி வளர்த்த பெருமை கிரேக்க மொழிக்குளது. ஹோமன் இலியத், ஒடிசி மிகச் சிறந்த வீரக்காப்பியங்களாகும். இவரின் காலத்தயொட்டி வாழ்ந்த ஹெசியாட் (Hosiod) என்பவர் எழுதிய வேலையும் நாட்களும் (Works and Days) என்ற நீதி இலக்கியம் மிகச் சிறந்த நீதி இலக்கியமாகக் கருதப்படுகிறது. சாப்ளே, பிளோடிமஸ், பர்மினிடிஸ் போன்ற சிறந்த கவிஞர்களைக் கிரேக்கம் பெற்றுள்ளது. கவின் மிகு கருத்துகளையும், ஏற்றமிகு என்ணங்களையும் கொண்டு படைப்புக்கள் பலவற்றைத் தந்துள்ளனர். ஹெசியாட், சைமோனைட்சு, சோலோன், அரேதஸ். நிகாண்பர் போன்ற நீதி நூல் கிளைகளில் தலைசிறந்தவராக ஹெசியாட் விளக்குகிறார்.

வேலையும் நாட்களும்

கி.மு. எட்டாம் நூற்றாண்டினராகக் கருதப்படும் ஹெசியாட் சிறந்த நீதி இலக்கியம் கண்ட பாவலர் ஆவார். இவரின் வேலையும் நாட்களும் என்ற நூல் நிகழ்வியல் பாங்கு நிறைந்த நூலாக உள்ளது. இது ஓர் உழவன் பாட்டு நூல். இந்நூலை மனிதனுடைய துன்பம் துயரங் களுக்குரிய காரணங்கள் யாவை என்றும் அவை நீங்க மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய நெறி முறைகளையும் தெளிவுபடுத்தியுள்ளார். ஒழுக்கத்தையும் நீதியையும் காக்கும் தெய்வ மொன்று உண்டு என்றும், மனிதனின் துன்பத்திற்குக் காரணம் சோம்பல் என்றும், மனிதர்கள் ஒவ்வொருவரும் அவரவர்க்குரிய கடமைகளைச் செவ்வனே செய்யவேண்டுமென்றும் கூறியுள்ளார்.

வேலையும் நாட்களும் என்ற நூலைத் திருக்குறளோடு க.த. திருநாவுக்கரசு ஒப்பிட்டுள்ளார்.

குறள் : *உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்*
சேரா தியல்வது நாடு *(734)*

வே.நா: பொற்காலத் திரு நாட்டில் பஞ்சமோ, நோயோ உட்பகையோ உண்டாவதில்லை.

குறள் : ஞாலங்கருந்தினும் கைகூடும் காலம்
கருதி கிடத்தாற் செயின் (484)

வே.நா: எச்செயலையும் காலமறிந்து செய்வது நல்லது

குறள் : மருவுக மாசற்றார் கேண்மை (800)

வே.நா: நல்லவர்களைத் தேர்ந்து அவரிடத்து நட்புக்கொள்.

இவ்வாறு ஒத்தக்கருத்துகள் இரு நூல்களிலும் காணப்படுகின்றன. ஆனால் திருவள்ளுவரைப்போல் ஹெசியாட் பெண்ணினத்தைப் பெருமைப்படுத்திப் பேசவில்லை. ஹெசியாட் பெண்ணை நம்பாதே, முகமன் கூறுவோர் தனை நம்பினால் பெண்ணை நம்புவதால் கேடு உண்டாகும் என்கிறார். 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்யும்படி திருவள்ளுவர் உரைக்கிறார்.ஆனால் ஹெசியாட் 'பழிக்குப்பழி வாங்கு' என்கிறார். இதுபோல பல்வேறு முரண்பட்ட கருத்துக்களை இருவரின் நூல்களை ஒப்பிடும்பொழுது அறியமுடிகின்றன.

இலத்தீன்

ரோமாபுரி நாட்டின் பொற்காலமாக அகஸ்தசின் காலம் கருதப்படுகிறது. ரோமானியர் கலை, அறிவியல் துறைகளில் தலை சிறந்து விளங்கினர். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாடு நிலை நிறுத்தப்பட்டது. வர்ஜில் மெலினஸ், லூக்கிரிசியஸ் போன்ற சிறந்த காவியப் பாவலர்கள் பலர் இருந்தனர். இவர்களுள் லூக்கிரிசியஸ் சிறந்த நீதி இலக்கிய ஆசிரியராகப் போற்றப்படுகிறார். இவரின் காலம் கி.மு. 95 - 55) என்று கருதப்படுகிறது. இவர் படைத்த De Rerum Natura பொருள்களின் இயற்கை என்ற நூல் சிறந்த நீதி இலக்கியமாகக் கருதப்படுகிறது.

பொருள்களின் இயற்கை

பொருள்களின் இயற்கை என்ற நூல் ஆறுபகுதிகளைக் கொண்டுள்ளது. இந்நூலில் இயற்கை, அறிவியல், அணிக்கொள்கை, துன்பக்கொள்கை, சமயம், நீதி, பொருள்களின் இயற்கை என்பனப் பற்றிக் கூறப்பட்டுள்ளன. இவர் கடவுள் நெறியை வெறுக்கிறார். அச்சத்தின் அடிப்படையில் சமயம் தோன்றிற்று என்றும் சமயத்தின்பெயரில் நடைபெறும் சடங்குகள், மூடப்பழக்கவழக்கங்களையும் வெறுக்கிறார். அறிவொளியின் துணை கொண்டு அகத்தில் சூழ்ந்துள்ள இருளை விரட்ட வேண்டும் என்கிறார். எபிகூரஸ் என்ற கிரேக்க தத்துவஞானியைக் குருவாகக் கொண்டு அவரைப் போற்றுகிறார். இவரின் பொருள்களின் இயற்கை என்ற நூல்திருக்குறளோடு ஒப்பிடப்படுகிறது.

குறள் : அறத்தான் வருவதே இன்பம் (39)

பொ.இ : மனநிலையாகிய இன்பத்தை அடைதலே வாழ்வின் பயன்

குறள் : *பொருட்பெண்டிர் பொய்ம்மை மயக்கம் இருட்டறையில்*
ஏதில் பிணம் தழீஇ யற்று *(913)*

பொ.இ : *தெருவில் திரியும் பொதுமக்கள் தரும் இன்பம் இருட்டறையில் எளிதில் கிடைக்கக் கூடியது*

ஹாட்சிட்ஸ் (Hadzsis) என்ற அறிஞர் லூக்கிரிசியஸ் பற்றிக் கூறும் கருத்து ஈண்டு சிந்திக்கற்பாலது. 'லூக்கிரிசியசின் அறநெறிக் கொள்கைகளுக்காக அவருடைய நூலினை உலகம் போற்றவில்லை. அவரை அறவழிகாட்டும் அறவோராகவும் உலகம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் புதியதோர் உலகைக்காணத் துடித்த அறநெறிச் சார்புடைய இலட்சியவாதியாக உலகம் அவரைப் போற்றுகிறது. அவருடைய இலட்சிய உலகில் மதிநுட்பம், அறம், இன்பம், உரிமை முதலியன சிறப்பிடம் பெற்று விளங்க வேண்டும் என்று கருதினார்'. மேற்கோள் (திருக்குறள் நீதிஇலக்கியம் ப. 201). ஆனால் திருவள்ளுவர் சிறந்த ஞானியாகவும், அறங்கூறும்

அறவோராகவும் விளங்குகிறார். பொருள்களின் இயற்கை ஓர் அறநூல் என்பதைவிட ஆராய்ச்சி நூலாகத் திகழ்கிறது. லூக்கிரிசியஸ் ஒருவன் ஒருத்தியைக் காதலித்து அவளுடன் இன்பமாக வாழ்வதனைப் பைத்தியக்காரத்தனம் என்கிறார். வள்ளுவர் இதற்கு முற்றிலும் மாறானவர். உலகமும் அதிலுள்ள பொருள்களும் சேர்க்கையால் உண்டானவை என்று லூக்கிரிசியசும், ஆதி பகவன் முதற்றே உலகு என்று திருவள்ளுவரும் உரைக்கின்றனர்.

சீனம்

சீனர்கள் இலக்கியத்தை அறிவுறுத்தும் இலக்கியமென்றும், இன்புறுத்தும் இலக்கியம் என்றும் பிரித்தனர். அறிவுறுத்தும் இலக்கியம் மனித வாழ்வின் முன்னேற்றத்திற்குத் துணைபுரியும் என்று நம்பினர். கன்பூசியஸ், மென்சியஸ், சுங்-சூ, லவோட்சு போன்ற தலைசிறந்த நீதி இலக்கிய ஆசிரியர்கள் சீன மொழியில் உள்ளனர்.

சீனாவின் தலை சிறந்த பேரறிஞராகக் கன்பூசியசு கருதப்படுகிறார். இவர் 'லூ' என்ற குறுநில அரசில் வேளாண்மைத் துறை அமைச்சராக விளங்கினார். சீனாவின் ஆசிரியர் என்று பாராட்டப்படுகிறார். இவர் சீனமொழிப் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டார். இவரின் கருத்துக்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளார். இதில் நடுவழிக் கோட்பாடு (The Doctrine of the mean) என்ற நூல் சிறந்த நீதி இலக்கியமாகக் கருதப்படுகிறது.

கன்பூசியசின் முதுமொழிகள் என்ற நூல் திட்பநுட்பம் பொருட்செறிவுடைய உரையாடல் நூலாகும். மனிதனை அளப்பதற்குரிய அளவுகோல் மனிதனே என்றார். எதிலும் அளவாக இருக்கு வேண்டும். இரு எல்லைகளுக்குச் சென்று விடக்கூடாது என்று நடுவழிக் கோட்பாட்டில் உரைக்கிறார். திருவள்ளுவரோடு கன்யூசியசின் கருத்துக்களை ஒப்பிடும் பொழுது பலகருத்துக் கள் தெளிவாகும்.

திருக் : *அகத்தூய்மை வாய்மையால் காணப்படும் (298)*

கன்பூ : உள்ளத்தை ஊற்றுக்கண்ணாகக் கொண்டு
வெளிப்படுத்துவதே வாய்மை

திருக் : *புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் (538)*

கன்பூ : சிறந்தவை என்று அறிந்தவற்றை உடனடியாகச்
செயலில் கடைப்பிடிக்க வேண்டும்

திருக் : *யாகாவாராயினும் நாகாக்க. காவாக்கால்*
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு (127)

கன்பூ : நாவடக்கம் இல்லாமையால் உண்டாகும் நன்மையாது?
அதனால் அவர்கள் அடைவது வெறும் வெறுப்பும்
மனச்சோர்வுமே.

இருவரின் கருத்துக்களை ஒப்பிடும் பொழுது பல்வேறு மாறுபட்ட கருத்துக்களையும் பெறமுடிகின்றன.

1.கன்பூசியசைச் சீனாவின் சமயத்தலை வராகக் கருதுகின்றனர். வள்ளுவர் ஒரு சமயத் தலைவர் அல்லர். அறவோர் எல்லாச் சமயத்தினரும் போற்றிப் பாராட்டும் பாவலர்.

2. கன்பூசியசின் கருத்துக்கள் உதிரிப்பூக்கள். இவற்றில் கருத்து இயைபோ ஒருமைப்பாடோ காண இயலாது. திருக்குறள் ஒரு மாலை.

3. கன்பூசியசின் கருத்துக்கள் தற்சார்புடையவை. சீன நாட்டு மக்களைப் பற்றிய செய்திகளே அதிகம். வள்ளுவரின் கருத்துக்கள் உலகப் பொதுவானவை.

4. அரசன் தெய்வீகப் பிறப்புடையவன் என்று கன்பூசியசு கருதுகிறார். வள்ளுவர் எந்நிலையிலும் அரசன் தெய்வீகப் பிறப்புடையவன் என்று குறிப்பிடவில்லை.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் (358)

சமஸ்கிருதமொழி

உலகின் உயர்தனிச் செம்மொழிகளுள் வடமொழியாம் சமஸ்கிருதமும் ஒன்று. கி.பி. 7 ஆம் நூற்றாண்டளவில் இம்மொழியில் நீதி இலக்கியங்கள் தோன்றின. மூதுரைகள் சுலோகயாப்பிலும் நீதி இலக்கியங்கள் சதகங்களாகவும் உள்ளன. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பத்ருகிரியார் நீதி சதகம், வைராக்கியசதகம், சிருங்காரசதகம் போன்ற நூல்களை எழுதினார். அவை திருக்குறளில் இடம்பெறும் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் போல் அமைந்துள்ளன.

சதகம்

நீதி சதகம் நூறு சுலோகங்களையும் பத்து அதிகாரங்களையும் கொண்டுள்ளது. சான்றோர் களின் பண்பு, பொருளின்மாட்சி, ஊக்கநெறி, ஊழின் ஆற்றல், நல்வினையால் உண்டாகும் பயன் போன்றவற்றை உணர்த்துகிறது.

வைராக்கிய சதகம் இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமைகளை உணர்த்துகிறது. நிலையாமைகளை உணர்ந்து பற்றற்றான் பற்றினைப்பற்றும் வைராக்கிய நிலைகளை உணர்த்துகிறது.

சிருங்கார சதகம் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற கொள்கையில் பேசுகிறது. இறைவன் படைப்பில் மகளிர் வற்றாத இன்பம் தரும் ஊற்றாகக் கருதப்படுகிறாள்.

பத்ரகிரிக்கும் திருவள்ளுவருக்கும் இடையில் பல நிலைகளில் ஒற்றுமை வேற்றுமைகள் காணப்படுகின்றன.

1. இருவரும் மனித இனம் நலமாக வாழ வேண்டும் என்ற மனித நலக்கோட்பாட்டினராகத் திகழ்கின்றனர்.

2. அறம் பொருள் இன்பம் என்ற முப்பகுப்பில் நூலைப் படைத்துள்ளனர்.

3. பத்ருகிரியார் பெண்களை நம்பாதே என்றும் வள்ளுவர் பெண்ணின் பெருந்தக்க யாவுள என்றும் பாடுகின்றனர்.

4. கல்வி கற்றோர் விலைமதிக்கமுடியாத மாணிக்கம் போன்று போற்றப்படுவார் என்று பத்ருகிரியாரும்,

கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்ற யவை (400)

என்று வள்ளுவரும் உரைக்கின்றார்

5. மேலான செயலை இடையீடின்றி முயன்று செய்தால் ஆக்கம் பெருகும் என்று நீதி சதகம் கூறுகிறது. முயற்சி திருவினை ஆக்கும் என்று திருக்குறள் கூறுகின்றது.

உலகின் தலைசிறந்த நீதி இலக்கியம்

கிரேக்கம், இலத்தீன், சீனம், சமஸ்கிருத மொழிகளில் காணப்படும் தலைசிறந்த நீதி இலக்கியங்களைத் திருக்குறளோடு ஒப்பிடும் பொழுது திருக்குறளின் மேன்மையும் சிறப்பும் நன்கு தெளிவுபடும். கிரேக்க மொழியில் காணப்படும் வேலையும் நாட்களும் என்ற நூலில் கருத்துக்களை முறைப்படுத்திக் கூறவில்லை. அனைத்துலகப் பண்பும், நிலைபேறுடைய உண்மைகளாம் திருக்குறளைப்போல் இடம் பெறவில்லை.

இலத்தீன் மொழியில் காணப்படும் பொருள்களின் இயற்கை என்ற நூல் ஒரு பகுத்தறிவு வாதியின் படைப்பாகக் காணப்படுகிறது. நூலின் மூன்றில் ஒரு பகுதி அணுக்கொள்கை பற்றிக் கூறுகின்றது. இந்நூல் சிறந்த கவிதைப் படைப்பு என்பதை விட அறிவியல், மெய்ப்பொருள் பற்றிய நூலாக விளக்குகிறது.

கன்பியூசியசின் முதுமொழியும் நடுவழிக் கோட்பாடும் சிறந்த நீதி இலக்கியங்களாகத் திகழினும் கருத்துவனம் நிறைந்து காணப்படும் அளவிற்குக்லைநயம் காணப்படவில்லை. மேலும்

உரைநடையில் அமைந்துள்ளது.

வடமொழியில் இவ்வைந்து இலக்கிய களையும் ஒப்பிட்டுக் காண மூன்று அளவு கோல்கள் எடுத்துக் கொள்ளலாம்.

1. கருத்து முதிர்ச்சி

2. வரவம்

3. கருத்துச் சொல்லும் முறை

கருத்து வளத்தாலும், அவற்றை எடுத்தியம்பும் முறையாலும் கருத்துக்கூற எடுத்துக் கொண்ட வடிவத்தாலும் முதல் தகுதியைத் திருக்குறள் பெறுகின்றது. கவிஞன் மனிதவாழ்வின் உண்மைகளை அப்படியே எடுத்தியம்பாமல் தான் உணர்த்த விரும்பு வதனைக் கலையுணர்வுடன் வெளிப்படுத்துகிறான். திருவள்ளுவர் மனித வாழ்வைப் பல்வேறு கோணங்களில் கண்டுணர்ந்து அவற்றைச் சுவையோடு கூறுகிறார். வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்ற பாரதியின் கூற்று உண்மையான தொன்றாகும். பேராசிரியர். க.த.திருநாவுக்கரசு கூறுவதுபோல 'இன்று திருக்குறளோடு ஈடான நூல் இல்லை என்பதை நாம் பெருமிகதத்தோடு உலகிற்கு உணர்த்தலாம்'. (திருக்குறள் நீதி இலக்கியம். ப.403)

கே. ஆர். சீனிவாச ஐயங்கார் தம் திருக்குறள் மொழிபெயர்ப்பு பற்றி ...

In my translation, I have tried to canvey the sense of the Kural couplet in my own unrhymed couplet of 10+7 syllables. what sri Aurobndo calls, " the tense and pregnant force that is supposed, and surely with justice, to be the essential quality of the poetic slyle of the Kural" defies transplantation from Tamil into English. I can only plead borrowing Shakespeare's words: "The best in the Kind are but shadows, and the worst are no worse, if imagination amend them".

சுத்தானந்த பாரதியார் பேசிகிறார்

MY losom friend and scholar - Hero Sri V.V.S Ayyar, amidst a stormy political life translated Tirukkural in the Biblical style and I had the honour of typing it and reading the proofs. One day I was translating my yoga siddhi into rimed couplets. Yoga siddhi is the Gospel of perfect life. I did the translation with an elaboarate commentry. V.V.S. Iyer admired the style and substance of the Tirukkural into rimed couplets .... My friend Sri K.M. Balasubramaniyan had translated Tirukkural into rimed heptametric couplets, which I have appreciated in the pages is his book......... I read all available translations in English and French. I found out that the terse cryptic couplets of St. valluvar's Kural contained something more than what have been brought out in translations upto now........... I took to a month's silence and delved into the treasure - mine of valluvar.......... The rimed couplets in thus look follow the French syllabic system and I have made them as clear and simple as possible so that the Kural couplets can be quoted as proverbs and also sung melodiously..........

TREATMENT OF JUDICIAL SYSTEM IN KURAL

M.S. Venkatachalam,

M.S. Venkatachalam, popularly known as M.S.V, had been a close associate of Arignar Anna. He was one time editer of "Home-land". He is a successful Advocate, active politician, and above all a remarkable translator. He authored many books in English. 'Socio - Political Philosophy of Thiruvalluvar', 'Selected Poems of Bharathidasan' are noteworthy.

The judicial system in the days of Valluvar was simply concentration of all the executive, legislative and judicial powers in the hands of one person called the king. He was the supreme law-giver, the executive head and the dispenser of justice. The modern philosophy of separation of powers was unknown in those days - much less the thought of *'Checks and Balances'*, so carefully established under the constitution of the U.S.A.

In Book II (Porutpal - பொருட்பால்) Valluvar has devoted four chapters for the administration of Justice. But these chapters are so carefully worded that they are applicable for judicial decisions as well as executive acts.

1. Chapter regarding **'The right sceptre'** (செங்கோன்மை) deals with the aspect of how a king should rule his country so that justice prevails. In couplets No. 541, 547 and 548, the term 'Murai' (முறை) is used. This term connotes justice. So it is clear that in these couplets Valluvar unfolds a philosophy which has got a special reference to justice. Couplets 549 and 550 refer to crime and punishment in unmistakable terms. The remaining couplets of this chapter are so carefully worded that they are applicable to the executive acts of the king as well as the administration of justice by him. The title of this chapter is translated by Ellis, 'The uprightness of the Sceptre.

2. The next chapter deals with 'Tyranny' (கொடுங்கோன்மை) Rev. G.U. Pope translates it as 'The Cruel Sceptre', while Ellis translates it as 'The Obliquity of the Sceptre'. In this chapter only in three couplets (553, 558 and 559) the term 'Murai' (முறை) is used and it can be inferred that these couplets have got a special reference to the administation of justice. Though this term is not used in the remaining couplets, here again Valluvar is so careful, that they are applicable to both executive acts and judicial decisions.

3. Then there is the chapter pertaining

to 'Absence of Terrorism'' (வெருவந்த செய்யாமை) This is closely allied to the subject of the previous chapter - this chapter specially forbids harshness - harshness in enacting law, harshness in administering justice and also in the executive acts. So this chapter lends itself to three interpretations. Though the term 'Murai' is not at all used in any of the coupltes in this chapter, three couplets (561, 562 and 567) have got a special reference to crime, criminal law and punishment. All other couplets are applicable to any act of the king, not only his judicial acts.

4. After forbidding terrorism, Valluvar proceeds to emulate 'Benignity' (கண்ணோட்டம்) in the next chapter. Ellis translates it as 'Clemencies'. This is a very controversial chapter. The commentators like Parimelazhagar and Manakkudavar considered this 'Kannotam' (கண்ணோட்டம்) as referring to showing some lenience or having some soft corner towards persons already acquainted with the ruler. Even the commentators of this century followed suit, but it should be borne in mind that if the traditional interpretation is accepted, it will simply lead us to the inference that Valluvar advocated 'Partiality' or 'Favouritism'. If so, how can it be justice? Rather it is the very negation of Justice! Of all explanations offered till today, the explanations of Raju Chettiar, a lawyer,[2] is reasonable and palatable. He argues thus, *"It is rather incredible that Philosoper of Valluvar's calibre would have advocated favoritism or Partiality that too in chapters pertaining to justice. What he means is simply showing clemency in awarding the punishment and not in arriving at a decision whether a person is guilty or not. After arriving at the decision that a person is guilty, the Judge should consider various aspects like the age of accused, the circumstance under which the offence was committed, gravity of the offence and also the mitigating factors. Such judicial discretion with benignity in mind is Kannotam (கண்ணோட்டம்)".*

5. Then there is another chapter which has a strong bearing upon the administration of justice - chapter with the title 'Nadu Nilaimai' (நடுவு நிலைமை) or Impartiality. Fr. Beschi terms it as 'Equitas'. This Impartiality is to be exercised with regard to friends, foes and strangers all alike. But peculiarly this chapter finds place in Book I- division pertaining to domestic life (இல்லறவியல்), instead of Book II. Why is it so? What is the implication? It has been universally accepted that Valluvar's arrangement of the subjects, his treatment, everything is in perfect and unassaible order. Therefore there should be some deep implication is his bringing this chapter under the head Aram (அறம்), that is applicable to persons in domestic life, instead of making it one of the guidelines for the rulers. What is it? What is the logic behind it?

LOGIC BEHIND

Apart from the kings There were also local chieftains appointed by the Kings and they were administering justice. According of Valluvar, only the persons in domesting life, should be chosen for posts of responsibility (Couplet No. 506 referred in the chapter pertaining to the guidelines for rulers.) That is

why this chapter pertaining to impartiality is classified as one of the virtues essential for persons in domestic life. This is in fact an indispensable characteristic for the persons engaged in the judicial services.

EMBLEM OF JUSTICE

The balance is considered throughout the world as the emblem of justice and Valluvar refers to this emblem in this chapter. For men of excellance (சான்றோர்) , it is a good ornament to act like a balance[3]. This is one of the famous and oft-quoted couplets of Valluvar.

The justice referred to in this chapter is not justice by king or ruler - but by ordinary citizens or men of excellence. This contention is strengthened if we look at the forward of Justice V.Sivasubramanian in the book of Rev. G.U. Pope's translation of Valluvar published by the South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly (1958). Commenting upon couplet No. 113, he writes:

> ***"As defining the duty and attitude of a judge, or indeed of any person who has to deal fairly in dealing with a dispute or in coming to a decision, all far famed pages of rhetoric on justice and fair play are but the expansion and elucidation of these seven, simple, sweet words".***

Apart from the meaning that has been tradionally given to this couplet, Mr. Pakkiri Shankar unravels a hidden meaning also and since his explanation is palatable, it has to be adopted. He says that the balance is to be used only after setting right both the plates. That is why Valluvar used the term 'Saman Seithu' (சமன் செய்து) before 'Seerthookkum Kol' (சீர்தூக்கும் கோல்). This is called by Ellis as 'Adjusted balance. Equality of treatment for all people is ordinary justice - undertaking some spadework for making them equals is social justice. This social justice, according to Mr. Pakkiri Shanker is advocated by Valluvar[4].

1. It should be borne in mind in those days 'Sceptre' itself was considered to be a symbol of justice.

2. Research articles on Thirukkural by Mr. Raju Chettiar - Published by Kamban pathipagam - p.48

3. Pulavar Irayarasan (Swaminathan) interprets it as beningnity shown through eyes - ref 'Kuralum Porulum' - p. 116.

சமன்செய்து சீர்தூர்க்கும் கோல்போல் அமைந்தொருபால் கோடாமை சான்றோர்க் கணி (118)

To stand like balance rod that level hangs and right weights, With calm, unbiassed equity of soul, is sages' praise.

"It is the glory of the just to stand like the adjusted balance duly poised, nor swerve to either side" - Ellis.

4. Mr. Pakkiri Shanker - Madurai University Research papers p.22

பி. எஸ். சுந்தரம் பேசுகிறார்.

Valluvar has been translated by several people but there is no English translation of the Kural which is entirely satisfactory. The most devoted and learned of the translators, Pope, Chose to render the Kural in lines that extend right across the page like pythons. If ever an Alexandrine was needless, these surely are. Valluvar, though he lived centuries ago, is not half so 'antique' as the metre in which G.U.Pope has rendered his song is 'stretched'....... Those who translate the Kural at length do not do its the least justice, for it soul is brevity and with it least is most just.

திருக்குறள் சில சிந்தனைகள்

பி. தனலட்சுமி

ஒலிப்பரப்புத் துறையில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி வருபவர். தமிழ், ஆங்கிலம், இந்தி முதலிய பல மொழிகள் அறிந்தவர். பணியாற்றிய எல்லா இடங்களிலும் தம் அனுபவ முத்திரையைப் பதித்தவர். பல நாடுகளுக்குச் சென்று வந்துள்ளார். இப்போது திருச்சி வானொலி நிலையத்தின் இயக்குநர்.

உலகம் அனைத்தையும் ஆட்டிப் படைப்பது

பல வல்லரசுகள்-வலிமையால்
பல தலைவர்கள்-ஆற்றலால்
பல வல்லுநர்கள்-செயல் திறத்தால்

ஆனால் நான் சொல்லுவேன்.

'திருக்குறள்' என்பேன் திளைப்பாக இருக்கும். நன்றாக நினைவில் இறுத்துங்கள். வாழ்வோருக்கும், வாழ விழைவோருக்கும், வருந்துவோருக்கும், வாடுபவர்க்கும் என்று எல்லோருக்கும் ஏற்ப ஆக்கப்பட்டதுதான் திருக்குறள். குறுகத்தரித்த குறள். பக்கம் பக்கமாக எழுதினாலும், பேசினாலும் விளங்க வைக்க முடியாத செய்திகளை ஒன்றும் முக்காலுமான அடிகளில் தரமுடியுமென்றால் அதனை இயற்றிய ஆசிரியர் சுருங்கக் கூறி விளங்க வைக்கும் ஆற்றல் படைத்தவர் என்பதற்கு இதுவே சான்று என்றுதான் பொருள்.

பூமியையும் விடப் பெரியது எது என்று கேட்டால் - அது நீர்ப்பரப்புத்தான். பரப்பளவில் மட்டுமல்ல வாழ்க்கையே நீரின்றி நன்கு அமையாது.

நீர் இன்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான் இன்று அமையாது ஒழுக்கு

நீரின் இன்றியமையாமையை உணர்த்தும் இவ்வரிகள் நீர்பரப்புக்களை நன்கு பராமரித்துப் போற்றிப் பாதுகாப்பதே நமது தலையாய கடமை என்பதை வலியுறுத்துகிறது.

'நாடு' என்பது எப்படியிருக்கவேண்டும் என்பதனை விளக்க வந்த பெருந்தகை அவர்

உறுபசியும் ஓவாப் பணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு

என்று ஒரு நாட்டில் வளங்கள் இருக்கின்றனவோ இல்லையோ- வறுமையும் பசியும் இருக்கக்கூடாது என்பதனை விளக்குகிறார் மறைமுகமாக. இவையிரண்டும் நாடு வளமாக இருந்தால்தான் இயலும்.

இதுபோன்று ஆங்காங்கே தொட்டுத் தொட்டு பூமியையும், வானையும், நீரையும் பற்றிப் பேசும் திருவள்ளுவர் பெரும்பான்மையும் மனிதனை மனிதப்பண்புகளை மனித நேயத்தை ஊட்டும் செய்திகளைத்தான் அதிகம் தருகிறார். மனிதனைப் பாடும் இந்தப் பாவாணர் - அன்பு ஒன்றுதான் எல்லோரையும் ஒருங்கிணைக்க வல்லது என்பதனை நன்கு எடுத்துரைக்கிறார். அன்பு என்பதனை அடக்கி வைக்க இயலாது. தேசபிதா காந்தியடிகள் ஒரு கையில் அன்பும், அகிம்சையும், மற்றொரு கையில் உண்மையையும் எடுத்துக் கொண்டு வாழ்ந்தார். அவரை முன்னோடியாகக் கொண்டு வாழ்வதற்கு மனித இனம் தன்னைத் தயாரித்துக் கொண்டால் உலகில் வன்முறை ஏது? போர் ஏது? சாதிப் பிணக்குகள் ஏது? சமயப்பூசல்கள் ஏது? தொலை நோக்குப் பார்வையுடைய வள்ளுவர் - குறள்

என்ற ஒரு மூன்றெழுத்துச் சொல் எத்தகைய வலிமை வாய்ந்தது என்பதனை - உள்ளங்கை நெல்லிக்கனியாகக் காட்டுகிறார்.

இதனையொத்தே - கடுஞ்சொல் சொல்லாமல் இன்சொல்லே சொல்லப்பழகிக் கொள்ள வேண்டும் என்று

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற

என்றுப் குறளில் தெரியப்படுத்துகிறார். எத்தனை விலையுயர்ந்த ஆபரணங்களும், ஆடைகளும் ஒருவனை அலங்கரித்திருந்தாலும் - குரலில் பணிவும் - அன்பும் இல்லையெனில் அவனது பேச்சும் செயலும் விழலுக்கு இறைத்த நீர்தான். இதனைப் பத்துக் குறள்களில் விளக்கிய வள்ளுவர் அப்படி இனிய முகத்தோடு இன்சொல் சொல்லத் தெரியாதவரது சொற்கள் கனியிருக்கும் போது காய்களைக் கைப்பற்றிச் சுவைப்பதைப் போன்றது என்று சொல்கிறார்.

எந்த உதவியையும் மறக்கலாம். ஆனால் காலத்தே நமக்கு ஒருவர் செய்த உதவியை மறந்து நாமே எல்லாம் என்று நினைத்தால் அதைப் போன்ற துரோகச் செயல் கிடையாது என்பதனை அறுதியிட்டுக் கூறுகிறார்.

காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது

என்றும்

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

என்றும் அமைந்த குறல்பாக்கள் என்றென்றும் நினைவிற் கொள்ளத்தக்கவை.

பிறர் மனது புண்படும்படியான சொல்லைச் சொல்லாதே என்று எடுத்துக்காட்டும் வள்ளுவர்

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு

என்றும் எதனைக் காக்கத் தவறினாலும், நாவடக்கம் வேண்டும் என்பதனைச் சுட்டிக் காட்டுகிறார்.

இன்றைய நிலையில் மாந்தர் எத்தனை வகையான அவல நிலைகளுக்கு ஆளாகிறார்கள். ஏனெனில் கடைப்பிடிக்க வேண்டிய கண்ணியத்தில் ஒழுக்கத்தில் தொய்வு ஏற்பட்டு விட்டது. எத்தனை பெரிய மேதை யானாலும் ஒழுக்கம் இல்லையெனில் என்ன பயன்?

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

எப்படியிருக்க வேண்டும் என்று பட்டியலிட்டுச் சொல்லும் பாங்காளர் அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றி அறிதல், நடுவுநிலை, அடக்கமுடைமை, பொறையுடைமை ஆகிய உடன்பாட்டுக் குணங்களை மட்டுமே தொட்டுக்காட்டிவிட்டு நின்று விடவில்லை. எப்படி இருக்கக் கூடாது என்பதனையும் பட்டியலிட்டுக் கொடுக்கிறார் பிறனில் விழையாமை, அழுக்காறாமை, பயனில் சொல்லாமை, தீவினையச்சம், புலால் மறுத்தல், இன்னா செய்யாமை என்பன போன்று.

பண்பாளனாக மனிதன் எப்படியிருக்க வேண்டும். அரசியல் எப்படி அமைய வேண்டும், அமைச்சியல் எப்படிச் செயலாற்ற வேண்டும், படையியல் கடைப்பிடிக்க வேண்டியவை எவை என்பதையெல்லாம் தெள்ளத் தெளிவாக கூறியுள்ளார்.

நல்ல பண்பாளனாக, ஆசானாக, குடிமகனாக, கோலோச்சுபவனாக இருந்து விட்டால் மட்டும் போதுமா? இல்லறத்திற்கு இன்பம் சேர்ப்பவனாக, நன்மக்கள் பேறு பெறுபவனாக, நங்கைக்கேற்ற நாயகனாக வாழவும் வழிவகை காட்டுகிறார் குறளாளர்.

அறம் பொருள் இன்பம் என்ற மூன்றும் நன்கு அமைய, ஆயிரத்து முன்னூற்று முப்பது குறள்களையும் அமைத்திருக்கிறார். நன்கு ஊன்றிப் பார்க்கும் போது எவன் ஒருவன் தனது வாழ்நாளில் குறளை நன்கு படித்து அவற்றில் பத்து சதவீதமாவது குறள்வழியாகத் தனது வாழ்நாளை அமைத்துக் கொண்டால் வையத்தில் அவனைத்தான் உயர்வாக வைக்கமுடியும். பிறவி எடுத்தது பொருள் ஈட்ட மட்டுமல்ல. புலன் இன்பம் துய்க்க மட்டுமல்ல. இன்றைய பிறவிக்கும் ஏழேழ் பிறவிக்கும் என்றும் நினைவில் நிற்கும் அளவிற்குச் செயலாற்ற வைக்கும் இந்தக் குறளுக்கு உள்ள வலிமை வேறு எதற்கு உண்டு?

தமிழ் மூதாட்டி ஔவைப் பிராட்டி சொல்லிப் போந்தாளே அது போன்று

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி
குறுகத் தரித்த குறள்

நாம் குறள் வழி நன்கு கடைப்பிடிக்கப் படுமானால் எல்லோரும் ஏற்றம் பெற அது வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை.

திருக்குறளில் தானம்

வே. சண்முகநாதன்

தமிழ்நாடு கல்லூரிக் கல்விப்பணியில் ஏறத்தாழ 35 ஆண்டுகள் பணியாற்றியவர். திருச்சிராப்பள்ளி பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரியில் பணியாற்றி 1999 சூன் திங்களில் ஓய்வு பெற்றுள்ளார். திருக்குறள் சண்முகனார் நன்முயற்சியில் உருவாக்கப்பட்ட திருக்குறள் அஞ்சல் வழிக்கல்வி மையத்தின் துவக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் பாடுபட்டுப் பாராட்டப் பெற்றவர். தமிழ்நாடு திருக்குறள்பேரவை, திருச்சி மாவட்டத் திருக்குறள் பேரவை, உலகத் திருக்குறள் மாநாடு-கருத்தரங்கு அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றி வருபவர்.

சொற்பொருள் ஆய்வு குறித்த இக்கட்டுரை திருக்குறளில் யாப்பால், பாடு பொருளால், மொழிவழக்கால், இலக்கிய வகையால் திருக்குறள் பண்டைத் தமிழ் இலக்கியங்களுள் தனித்து விளங்கும் சிறப்புடையது.

இன்றைய மொழியியல் அறிஞர்கள் சொற்களை ஒலி, பொருள் அடிப்படையில் தொகை வகைப்படுத்தி நுண்ணிதின் ஆராய்ந்து வருகின்றனர். திருவள்ளுவர் சொற்களைப் பற்றிய தேர்ந்த அறிவு உடையவர் என்பதைக் குறள் வழி அறிந்து கொள்ள முடிகிறது. 'சொல்லின் தொகையறிந்த தூய்மையவர்'(711, 721), 'சொல்லின் நடைதெரிந்த நன்மையவர்' (712), 'சொல்லின் வகை'(713), 'சொல் தெரிதல் வல்லார்'(635), 'பயனில் சொல்'(99), இன்சொல் வன்சொல் (99) 'ஆன்றமைந்த சொல்'(635), 'பயனில் சொல்'(196) போன்ற சொல்லாட்சிகள் அவரின் தேர்ந்த மொழியறிவைப் புலப்படுத்துகின்றன.

தானம் எனும் சொல் இன்றைக்கு ஏட்டிலும் வீட்டிலும் எல்லோராலும் பழகுதமிழ்ச் சொல்லாகப் பயிலப்பட்டு வருகின்றது. கோதானம், பூமி தானம், அன்னதானம், கண்தானம், இரத்ததானம் என்பன அனைவருக்கும் அறிமுகமான சொற்களாக உள்ளன. சமூகவியலார் கல்வி, திருமணம், வணிகம் போன்றவற்றைச் சமூக நிறுவனங் களாகக் கூறுவர். தானம் என்பதையும் ஒரு சமூக நிறுவனத்தைக் குறிக்கும் சொல்லாகக் கருதலாம். பொருளியல் தன்மையுடைய சேவை அல்லது நற்பணியின் பாற்பட்ட ஒரு சமூகச் சொல்லாக இச்சொல் இன்று பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேலோட்டமாகப் பார்த்தால் தானம் என்பது கொடுத்தல், வழங்கல், எனும் பொருளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்று கூறலாம்.

கொடுத்தல் என்பது பொதுப் பொருண்மையை உணர்த்துவதாகும். குறிப்பிடத் தக்க பொருள் வேற்றுமை உடைய வகையில் ஈகை, கொடை, தானம் எனும் மூன்று சொற்களைத் திருவள்ளுவர் தெரிந்தே பயன்படுத்தியுள்ளார் எனக் கருதலாம். சங்க இலக்கியங்களில் ஈகை, கொடை எனும் சொற்களே பெருவழக்கினதாக உள்ளன. திருக்குறளில் ஈகை எனும் சொல்லே அதிக அளவில் ஆட்சி பெற்றுள்ளது. தானம் எனும் சொல் இரண்டு இடங்களில் ஆட்சிபெற்றுள்ளது.

மக்கள் வாழ்க்கையில் எல்லாரும் எல்லாமும் பெற்றிருக்க முடியாது. பிறப்பொக்கும் மக்களினம் தாம் பெற்றிருக்கும் ஆற்றல்களாலும் உடைமைகளாலும் வேறு பட்டுள்ளதால் நலிந்தோர் - வலியோர், மேலோர் - கீழோர், ஏழை - பணக்காரன் எனும் சமூக ஏற்றத்தாழ்வுகள் எங்கும் இருக்கத்தான் செய்கின்றன. சமூகச் சமன்மை வேண்டுமெனில் கொடுப்பதும் கொள்வதும் நிகழ்ந்து கொண்டிருக்க வேண்டும் என்பது திருவள்ளுவரின் திண்ணிய எண்ணமாகும். 'உடையோர் ஈதலும் இல்லோர்'இரத்தலும் (புறம்38), 'எத்துணை ஆயினும் ஈத்தல் நன்று'(புறம் : 14) எனும்

புறநானூற்றுப் பாடல் வரிகளை அடியொற்றி

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடி உண்டாயினும் இல் (1005)

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும் (166)

எனும் குறள்களும் கொடுத்தலின் இன்றியமையாமையை உணர்த்துகின்றன. 'செல்வத்துப் பயனே ஈதல்' எனும் நக்கீரர் கருத்தும் இதனை அரண் செய்கின்றது. 'கொடுத்து கொளல்வேண்டும் நட்பு'(794), 'கொடுத்தும் கொளல் வேண்டும் .... பகை'867), என்று நட்பு, பகை வேண்டுவதற்குக் கூடக் கொடுத்தல் என்று குறள் கூறுகிறது. எனவே மனித இனம் ஒன்று சேர்ந்தும் ஒருவரை ஒருவர் சார்ந்தும் வாழ வேண்டிய தேவைகள் இருப்பது கண்கூடு, இல்லாதவர்கள் 'ஈ, தா, கொடு' என்று இரந்து வாழும் நிலையிலும் இருப்பவர்கள் 'ஈதல், தருதல், கொடுத்தல்' உடையவராய்ப் புரந்து வாழும் நிலையிலும் வாழ்வதால் தான் உலக இயக்கம் உயிரோட்ட முடையதாகிறது. இதனைத் திருவள்ளுவர்

இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண் மாஞாலம்
மரப்பாவை சென்று வந்தற்று. (1058)

என உவமை கொண்டு உணர்த்துகின்றார். ஒடப்பரையும் உடையப்பரையும் உறவுக் குரிய வராக்குவனவே ஈகை, கொடை, தானம் எனும் நற்செயல்கள். எனவே இச்சொற்கள் சமூகமதிப்புடைய சொற்கள் என்பது தெளிவு.

திருக்குறளைப் பொருத்த அளவில் இம்மூன்று சொற்களும் பொருள் வேற்றுமை தரும் வகையில் ஆட்சி பெற்றுள்ளன என்பதை அறிய முடிகிறது.

ஈகை: ஈகையாகும். 'வறியார்க் கொன்றீவது ஈகை'(221) என்பது குறளின் வரையறை. செல்வம் உடையவர்கள் (226, 228) குலப் பெருமை பேணுபவர்கள் (223) தொடர்பில் ஈகைப் பண்பு சிறப்பிக்கப்படுகிறது. குறியெதிர்ப்பு (கைம்மாறு) (221), மேலுலகம் (222) கருதாது கொடுக்கப்படுவதே ஈகை எனவும் தெரிவிக்கின்றது குறளில் இரப்பவர்க்குக் கொடுப்பதும் (224) பசி ஆற்றக் கொடுப்பதும் (225, 226) ஈகையின் பாற்படும் என்று உணர்த்தப்பட்டுள்ளது.

கொடை: கொடுப்பது கொடையாகும். கொடுக்கும் கடமை ஆள்வோர்க்கு உரியது என்பது வள்ளுவர் எண்ணமாகும் எனக் கருத

கொடை, அளி, செங்கோல், குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி (390)

எனும் குறள் இடந்தருகிறது. கொடை என்பது வேந்தர்க்கு இருக்க வேண்டிய சிறந்த உடைமைகளில் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது நன்கு உணரத்தக்கதாகும்

தானம்: ஈவதை ஈகை என்றும் கொடுப்பதைக் கொடை என்றும் கூறுவதுபோல தருவதைத் தானம் எனக் கொள்வது தவறாகாது.

ஈ, தா, கொடு எனக் கிளக்கும் மூன்றும்
இரவின் கிளவி ஆகு இடன் உடைய
அவற்றுள்
'ஈ' என் கிளவி இழிந்தோன் கூற்றே
'தா' என் கிளவி ஒப்போன் கூற்றே
'கொடு' என் கிளவி உயர்ந்தோன் கூற்றே
(செய், 9:48-51)

எனும் தொல்காப்பிய நூற்பாக்கள் ஈ, தா, கொடு எனும் வினைச்சொற்களை இரவு எனும் பொருண்மைக்குரியனவாகக் கூறுகின்றன. இரப்பவர்களை இழிந்தோன், ஒப்போன், உயர்ந்தோன் என்று வேறுப்படுத்திப்பார்க்கும் தொல்காப்பியக் கருத்தை திருவள்ளுவர் ஏற்கவில்லை எனக் கருதலாம்.

தர்மம், அர்த்தம், காமம் என்று வடமொழியினர் வழங்குவதையும் அறம், பொருள், இன்பம் என்று தமிழ் மொழியினர் வழங்குவதையும் எண்ணிப்பார்க்க வேண்டும் தர்மம் என்ற வட சொல்லை எடுத்தாளாத வள்ளுவர் தானம் என்ற சொல்லை எடுத்தாண்டதன் மூலம் அதனை அவர் வடசொல்லாகக் கருதவில்லை என்பது புலனாகிறது. எனவே ஈவது, ஈகை, கொடுப்பது கொடை, தருவது தானம் எனக் கூறுவது நம் மொழியியல்புக்குப் பொருத்தமுடையதே.

திருவள்ளுவர் தானம் எனும் சொல்லை இரு இடங்களில் மட்டுமே பயன்

படுத்தியுள்ளமையும் தவம் என்ற சொல்லோடு இணைத்தே பயன்படுத்தியுள்ளமையும் ஓர்ந்து உணரத்தக்க கருத்தாகும்.

தானம் தவமிரண்டும் தங்கா வியனுலம்
வானம் வழங்கா தெனின் (19)

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம் செய்வாரின் தலை (295)

எனும் இரண்டு குறள்களில் இடம் பெறும் 'தானம்' எனும் சொல்லிற்கு உரையாசிரியர்கள் கொடுத்தல், வழங்குதல் எனும் பொருளில் தர்மம் என்று உரை கூறியுள்ளார்கள். தானம் என்பது தர்மத்தில் ஒன்றாகும்.

தவம் செய்தலும் தானம் செய்தலும் உயர்மதிப்பிற்குரிய சமூகச் செயல்களாகும் என்பதும் அவற்றைச் செய்பவர்கள் உயர்ந்த பெருமக்களாவர் என்பதும் திருக்குறளர் உணர்த்தும் கருத்துக்களாகும்.

'தானமாவது அறநெறியான் வந்த பொருள்களைத் தக்கார்க்கு உவகையோடு கொடுத்தல்' என்றும் 'தானம் இல்லறத்தின் மேலும் தவம் துறவத்தின் மேலும் நின்றன' என்றும் பரிமேலழகர் உரை கூறியுள்ளார்.

'நல்லாற்றின் நின்ற துணை'(41), 'துறந்தார்கதும் துவ்வாதார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை', (42) 'ஐம்புலத்தாறு ஓம்பல் தலை'(43), 'பாத்தூண் உடைத்தாயின்'(44), என இல்வாழ்க்கையினரின் இயல்புகள் கூறப்படுவதால் தக்கார்க்கு உவகையோடு கொடுத்தல் எனும் பொருண்மை சுட்டும் தானம் என்பதை இல்லறத்திற்குரிய நற்கடமையாகக் கருதமுடிகிறது.

'தெரிந்து செயல்வகை' அதிகாரத்தில் 467 ஆம் குறளுக்குப் பரிமேலழகர் உரை கூறும் போது 'அரசனானவன் தான் எண்ணிய கருமத்தை முடிக்கத் தான, சாம, பேத, தண்டம்' எனும் நான்கு உபாயங்களைக் கைக்கொள்வான் எனத் தெரிவிக்கின்றார். தமிழில் அவைகளை முறையே கொடுத்தல், இன்சொல் சொல்லல், வேறுபடுத்தல், ஒறுத்தல் எனச் சொல்வர். தங்கள் காரியங்களைச் சாதிக்க நினைக்கும் எவரும் இவ்வழிகளைப் பின்பற்றுவது உலகவியல்பு. எனினும் தானம் என்பது அரசர்க்குரியது எனக் கருதுவதும் உண்டு என்பது இவர் உரையால் வெளிப்படுகிறது.

மேலும் தானம் என்பது 1. அரும்பொருள் கொடுத்தல் 2. தரும் பொருள் பெறாது விடுத்தல் 3. கொடுக்கும் பொருள் கொடுத்தல் 4. பிறன் பொருள் கொண்டு கொடுத்தல் 5. இறையொழிதல் ஆகிய ஐந்து வகைப்பட்டது எனவும் விளக்கவுரை தருகிறார். கொடுக்கப்படுவது மட்டுமின்றி வாங்குவதை விடுத்தலும் தானத்தின் பாற்படும் என்ற செய்தி குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும் திருக்குறள் வழிப் பார்க்கும்போது 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை'(49) என அழுத்திக் கூறும் திருவள்ளுவர் வாழ்க்கையை இல்லறம், துறவறம் எனப் பாகுபடுத்தியுள்ளதால் இல்லறத்தினருக்குரிய நற்செயலாகத் தானத்தையும் துறவறத்தினர்க்குரிய நற்செயலாகத் தவத்தையும் இணைத்தே வழங்கியுள்ளதன் நோக்கம் தெளிவாகிறது. அரசியல் உபாயங்களில் ஒன்றாகத் தானம் கூறப்படும் என்பதையும் நினைவு கொள்ள வேண்டும்.

மேலும் தமிழில் வந்த முதல்கலைக் களஞ்சியம் எனப்போற்றப்படும் அபிதான சிந்தாமணியில் தானம் என்பது தலைப்படுதானம், இடைப்படுதானம், கடைப்படுதானம் என மூவகைப் படுத்தி அறத்தான் ஈட்டிய பொருளை முக்குற்றம் அற்ற நற்றவத் தோரைக் 'கொள்க' எனப்பணிந்து குறையிரந்து தம் உள்ளம் உவந்து ஈதல் தலைப்படுதானம் ஆகும். என்று விளக் கப்பட்டுள்ளது. ஆக வள்ளுவர் கூறியுள்ள 'தானம் தவமிரண்டும்' 'தவத்தொடுதானம்' எனும் தொடர்களுக்குத் தலைப்படுதானம் எனப் பொருள் கொள்வது பொருத்த முடையதாகத் தெரிகிறது.

இதுகாறும் கூறியவற்றால் திருக்குறளில் 'கொடுத்தல்' எனும் பொதுப் பொருண்மையை பொருள் வேற்றுமை உடைய வகையில் பயன்படுத்தப்பட்டுள்ள ஈகை, கொடை, ஆகிய சொற்களுடன் தானம் என்ற சொல்லும் ஆட்சி பெற்றுள்ளமையும், ஈவது ஈகை, கொடுப்பது கொடை எனக் கூறப்படுவதுபோல் தருவது தானம் எனும் சொல் தக்கார்க்கு உவகையோடு கொடுத்தல் எனும் பொருளில் தலைப்படுதான வகையில் ஆளப்பட்டுள்ளது என்றும் கொடுக்கப்படுவது மட்டுமன்றி வாங்குவதை விடுத்தலும் தானத்தின் பாற்படும் என்றும் விளக்கப்படும் உரைவளங்கள் மூலம் பொருண்மை விளக்கம் காணப்பட்டது.

வள்ளுவர் கூறும் தனிமனித உயர்வு

அர. அப்துல் ஜப்பார்

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் 34 ஆண்டுகள் பணியாற்றியவர். தமிழ்த்துறைத் தலைவராகவும் துணைமுதல்வராகவும் சிறப்புடன் பணி புரிந்துள்ளார். 1995 இல் பணி மூப்புப் பெற்ற பின்னர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமியத்தமிழ் சிறப்பு ஆய்வாளராகப் பணியாற்றியுள்ளார். ஜமால் முகம்மது கல்லூரியில் மார்க்கப்பணியாற்றும் குழுவின் இயக்குநராகவும் பல ஆண்டுகள் தொண்டாற்றியுள்ளார். இஸ்லாமிய இலக்கியக் கழக்கத்தின் துணைச் செயலாளராகவும் உலகத் திருக்குறள் மாநாட்டின் துணைச் செயலாளராகவும் பணிபுரிந்து வருகின்றார்.

மனித சமுதாயத்திற்குப் பொதுவான அறங்களை எடுத்துக் கூறும் ஒப்பற்ற நூல் திருக்குறள். வள்ளுவர் ஒரு சாரார்க்கு மட்டும் உரியதாக இந்நூலை இயற்றவில்லை "யாதுமூரே யாவருங்கேளிர்"[1] எனும் சங்ககாலக் கொள்கை அவரை ஆட்கொண்டிருக்க வேண்டும்.

அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு[2]

எனும் கடவுள் வாழ்த்து முதற் குறளே அதற்குரிய சான்று.

உலகில் அறம், பொருள் இன்பம் அனைவர்க்கும் பொதுவானதே. இந்நெறி நாட்டுக்கு நாடு வேறுபடுவன அல்ல. அறத்தைப் போற்றாத சமுதாயம் உலகில் வாழ்ந்ததில்லை. எத்தனையே மனித இனங்கள் அறந்தவறியதால் அழிந்து சுவடேதெரியாமல் போனதைத் திருக்குர் ஆன் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கின்றது. ''பூமியில் விஷமம் செய்து கொண்டு அலைந்தவர்களின் முடிவு எவ்வாறாயிற்று என்பதையும் நீங்கள் கவனித்துப் பார்ப்பீர்களாக"[3] எனத்திருமறை சுட்டிக் காட்டுகின்றது. பொருட்சிறப்பும் இன்பநிலையும் மாந்தர் அனைவர்க்கும் இயல்பானதாகும். பண்டைய கிரேக்க நாட்டிலும் உரோமானிய நாட்டிலும் அறத்தைப் பற்றிச் சிந்தித்த அறிஞர்கள் பலர் அவர்களால் இயற்றப்பட்ட நீதி நூல்கள் இன்றளவும் மக்களால் போற்றப்பட்டு வருகின்றன. கிரேக்க அறிஞர் ஹெசியட்டின் 'வேலையும் நாட்களும்'(Works and Days) என்ற நூலும் இலத்தீன் மொழியில் லுக்கிரீஷஸ் எழுதிய 'பொருள்களின் இயற்கை' (The Nature of Things) என்ற உரோமானிய அறிஞரின் நூலும் தலை சிறந்த நீதி இலக்கியங்களாகத்திகழ்கின்றன. இது போன்றே சீனாவின் கன்பூசியசின் நீதி நூலும் கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பர்த்ருஹரியின் நீதி சதகம் என்ற வடமொழி நூலும் குறிப்பிடத்தக்க அற நூல்களாக விளங்கி வருகின்றன. பொதுவாக நீதி நூல்கள் மக்களுக்கு அறிவுறுத்தும் பான்மையில் அமைவன. டி.எஸ். இலியட் இது பற்றிக் குறிப்பிடும் போது.

"இலக்கியம் அளிக்கும் இன்பம் நிலை பேறுடையதாக இருக்க வேண்டுமானால் மனித வாழ்வினை மேம்பாடு உடையதாக்கும் அறநெறிக் கருத்துக்களும் அதில் இடம் பெற வேண்டும்"[4] என்கிறார். மனிதனுக்கு விளக்கம் கூறவந்த ஆகஸ்போர்டு ஆங்கில அகராதி, பால்வர்க்கமில்லாத மனித இனம் ஒரு பகுத்தறிவுள்ள உயிர்ப்பொருள் என்கின்றது. மனிதன் என்பதற்குச் சென்னைப் பல்கலைக்கழக அகராதி, 'முழுவளர்ச்சி அடைந்த மனிதர்' எனக் குறிப்பிடுகின்றது. மேலும் 'Humanism' என்பதற்கு

மனித இன நலக்கோட்பாட்டையுடையது ஆதல் எனும் பொருளைத் தருகிறது. எனவே மனிதன் ஒரு பகுத்தறிவுள்ள உயிர்ப்பொருளாக இருப்பதோடல்லாமல் மனித இன நலக்கோட்பாடுகளைப் பிரதிபலிக்கும் ஒரு பிராணியாகவும் படைக்கப்பட்டுள்ளான் எனத் தெரிகிறது. அதனால் தான் திருவள்ளுவர் மனிதனை ஒருமுன் மாதிரிப் பொருளாக வைத்து னகர ஒற்று அமைவுறும் வகையில் எடுத்துரைக்கின்றார். 'னகர ஒற்றே ஆடூஉ அறிநிலை'[5] என்றார் தொல்காப்பியர். 'னகர ஒற்று ஈறு உயர்திணை ஆண்பால் ஒருமையைச் சுட்டுவதாகும். வள்ளுவர் அறத்துப்பாலில் னகர ஒற்று ஈறு வரும் பல குறள் பாக்களை எடுத்துக் காட்டியுள்ளார். காட்டாக, 'மனத்துக் கண்மாசிலன்' 'ஒருவற்கு - உயற்பால தோரும் பழி' என்னும் குறட்பாவில் வரும் 'ஒருவற்கு' என்னும் சொல்லிற்குப் பரிமேலழகர் 'ஒருவனுக்கு' என்றே பொருள் உரைக்கின்றார்.

பொருட்பாலில் முதலாக அமையும் அதிகாரம் இறைமாட்சி. அரசனின் செங்கோன்மை பற்றிக் கூறுவது. அரசனை முன்மாதிரியாக வைத்துப் பொருட்பால் கருத்துக்களையெல்லாம் முறையாகப் பாடியுள்ளமை இவண் நினையத்தகும். பரிமேலழகர் பொருட் பாலுக்கு முன்னுரையாக உரை எழுதும் போது "இனி இல்லறத்தின் வழிப்படுவன வாய் பொருள் இன்பங்களுள் இருமையும் பயப்பதாய பொருள் கூறுவான் எடுத்துக் கொண்டார். அதுதன் துணைக்காரணமாய அரசன் நீதி கூறவே அடங்கும். அரச நீதியாவது காவலை நடாத்தும் முறைமை. அதனை அரசியல் அங்கவியல் ஒழிபியல் என மூவகைப் படுத்தும். மலர்தலை உலகிற்கு உயிரெனச் சிறந்த அரசனது இயல்பு இருபத்தைந்து அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி முதற்கண் இறைமாட்சி கூறுகின்றார்."[6] பொருள் பாலுக்கு முன்னுரை வழங்கிய பரிமேலழகர் அதுபோன்று அறத்துப்பால் உரைப்பாயிர இறுதியில்.

"இல்லறமாவது இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற நெறிக்கண்நின்று, அதற்குத் துணையாகிய கற்புடைய மனைவியோடும் செய்யப்படுவது. ஆகலின் அதனை முதற்கண் கூறுவான் தொடங்கி எடுத்துக் கொண்ட இலக்கியம் இனிது முடிதற் பொருட்டுக் கடவுள் வாழ்த்துக் கூறுகின்றார்".[7] என வரும் உரைத் தொடரில் தனிமனித வாழ்க்கைக்கு அடித்தளமாக விளங்கும் இல்லறத்தின் சிறப்பினை எடுத்தோதுவது சிந்திக்கத் தக்கது. வாழ்க்கையைத் தொடங்கும் தனியொருவன் முதற்கண் செய்ய வேண்டுவது என்ன? என்ற வினாவிற்கு விடைதரும் முகத்தால் உள்ளம் தூய்மையாக இருத்தல் வேண்டும் என்கின்றார் வள்ளுவர்.

''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்''[8] வாழ்க்கையில் முன்னேற்றம் தேவை என்ற நிலையில் ஒருவனுக்கு அறமுயற்சி அவசியமாகிறது. அறத்தைச் செய்யாமல் மறந்தாலும் அல்லது விட்டுவிட்டாலும் அவனைப்பழிவந்தடையும்.

செயற்பால தோரும் அறனே ஒருவற்கு
உயற்பாலதோரும் பழி [9]

என அறிவுறுத்துவார் வள்ளுவர் இல் வாழ்க்கையின் அடிநாதமாக அமைவது அறநெறிக் கொள்கைகளே. அதனால் 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை' என்பார்[10] மேலும் சமுதாயத்தில் ஓர் அங்கமாகத் திகழும் மனிதனின் செயல்பாடுகள் அனைத்தும் ஒவ்வொருவரின் பார்வைக்கும் உட்பட்ட காரணத்தாலும் 'பிறன் பழிப்பது' வந்துவிடக் கூடாதென்று எண்ணிய திருவள்ளுவர் மேற்சுட்டிய பாவில் அத்தொடரை அழுத்தத் திருத்தமாகச் செல்லி வைத்தார். அத்தகைய கூடா ஒழுக்கத்தைப் போற்றாத வகையில் பிறரின் பார்வைக்கு உட்படாத போதுதான்,[11] இங்ஙனம் அன்பையும் அருளையும் ஒருங்கிணைத்து வாழும் மனிதன் தனக்குப்பிறகு எச்சமில்லாது வாழும் வாழ்க்கையும் தேவைதானா? எனத் தெளிகின்றபொழுது,

மங்கலம்என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு [12]

என்னும் குறளை நினைத்து இல்லறத்தின் மாண்பைப் பலரறியச் செய்கின்றான். தன்னை நாடிவரும் விருந்தினர்களை இன்முகத் தோடு வரவேற்கத் துணிகின்றான்.

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு[13]

வீடு நோக்கி வந்த விருந்தினர்களை வரவேற்க முடியாத கண்ணகி தான் அப்போது பெற்ற துயரத்தை "எழுகென எழுந்தாய் என்செய்தனை"[14] எனக் கேட்ட கோவலனுக்கு "தொல்லோர் சிறப்பின் -விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"[15] எனக் கூறும் கண்ணகியின் பதிலுரையில் விருந்தினர்களின் சிறப்பு உணர்த்தப்படுகிறது. மெல்ல மெல்லக் கடந்து போகும் இல்லறத்தின் பெரும்பயன் குழந்தைப் பேறு ஆகும். மாண்ட மனைவியொடும் மக்களோடும் நிறைவான குடும்பத்தில் வாழுமொருவன் தன் மகனைச் சான்றோர் அவையில் முந்தியிருக்கச் செய்கின்றான். தாயோ தன் மகனை அறிவுடையோர் சான்றோரெனப் பாராட்டும் பண்பினைக் கேட்டு உவக்கின்றாள். போற்றுவார் போற்றிய காலத்தும் தூற்றுவார் தூற்றிய நிலையிலும் இல்லறத்தான் பணிவுடையவனாகவே இருக்கத் தலைப்படுகின்றான். அப்பணி வுடைமையைத் தன்னுடைய அணிகளன் களாகவும் ஏற்றுக்கொள்கின்றான். உயர்வு தாழ்வின்றி எல்லா மக்களோடு பழகும் நிலையில் அவர்செய்த உதவியை மறக்கல்லை. நன்றி கொன்ற மகனாக வாழ விரும்பாத மனிதன் நடுவு நிலைமையினின்றும் பிறழாது வாழும் போது அவன் உயர்ச்சி பெறுகின்றான். அவனின் செல்வம் அவனுடைய வழியில் உள்ளார்க்கும் பாதுகாவலாக அமைகிறது.

செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து[16]

இதுமட்டுமா? இல்லற வாழ்க்கையில் சிறிதும் நெகிழ்ந்துவிடாது அதன்நெறிகளைத் தவறாமல் போற்றும் ஒருவனுடைய அடக்கம் மலையைவிட உயர்ந்தது என்கின்றார் வள்ளுவர்.

நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது[17]

இவ்வாறு ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கைக்கும் வளர்ச்சி நிலையைப் படிப்படியாக எடுத்துக்காட்டும் வள்ளுவர் தனிமனித உயர்வு சமுதாயத்தை உயர்த்த வல்லது என்கின்றார். 'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' என்பதுபோல தனிமனிதனின் வளர்ச்சியும் சமுதாய உயர்வுக்கு உறுதுணையாக அமையும் என்பது வள்ளுவம்.

'நிச்சயமாக மனிதனை மிக அழகிய அமைப்பில் நாம் படைத்தோம்'[18] எனத்திருக்குர் ஆன் எடுத்தோதுவதும் இவண் சிந்திக்கத்தக்கது.

அடிக்குறிப்புகள்

1. கணியன் பூங்குன்றன் - புறநானூறு பாடல் 192.
2. திருவள்ளுவர் - திருக்குறள் - கடவுள்வாழ்த்து குறள் 1.
3. திருக்குர் ஆன் - 8:7:86.
4. செல்வகணபதி. எஸ் - ஒப்பிலக்கிய நோக்கில் தமிழிலக்கியம் பக் 138.
5. தொல்காப்பியர் - தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - கிளவி யாக்கம் நூற்பா 5.
6. திருக்குறள் - பொருட்பால் - அரசியல் - முன்னுரை.
7. மேலது - அறத்துப்பால் - உரைப்பாயிரம் - முன்னுரை.
8. திருவள்ளுவர் - திருக்குறள் - அறத்துப்பால் - அறன்வலியுறுத்தல் - குறள் 34.
9. மேலது - மேலது - மேலது - குறள் 40.
10. மேலது - மேலது - இல்வாழ்க்கை - குறள் 49.
11. திருவள்ளுவர் - திருக்குறள் இல்வாழ்க்கை எண் 50.
12. மேலது - மேலது - வாழ்க்கைத்துணை நலம் எண் 60.
13. மேலது - மேலது - விருந்தோம்பல் எண் 86.
14. இளங்கோவடிகள் - சிலப்பதிகாரம் - கொலைக் களக்காதை வரி 70.
15. மேலது - மேலது - வரி 73.
16. திருவள்ளுவர் - திருக்குறள் நடுவுநிலைமை எண் 112.
17. மேலது - மேலது - அடக்கமுடைமை எண் 124.
18. திருக்குர் ஆன் - 30: 95: 4

வல்லார் யார் வள்ளுவரல்லால்?

பேராசிரியர் முனைவர் கு. சுந்தரமூர்த்தி,

'சித்தாந்த நன்மணி' 'தொல்காப்பியச் செல்வர்' என்றெல்லாம் தமிழுலகத்தில் போற்றி ஏத்தப்படும் இவர் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் பல்லாண்டுகள் பணியாற்றியவர். தருமபுரம் சைவசித்தாந்த ஆய்வு மன்றத்தில் இப்போது சிறப்பு நிலைப் பேராசிரியராக அருந்தொண்டு ஆற்றிவருகிறார். இவர் பேசாத மேடைகள் இல்லை. இவரால் பதிப்பிக்கப்பெற்ற இலக்கணம் இலக்கியம் சைவசித்தாந்த சாத்திரம் முதலிய நூல்கள் தமிழறிவார்க்கு உற்றதுணையாக உள்ளன. வள்ளுவத்துக்கு இலக்கியமான வாழ்வு இவர்தம் வாழ்வு எனலாம்.

இலக்கிய உலகின் தந்தை எனக் கருதுதற்கு உரியவர் திருவள்ளுவர் ஆவர். தனிமனித வாழ்வாயினும், சமுதாய வாழ்வாயினும், இல்லறத்தாராயினும், மேலாய வீடாயினும், சிற்றின்பமாயினும், பேரின்பமாயினும் இன்னும் உலகில் அறிந்தும், ஆய்ந்தும், உணர்ந்தும், தெளிந்தும் அறியத்தக்க பொருள்கள் எப்பொருளாயினும் அவை அனைத்தையும் வகைப்படுத்தி, வல்லாரும் வல்லுநரும் ஒருங்கு உணருமாறு அருளிச் செய்தவர் திருவள்ளுவர் ஒருவரே ஆவர். அப்பெருமகனாரை "ஒருவன் என்னும் ஒருவன் காண்க" என வரும் திருவாசகத் தொடரால் போற்றி மகிழலாம்.

தாம் எடுத்துக் கொண்ட நூல் இனிது நிறைவேறுவதற்காகக் கடவுள் வாழ்த்துக் கூறினார் பலர். ஆனால் திருவள்ளுவரோ உலக மக்கள் அனைவரும் 'ஒருவனே தேவன்' என்பதை உணரவும், வழிபடவும், ஆமாறு கூறி அருளுகின்றார். இறைவனை 'ஆதிபகவன்' எனக்குறிக்கும் முகத்தன், அவன் தோற்றமில் காலத்தவன் என உணரலாம். 'வாலறிவன்' என்பதால் அவன் ஒருவனே விளங்கிய அறிவன் என அறியலாம். அவனது புகழைக் கூறினார் இருவினையும் சேரார் என்பதால், அவன் ஒருவனே வினையின் நீங்கியவன் என்பதையும் அறியலாம். இனி அப்பெருமானை 'வேண்டுதல் வேண்டாமை இலான்' என்றும், 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்றும், 'தனக்குவமை இல்லாதான்' என்றும் 'அறவாழி அந்தணன்' என்றும் 'எண்குணத்தான்' என்றும் 'இறைவன்' என்றும் குறிக்கும் முகத்தான் இறைவனின் பண்புகளனைத்தையும் ஒருங்குணரலாம். வினையின் நீங்கியவன் அவன் ஒருவனே எனக் குறிக்கும் முகத்தான் உயிர் அவ்வினை வயப்பட்டு உழலும் தகையது என்பதைப் பெறவைத்தார். "இருள் சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு" என்பதால் அவ்வினைதாமும் இருவகையன என்பதையும், அவ்விரண்டுமே உயிர்கள் மேன்மேலும் பிறத்தற்குக் காரணமாகின்றன என்பதையும் உணர வைத்தார். அவ்விரு வகை வினையினின்றும் நீங்கிப் பிறப்பறுக்கவும், நிறைவாக உயிர் வீடுபேற்றினை எய்தி இன்புறவும் செயத்தக்கன அப்பெருமானை இடையறாது நினைத்தலும், இடையறாது. அவன் பொருள் சேர் புகழை வாழ்த்தலும், அப்பெருமானின் திருவடிகளை வணங்கலுமேயாம் என்பதை ஏழு

குறட்பாக்களால் உணர்ந்துகின்றார். மனத்தால் நினைத்தலை மூன்று, ஆறு, ஏழு, எட்டு, பத்து ஆகிய குறள்களிலும், பொருள் சேர் புகழ்புரிதல் செய்தலை ஐந்தாவது குறளிலும், வணங்குதலை ஒன்பதாவது குறளிலும் கூறி அருளுகின்றார். இம்மைப்பயனாக இடும்பை நீங்கவும் மனக்கவலை மாற்றவும் அப்பெருமானை இடையறாது நினைத்தலே தக்க வழியாம் என்பதை நான்கு, ஏழு ஆகிய குறள்களால் கூறி அருளுகின்றார். இனி இப்பத்திமை நெறிக்கு அடித்தளமாக அமைய வேண்டுவது சீரிய நல்லொழுக்கமேயாம் என்பதை ஆறாவது குறளில் குறித்துக்காட்டுகின்றார். முதற் கண்ணமைந்த கடவுள் வாழ்த்து ஒன்றிலேயே உயிர் இறையருளால் பெறத்தக்க சீர்மையையும் சிறப்பையும் முற்ற உணர்த்தியுள்ளமை அறிந்து இன்புறுதற்குரியது. சமயநெறி சார்ந்தார் அனைவர்க்கும் இப்பொதுமை நெறி ஏற்றுப் போற்றற்குரியதாகும்.

தமிழர் வாழ்வியல் நெறியில் இல்லறம் துறவறமாகிய இருவகை நெறிகளும் பண்டைக் காலந்தொட்டே இருந்து வந்துள்ளன.. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில், செய்யுளியல் நீங்கலாக உள்ள அனைத்து இயல்களிலுமே இல்லறம் இனிது இயம்பப்படுகின்றது. பண்டைக்காலத்தே துறவறம் இருவகை நெறியில் அமைந்து இருந்தது. ஒன்று இல்லறத்தின் வழிவாராத் துறவாகும். பிறிதொன்று இல்லறத்தின் வழிவந்த துறவாகும். இவற்றுள் முன்னையதை 'மறுவில் - செய்த மூவகைக்காலமும் நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்', 'நாலிரு வழக்கில் தாபதப்பக்கமும்', 'அருளொடு புணர்ந்த அகற்சியானும்', 'காமம் நீத்த பாலினானும்' என வருவனவற்றானும், பின்னையதை மக்களோடு மகிழ்ந்து மனையறம் காத்து மிக்க காம வேட்கை தீர்ந்துழி, தலைவனும் தலைவியும் தம்பதி நீங்கித் தொலைவில் சுற்றமொடு துறவறம் காப்ப' என்பதனாலும் தொல்காப்பியர் கூறுகின்றார். திருவள்ளுவனாரும் முன்னையதை நீத்தார் பெருமை எனும் அதிகாரத்தாலும். பின்னையதை ஐந்து முதல் இருபத்து நான்கு வரையுள்ள அதிகாரங்களாலும் கூறி அருளுகின்றார். 'இருமை வகை தெரிந்து ஈண்டறம் பூண்டார்', 'உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்' என்றெல்லாம் துறவியர் பண்புகளைக் கூறியவர், அவரே செயற்கரிய செய்யும் பெரியரும் ஆவர் என அவர் பெருமையைத் தொகுத்தம் கூறுகின்றார். இவர் மாட்டே உலகம் அமைந்துள்ளது என்றும், இத்தகையோரே வரன் என்னும் வைப்பிற்கோர் வித்தாவர் என்றும் கூறுகின்றார். இல்லறத்தின் வழிவந்த துறவியாரை இருபத்தைந்து முதல் முப்பத்து ஏழாவது அதிகாரம் வரை கூறியருளுகின்றார். ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் இத்துறவியார் பற்றற்றான் பற்றினையே பற்றி நிற்பர். நிறைவாக இவரே பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருளைக் கண்டு மகிழ்வார் என்றும் கூறுகின்றார். இனி அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை எனக்கூறி அவ்வறத்தைச் சிறப்பிப்பவர், அதற்குத் துணை ஆவார் வாழ்க்கைத் துணைவியரேயாவார் என்றுகூறி, மக்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந்நன்றியறிதல், முதலிய நற்பண்புகளைக் கொண்டும், புறங்கூறல் அழுக்காறுபடுதல் முதலிய தீக்குணங்களை விலக்கியும் வாழுங்கால், நன்மை செய்தற்குப் பெரிதும் விரும்பியும் தீமை செய்தற்குப் பெரிதும் அஞ்சியும் வாழவேண்டும் என்று கூறுகின்றார். 'செல்வத்துப்பயனே ஈதல்' என்பர் சங்க காலப்புலவர். திருவள்ளுவரோ இவ்வாழ்வின் பயனே 'ஈதலும் இசைபட வாழ்தலுமாம்' என்றுகூறி அருளுகின்றார். இவ்வகையில் இவ்விரு அறங்களையும் முழுமையும் தலைமையும் பெறக் கூறியவர் திருவள்ளுவரே ஆவர்.

பொருட்பாலில் ஒரு குடிமகனாக வாழ்வான் எவ்வெவ் நன்மைகளைக் கொள்ள வேண்டும் எவ்வெத் தீமைகளைத் தள்ள வேண்டும்? என்பதைப் பிற்பகுதியிலும், இத்தகைய குடிமக்கள் பலரையும் ஆளும் அரசற்கு நல்லமைச்சு, நல்லநாடு, நல்ல அரண், நன்னெறியில் வந்த பொருள், நல்ல வீரமிக்க படைகள் ஆகிய அனைத்தும் வேண்டும் என்பதை முற்பகுதியிலும் மிகச் செவ்விதாகவும் முழுமையாகவும் கூறி அருளுகின்றார். ஒற்றர்களைப் பற்றி கூறுங்கால் 'வினைசெய்வார் தம் சுற்றம் வேண்டாதார் என்றாங்கு அனைவரையும் ஆராய்வது ஏற்று' எனக் கூறியிருப்பது எத்துணை நுண்மையுடையது என்பதை இக்காலத்திய வாழ்வியல் கொண்டு நன்கறிகின்றோம். ஒற்றரைக் கொண்டு ஆராயத் தக்கவர்களில் பகைவரை மூன்றாவதாக வைத்தவர், தம் கீழ்ப் பணி செய்வாரையும், தம் சுற்றத்தாரையும், முறையே முதலாவதும், இரண்டாவதுமாக வைத்துக்கூறிய அருமை முற்காலத்துள்ளார் அறிந்ததினும் இக்காலத்துள்ளார் அறிந்தறிந்து இன்புறுதற்கு ஏதுவாகிறது. இது போன்றே 'தூது' செல்வார்க்குரிய பண்புகளாக 'அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம் பண்புடைமை தூதுரைப்பான் பண்பு', 'அறிவுருவாராய்ந்த கல்வியிம் மூன்றன் செறிவுடையான் செல்க வினைக்கு' எனக்கூறியிருப்பனவும் மிக ஒண்மையும் திண்மையும் உடையனவாம். மன்னரைச் சேர்ந்தொழுகுவார்க்குத் 'தீக்காய்வார் போல்க' எனக்கூறிய அறமும், 'கடுத்தபின் தேற்றுதல் யார்க்கும் அரிது' எனக்கூறிய அறமும் என்றும் போற்றி ஒழுகுதற்குரியவாம். செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் மன்னரைச் சார்ந்து ஒழுகுவார்க்கன்றி, அனைவரிடத்துமே ஒப்பக்கடைப்பிடித்தற்கு உரியவாம் ஆதலின் அதனை 'ஆன்ற பெரியாரகத்து அவித்தொழுகுக' எனப் பொதுப்படவே கூறியருளினார். 'இனையர் இனமுறையர் என்று இகழார் நின்ற ஒளியோடு ஒழுகப்படும்' என்ற அறமும் பொதுப்பட அனைவரிடத்துமே ஒப்பக் கடைப்பிடித்தற்குரியதாம். நாடு என்னும் அதிகாரத்தில் 'நாடென்ப நாடா வளத்தன' என்றது எல்லா வகையானும் ஒரு நாடு தன்னிறைவு பெற்று விளங்க வேண்டும் என்பதை அறிவுறுத்துதற்காகும். அவ்வாறு தன்னிறைவு பெற்றிருப்பினும் நெறிதிறம்பாத நல்லாட்சி அமையாதாயின் எத்துணையும் பயன் இன்றாம் எனக்கூறியிருப்பது ஆழ எண்ணத்தக்கதாம். ஆதலால் தான் நகரச்சிறப்புக் கூறவந்த சேக்கிழார் பெருமானும், அநபாயன் வாயிலாகப் பெற்ற வேந்தமைவு ஒன்றையே அப்பகுதியில் வைத்துக் கூறியருளினார் என்பதும் அறியத்தக்கதாம். கள்ளுண்டலை நீத்தல் வேண்டும் எனக்கூறும் திருவள்ளுவர் பலவாறாகக் கூறியும் திருந்தாதாரைக்கண்டு, களித்தானைக் காரணம் காரணம் காட்டுதல் 'கீழ்நீர்க்குளித்தானைத் தீத் துரீஇயற்று' எனத் தமக்குத்தாமே அமைதி கொண்டவர், நிறைவாகக் கள்ளுண்பான் எவனோ அவனை 'கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால் உள்ளான் கொல் உண்டதன் சோர்வு' எனக்கூறி, கள்ளுண்பான் திருந்துமாற்றிற்கு வழியும் கூறியிருளுகின்றார். இனி மருந்தென்னும் அதிகாரத்தைக் காணுங்கால் அவர்தம் பேரறிவு பெரிதும் வியக்கத்தக்கதாய் உள்ளது. நோய் வருவதற்குக் காரணமும் மனமும் உணவுமே ஆம். இவற்றுள் முன்னையதாய மனம் திருந்துமாற்றிற்கு 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்' எனத் தொடங்கி மனங்கொளற்குரிய அறங்கள் பலவற்றையும் பல்லாற்றானும் விரிவாகக் கூறினார். உணவு வகையில் திருந்துதற்குரிய செயற்பாடுகளை 'மருந்து' எனும் அதிகாரத்தில் மிக அழகாக ஆழமாக வற்புறுத்திக் கூறுகின்றார். 'அற்றால் அளவறிந்துண்க', 'அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல துய்க்க துவரப்பசித்து', 'மாறுபாடில்லாத உண்டி மறுத்து உண்க', 'தீயளவின்றித் தெரியாது உண்ணற்க;' என்றெல்லாம் கூறியவர், யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின் மருந்தென ஒன்றே

வேண்டாவாம்' என முடிவாகக் கூறியருளுகின்றார். இனி இவ்வதிகாரத்தில் மருந்தென்பதோடு. மருத்துவருக்குரிய இலக்கணமும் கூறப் படுகின்றது. 'நோய் நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்', 'உற்றான் அளவும் பிணியளவும் காலமும் கற்றான் கருதிச் செயல்' என வரும் இரு அறவுரைகளும் இக்காலத்திற்கு மடெடுமல்ல எக்காலத்திற்கும் எவ்வகையான மருத்துவமும் இன்றியமையாது வேண்டப்படும் பேரறமாகும். இனி இவ்வதி காரத்தில் கூறப்படும் ஒரு புதுமையையும் அறியத் தக்கது. மருந்தெனின் மருத்துவர் நோயாளிக்குக் கொடுக்கும் மருந்தொன்றையே கருதுவார். ஆனால் திருவள்ளுரோ நோய்க்கு மருந்து அவன் உண்ணும் மருந்து மட்டுமல்ல. நோயாளியே நோய்க்கு மருந்தாகவும் இருக்கின்றான், அவனுக்கு உறுதுணையாக இருப்பவனும் நோய்க்கு மருந்தாக இருக்கின்றான், நோய்தீர்க்கும் மருத்துவனும் மருந்தாக இருக்கின்றான், என்று கூறும் அமைவு அருமையினும் அருமையாகும். பரிமேலழகர் இப்பொருண்மைகள் நான்கையும் மேலும் நான்கு வகைகளில் விளக்கியருளுவர். இவ்வருமையும் எண்ணத் தக்கதாம். இனிப் பொருட்பாலின் இறுதியில் இரவச்சம் எனும் தலைப்பில் கூறப்பெறும் கருத்துக்கள் இக்காலத்தே மிகவும் எண்ணற்குரியவாம். எக்காலத்தும் எவ்வகையிலும் பிறர் இடத்து இரந்து உண்பது தன்மானத்திற்கு இழுக்காம். எங்கே இலவசம் என நாடிக் கொண்டிருக்கும் நம் காலத்தில் உள்ளவர்கள், இவ்வரிய தலைப்பின் கீழ் உள்ள திருக்குறள்களைக் கருத்தில் கொள்ளுதல் நலம். தண்ணீர்ப்பந்தல் வைத்தல், ஏழைகளுக்கு உணவளித்தல் போன்ற அறங்களைக் கூடத் தத்தம் உழைப்பால் பெற்ற பொருளைக் கொண்டே செய்ய வேண்டுமெனத் திருவள்ளுவர் வற்புறுத்து கின்றார். "ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு இரவின் இளிவந்த தில்" என்பது அவர் தரும் அறவுரையாகும்.

இனி ஒருவன் ஒருத்தியோடு வாழும் வாழ்வியலை இன்பத்துப் பாலில் மிக அழகாக விரித்துக் கூறுகின்றார் ஆசிரியர். பெண்பாலாரை வருணித்தே பலரும் இன்பியல் கூறினார். திருவள்ளுவனாருக்கோ தாம் எடுத்துக் கொண்ட பாவகையும் அதற்கு இடம் தரவில்லை. அவர்தம் திருவுள்ளமும் அதனை ஏற்கவில்லை. 'முறிமேனி முத்தம் முறுவல் வெறி நாற்றம் வேலுண்கண் வேய்த்தோர் அவட்கு' என்ற அளவே அவர் வருணனை அமைந்துள்ளது. புலவி, புலவி நுணுக்கம், முதலான இயல்களில் எல்லாம். அவர்தம் தனித்தன்மையும் தகவும் மிக்கக் கருத்துக்கள் பலவாகக் காணக்கிடைக்கின்றன. இவ்வாறெல்லாம் எண்ணுகின்ற பொழுதுதான்,

பரந்து பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தோறுஞ் சேரச் - சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்

எனவரும் அரிசில் கிழாரின் திருவாக்கு எத்துணை மெய்ம்மையாய் உள்ளது என்பதை அறியலாம்.

பேரா. க.த. திருநாவுக்கரசு பேசுகிறார்..

நான் எடுத்த கணக்கெடுப்பில் எனக்குக் கிட்டிய விவரம் இதுவே திருக்குறள் இதுவரை 13 இந்திய மொழிகளிலும், 12 ஐரோப்பிய மொழிகளிலும் 7 ஆசிய மொழிகளிலும் மட்டுமே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்தியாவின் பிற மாநில மக்களும் ஏனைய உலகமக்களும் திருக்குறளை இன்னும் அறிந்துகொள்ளும் வகையில் நம் செயற்பாடுகள் அமைதல் வேண்டும்.

திருக்குறள் பதிப்புகள்

1812: திருக்குறள் மூலப்பாடம் - தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனார் அருளிச்செய்தது. இது பொத்தகம் கலியுகாப்தம் ஆங்கிரலு - தொண்ட மண்டலம் சென்னைப் பட்டினத்தில், தஞ்சை நகரம் மலையப்பப் பிள்ளை குமாரன் ஞானப்பிரகாசனால் அச்சிற் பதிக்கப்பட்டது. மாசத தினச்சரிதையின் அச்சுக் கூடம். (இந்நூல் குடந்தை கோபாலராவ் நூலகத்தில் உள்ளது)

1838: திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையைத் தழுவிச் செய்யப்பட்ட உரையும், சரவணப் பெருமாளையர், சென்னை.

1840: குறளின் அறப்பாலில் உயச (24) அதிகாரமும் அவற்றிற்குப் பரிமேலழகர் உரையும் இராமானுச கவிராயர் செய்த வெள்ளுரையும் புத்துரையும் - துறு ஐயர் செய்த இங்கிலிஸ் மொழிபெயர்ப்பும், அமெரிக்கன் மிசியோன் அச்சுக்கூடம், சென்னை. (கோ நூல்.குட)

1842: திருக்குறள் - மூலம் யூனிவர்சிட்டியென்னுஞ் சகல சாஸ்திர சாலைத் தமிழ்த் தலைமைப் புலவர் மழைவை மகாலிங்கையரால் பரிசோதித்து சைதாபுரம் உமாபதி முதலியார் கல்விக் களஞ்சிய வச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. (சாது சேஷையா - குட)

1849: திருக்குறள் - பரிமேலழகர். எம். வீராசாமி பிள்ளை, சென்னை.

1849: திருக்குறள் சரவணப் பெருமாளையர் உரை, பரிமேலழகர் உரையைத் தழுவியது. களத்தூர் வேதகிரி முதலியார், இரத்தின நாயக்கர் அண்டு சன்ஸ், சென்னை.

1850: திருக்குறள் மூலமும் உரையும், திண்டிக்கல் முத்து வீரப்பிள்ளை உத்திரவின்படி வேதகிரி முதலியாரால் பதவுரை, கருத்துரை, விசேடவுரை கொடுத்த பின்பு, மதுரை சிவில் சேஷன்கோர்ட்டு ஹெட்ரையிட்டர் முத்துக்கிருஷ்ண பிள்ளையவர்களால் சிந்தாதிரிப்பேட்டை சண்முக விலாச அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டன. இப்புத்தகம் மேற்படி முதலியார் குமாரர்கள் ஆறுமுக முதலியாராலும் நிறைவேற்றப்பட்டது. (சாது சேஷையா - குட)

1851: தமிழ் வேதமாகிய திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், இராமநாதபுரம் சமஸ்தானம் பொன்னுசாமி தேவரவர்கள் வேண்டுகோளின்படி யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரால் பல பிரதி ரூபங்களைக் கொண்டு பரிசோதித்து சென்னைப் பட்டணம் வாணி நிகேதன அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டன. (சாது சேஷையா - குட)

1856: இல் இதுவே "மறுபதிப்பு" செய்யப்பட்டது. பதிப்பாசிரியர் கேசவ முதலியார் பிரபாகர அச்சுக்கூடம், சென்னை.

1859: திருக்குறள் மூலம், ஊ. புஷ்பரதச் செட்டியார், கலா ரத்னாகரம் அச்சுக்கூடம், சென்னை.

1861: திருக்குறள் பரிமேலழகர் உரை சரவணப் பெருமாளையர் உரை விளக்கம் கொண்டது. கந்தசாமி பிள்ளை திருநெல்வேலி.

1861: தமிழ் வேதமாகிய திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், திருவள்ளுவமாலை சரவணப் பெருமாளையர், ஆறுமுக நாவலர் பதிப்பு, சென்னை பட்டணம் (1861, 1875,1922 பதி 6)

1861: திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், ஆறுமுக நாவலர், வாணி நிகேதன அச்சுக்கூடம், சென்னை. (தமிழ்.ப.கழகம்)

1863: திருக்குறள் அதிகார சொரூப சூசகமும் குறளுதாரணமும் கருத்துரையும் சேர்ந்த ஆத்திசூடி, கொன்றை வேந்தன் மூலமும் உரையும், அனுக்காவூர் கந்தசாமி முதலியாராலும், ஷை குறளதிகார சொரூப சூசகமியற்றிய திருவல்லிக்கேணி வரதப்ப முதலியாராலும், புரசை அஷ்டாவதன சபாபதி முதலியார் முன்னிலையில் முனிசாமி முதலியார் மெஞ்ஞான சூரியோதய விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டன. சென்னை.

1869: திருக்குறள் சரவணப் பெருமாளையர் உரை, கருணானந்த சுவாமிகள், கேசவ முதலியார், பிரபாகர் அச்சுக்கூடம், சென்னை.

1870: திருக்குறள் - (நூறு குறள்) கிருஸ்டியன் நாலட்ஜ் சொசைட்டி பிரஸ் சென்னை.

1870: திருவள்ளுவரின் குறள், ஆர். எம். பாபு. சத்திய தீப அச்சுக் கூடம்

1873: திருக்குறள், பரிமேலழகர் உரையைக் கொண்டியற்றிய பதவுரை கருத்துரையுடன், கிட்டா குப்புசாமி நாயுடு, கவிரஞ்சனி அச்சுக்கூடம் சென்னை.

1873: குறள் மூலமும் உரையும், இ.எல்.எம், பிரஸ், தரங்கம்பாடி.

1873: திருக்குறள் - வேதகிரி முதலியார், கலைவியாக்கியான விளக்க அச்சகம் (பதி3)

1875: திருக்குறள் மூலம், வைத்திய லிங்கம் கிருஷ்ணசாமி பிள்ளை, சென்னை.

1875: திருக்குறள் சரவணப் பெருமாளையர் பரிமேலழகர் உரையைத் தழுவியது. எம். வீராசாமி பிள்ளை, சென்னை.

1878: திருக்குறள் மூலம், சீ. வீராசாமி நாயுடு, வித்தியா விநோதினி அச்சுக்கூடம், சென்னை.

1880: திருக்குறள் மூலம் டி.சி. பரசுராம முதலியார், பரப்பிரம்மம் அச்சியந்திர சாலை, சென்னை.

1884: திருக்குறள் சரவணப் பெருமாளையர் உரை, பரிமேலழகர் உரைத் தழுவல். பொன்னுச்சாமி முதலியார், சிதம்பரம்.

1885: திருக்குறள் மூலமும் பரிமேலழகர் செய்த இலக்கண உரையும், முருகேச முதலியார், கலா ரத்னாகரம், சென்னை.

1886: திருக்குறள் மூலம், ஜீவரக்ஷாமித்ர அச்சுக்கூடம், சென்னை.

1888: திருக்குறள் மூலம், ஆறுமுகநாவலர், சைவ வித்யாநுபாலன யந்திரசாலை சென்னை. (திருவள்ளுவ மாலையும் சேர்த்து) (சரசுவதி மஹால் நூலகம்)

1889: திருக்குறள் தமிழ் மூலமும் சுகாத்தியர் என்னும் டி.எம். ஸ்காட் ஆங்கில உரை, லாரன்ஸ் பிரஸ், சென்னை.

1893: திருக்குறள் மூலமும் கருத்துரையும், சுந்திர முதலியார், விக்டோரியா ஜீபிலி அச்சுக்கூடம், சென்னை.

1893: திருக்குறள் சரவணப் பெருமாளையர் உரை, பரிமேலழருரையைத் தழுவியது. இராகவது நாயுடு, சென்னை.

1900: திருக்குறள் - 701 - 800 குறட்குப் பரிமேலழகர் உரை, சென்னைப் பல்கலைக்கழகம்.

1904: திருக்குறள் மூலம் பரிமேலழகருரையும் விளக்கவுரையுடன், கோ. வடிவேலு செட்டியார், சென்னை.

1905: திருக்குறள் மூலம் - மனோன்மணி விலாசம் பிரஸ், மெட்ராஸ்.

1906: திருக்குறள் - கார்டன் பிரஸ், சென்னை.

1907: திருக்குறள் பரிமேழகர் உரையைத் தழுவி சரவணப் பெருமாளையர் ஆக்கிய உரை, சோமசுந்தர உபாத்தியாயர், பாரத விலாச அச்சுக்கூடம், சென்னை.

1908: திருக்குறள் மூலம், சுவாமிநாத பண்டிதர், சைவ வித்யாநுபாலன யந்திர சாலை, சென்னை.

1909: திருக்குறள் முதற்பாவின் பரிமேலழகருரை விளக்கம், பா. கங்காதரதேவர். பிரசிடென்சி அச்சுக்கூடம், சென்னை.

1909: தமிழ்வேதமாகிய திருக்குறள் வசனம், திருமுல்லைவாயில் பி.டி. ரத்தினம்பிள்ளை, திரிபுரசுந்தரி பிரஸ், சீர்காழி.

1909: திருக்குறள் மூலம் - வேதகிரி முதலியார் முன்னிலையில், பழனியப்ப செட்டியாரால் இருபாற்குப் பதவுரையும் காமத்துப்பாற்கு இவ்விரண்டுரையோடு பொழிப்புரையும் செய்து முத்தியாலுபேட்டை தியாகராச செட்டியாரால் மு. வீராசாமி நாயக்கரது கலைக்வியாக்கியான அச்சுக்கூடத்தில் அச்சில் பதிப்பிக்கப்பட்டன. (சிவகுரு - குட)

1910: திருக்குறள் பரிமேலழகர் உரை, மு. இராகவையங்கார், விவேகபானு முத்திராசாலை, மதுரை. (மு.கந்தசாமி கவிராயரால்) (சரஸ்வதி - நூல்)

1911: திருவள்ளுவர் குறள் - கரபாத்திர சிவபிரகாச சுவாமிகள் தொகுத்தது. வேதாந்த மனை சிந்தாமணியில் சேர்ந்தது. (1161 -1206) சென்னை.

1912: தமிழ் வேதமாகிய திருக்குறள் வசனம், மு.ரா. அருணாசலக் கவிராயர்.

1913: திருக்குறள் பரிமேலழகருரை - சரவணப் பெருமாளையர் முன் பரிசோதித்தது. மதுரை புது மண்டபம் புக்ஷாப், இ.மா.காபால கிருஷ்ணகோனாரால் சென்னை நிரந்தர விலாசம் பிரசில் பதிப்பித்தது.(சிவ - கோபால் - குட)

1913: திருக்குறள் மூலமும் உரையும் - திண்டிக்கல் முத்துவீரப்பபிள்ளை உத்திரவின்படி வேதகிரி முதலியாரால், இலக்கணக் களஞ்சிய அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1916: திருவள்ளுவர் திருக்குறள் (ஆங்கில மொழிபெயர்ப்பு) வ.வே.சு ஐயர் இயற்றியது.

1917: திருக்குறள் அறம், மணக்குடவர் உரை, வ.உ.சிதம்பரம்பிள்ளை, கே.ஆர், பிரஸ், தூத்துக்குடி.

1918: திருக்குறள், கணேச அச்சுக்கூடம் சென்னை.

1919: திருக்குறளின் பாயிரமும், பொன்னம்பலம் இராமநாதன் இயற்றிய இராமநாத தீபமும், நாவலர் அச்சுக்கூடம், யாழ்ப்பாணம்.

1919: திருக்குறள் பரிமேலழகருரையும், கோ. வடிவேலு செட்டியார் இயற்றிய தெளிபொருள் விளக்கமும், கருத்துரையும் குறிப்புரையும் - திருத்தமான இரண்டாம் பதிப்பு - மங்கலம் சண்முக முதலியாரால் சென்னை, கோமளேஸ்வரன்பேட்டை சச்சிதானந்த அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப்பட்டன. (ஆங்கில மொழி பெயர்ப்புடன்) (கோபால் ராவ் - குட)

1919: திருக்குறள் - பரிமேலழகர் உரை, முதற்பாகம் கோ. வடிவேலு செட்டியார், சச்சிதானந்த அச்சியந்திர சாலை, சென்னை.

1920: திருக்குறள் பரிமேலழகர் உரை, செ.மு. வேலு முதலியார், சென்னை தமிழ்ச்சங்கத்தர், சென்னை.

1920: திருக்குறள் தெளிபொருள் விளக்கப் பொழிப்புரையுடன் கா. சுப்பிரமணியப்பிள்ளை, எம்.ஏ.பி.எல்., எழுதியது.

1920: திருக்குறள்- எஸ். சபாரத்தின முதலியார் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தது.

1921: திருக்குறள் முதற்குறள் விருத்தி, அரசஞ் சண்முகனார், ம. சுந்தர பாண்டிய ஓதுவார், மீனலோசனி அச்சியந்திர சாலை, மதுரை.

1922: திருக்குறள் வசனம், டி.ஆர். திருவேங்கடம் பிள்ளை, குரு சரணாலயம், கனக சுந்தரம் பிள்ளை, சென்னை.

1923: திருக்குறள் விளக்கம் - எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர் எழுதியது - அலையன்ஸ் கம்பெனி பதிப்பு.

1924: திருக்குறள் விளக்கம் - கிருஷ்ணாம்பேட்டை குப்புசாமி முதலியார், சென்னை. (காளத்தீசுர முதலியார்) நான்காவது சஞ்சிகை.

1924: திருவள்ளுவர், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

1924: திருக்குறள் திரட்டும் - தெளிபொருள் வசனமும், மு.ரா. அருணாசலக் கவிராயர், பி.நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ், மதுரை.

1924: திருக்குறள் விளக்கம் - திருக்குறள் மூலமும் அதற்குப் பரிமேலழகர் உரையும், (முதற்பாகம் அறத்துப்பால்) கிருஷ்ணாம்பேட்டை, குப்புசாமி முதலியாரால், கா.ரா. காளத்தீசுர முதலியார், (ஷையார் மாணவர்) (சரஸ்வதி மஹால்)

1924: திருக்குறள் - சொற்குறிப்பும் அகராதியும், மார்க்க சகாயம் செட்டியார்.

1926: திருக்குறள் மணக்குடவர் உரை, கா. பொன்னுசாமி நாட்டார், நோபில் அச்சியந்திர சாலை.

1926: திருக்குறள் - காமத்துப்பால், கிருஷ்ணாம்பேட்டை குப்புசாமி முதலியார் சென்னை.

1928: திருக்குறள் குமரேச வெண்பா - முதற்பாகம், வேலாயுதம் பிரிண்டிங் பிரஸ், அத்துக்குடி.

1928: திருக்குறள் தெளிபொருள் விளக்கம் - கா. சுப்பிரமணியப்பிள்ளை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

1928: திருக்குறள் பரிமேலழகர் உரை, மணி. திருநாவுக்கரசு முதலியார், வாவிள்ள ராமசாமி சாஸ்துருலு அண்டு சன்ஸ், சென்னை.

1928: திருக்குறள் அறம் உரை - காயாமொழி குமரகுருபரர் கோல்டன் அச்சகம் சென்னை.

1929: திருக்குறள் உரை, கோ. வீராகவன், குமரன் அச்சகம், காஞ்சிபுரம்.

1930: திருக்குறள் மூலமும் தெளிபொருள் வசனமும், மதுரை மு.ரா. அருணாசலக் கவிராயர், மீனலோசினி அச்சியந்திர சாலை, மதுரை. (த.ப. கழகம்)

1930: திருக்குறள் குமரேச வெண்பா, (பொருட்பால்) தூத்துக்குடி.

1930: திருக்குறள் மூலமும் தெளிபொருள் வசனமும் மு.ரா. அருணாசலக் கவிராயர், சாந்தி நூலகம், சென்னை.

1931: திருக்குறட்சாரம் - 108 அதிகாரமும் வசனமும், டி.எஸ். பரமசிவன் பிள்ளை.

1931: திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், ஆர். மீனாட்சி சுந்தரம் பிள்ளை, பூமகள் விலாச அச்சுக்கூடம், சென்னை.

1932: திருக்குறள் மூலமும் பொழிப்புரையும் - (ஆங்கில மொழிபெயர்புடன்) ஏ. அரங்கநாத முதலியார் பதிப்பு.

1932: திருக்குறள் நாட்குறிப்பும் 366 - பொறுக்குமணிகள் - கருத்துரையுடன் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கடிதம்.

1933: திருக்குறள் மூலமும் உரையும், (ஆங்கில மொழிபெயர்ப்புடன்) ஆ. அரங்கநாத முதலியார், பி.என். அச்சுக்கூடம், மவுண்ட்ரோடு, சென்னை. (த.ப.கழகம்)

1933: திருக்குறள் அறத்துப்பால் - தண்டபாணி விருத்தியுரை, நாகை. சொ. தண்டபாணிப்பிள்ளை, சைவ சி.நூ.ப. கழகம். சென்னை (1956)

1933: திருக்குறள் குமரேச வெண்பா - பொருட்பால் - 3ஆம் பாகம், தூத்துக்குடி.

1935: திருக்குறள் அறப்பால் விருத்தியுரையுடன், வ.உ.சிதம்பரம் பிள்ளை, தூத்துக்குடி.

1935: திருக்குறள் (தமிழ்மறை) சைவ. சி.நூ.ப.கழகம், சென்னை.

1937: திருக்குறள் பரிமேலழகருரையும் விளக்கமும் ஆர். மீனாட்சி சுந்தரம் பிள்ளை, இரத்தின நாயக்கர் அண்டு சன்ஸ், சென்னை.

1937: திருக்குறள் பரிமேலழகருரையும் விளக்கமும் வை.மு. சடகோபராமானுஜாச் சாரியார், ஆர்.ஜி.அச்சகம், சென்னை. (அறத்துப்பால்)

1938: திருக்குறள் குமரேச வெண்பா, காமத்துப்பால், வேலாயுதம் பிரிண்டிங் பிரஸ், தூத்துக்குடி.

1938: திருக்குறள் பரிதி உரை, சென்னை.

1939: திருக்குறள் அறத்துப்பால் பாலருரை, பி.எஸ். சுப்ரமணியசாஸ்திரி முருகவிலாஸ், திரிசிரபுரம்.

1939: திருக்குறள் விரிவுரை - பாயிரம், திரு.வி.க. சாது அச்சுக்கூடம், சென்னை. (1956-பதி-3)

1941: திருக்குறள் - குறட்கு விரிவுரை: அறத்துப்பால் - இல்வாழ்க்கையியல், திரு.வி.க. சாது அச்சுக்கூடம், சென்னை. (1951)

1943: திருக்குறள் மூச்சீர்மணிகள், துடிசைக்கிழார், அ. சிதம்பரநாதன், கழகம், சென்னை.

1943: திருக்குறள் நாற்சீர்மணிகள், மு. ராஜாகண்ணனார். கழகம், சென்னை.

1944: திருக்குறள் மூலமும் அரும்பதவுரையும், சு.அ. இராமசாமிப்புலவர், ஒற்றுமை ஆபீஸ், சென்னை.

1944: திருக்குறள், சு.அ. இராமசாமிப்புலவர். சைவ.சி.நூற். கழகம், சென்னை.

1945: திருக்குறள் காமத்துப்பால் காலிங்கர் பரிப்பெருமாள் உரை, பழனியப்பப்பிள்ளை, திருவேங்கடேசுவரன் கீழ்க்கலை ஆராய்ச்சிக் கழகம், திருப்பதி.

1945: திருக்குறள் - தீபாலங்காரம் குறிப்புரை, பி.எச். சுப்ரமணிய சாஸ்திரி.

1947: திருக்குறள் பரிமேலழகருரை, சைவ.சி.நூற் கழகம், சென்னை.

1947: திருக்குறள் மூலமும் உரையும், திருவள்ளுவர் சங்கம், விருதுநகர்.

1947: திருக்குறள் - அறுபது, கருத்துரை, சைவ.சி.நூற். கழகம், சென்னை.

1947: திருக்குறள் - எழுபது, கருத்துரை, சைவ.சி.நூற் கழகம், சென்னை.

1947: திருக்குறள் - என்பது, கருத்துரை, சைவ.சி.நூற் கழகம், சென்னை.

1947: திருக்குறள் - நூறு, கருத்துரை, சைவ.சி.நூற் கழகம், சென்னை.

1947: திருக்குறள் - இருநூறு, கருத்துரை, சைவ.சி.நூற் கழகம், சென்னை.

1948: திருக்குறள் - ஐம்பது, கருத்துரை, சைவ.சி.நூற் கழகம், சென்னை.

1948: திருக்குறள் - காலிங்கம் பரிப்பெருமாள் உரை, திருக்குறள் பொருட்பால், அறத்துப்பால் குறைப்பகுதியுடன் பழனியப்பப்பிள்ளை திருவேங்கடேசுவரன் கீழ்க்காணும் ஆராய்ச்சிக்கழகம், திருப்பதி.

1949: திருக்குறள் கவிராஜ பண்டிதர் உரை, சக்ரவர்த்தி நயினார் பதிப்பு. சாது அச்சுக்கூடம், சென்னை.

1949: திருக்குறள் பொருட்பாலும் காமத்துப்பாலும் பாலருரை, பி.எச்.சுப்ரமிணய சாஸ்திரி, காஞ்சி காமகோடி கோசஸ்தானம், சென்னை. (திருப்பனந்தாள் கல்லூரி நூலகம்)

1949: திருக்குறள் காமத்துப் பால் விளக்கவுரை, வீ.முனிசாமி, சக்தி காரியாலயம், கோயம்புத்தூர்.

1949: திருக்குறள் மூலமும் தெளிவுரையும், ந.சி.கந்தையாப்பிள்ளை, ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம், பவளக்காரத்தெரு, சென்னை. (சிவகுரு - குட)

1949: திருக்குறள் தெளிவுரை (கையடக்கப் பதிப்பு) மு. வரதராசனார். சைவ.சித்.நூற் கழகம் சென்னை. (128ஆம் பதிப்பு - 1996)

1949: திருக்குறள் அறத்துப்பால் விளக்கம், ஆர். சாரங்கபாணி, லயோலா கல்லூரி, சென்னை.

1949: திருக்குறள் மூலமும் உரையும், சுகவனம் சிவப்பிரகாசன்.

1949: திருக்குறள் உரை விளக்கம், சைவ.சி.நூற் கழகம் சென்னை.

1949: திருக்குறள் மூலமும் உரையும் (பழைய உரை), சைவ.சி.நூற் கழகம், சென்னை.

1949: திருக்குறள் - ஆங்கில மொழிபெயர்ப்புடன், வி.ஆர். ராமச்சந்திர தீட்சதர், சர்.ஏ.ராமசாமி முதலியார் முன்னுரையுடன். அடையார் நூலகம், சென்னை. (சாதுசேசையா - குட)

1949: திருக்குறள் குழந்தையுரை, புலவர் அ.மு. குழந்தை, சிவலிங்கப்பதிப்புக்கழகம், ஈரோடு.

1950: திருக்குறள் உரை, மு.ரா.கந்தசாமி பிள்ளை, விவேகானந்தா அச்சகம், மதுரை.

1950: திருக்குறள் (திருக்குறள் நூற்றெட்டு), மறைவழி தழுவிய உரையுடன் கூடியது, காமகோடிகோஸ்தானம், சென்னை.

1950: திருக்குறள் உரைவளம், அறத்துப்பால், ச. தண்டபாணி தேசிகர், தருமபுர ஆதின வெளியீடு, தருமபுரம்.

1950: திருக்குறள் மணிவிளக்கவுரை - பகுதி1, பட்டுச்சாமி ஓதுவார், பழநியப்பா பிரதர்ஸ், சென்னை.

1950: திருக்குறள் மூலமும் தெளிபொருள் உரையும், பி.ரெத்தின நாயக்கர் சன்ஸ், சென்னை.

1950: திருக்குறள் மூலம், அருணாசலமுதலியார், சென்னை.

1950: திருக்குறள், வீ.முனிசாமி, திருக்குறள் அச்சகம், கடலூர்.

1950: திருக்குறள் மூலம் (ஆராய்ச்சிக் குறிப்புகநடன்), தி.கி. நாராயணசாமி நாயுடு, பொதிகைப் பதிப்பகம், கடலூர்

1950: திருக்குறள் - மணிதிருநாவுக்கரசு முதலியார், வாவிள்ள ராமசாமி சாஸ்துருலு அணட் சன்ஸ், சென்னை.

1951: திருக்குறள் பரிமேலழகர் உரை, பி.ரெத்தின நாயக்கர் சன்ஸ், சென்னை.

1951: திருக்குறள் உரைவளம் - பொருட்பால், ச. தண்டபாணி தேசிகர், தருமபுர ஆதினவெளியீடு, தருமபுரம்.

1951: திருக்குறள் மணி விளக்கவுரை - பகுதி2, பட்டுச்சாமி ஓதுவார், பழநியப்பா பிரதர்ஸ், சென்னை.

1951: திருக்குறள் பரிமேலழகருரையும் விசேச ஞானவிருத்தியும், கிருஷ்ணசாமி நாயுடு, மதுரை.

1951: திருக்குறள், ஈக்காடு சபாபதி முதலியார், திருமகள்கம்பெனி, சென்னை.

1952: திருக்குறள் உரைவளம் - காமத்துப்பால், ச.தண்டபாணி தேசிகர், தருமபுர ஆதினவெளியீடு, தருமபுரம்.

1952: திருக்குறள் தமிழ்மறை - குறிப்புரையுடன், கே.எம். வேங்கடராமையா. காசிமடவெளியீடு, திருப்பனந்தாள்.

1952: திருக்குறள் மூலம், திருமயிலை திருவள்ளுவர் கோயில், சென்னை.

1952: திருக்குறள் காமத்துப்பால் உரை, மயிலை. சிவமுத்து, அருட்பெருஞ்ஜோதி அச்சகம், சென்னை.

1952: திருக்குறள் - இந்தி மொழிபெயர்ப்பு, பி.டி.ஜெயின் காசிமடம், திருப்பனந்தாள்.

1952: திருக்குறள் நூற்பாயிரமும் விளக்கவுரையும், அர்ச்சுனனார், சுதர்சன மன்றம், சென்னை.

1952: திருக்குறள் மூலம், காசிமட வெளியீடு, திருப்பனந்தாள்.

1953: திருக்குறள் பொருட்பால் வை.சுந்தரேச வாண்டையார், திருவையாறு குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி. (த.ப.கழகம்)

1953: திருக்குறள், மயிலை. சிவமுத்து, மாணவர் மன்றம், சென்னை (1960, 68, 71, 73)

1953: திருக்குறள் பொருட்பால் உரை, மயிலை, சிவமுத்து, அருட்சோதி அச்சகம், சென்னை.

1953: திருக்குறள் சிறப்புரை, பால்வண்ணன், ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை.

1953: திருக்குறள் வசனம், பாலூர் கண்ணப்ப முதலியார், ஒற்றுமை ஆபிஸ், சென்னை.

1953: திருக்குறள் - பரிமேலழகர் உரை - கழகம், சென்னை.

1954: திருக்குறள், என்.எம். ராஜன், நாகர் கோவில்.

1954: திருக்குறள் உரை விளக்கம், ஜி. வரதராஜன், திருவள்ளுவர் நிலையம், புத்தூர், திருச்சி, பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி.

1954: திருக்குறள் - புது உரை, நாமக்கல் கவிஞர். வெ.ராமலிங்கம் பிள்ளை, இன்ப நிலையம், சென்னை.

1954: திருக்குறள் பரிமேலழகருரை, கஜபதி நாயகர், திருவள்ளுவர் ஆலயம், சென்னை.

1954: திருக்குறள் எளிய உரை, எம்.இ.வீரபாகு பிள்ளை, ஒற்றுமை ஆபீஸ், சென்னை.

1953: திருக்குறள் விளக்கவுரை, வெள்ளைச்சாமி நாடார், சதானந்த அச்சகம், விருதுநகர்.

1954: திருக்குறள் விவேக விருத்தியுரை, பார்த்தன், தெய்வமகன் விலாச அச்சகம், சென்னை.

1954: திருக்குறள் மணி விளக்கவுரை, பகுதி 3 பட்டுச்சாமி ஓதுவார், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

1954: திருக்குறள் பரிமேலழகர் உரை, காசிமட வெளியீடு, திருப்பனந்தாள்.

1955: திருக்குறள் மூலமும், மணக்குடவர் உரையுடன் இராமனுஜ சிவ சாம்பசிவ சர்மா, சென்னை.

1956: திருக்குறள் (வள்ளுவர் வாய்மொழியும், தெள்ளிய உரையும்) தி லிட்டில் பிள்வர் கம்பெனி, சென்னை.

1956: திருக்குறள் விளக்கவுரை, ஈக்காடு சபாபதி முதலியார், ஸ்ரீ மகள் கம்பெனி, சென்னை.

1956: திருக்குறள் விரிவுரை, தொகுதி 1 பாயிரம், திரு.வி.க. சாது அச்சுக்கூடம், சென்னை.

1957: திருக்குறள் அறத்துப்பால், வை. சுந்தரேச வாண்டையார். திருவையாறு, பாண்டியன் மின் அச்சகம், சிதம்பரம். (த.ப.கழகம்)

1957: திருக்குறள் சிறப்புரை, பால்வண்ணன் ஸ்ரீமகள் கம்பெனி, சென்னை.

1957: திருக்குறள் பரிமேலழகர் உரை, சக்தி காரியாலயம், சென்னை. (செப் - 11. முதல் பதிப்பு 15000 பிரதிகள் 10 நாட்களில் விற்றுத் தீர்ந்தன.)

1957: திருக்குறள் காமத்துப்பால், வீ.முனுசாமி, சக்தி காரியாலாயம், கோவை.

1957: திருக்குறள் உரைக்கொத்து - அறத்துப்பால், தி. பட்டுச்சாமி ஓதுவார், காசிமடவெளியீடு, திருப்பனந்தாள்.

1958: திருக்குறள் உரைக்கொத்து - பொருட்பால், தி.பட்டுச்சாமி ஓதுவார், காசிமடவெளியீடு, திருப்பனந்தான்.

1958: திருக்குறள் உரைக்கொத்து - காமத்துப்பால், தி.பட்டுச்சாமி ஓதுவார், காசிமடவெளியீடு, திருப்பனந்தான்.

1958: திருக்குறள் மணக்குடவர் உரை, மலர் நிலையம் சென்னை.

1959: திருக்குறள் பொருள் விளக்கம், செ.ரெ.இராமசாமிப்பிள்ளை, சைவ.சி.நூ. கழகம், சென்னை.

1959: திருக்குறள் எளிய பொழிப்புரை, சீ. இலக்குவனார், வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை.

1959: திருக்குறள் தெளிவுரை, சுந்தரஞ் சண்முகனார், ஸ்டார் பிரசுரம், சென்னை.

1959: திருக்குறள் உரைக்கொத்து - பொருட்பால், தி. பட்டுச்சாமி ஓதுவார், காசிமடம், திருப்பனந்தாள்.

1959: திருக்குறள் பரிமேலழகர் உரை, அழகுப் பதிப்பகம், காரைக்குடி.

1959: திருக்குறள் மூலம், வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை.

1959: திருக்குறள் காலிங்கர் உரை, பரிமேலழகர் பொருட்பால், அறத்துப்பால், குறைப் பகுதியுடன், வித்வான், டி.பி.பழனியப்பப்பிள்ளை பதிப்பு, திருப்பதி திருமலை தேவஸ்தானம்.

1959: திருக்குறள் பொருள் விளக்கம், சாமி சிதம்பரனார், ஸ்டார் பிரசுரம், சென்னை.

1960: திருக்குறள் எளிய உரை, அரசுமணி, அருணோதயம், சென்னை.

1960: திருக்குறள் புது உரைச்சுருக்கம், நாமக்கல் வெ.ராமலிங்கம் பிள்ளை. கவிஞர் பதிப்பகம், கோயம்புத்தூர்.

1960: திருக்குறள் உரை வேற்றுமை, பொருட்பால், இரா. சாரங்கபாணி, செல்வி பதிப்பகம், காரைக்குடி.

1960: திருக்குறள், நெல்லை சுப்ரமணியன், திருநெல்வேலி.

1961: திருக்குறள் குழந்தையுரை, புலவர் குழந்தை, இளங்கோ புத்தக சாலை, ஈரோடு. (4ஆம் பதிப்பு)

1961: திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், சைவ சி.நூ.ப.கழகம், சென்னை. (9ஆம் பதிப்பு)

1961: திருவள்ளுவ நாயனாரின் திருக்குறள் மூலமும் ஒர் பழைய உரையும், டாக்டர். உ.வே.சா நூல்நிலையம், சென்னை. (டா.மு.வ. முகவுரையுடன்)

1961: திருக்குறள் - எச்.வைத்தியநாதன்.

1961: திருக்குறள் - பரிமேலழகர், பாரதி பதிப்பகம், சென்னை.

1962: திருக்குறள் பரிமேலழகருரை, பாரதி பதிப்பகம், சென்னை. (ஜன-62, டிச-62,63,64,66)

1962: திருக்குறள் நயவுரை. மு.கோவிந்தசாமி, பாரி நிலையம், சென்னை.

1962: திருக்குறள் பொருட்பால் உரை, வெ.கண்ணையன், கே இராமநாதன் மாணிக்கம் அச்சகம், வாலாஜாபாத், சென்னை. (200 குறள் மட்டும்) (த.ப.கழகம்)

1962: திருக்குறள் உரை, மு.ரா.கந்தசாமி பிள்ளை, விவேகாந்தா அச்சகம், மதுரை.

1962: பொய்யாமொழிக்குப் பொழிப்புரை (திருக்குறள் தெளிவு), தி லிட்டில் பிளவர் கம்பெனி, சென்னை.

1962: திருக்குறள் அறத்துப்பால் 150 உரை, வெ. கண்ணையன், கே. இராமநாதன் சென்னை.

1962: திருக்குறள் - தமிழ்மூலமும் ஆங்கில மொழிபெயர்ப்பும், திருவாசக மணி கே.எம். பாலசுப்பரமணியன், மணலி லட்சுமண முதலியார் ஸ்பெஸிபிக் எண்டோமெண்ட்ஸ், சென்னை.

1962: திருக்குறள் - பொருட்பால் 220, குறளுக்கு மட்டும், வெ. கண்ணையன் சென்னை.

1962: திருக்குறள் (வான்புகழ் வள்ளுவர்) க.தி. மாணிக்கவாசகர், மதுரை. (1965)

1962: திருக்குறள் - ஆராய்ச்சிப்பதிப்பு, கி.வா. ஜெகந்நாதன், இராமகிருஷ்ணா வித்யாலயம், பெரிய நாயக்கனன் பாளையம், கோவை.

1963: திருக்குறள் பரிமேலழகருரை, பாரதி பதிப்பகம், சென்னை.

1964: திருக்குறள் உரை வேற்றுமை, காமத்துப்பால், இரா.சாரங்கபாணி, செல்வி பதிப்பகம், காரைக்குடி.

1964: திருக்குறள் பரிமேலழகருரை. பழநியப்பா பிரதாஸ், சென்னை.

1964: திருக்குறள் (முதற் குறளும் நூற்பாவும்) தவத்திரு. இளவழகனார், சைவ.சி.நூ.கழகம், சென்னை.

1965: திருக்குறள் (திருக்குறள் இறைவணக்கம்), ப. மாப்பிள்ளையன், பட்டுக்கோட்டை.

1965: திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், வை.மு.கோபால கிருஷ்ணமாச்சாரியார். வை.மு.நரசிம்மன், வை.மு.கோ.கம்பெனி, திருவல்லிக்கேணி, சென்னை.

1966: திருக்குறள் தெளிவு, சுந்தர சண்முகனார், திருவள்ளுவர் தமிழ்ப் பல்கலைக்கழகம், புதுச்சேரி.

1967: திருக்குறள் தெளிவான உரை, செந்துறைமுத்து, வானதி பதிப்பகம், சென்னை.

1967: திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் - டா.மு.வ, பாரி - சென்னை.

1967: திருக்குறள் மணி விளக்கவுரை - தொகுதி 1, கா. அப்பாத்துரை, அலமேலு நிலையம், சென்னை.

1968: திருக்குறள் மாணவர் பதிப்பு, ரா.வே.ருத்திரப்பா, ஜெயக்குமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில்.

1968: திருக்குறள் இனிய எளிய உரை, மயிலை சிவமுத்து, மாணவர் மன்றம், சென்னை.

1968: திருக்குறள் உரைக்களஞ்சியம் (ஆங்கில மொழிபெயர்ப்புடன்), ஆர்.கன்னியப்ப நாயக்கர், வானதி பதிப்பகம், சென்னை.

1968: முப்பது குறளின் மெய்ப்பொருள், அ.கு.ஆதித்தர், சாந்தி நூலகம், சென்னை.

1968: திருக்குறள் மணி விளக்கவுரை, தொகுதி 2.கா.அப்பாத்துரை, அலமேலு நிலையம், சென்னை.

1968: திருக்குறள் - பரிமேலழகர் உரையுடன், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

1968: திருக்குறள், கோ. சாரங்கராசன், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. (1982 - 12ம் பதிப்பு)

1968: திருக்குறள், (குறளின் செய்தி) ப. அருணாசலம், பாரி நிலையம், சென்னை.

1969: திருக்குறள் - தமிழ் மரபுரை, ஞா.தேவநேயன், நேசமணி பதிப்பகம், காட்டுப்பாடி.

1969: வள்ளுவர் தென்னுரை, ச.சாம்பசிவன், மதுரைத் திருவள்ளுவர் கழகம், மதுரை.

1970: திருக்குறள் - அறத்துப்பால், அழகரடிகள், சைவ.சி.நூ.கழகம், சென்னை.

1970: திருக்குறள் மணி விளக்கவுரை, கா.அப்பாத்துரை, அலமேலு நிலையம், சென்னை.

1970: திருக்குறள் - பாட்டும் கருத்தும், கோ.சாரங்கசாசன், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

1970: திருக்குறள் கருத்துரை, கு.சிவமணி, சிவா நிலையம், தஞ்சாவூர்.

1970: திருக்குறள் மணி விளக்கவுரை தொகுதி 3, கா. அப்பாத்துரை, அலமேலு நிலையம், சென்னை.

1971: திருக்குறள் மணி விளக்கவுரை தொகுதி 4, கா. அப்பாத்துரை அலமேலு நிலையம், சென்னை. 197

1971: திருக்குறள் மூலம் ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

1971: திருக்குறள் அறத்துப்பால் மூலமும் சிற்றுரையும் - காசிமடம், திருப்பனந்தாள்.

1973: திருக்குறள் - ஆங்கில மொழிபெயர்ப்புடன் - ஜியு.போப்,ட்ரூ, ஜான் லாசரஸ், எல்லிஸ், சைவ சி . நூ . க ழ க ம் , சென்னை.

1973: திருக்குறள் - கோனார், பொன்னுரை, ஐயன் பெருமாள் கோனார். பழநியப்பா - சென்னை.

1973: திருக்குறள் மணக்குடவர் உரை, ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள்.

1976: திருக்குறள் பரிமேலழகர் உரை, புலியூர்க் கேசிகன், பூம்புகார் பிரசுரம், சென்னை. (முதற்பதிப்பு 1969)

1976: திருக்குறள் மூலமும் பரிமேலகருரையும் (அறத்துப்பால்), கோ.வடிவேலு செட்டியார், மதுரைப் பல்கலைக்கழகம். (த.ப.கழகம்)

1976: திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் (பொருட்பால்), கோ.வடிவேலு செட்டியார், மதுரைப் பல்கலைக்கழகம். (த.ப.கழகம்)

1976: திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் (காமத்துப்பால்), கோ.வடிவேலு செட்டியார், மதுரைப் பல்கலைக்கழகம். (த.ப.கழகம்)

1976: திருக்குறள் - பரி உரை, வை.மு.கோ. குவை பப்ளிகேஷன்ஸ், சென்னை. (5-ஆம் பதிப்பு)

1977: திருக்குறள் காமத்துப்பால், கவிஞர் கண்ணதாசன், பூம்புகார் பிரசுரம், சென்னை. (த.ப.கழகம்)

1978: திருக்குறள் பொருட்பால் தெளிவுரையுடன், ஸ்ரீராம தேசிகன் சாகித்ய அகாடமி, புதுடில்லி (த.ப.கழகம்)

1980: திருக்குறள் பரிமேலழகர் உரை, நுண்பொருள் மாலை, இ.சுந்தர மூர்த்தி, தேன்மொழி நூலகம், வெள்ளலூர்.

1981: திருக்குறள் இல்லறவியல் அ.ச.தண்டபாணி தேசிகர். (த.ப.கழகம்)

1981: திருக்குறள் உரைத்திறன், கு. சுந்தரமூர்த்தி, காசிமடம், திருப்பனந்தாள்.

1981: திருக்குறள் உரைக்களஞ்சியம், பாயிரவியல், ச.தண்டபாணிதேசிகர் மதுரைப் பல்கலைக்கழகம்.

1981: 'THE SACRED KURRAL' RRV.G.U.POPE.ASIAN EDUCATIONAL SERVICES, NEW DELHI.

1983: உலகப் பொதுமறை, திருக்குறள் விளக்கம், திருக்குறளார், வீ.முனுசாமி, திருமகள் நிலையம், சென்னை.

1983: தினம் ஒரு குறள் விளக்கவுரை, பி.சி.கணேசன், வானதி பதிப்பகம், சென்னை.

1983: திருக்குறள் - சமஸ்கிருத ஸ்லோகத்தில் எஸ்.ஏ.சக்ரபாணிஐயர், உவே.சா. நூலகம், திருவான்மியூர், சென்னை. (சரஸ்வதி மஹால்)

1984: திருக்குறள் (ஆங்கில மொழிபெயர்ப்பு) ஜி.வான்மீகநாதன், ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள்.

1985: திருக்குறள் வீரமாமுனிவர் உரை, கு.இன்னாசி, சென்னைப் பல்கலைக்கழகம்.

1985: திருக்குறள் எளிமை உரை, லேனா தமிழ்வாணன், மணிமேகலை பிரகரம், சென்னை.

1986: திருக்குறள் தெளிவுரை, இரா.இராசேந்திரன், திருமகள் நிலையம், சென்னை. (கையடக்கப்பதிப்பு - 3ஆம் பதிப்பு 1993)

1986: திருக்குறளின் உண்மைப்பொருள், கு.ச.ஆனந்தம், தங்கம் பதிப்பகம், கோபிச் செட்டிப்பாளையம்.

1987: திருக்குறள் எளிய உரை, புலவர் நாராயணசாமி, நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

1987: திருக்குறள் புத்தாய்வு - இரா. அருளப்பா, மெய்ப்பொருள் பதிப்பகம், சென்னை.

1988: கல்வெட்டு எழுத்துக்களில் திருக்குறள், எஸ்.கோவிந்தராஜ், எம்.சந்திரசேகசர், கிறிஸ்டியன் காலேஜ், சென்னை. (ஒரத்தநாயுடு

அரசு நூலகம்)

1989: திருக்குறள் - ஆங்கில மொழிபெயர்ப்பு - வ.வே.சு.ஐயர், இராமகிருஷ்ண தபோவனம், திருச்சி.

1989: திருக்குறள் பரிமேலழகருரை, பாரதி பதிப்பகம், சென்னை. (1994 - 6ம் பதிப்பு)

1990: திருக்குறள் வாழ்வியல் உரை, இரா.இளங்குமரனார், குறளாயம், ஈரோடு.

1990: ஸௌராஷ்டிர திருக்குறள், எஸ்.எஸ்.ராம் கே.இராமநாதன், ஸித்தாஸ்ரமம், மதுரை.

1991: திருக்குறள் (ஆங்கிலத் தெளிவுரை), எஸ்.என். பநிராமதேசிகன், கங்கை பதிப்பகம், சென்னை.

1991: திருக்குறள் நாவலுரை,. இரா.நெடுஞ்செழியன், நெடுஞ்செழியன் அறக்கட்டளை, சென்னை.

1991: திருக்குறள், மிகமிக எளிய உரை, மு.பெரி.மு. இராமசாமி, இந்து பப்ளிக்கேஷன், சென்னை.

1991: திருக்குறள், ஜி.ஆர்.கே. ஆய்வுரை, நியுசெஞ்சரி புக் ஹவுஸ், சென்னை.

1991: திருக்குறள் பரிமேழகர் உரை, கங்கை பதிப்பகம், சென்னை.

1991: திருக்குறள் ஜைன உரை, சரசுவதி மகால் நூலகம், தஞ்சை.

1991 திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு, ட்ரு, லாசரஸ், ஏசியன் எஜிகேசனல் சர்வீஸ், புதுடெல்லி.

1991: திருக்குறள் தெளிவுரை, வ.சுப. மாணிக்கம், மணிகவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

1992: திருக்குறள் தெளிவுரை, பதிப்பகம் புலவர் குழு, VBC பப்ளிகேசன், சென்னை.

1992: திருக்குறள் வாசன் உரை, சீனிவாசன், சாந்தா பப்ளிகேஷன், சென்னை.

1992: பாரதிதாசன் திருக்குறள் உரை, சி.சு.இளங்கோ, பாரிநிலையம், சென்னை.

1992: திருக்குறள் மூலமும் எளிய தமிழ் உரையும், எம். நாராயண வேலுப்பிள்ளை, நர்மதா பதிப்பகம், சென்னை.

1992: திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

1993: திருக்குறள் தெளிவு, ந.சுப்பு ரெட்டியார், தேன்மொழி பதிப்பகம், சென்னை.

1993: திருக்குறள் எளிய உரை, சி.இராசியண்ணன், விஜயா பதிப்பகம், கோவை.

1993: திருக்குறள் திறவுகோல், ப.முருகன், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

1994: திருக்குறள் சிறப்புரை, அ.ஆறுமுகம், ஜெகதீசன் பிரதர்ஸ், மதுரை. (4ஆம் பதிப்பு)

1994: திருக்குறள் தெளிவுரை, வாசவன், சென்னை.

1994: பாவேந்தர் பார்வையில் வள்ளுவம் (திருக்குறள் உரை) நா.செங்கமலத்தாயார், ஓம் வித்தகம் மன்றம், புதுச்சேரி.

1994: திருக்குறள் மக்கள் உரை, கு.மோகனராசு, உலகத்திருக்குறள் மையம், சென்னை.

1994: திருக்குறள் ஒரு வரி உரை, ல. சண்முகசுந்தரம், பாமா பதிப்பகம், சென்னை.

1994: திருக்குறள் - ஆங்கில மொழிபெயர்ப்பு, யோகி சுத்தானந்த பாரதி, கழகம், சென்னை.

1994: திருக்குறள் பரிமேலழகருரை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

1994: திருக்குறள் தெளிவுரை, அ.மாணிக்கம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

1995: திருக்குறள் புதிய உரை, சுஜாதா, பாரதி பதிப்பகம், சென்னை.

1995: திருக்குறள் மனித நேய உரை, அரிமதி தென்னகன், முத்துப் பதிப்பகம், சென்னை.

1996: திருக்குறள் உரை, எம். ஆர் அடைக்கலசாமி, காந்தளகம், சென்னை.

1996: திருக்குறள் உணர்வுரை, இரா.கனக சுப்புரத்தினம், அறிவு நிதிப் பதிப்பகம், சென்னை.

1996: திருக்குறள் கலைஞர் உரை மு.கருணாநிதி, திருமகள் நிலையம்,சென்னை.

1996: திருக்குறள் எளிய உரை, வே.கபிலன், பூங்கொடி பதிப்பகம், சென்னை.

1997: திருக்குறள் மெய்ப்பொருள் உரை, பெருஞ்சித்தரனார், தேன்மொழி அச்சகம், அருணாசலம் தெரு, சென்னை.

சான்றாதாரங்கள்

1) திருக்குறள் பரிமேலழகர் உரைத்திறன், இ.சுந்தரமூர்த்தி, ஐந்திணைப்பதிப்பகம், சென்னை - 5

2) தமிழ் உரை நூல் உரையாசிரியர் நூலடைவு, மு.அ.முகம்மது உசேன், அற்புதா பதிப்பகம், 36,திருவள்ளுவர்நகர், கும்பகோணம்.

3) திருவள்ளுவர் நினைவு மலர் - திருக்குறள் நாள் கழகம், சென்னை, 1935.

4) திருவள்ளுவர் திருநாள் மலர், சைவ சி.நூ.கழகம், சென்னை, 1968.

5) திருக்குறளும் திராவிட இயக்கங்களும், க.த.திருநாவுக்கரசு, 1997.

6) சங்கொலி, ம.தி.மு.க. திங்களிதழ், 1996 - 97.

தொகுத்தவர் : தஞ்சை அ சிவசூரியன்

பொதுக்கட்டுரைகள்

அறம் வெல்லுமா?

மா. நன்னன்

நாடறிந்த அறிஞர், நல்ல பேச்சாளர், தொடக்கக் கல்வி முதல் பல்கலைக் கழகக் கல்வி வரை எல்லா நிலைகளிலும் பணியாற்றிப் படிப்படியே உயர்ந்தவர். தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் இயக்குநராக இருந்து தமிழ் வளர்த்த பெருமை சான்றவர். சென்னைத் தொலைக்காட்சியின் 'வாழ்க்கைக் கல்வி' என்னும் பகுதியில் அவர் எண்ணும் எழுத்தும் கற்பித்து வந்த நிகழ்ச்சியை அறியாத தமிழர்களே இரார்! தமிழக அரசின் திரு.வி.க விருது, மதுரைப் பல்கலைக் கழத்தின் தமிழ்ச் செம்மல் விருது மற்றும் பல இவர் பெற்ற சிறப்புகள் எனலாம்.

இக்கட்டுரையில், அன்பு, வாய்மை, ஒழுக்கம் போன்ற நல்லன யாவும் அறம் என்னும் சொல்லால் சுட்டப்பெறுகின்றன. அல்லனவாகிய பொல்லாங்குகள் யாவும் மறம் எனக் கொள்ளப்படுகின்றன. மக்களின் வாழ்வு, அவர்தம் இயல்பு ஆகியவற்றில் மட்டுமேயன்றிப் பிற உயிரினங்களின் இயல்பு வாழ்வு ஆகியவற்றுள்ளும் அறம் திறமற்றதாகவும் மறம் திறம் மிக்கதாகவுமே இருக்கக் காண்கிறோம். அறம் மெலிந்ததாகவும் மறம் வலி மிக்கதாகவும் இருக்கிறது. உலகு இயற்கையின் தோற்றம் எனில் இயற்கையில் மறத்திற்கே செல்வாக்கு மிக்குள்ளது. உலகு இறைவனின் படைப்பு என்றால் இறைவன் மறத்தை வலிமை சான்றதாகவும் அறத்தை வலுக்குறைந்ததாகவும் படைத்துள்ளான் என்றுதான் கொள்ளமுடிகிறது.

விலங்கு, புல், புள், செடி, கொடி, மரம் போன்றவற்றுள்ளும் இத்தோற்றமே உள்ளது. பயிர் வளர்த்துப் பயன் விளைக்க உழுது, நீர்பாய்ச்சி, களையெடுத்து, உரமிட்டு, பூச்சிக் கொல்லி மருந்தடித்து, வேலியமைத்து அரும்பாடுபட வேண்டி இருக்கிறது. ஆனால் களை, செடி முதலியன மேற்கூறியவற்றுள் எதுவும் தேவைப்படாமல் தாமே முளைத்துக் கொழுத்து வளர்ந்த பிறவற்றை அடர்த்து அழிப்பதையே காண்கிறோம். மாந்தருள்ளும் கொடியோர் வலிமிக்கும் நல்லோர் வலுக்குறைந்தும் உள்ளனர். கொடியோரும் கயவர்களும் பலர் நன்றாகத் தான் வாழ்கிறார்கள். சான்றோர், நல்லோர் ஆகியோர் பலர் நலிந்தும் மெலிந்தும் அழிந்து கொண்டு தான் உள்ளனர். இந்நிலைக்கு மறுமை, ஊழ் போன்றவற்றால் அமைதி கூறமுடிகிறதே தவிர நடைமுறையில் அறநிலைதான் உள்ளது. அறமோ ஆண்டவனோ ஆள்வோரோ நல்லனவற்றை முழுமையாகக் காக்க முடியாமலும் அல்லனவற்றை முற்றிலும் அழிக்க முடியாமலும் கை பிசைந்து நிற்பதை நாடோறும் காணமுடிகிறது. மோட்சம், நரகம், நல்வினை, தீவினை, பரிசு, சிறை ஆகியன உளுத்துப் போய்க் காலக்கரையானால் அரிக்கப்பட்டு வலுவிழந்து போய்விட்டன. இன்றைய வணிகர், வழக்குரைஞர், மருத்துவர், அரசியல் கட்சியினர், தொழில் முனைவோர் போன்றோர் பற்பலரும் சட்டத்தின் பிடியிலோ, சமயத்தின் பிடியிலோ சிக்காமல் அவற்றைத் தம் கைகளில் சிக்கவைத்துக் கொண்டு சதிராடுகின்றனர்.

இன்றைய கொழுத்த முதலாளிகள், வணிகர்கள் போன்றவர்களின் பழமையை

ஆராய்ந்தால் அவர்கள் எவ்வளவு குறுகிய காலத்தில் எவ்வளவு பெரும் பொருளைத் திரட்டிச் சட்டத்தையும், கடவுளையும் ஏமாற்றிவிட்டு மேம்பட்ட வரலாறு தெளிவாக விளங்கும். ஆனாலும் நல்லோர் அறத்தைக் காக்க வேண்டும் என்னும் நல்லெண்ணத்தால் அறம் கூற்றாகும், அறம் வெல்லும், வாய்மையே வெல்லும் என்றாங்குக் கூறி ஆறுதல் பெறுகின்றனர்; பிறருக்கும் ஆறுதல் அளிக்க முயல்கின்றனர்.

இவ்வாறமைந்துள்ள அறத்துக்கும் மறத்துக்கும் நடக்கும் போர் மாந்தர் தோன்றிய காலத்திலிருந்து தொடர்ந்து நடந்து கொண்டிருப் பதைப் பார்க்கும் நமக்கு அறத்தின் மென்மையும் மறத்தின் வன்மையும் முன்னதன் தோல்வியும், பின்னதன் வெற்றியும் பளிச்செனப் புலப்படாமல் போகவில்லை. அறம் வென்றதாகக் காட்டப்படும் சான்றுகளில் அதற்காக மேற்கொள்ளப்பட்ட பெரும் முயற்சிகள், முறையற்ற நடவடிக்கைகள் போன்றவற்றால் தான் அவ்விடங்களில் அறம் வென்றிருக்கிறது. தமிழ் இலக்கியப் பண்ணையில் புராணக் கதைகள் மண்டிய காலத்தில் இடம் பெற்றுள்ள ஒரு சில சான்றுகளை இப்போது சற்று ஆராய்ந்து பார்க்கலாமா?

நலம் புனைந்துரைத்தல், நலம் பாராட்டல் ஆகிய காரணங்களுக்காக ஒரு காதலன் தன் காதலியின் சிறப்பைப் பாராட்டும் முறையில் இறையனார் என்னும் புலவரால் இயற்றப்பட்டுக் குறுந்தொகையில் இடம் பெற்றுள்ள 'கொங்குதேர் வாழ்க்கை' எனத் தொடங்கும் பாடலுக்கு அதற்குத் தொடர்பில்லாத கதையொன்றை இயற்றிச் சிவபெருமானின் மனைவி உமையம்மையின் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டா என்று வினா எழுப்பி அதற்கு இல்லை என்று உண்மையைக் கூறிய நக்கீரன் என்பானைச் சிவபெருமான் தண்டித்ததாகத்தான் கூறமுடிந்ததே தவிர நக்கீரன் கூற்று பொய்ப்பிக்கப்படவோ, சிவனின் கூற்று மெய்ப்பிக்கப்படவோ இல்லை. நக்கீரனின் வாய்மை இங்குத் தோற்றது. சிவன் கூற்று வாய்மையாயின அது வெல்ல, ஒரு புலவனைச் சிவன் தன் பேராற்றலைப் பயன்படுத்தி அந்த ஆற்றல் சிறிதுமற்ற நக்கீரனை வீழ்த்த முடிந்தது என்றால் இங்கே சமநிலை இல்லா வெற்றியே நிறுவப்படுகிறது.

அறம் கூற்றாகும் என்னும் சிலப்பதி காரத்தில் அறம் பிறழ்ந்து கொலை செய்த பாண்டியனும் அவன் மனைவியும் இறந்தார்கள். மன்னவன் தான் வளைந்த கோலைத் தன் உயிரை விடுத்து நிமிர்த்தினான். அவன் மனைவி தன் உயிர் கொண்டு அவன் உயிரைத் தேடிப் போனாள் என்று கூறப்படுகிறதே தவிர, களவு செய்யாத கோவலன் களவு செய்ததாகக் கூறிக் கொலை செய்யப்பட்டானே அவனுக்கு வழங்கப்பட்ட நீதி என்ன? மேலுலகத்துக்குச் சென்றான் என்று கூறும் ஆறுதல் தவிர அதற்கு அவனுக்குக் கிடைத்த பரிகாரம் என்ன?

வாலிவதம், வீடணனின் துரோகம் போன்றவற்றால் இராவணன் வீழ்த்தப்பட்டான். சீதையைக் கவர்ந்து சென்று பாதுகாப்பாக வைத்திருந்த இராவணன் வீழ்த்தப்பட்டான். இராவணனின் தங்கை தங்களைக் காதலித்ததால் தன் காதலை வெளிப்படுத்தினாள் (வரம்பு கடந்து என்றாலும்) என்பதற்காக அவள் மூக்கையும் முலைகளையும், அறுத்த குற்றத்திற்காக இராமனும் இலக்குவனும் பெற்ற தண்டனை என்ன?

பாரதத்தில் தந்தை வழியாக மக்களாகிய துரியோதனன் முதலியோர்க்குக் கிடைத்த அரசைப் பெறக் கடவுளின் துணை, பிற சூழ்ச்சிகள் போன்றவற்றால் தருமன் முதலியோர் பெற்ற வெற்றி அறத்துக்குரியதா? மறத்துக்குரியதா?

பாண்டுவுக்கே அரசுரிமை பெற முடியாத போது அவன் மகளுக்கு அந்த உரிமை எப்படிக் கிடைக்க முடியும்? பாண்டவர் பக்கம் அறம் உள்ளது என்று கூறுவோர் அவ்வறத்தை

நிலைநாட்ட மேற்கொண்ட முறையையும் கேடான செயல்களையும், கடவுள்துணை, சூழ்ச்சி ஆகியவற்றையும் மறைத்து விடுகின்றனரே!

மில்ட்டனின் காப்பியத்தில் கடவுள் சாத்தானை வீழ்த்துவதற்கு அவனிடமில்லாத இடி என்னும் படைக்கலத்தைப் பயன்படுத்தித்தான் வென்றான் எனத் தெரிகிறது. இது எப்படி போர் அறம் ஆகும்? அறம் பிறழ்ந்ததோடு தெய்வ ஆற்றலும் கூடியே அங்கு வெற்றிக்கொடி பறக்கவிடப்படுகிறது. இந்தியாவுக்கு வந்த வெள்ளைக்காரர்கள் தம்மிடமிருந்த வெடி மருந்து, சூது, சூழ்ச்சி, நம்மிடமிருந்த வேற்றுமை, நம் பேராசை, காட்டிக்கொடுக்கும் தன்மை, அடிமைப்பான்மை போன்றவற்றால் பெற்ற வெற்றி போன்றனவே மேற்காட்டப் பெற்றன போன்ற வெற்றிகளும்: சூது, சூழ்ச்சி, பிரித்தாளுதல், துரோகம், காட்டிக்கொடுத்தல், இடி போன்றவற்றால் பெற்ற போர் அறம் பிறழ்ந்து பெற்ற வெற்றிகளேயாதலின், இங்கெல்லாம் அறம் தோற்றிருக்கிறது, மறம் வென்றிருக்கிறது. ஆகவே அறத்தால் மறத்தை நேரிய முறையில் முறை பிறழாது வெல்ல முடியாது என்பது பெறப்படுகின்றது. மேலும் மறத்தின் பெருவாழ்வு நெடிது நிலைத்துத் தொல்பழங்காலம் முதலே இருந்து வருவதாகவும் தெரிகிறது. அதனாற்றான் அறத்தைக் காக்க எவ்வளவோ கடுமையான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இனிச் சமயத் தத்துவங்கள் அறம், மறம் ஆகியன பற்றியும் அவற்றின் நிலைபேறு பற்றியும் என்ன கூறுகின்றன எனக் காண்போமா? முதலில் சைவம் என்ன கூறுகிறது எனப் பார்க்கலாமா?

பசு, பதி, பாசம் எனப் பகர் மூன்றில் பதியினைப் போல் பசு பாசம் அனாதி என்கிறார் திருமூலர். இதைச் சைவத் தத்துவம் என்பதில் மிகுதியான வேறுபாடு இராதெனக் கருதுகிறோம்.''கடவுளையும், ஆன்மாவையும் போல் பாசம் எனப்படுவதும் ஆதியற்றது'' என்கிறார் அவர். அப்படியானால் ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி போன்றே பாசம் எனப்படும் மறமும் தோற்றமும் அழிவுமற்றது எனத் தெரிகிறது.

வைணவத்துக்கும் இது உடன்பாடான கோட்பாடென்றே கருத முடிகிறது. ஏனெனில் கீதையில் கண்ணன், கொடுமைகளை அழிக்க ''நான் ஒவ்வொரு யுகத்திலும் பிறப்பேன்'' என்கிறான். அவனால் நிரந்தரமாகத் துட்டநிக்ரகம் செய்யவோ, சிட்டபரிபாலனம் செய்யவோ முடியாதாம். அதனால்தான் அவன் மறத்தை ஒடுக்கி அறத்தை வாழ்விக்க ஒவ்வொரு யுகத்திலும் உலகத்துக்கு வந்து போக வேண்டியவனாக உள்ளான் போலும்.

இசுலாம் கூறுவதும் சற்றேறக் குறைய இவ்வாறே உள்ளது. இறைவன் நன்மைகளைப் படைத்தது போன்றே தீமைகளையும் படைத்தானாம். மாந்தர் தம் அறிவால் நலந்தீங்குகளை உணர்ந்து அல்லவை நீக்கி நல்லவை கொண்டு நன்னெறி நிற்றற்குரியவன் என்பது அதன் கோட்பாடாகத் தெரிகிறது. சைத்தான் எனப்படுவது ஒரு தனி ஆற்றலோ பொருளோ அன்று. அது தீங்குகள் அனைத்தையும் தொகுத்துச் சுட்டும் ஒரு தொகுதிப் பெயராகவே புலப்படுகிறது. ஆகவே இசுலாத்தின் தத்துவமும் உலகில் பொல்லாங்குகள் நிலைத்திருக்கும் என்பதேயாகும்.

கிருத்தவமும் ஆதாம் ஏவாள் கதை மூலம் தீமைகளையும் இறைவனே படைத்தான் என்கிறதாகத்தான் தெரிகிறது. உலகில் காணப்படும் மறங்கள் பற்பலவும் அறவோனாகிய ஆண்டவனால் மனிதனைச் சோதிப்பதற்காகப் படைக்கப்பட்டனவே என்கிறது பைபிள். ஆனால் வெளிப்படுத்துதல் சுவிசேசப்படி ஏசுவின் இரண்டாம் வருகையின் போது மறம் முற்றிலுமாக அழிக்கப்பட்டு அறம் மட்டுமே நிலவக்கூடிய உலகம் ஒன்று உருவாக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

ஆயினும் அந்த இரண்டாம் வருகை ஏற்படுவதற்கு முன்னுள்ள இக்காலம் முடியும் வரை கிருத்தவமும் மறம் வலிமை மிக்க நிலைபேறு கொண்டதாகவே கூறுகிறது எனக் கொள்வதே சரியான கருத்து.

கோவலன் கதை மூலம் சமணத்தின் கருத்தும் இத்தகையதாகவே கொள்ள வேண்டியுள்ளது. கோவலன் வீழ்ச்சியும் மதுரை மாநகருக்கு நேர்ந்ததும் அறம் தோற்றதைத் தவிர வேறு எதைக்காட்டுகின்றன? அரசியல் பிழைத் தோர்க்குக் கூற்றாகக் கூறப்படும் அறத்தால் அரசியல் பிழைக்காதிருக்கச் செய்ய முடியாமையே அதன் இயலாமைக்குச் சான்றாய் விளங்குகிறது.

இறுதியாக அறநெறி கல்லும், முள்ளும், புதரும், மண்டிப் பாழ்பட்டுக்கிடக்கிறதென்றும், மறநெறி மக்கள் அனைவரும் நடமாடும் நன்னெறியாக விளங்குகிறது என்றும் கூறப்படும். மணிமேகலைக் காப்பியத்தில் வரும் அறவண அடிகளின் கூற்றால் புத்த மதமும் அறம் கையாலாகாத நோஞ்சான் அல்லது சவலைக் குழந்தை போன்றதே என்று கூறுவதாகவே கொள்ள வேண்டும்.

இனி அறத்தின் மெலிவுக்கும், மறத்தின் வலிவுக்கும் என்ன காரணம் என ஆராயின், 1.மறம் (தவறு) செய்ய வேண்டிய தேவை உலகில் இருக்கிறது. 2. மறத்தை எளிதாகச் செய்ய முடிகிறது. 3. மறம் சுவையும் பயனும் தருகிறது. 4. மறத்தைச் செய்வதால் கேடு எதுவும் ஏற்படுவதில்லை. ஆகவே மறம் ஒழிய வேண்டுமாயினும் அறம் வெல்ல வேண்டுமாயினும் தவறு செய்ய வேண்டிய தேவையோ, செய்யக்கூடிய சூழ்நிலையோ உலகில் இருக்கக் கூடாது. அதனால் யாரும் பயன்பெற முடியக்கூடாது தண்டனையிலிருந்து தப்ப முடியாத நிலையும் ஏற்பட வேண்டும் இதைப் பெருமளவு செய்ய வல்லதாகப் பொதுவுடைமை முன்வந்தது. ஆனால் அதுவும் வேறு காரணங்களால் நிலை தளர்ந்து நிற்கக் காண்கிறோம்.

ஆகவே நாம் அறம் உரைக்காது மறம் உரைத்து அதனைப் பேணி வளர்க்க வேண்டியதுதானா என்றால் அது பெரும் தீங்காய் முடியும். மறத்தை எதிர்த்தும் அறத்தை ஆதரித்தும் உரைத்தும் ஓரளவேனும் சொற்பட்டும் வரும் போதே இவ்வளவு தீமைகள் இருக்குமானால் மறம் உரைத்து அதனை ஆதரித்து வாழ்ந்தால் உலகு என்னாகும்? இதற்கு அறவணரின் கூற்றுதான் ஓரளவேனும் துணை செய்கிறது. தவறு செய்ய வேண்டிய தேவையோ, தவறு செய்வதற்கேற்ற சூழ்நிலையோ இல்லாததும் தவறு செய்து பயன்பெற முடியாததும் அதனால் ஏற்படும் தண்டனை முதலியவற்றிலிருந்து தப்ப முடியாததுமாகிய சூழ்நிலை அமைந்த உலகு உருவாகும் வரை அறத்தை உரைத்துக் கொண்டும் மறத்தை மட்டந்தட்டிக் கொண்டும் இருக்க வேண்டியதுதான். மதங்களும் அரசுகளும் தோற்றுப்போன அத்துறைக்கு உதவக் கூடியது. வேறு எதுவும் இப்போது எங்கும் இல்லை.

சலாகை நுழைந்த மணித்துளை அகவயின்
உலாநீர்ப் பெருங்கடல் ஓடா தாயினும்
ஆங்கத் துளைவழி உருநீர் போல
ஈங்கு நல்லறம் எய்தலும் உண்டு எனச்
சொல்லலும் உண்டு

(மணிமேகலை : அறவணார்த் தொழுத காதை)

(கம்பி நுழையக்கூடிய அளவே உள்ள மணியின் துளைவழியாகக் கடல் நீர் சென்றுவிட முடியாது. ஆனாலும் அச்சிறு துளையின் வழியாகச் சிந்தும் சில சிறு துளிகளைப் போலவேனும் அறம் உரைப்பதால் பயன்கிட்டும்)

ஆகவே இப்போதைக்கு அறம் வெல்ல முடியாதது என்றும் அதை ஓரளவேனும் வாழ வைக்கும் முயற்சியை நாம் செய்து கொண்டிருக்க வேண்டியதுதான் என்றும் வைத்துக் கொள்வோமா?

பாடமொழியாகத் தமிழ்

கி. வேங்கூட சுப்பிரமணியன்,

பாண்டிச்சேரி பல்கலைக் கழகத்தின் முன்னைத் துணைவேந்தர்: மிகச் சிறந்த கல்வியாளர்: ஆற்றல் மிக்க பேச்சாளர். தமிழ்நாடு கல்வித்துறை இயக்குநராகவும் தமிழ் நாடு திட்டக் குழுவின் உறுப்பினராகவும் பணி புரிந்தவர். ஆங்கிலத்திலும் தமிழிலுமாக 40 நூல்களை எழுதியுள்ளார். இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் தனிச் செயலராகப் பணியாற்றி, அறிஞர் அண்ணாவின் பாராட்டைப் பெற்ற இவர், "தமிழால் முடியாதது எதுவுமில்லை" எனத் திண்ணமாக நம்புகிறார். தணியாத தமிழ்க் காதலும், திருக்குறளில் ஈடுபாடும் கொண்டு 'அறிவு அற்றம் காக்கும் கருவி' என்று ஓயாமல் முழங்கி வருகிறார். அண்மையில் நடுவண் அரசு இவரைத் திட்டக்குழு உறுப்பினராக நியமனம் செய்துள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், ஜெர்மனி போன்ற வளர்ந்த நாடுகளில் எல்லாம் ஒன்றாவது வகுப்பு முதல் கல்லூரிக் கல்வி வரையில் தாய்மொழி மட்டுமே ஒரே பயிற்று மொழியாக உள்ளது.

அண்மையில் நான் நோபல் பரிசு பெற்ற ஒரு பேரறிஞரைச் சந்தித்தேன் மாஸ்கோ பெருநகரில். அவருக்கு ஆங்கிலம் தெரியவே இல்லை. ஒரு வார்த்தைகூட அவருக்குப் பரிச்சயமில்லை.

தாய்மொழிக் கல்வியால் முன்னேற்றம்

சமீப ஆண்டுகளில் வடநாட்டுப் பல்கலைக்கழக மாணவர்கள் தமிழகம் ஆந்திரா போன்ற மாநில மாணவர்களைக் காட்டிலும், இந்திய அரசு நடத்தும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற தேர்வுகளில் அதிக விழுக்காட்டில் வெற்றி பெறுகிறார்கள் என்ற உண்மை அறியப் பட்டிருக்கிறது. அதற்குரிய முக்கிய காரணங்களில் ஒன்று அவர்கள் தங்களுடைய தாய்மொழி வழி இந்தி வழி கற்பது ஆகும். தாய்மொழியிலேயே கல்லூரிப் பட்டப்படிப்பு வரையிலும் இவர்கள் பாடங்களின் உட்பொருளை கிரகிக்கிறார்கள்.

மொழிப்பயிற்சி என்ற பொருள் குறித்து நான் நீண்ட காலமாக ஆராய்ச்சி செய்து வருகின்றேன். ஆராய்ச்சி விளைவுகளை விழிப்புடன் கவனித்துப் பார்த்துவருகிறேன். மருத்துவக் கல்லூரிகளிலும் பொறியியல் கல்லூரிகளிலும் கூட தாய்மொழி வழிக் கல்வி கற்ற மாணவர்களே சிறந்து விளங்குகின்றனர். அவர்கள் சிறிது கூடுதலான காலத்தை எடுத்துக் கொண்டாலும் உறுதியாகச் சிறப்படைகின்றனர். இதன் ரகசியம் அவர்கள் தாய்மொழி மூலம் படிக்கும்போது நன்கு புரிந்துகொள்கிறார்கள் என்பதே, உதாரணமாக ஒரு பெரிய பால்காரக் குடும்பத்துப் பையனை எடுத்துக்கொள்வோம். அவர்கள் வீட்டில் இருபது பசுக்கள் இருக்கின்றன. காலமெல்லாம் பசுவுடனும் பாலுடனுமே பழகி வருகிறான் இப்பையன். இவனை ஆங்கிலத்தில் பசுவைப்பற்றி எழுதச் சொன்னால் The cow என்று ஆரம்பித்து மேலே நகர முடியாமல் திணறுகிறான். ஏனென்றால் இது ஆங்கிலப் பசு. தமிழ்ப் பசுவைக் கொண்டுவந்தால் ஒரு காவியமே எழுதிவிடுவான் இவன்.

இன்னும் சில சந்தேகப் பிராணிகள் நம்மிடையே இருக்கின்றனர். அவர்கள் தாய்மொழியினால் முடியுமா என்று வினவுகிறார்கள். இப்படிக் கேட்பது முட்டாள்தனமானது எனலாம். பயிற்சி கொடுத்தால் பயன்படுத்தத் தொடங்கினால் - எந்த மொழியும் தகுதியைப் பெற முடியும். நாகரிக முதிர்ச்சியற்ற (திருந்தாத) சமுதாயங்கள் உள்ளனவே தவிர, திருந்தாத மொழிகள் என்பவை இல்லை. மனிதத் தொடர்பைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய எல்லாத் தேவையான அமைப்புகளையும் ஏறக்குறைய எல்லா மொழிகளும் பெற்றுள்ளன. பயன்படுத்தத் தொடங்கி முறையாக வளர்க்கப்படுமானால் நம் தமிழும், நம் தெலுங்கும் நம் மலையாளமும், கன்னடமும் தகுதியில் ஜப்பானிய மொழியையும் ரஷ்ய மொழியையும் வெற்றி கொள்ளும் என்னும் நம்பிக்கை எனக்குண்டு. அதுவும் உயர்தனிச் செம் மொழியாகிய நம் தீந்தமிழ் முதன்மை பெற்று விளங்கும் என்பது என் திண்ணம்.

மொழி என்பது கருத்துக்களை ஏற்றிச் செல்லும் வாகனம் மட்டுமன்று. மொழியைப் பேசுகின்றவர் சமூகம், உணர்ச்சி, அறிவு ஆகியவைகளுடன் ஒன்றிய பண்பாட்டுக் கலவையாகும் அது. மொழிப் பயன்பாடும் மொழி வளர்ச்சியும் ஒன்றை ஒன்று சார்ந்தே உள்ளன; ஒன்றை ஒன்று தொடருவதோ முந்துவதோ இல்லை. பயன்பாடு திருத்துகின்ற அளவைப் பொறுத்து ஒரு மொழி நல்ல மொழியாகவோ, கெட்ட மொழியாகவோ இருக்கின்றது. பெரிய அளவிலான கல்வி முன்னேற்றத்திற்கு மொழி வளர்ச்சி மையமாகும். இதை அறியாமல் நாம் புகுந்தும் கல்வி முறைகள் விளைவுகள் உண்டு பண்ணுவதே இல்லை. பொருளியல், பண்பாடு, அரசியல் வளர்ச்சிக்குக் கல்வி வளர்ச்சி ஊன்றுகோல். அதுவும் மொழிக்கல்வி வளர்ச்சி அச்சாணி. தேசிய வளர்ச்சிக்கு மொழி மட்டும் பயிற்று மொழியாகக் கொண்டு தொழில் துறையில் முன்னேறிய நாடு என்று உலகத்தில் எந்த நாடும் இல்லை. பேராசிரியர் வோகல் "ஏன் ஜப்பான் முதலில் உள்ளது?" என்னும் புகழ்மிக்க நூலில் ஜப்பானின் வெற்றிக்குரிய காரணங்களில் பிரதானமானதாக "ஜப்பானில் தொடக்கம் முதல் எல்லா நிலைகளிலும் கொடுக்கப்படும் தாய்மொழி வழிக்கல்வியே" என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார்.

இத்தகைய காரணங்களுக்காகத்தான் பாரதியார் நம் நாட்டின் தேசிய கல்வியில் எல்லா நிலைகளிலும் தமிழே பயன்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். அந்த உணர்ச்சிமிக்க தேசியக் கவிஞர் புதுச்சேரியில் இருந்து கனல் குரல் கொடுத்தார். பாரதி வாக்கைப் பார்ப்போம்.

"தமிழ் நாட்டில் தேசியக் கல்வி நடைபெற வேண்டுமாயின் அதற்கு அகர முதல் னகரப் புள்ளி இறுதியாக எல்லா வியவஹாரங்களும் தமிழ் பாஷையில் நடத்த வேண்டும் என்பது பொருள். ஆரம்ப விளம்பரம் தமிழில் பிரசுரம் செய்ய வேண்டும். பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டால் அங்கு நூல்கள் எல்லாம் தமிழ்மொழி வாயிலாகக் கற்பிக்கப்படுவதுமன்றிப் பலகை, குச்சி எல்லாவற்றிற்கும் தமிழிலேயே பெயர் சொல்ல வேண்டும். ''ஸ்லேட்'' ''பென்சில்'' என்று சொல்லக்கூடாது."

"தமிழ்நாட்டில் தேசியக்கல்வி என்பதாக ஒன்று தொடங்கி அதில் தமிழ் பாஷையும் பிரதானமாக நாட்டாமல் பெரும்பான்மைக் கல்வி இங்கிலீஷ் மூலமாகவும் தமிழ் ஒருவித உபபாஷையாகவும் ஏற்படுத்தினால் அது தேசியம் என்ற பதத்தின் பொருளுக்கு முழுதும் விரோதமாக முடியும் என்பதில் ஐயமில்லை. இந்த முயற்சிக்கு தமிழ் பாஷையே முதற்கருவியாக ஏற்படுத்தப்படும் என்பதைத் தம்பட்டம் அறைவிக்க வேண்டும்'' - பாரதி.

தற்காலத்தில் மேல்நாட்டு மொழியியல் அறிஞர்களும் பாடமொழி குறித்து இதே கருத்தை வலியுறுத்துகின்றனர்.

அறிவியலும் தமிழும்

விஞ்ஞானத்திலும் தொழில் நுட்பத்திலும் முன்னேற்றமடைந்த எல்லா நாடுகளிலும் கல்வி நிறுவனங்களிலும் ஆய்வு மையங்களிலும் எல்லா நடவடிக்கைகளும் கண்டுபிடிப்புகளும் அவர்களுடைய தாய்மொழியிலேயே வெளியிடப் படுகின்றன. ஆனால் நம்முடைய நாட்டில் நம் விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளெல்லாம் ஆங்கிலத்தில் மட்டுமே வெளியாகின்றன. அதன் விளைவாக நம்முடைய தாய்மொழி நம்மைவிட ஏழையாக உள்ளது. நமது மக்களுக்கு அறிவியல்-மனப்பான்மையும் வளர வில்லை. ஏதோ பழம்பெருமைகளைப் பேசிப் பேசிக் காலத்தை நாம் கழித்துக் கொள்கிறோம்.

தற்காலத்திலும் அறிவு வளர்ச்சியின் வேகம் முன்பு எப்போதும் இருந்ததைக் காட்டிலும் பன்மடங்காகியுள்ளது.

ஏழாண்டுகளுக்கு ஒரு முறை அறிவுப் பெருக்கம் உண்டாகின்றது என்று ஆய்வியல் நிலை நிறுத்துகின்றது.

பத்திரிக்கை, வானொலி, தொலைக்காட்சி, ஒலி மற்றும் ஒளி நாடா போன்ற பல புதிய சாதனங்கள் செய்தியை வேகமாகப் பரப்புகின்றன.

பெரும்பான்மையான மக்களின் மனத்தை ஒரு மாயை மறைத்துள்ளது. அறிவியல் கருத்துக்களை ஆங்கிலத்தின் மூலம் மட்டுமே பெறமுடியும் என்னும் தவறான கொள்கையை நாம் நீக்கியாக வேண்டும். தொழில் துறை உட்பட எல்லாப் பாடங்களிலும் தாய்மொழியைப் பயிற்று மொழியாக்கும் திட்டத்தை நம்பிக்கையோடு நாம் விரிவுபடுத்தலாம். 1932 ஆம் ஆண்டிலே பாதிரியார் ஒருவர் 'பூமி சாஸ்திரம்' என்னும் பெயரில் பூகோள நூலினையும், இலங்கையைச் சேர்ந்த அறிஞர் ஒருவர் பாதாதி கேச இயல், என்னும் பெயரில் எலும்பு நூலினையும் தமிழில் எழுதியுள்ளார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நாற்பது ஆண்டுகட்கு முன்பு வித்வான் இ.மு.சுப்பிரமணியபிள்ளை என்னும் பெருந்தமிழ்த் தொண்டர் ஆட்சிமொழிக் குழுவொன்றை அமைத்துத் 'தமிழால் முடியும்' என்ற கருத்தை நிறுவினார். அக்குழுவில் நானும் ஓர் உறுப்பினன்.

தமிழுக்கான எனது வலுவான முறையீட்டை, ஆங்கில ஒழிப்புக்கான குரல் என்று தவறாகக் கொள்ளக்கூடாது. ஒருபோதும் இல்லை. ஆங்கிலத்தை நாம் விடுவது நவீன அறிவுச் சாளரங்களை மூடிவிடுவது போன்றது. ஆங்கில அறிவு தேவை. ஆனால் ஆங்கிலம் பயிற்றுமொழியாக இருக்கத்தேவையில்லை. எனவே, ஆங்கிலத்தை நாம் கட்டாயம் கற்க வேண்டும். ஆனால் பாடமொழியாகத் தாய்மொழி மட்டுமே இருக்குவேண்டும். (We want English but not English medium).

கலைச்சொல் ஆக்கம்

அறிவியலையும் தமிழையும் திரும்ப நோக்குவோம். தமிழில் அறிவியல் கலைச் சொற்களை உருவாக்குவதில் தேவையற்ற சர்ச்சைகள் உள்ளன. ஆங்கிலச் சொற்களையோ, பிறமொழிச் சொற்களையோ கடன்வாங்கக் கூடாது எனத் தூய்மைவாதிகள் கோருகின்றனர். இந்தக் கடுமையான மனநிலை நமக்கு எந்த விதத்திலும் பயனளிப்பதில்லை. பல்வேறு அறிவியல் பாட நூல்களைத் தயாரித்து வெளியிடும் பொறுப்பைப் பல அறிஞர்கள் சேர்ந்து உருவாக்க வேண்டும். பல துறை அறிஞர் பெருமக்களும் சேர்ந்து செய்ய வேண்டிய கூட்டு முயற்சியாகும் இது. பொறியியலார், மருத்துவர், வழக்கறிஞர், அறிஞர் விஞ்ஞானிகள் ஆகிய எல்லாரும் உருவாக்க வேண்டும். அறிவியல் துறைகளான கணிதம், வேதியியல், இயற்பியல் போன்றவற்றில் சமன்பாடுகளும் குறியீடுகளும் மிகுதியாக இருக்கும். உலகம் முழுவதும் அவைகள் உணரப்படுவதால் அவைகளை நாம் சிதைக்கக்கூடாது. அவைகளை உள்ளவாறே ஏற்றுக்கொள்ள வேண்டும் வகுப்பறைகளில்

இவைகளுக்கான விளக்கங்களைத் தமிழில் தரலாம். கணித இயலில் உள்ள எல்லாக் குறியீடுகளையும் அப்படியே வைத்துக் கொள்ளலாம். ஏனெனில் அவைகள் அறிவு உலகத்திற்குச் சொந்தமான பொதுச் சொத்துக்களாகும்.

எல்லாக் கணிதவியல் வாய்பாடுகளையும் அவைகளின் மூல வடிவத்திலேயே எழுத வேண்டும். உதாரணமாக வட்டத்தின் சுற்றளவு, வேதியியலிலுள்ள $KMnO_4$, H_2O, CO_2 போன்ற குறியீடுகளை மொழிபெயர்க்கவோ, மாற்றவோ முனைதல் கூடாது. ஒவ்வொரு குறியீட்டுக்குரிய விளக்கத்தையும் தமிழில் தர வேண்டும். இதைப் போலவே கண்டுபிடிப்பாளரின் பெயரிலுள்ள பொருள்களின் பெயர்களையும் மாற்றவோ, மொழிபெயர்க்கவோ செய்வது பயனற்ற வீண் வேலையாகும்.

அறிவியல் கலைச் சொற்களைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது ஏற்கெனவே எழுத்து வழக்கிலும் பேச்சு வழக்கிலும் உள்ள சொற்களையே பெரும்பான்மையும் பயன்படுத்த வேண்டும். அண்டம், அண்டவெளி. அணு, எரிகொள்ளி, வளி போன்ற சொற்கள் ஏற்கனவே வழக்கிலுள்ளன. இப்படிப்பட்ட சொற்களின் களஞ்சியமாக நம்முடைய நிகண்டுகள் காணப்படுகின்றன. அவைகள் மிகுதியும் நமக்குப் பயன்படும். மருத்துவ இயலிலும் நோய்க்கான பல சொற்கள் தட்டம்மை, மணல்வாரி, சிச்சிலுப்பை, சன்னி, குட்டம் - வழங்கப்படுகின்றன. இவைகளைப் பயன்படுத்துவதில் எந்தத் தவறும் இல்லை. இதைப் போலவே சித்தர் பாடல்களில் உள்ள பல்வேறு சொற்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம். கட்டக்கலை சிற்பக் கலைத் துறைகளிலும் நூற்றுக்கணக்கான கலைகள் பழங்காலந்தொட்டுத் தமிழகத்தில் ஆதரிக்கப் பெற்று பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன.

நாம் புதிய கலைச்சொற்களைப் படைக்கும் போதும் தமிழிலிலகணத்திலுள்ள விதிமுறைகளைப் பயன்படுத்தலாம். உதாரணமாக 'அம்' என்னும் சாரியை நமக்கு உதவலாம்.

எ-டு

வளி	-	வளியம்
எரி	-	எரியம்
தனி	-	தனிமம்

'ஆன்' விகுதியும் புதிய சொல்லக்கத்தில் உதவியாக இருக்கும்.

கணி	-	கணிப்பு	-	கணிப்பான்
அடை	-	அடைப்பு	-	அடைப்பான்

தமிழில் பின்னொட்டைப் பயன்படுத்து கின்றோம். அதைப் போலவே முன்னொட்டைப் பயன்படுத்தவும் முயலுகின்றோம்.

எ-டு

காந்தம்	-	மின் காந்தம்
கடத்தி	-	மின் கடத்தி
அணு	-	மின் அணு
வேகம்	-	திசை வேகம்
உண்ணி	-	ஒட்டுண்ணி

மேல்நாட்டு மொழிகளில் சில சொற்களில் முதலெழுத்துகளையெல்லாம் ஒன்று சேர்த்துச் சில புதிய சொற்களைப் படைக்கின்றார்கள். தமிழில் அவைகளை அப்படியே மொழி மாற்றம் செய்து கொள்வதோடு அடைப்புக் குறிகளுக்குள் ஆங்கிலச் சொற்களை எழுதலாம்.

RADAR	-	ராடார்
VIBGYOR	-	விப்ஜியார்
NASA	-	நாசா
AIDS	-	எய்ட்ஸ்

தமிழில் ஆங்கில அறிவியல் நூல்களை மொழிபெயர்ப்புச் செய்வதோடு (அப்பொருளைப் பற்றி) மூல நூல்களையும் தமிழில் எழுதத் தொடங்க வேணடும். இப்படிப்பட்ட திட்டங்களை நம் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் அறிவியல் ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்ள முன்வரவேண்டும்.

அவர்கள் ஆங்கிலத்தில் முதலில் சிந்தித்துப் பிறகு அவைகளைத் தமிழில் மொழிபெயர்த்தல் கூடாது.

இலங்கையில் மருத்துவம் பொறியியல் படிப்பிற்குரிய பாடநூல்கள் ஏற்கனவே தமிழில் வெளிவந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. புதிய அறிவியல் கலைச் சொற்களை பிற்போக்குத் தனமான பிடிவாதத்துடன் கூடிய சிலதமிழ் உணர்ச்சியாளர்களுக்காகத் தமிழில் உருவாக்குவது தடைபடக்கூடாது. வழக்கத்திற்கு வந்துவிட்ட சில ஆங்கில, சமஸ்கிருதச் சொற்களை மொழிமாற்றம் செய்துகொள்வதை எதிர்ப்பதில் பொருளில்லை. தமிழ்த்தன்மைக்கு இடையூறு ஏற்படாத வகையில் சமஸ்கிருதச் சொற்களைத் தமிழில் ஏற்றுக்கொள்வதற்கு தொல்காப்பியர் பவணந்தி முனிவர் போன்றவர்களே விதி செய்துள்ளனர். இந்த இரண்டு இலக்கண ஆசிரியர்கள் காலத்தில் மொழிக்கு முதலில் வாராத ஒலிகள் இன்றைக்கு மொழிக்கு முதலில் வருவதை ஏற்றுக் கொண்டுள்ளோம். அவை சங்கு, யவனர், டம்பம், றகீர், ரப்பர் போன்றவை. இந்த மரபு மீறல் நமக்குப் பயன்பல தருமானால், அதை ஏன் நாம் தள்ள வேண்டும்?

நான் சங்கரன் கோவிலில் படித்தபோது தமிழ் அறிஞர் வித்வான் ஈ.எம். சுப்பிரமணிய பிள்ளை அவர்களிடம் தமிழ் படித்தேன். பல செயல்களுக்கு இவர் முன்னோடியாயிருந்தார். முன்பே சொன்ன படி, முதல் தமிழ் ஆட்சிச்சொற்களை உருவாக்கும் குழுவை அமைத்தவர் இவர்தான். இது ஒரு முன்னோடி முயற்சியாகும். அந்தக் குழுவின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களில் நானும் ஒருவனாயிருந்தேன். அந்தக் குழு தயாரித்தளித்த பலசொற்கள் இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பலருக்கும் அறிவிக்கப் பட்டுள்ளதைக் காணுந்தோறும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. கலெக்டர் என்னும் சொல் கிராமத்திலுள்ள படிக்காத பாமரப் பெண்ணுக்கும் தெரிந்த சொல்லாயிருப்பதால் இதைத் தமிழிலும் கலெக்டர் என்றே வைத்துக் கொள்ளலாம். அதற்குப் பதிலாக எவருக்கும் புரியாத குழப்பத்தைத் தரக்கூடிய தண்டல் நாயகர் என்னும் சொல்லைத் தவிர்க்கலாம். தங்களுடைய மொழியிலில்லாத சில சமஸ்கிருத ஒலிகளுக்குத் தமிழர்கள் கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்தினர். சிறந்த தமிழ்ப் பற்றாளர்களான நம்முடைய மன்னர்களுடையவும் முடியுடை மூவேந்தர்களுடையவும் கல்வெட்டுகளில் ஜ.ஸ.ஷ.ஹ போன்ற கிரந்த எழுத்துக்களைக் காண்கிறோம். எந்த விருப்பு வெறுப்பு மில்லாமல் சில அறிவியல் கலைச் சொற்களைக் குறிப்பிடுவதற்கு இந்த எழுத்துக்கள் தேவைப்படுகின்றன. தமிழர்களாலேயே அறிமுகப்படுத்தப்பட்டதாக நம்பப்பெறும் இந்தக் கிரந்த எழுத்துக்களைத் தமிழில் பயன் படுத்துவதற்கு நாம் ஏன் தடைசெய்ய வேண்டும்?

வரி வடிவ மாற்றம்

தட்டச்சு, சுருக்கெழுத்து, தொலையெழுதி, தந்தி போன்றவற்றிலும் இன்றைய கணிப்பானிலும் தமிழ் எழுத்துக்களைப் பெருவாரியாகப் பயன்படுத்தவேண்டுமெனில் சில குறிப்பிடத் தகுந்த மாற்றங்கள் இன்றியமையாதவை. ஐ.ஓ.ங.ஞ போன்ற எழுத்துக்கள் சில சிக்கல்களையுடையவை. இவை போன்ற, தமிழ்ச் சொற்களில் அதிகம் பயிலாத எழுத்துக்களையும் தேவையின்றிப் பயில வேண்டியிலுள்ளது. இப்போது நடைமுறையிலுள்ள தந்தை பெரியார் கூறிய எழுத்து வடிவம் கூட இன்னும் மேம்படுத்தப்பெற வேண்டும்.

அண்ணா பல்கலைக் கழகமும், இந்துஸ்தான் தொலையெழுதி நிலையமும் இணைந்து கூட்டு முயற்சியில் கணிப்பானுக்கான தமிழ் வடிவை வெளிக்கொணர்ந்துள்ளன. இ.ஈ.உ.ஊ. போன்ற எழுத்து வடிவங்களில் போதிய மாற்றங்களைக் கொணர்ந்துள்ள முறைமை ஏற்கக் கூடியதாக உள்ளது.

பல நூற்றாண்டுகளாகத் தமிழின் எழுத்துமுறை வெளிப்பாட்டிற்கு உரியதாய்

அமைந்தமை பற்றி விவாதிக்கின்றனர் சிலர். தொல்காப்பியர் சில எழுத்துக்களுக்கு மட்டுமே வடிவு கூறுகிறார். பிறவற்றைப் பிராமி எழுத்து முறைகளிலிருந்தே பெற்றிருக்கிறோம். இவையாவும் பல்லவர் காலத்தில் உறுதி பெற்று நிறுவப்பட்டன. அதன் பிறகு சோழர் காலத்தில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. செப்பேடுகளிலும் பனையோலைச் சுவடிகளிலும் ஏற்கத்தக்க சில மாற்றங்கள் உருவாயின. அச்சுக்கூடங்கள் வந்த பிறகே ஒரு நிலையான தகுதியை அடைந்தோம். ஆயினும், இப்போதைய கணிப்பான் போன்ற புதிய கருவிகளுக்கேற்ப மொழிகளில் சில மாற்றங்களைக் கொணரச் சிந்திக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

மிகுந்த எச்சரிக்கையுணர்வுடன் இப்பகுதியை அணுகுதல் வேணடும். மிகவும் கடினமாயிருந்த சீன மொழி எழுத்துக்களை மாற்றம் செய்ய நேரிட்டபோது சீனானவைச்சார்ந்த மாசேதுங் குறிப்பிட்டதாவது; "ஒரு பழைய வீட்டைப் புதுப்பிப்பது போன்றதல்ல இது. வீட்டை முழுவதுமாக அழிக்கலாம். ஆனால் ஓர் அலகைக் கூட சுலபமாக மாற்ற இயலாது. இது கடினமான காரியம். சஸ்திர சிகிச்சை போன்றது இது" என்றார். இதனால் தடுமாற்றங்கள் நிறைந்த மொழிமாற்றப் பகுதியை மிக மிகக் கவனத்துடன் அணுகுதல் தேவை.

அறிஞர் பெருமக்கள் சிலர் தமிழைப் பயில ரோமன் எழுத்து வடிவைப் பயன்படுத்தலாம் என்கின்றனர். இது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவில்லை. தொன்மை முறையைக் கைவிடுதல் என்பது எளிதன்று. ஆயினும், உலகத்தின் பல பகுதிகளில், தமிழ் மட்டுமே பேசத் தெரிந்த தமிழர்களை ரோமன் எழுத்து முறை மூலமாகத் தமிழைப் பேசவும், எழுதவும், கற்கச் செய்யலாம். தென்னாப்பிரிக்கா, மொரீசியசு, பிஜி, கரீபியன் தீவுகள் போன்ற இடங்களில் வசிக்கும் தமிழர்கள் இம்முறையில் எளிதாகத் தமிழ் கற்க முடியும். தமிழின் மீது பற்றுக் கொண்ட அவர்கட்குப் போதிய ஊட்டங்கள் தேவை. இந்தியாவிற்குப் பிறகு விடுதலை பெற்ற மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகள் இதனையே நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. அவர்கள் அங்குள்ள மொழிகளை ரோமன் எழுத்துகள் மூலமாகவே எளிமையாகக் கற்கின்றனர். எழுத்து மாற்றங்களைச் சீனாவும் சப்பானும் கூடக் கொண்டிருக்கின்றன. ஆனால் அவை படிப்படியாகவே இம்மாற்றங்களுக்கான பணியில் இறங்கியுள்ளன.

எவ்வாறாயினும் தமிழ் எழுத்து அப்படியே முழுமையாக ரோமன் வரி வடிவிற்கு மாற்றுவது பொருளற்றது. நினைக்கத் தகுவதுமன்று. ஆனால் தொலைதூர நாடுகளிலுள்ள தமிழ் மழலைகள் தமிழ் கற்க வேறு வழியின்மையால் ரோமன் வரிவடிவில் வாயிலாக கற்கலாம்.

ஒரு மொழி, அடிப்படையில் ஒலிகளைக் கொண்டதுதானே தவிர எழுத்துக்களை (வரி வடிவங்களை) கொண்டதன்று. இதை நினைவிற் கொள்ள வேண்டும். இதற்குரிய வழிகளை நாம் நல்காவிடில், தமிழை முழுமையாக ஒதுக்கிவிட்டு அந்தந்த நாட்டு மொழிகளைத் தொலைதூர நாடுகளில் தேர்ந்தெடுத்துக் கற்க ஆரம்பிக்கும் அபாயமும் உண்டு. அதன் பின்னர் நாம் யாரையும் குறை கூறவோ ஓங்கி முழங்கவோ இயலாது.

பன்னெடுங்காலமாக ஒரு மொழியின் இலக்கணம் இறுக்கமாகவே தொடருமானால் அம்மொழி சிதைவுபடும். செவ்வியல் மொழிகளுக்கு இதுவேதான் நேர்ந்தது. நல்லவேளையாக, திறமையும் அறிவும் மிக்க நம்முடைய இலக்கணக்காரர்கள், மொழி பேசுவோரால் அவ்வப்போது ஏற்படும் சூழலுக்கேற்ப பழைய விதிகளை மாற்றிப் புதியனவற்றை அறிமுகப்படுத்தினர்.

இங்கிலாந்தின் பல பகுதிகளில் பல்வேறுவகை மொழிவழக்காறுகள் காணப்படினும் அவர்கள் பேசுவது எல்லா நாடுகளிலும் உள்ளோர்

புரிந்து கொள்ளக்கூடிய தரமான ஆங்கிலத்தையே. பழமையான மற்றும் இடைக்கால ஆங்கிலத்திலிருந்து உருவாகிய அவ்வாங்கிலமே அவர்கள் விழைந்தது. அமெரிக்க நாட்டில் கூட அமெரிக்கர்கள் நான்கைந்து மொழி வழக்காறு களை அந்நாட்டின் பல பகுதிகளில் பயன்படுத்து கின்றனர். ஆயினும் பரிணாம வளர்ச்சியில் உருவான பொது அமெரிக்க மொழியினையே பொது நன்மை கருதிப் பேசுகின்றனர். தமிழின் வழக்காறுகளுக்கிடையே தமிழை இனங் காணுவதில் தாங்கவொண்ணா இடர்ப்பாடுகள் முன் நிற்காது.

உலகிலுள்ள பல நாடுகள் இன்றைக்கு ஆங்கிலத்தை முதலாவது அல்லது இரண்டாவது. அல்லது மூன்றாவது மொழியாகப் பயன்படுத்து கின்றன. இதனால் பல்வேறு அமைவுகளைப் பெற்றிருப்பதால் பென்சில்வேனியாப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பேராசிரியர் ஒருவர் 'உலக ஆங்கிலம்' என்ற கொள்கையின் தேவைபற்றிப் பேசுகிறார். தமிழ், தெலுங்கு, இந்தி போன்ற இந்திய மொழிகளும் இதே போக்குக் குறித்து ஒருவேளை சிந்திக்கலாம். ஏனெனில், இம் மொழிகள் பேசும் வட்டாரங்கள் பல நாடுகளில் காணப்படுகின்றன. உலகம் முழுவதற்குமான ஒரு தரமான பொதுத்தமிழைக் கண்டறிய ஒரு குழு உருவாதல் தேவை. தமிழ் நாடு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் பிற நாடுகளில் வழங்கப்பெறும் தமிழ் வழக்கு, வடிவுகளைக் கவனித்து அக்குழு ஒரு முடிவுக்கு வரவேண்டும். பிரெஞ்சு அகாதமியை மாதிரியாகக் கொண்டு ஒரு குழு வடிவமைக்கப்பட்டு, தொலைநோக்கோடு செயல்படுமானால், பயன்தரும். அது பல்வேறு நிலைகளில் தமிழ் கற்றோருக்காக வேலை வாய்ப்புகள் பற்றிய தெளிவான கருத்துக்களை வெளிக்கொணரவியலும்.

பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டு களில் எழுதப்பெற்ற இலக்கணப் பகுதிகளை ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய தேவையை நாமுணர வேண்டும். இதனை நவீனப்படுத்தும் முயற்சியில்லையாயின் வளரும் தமிழுடன் நாம் தொடர்பற்றுப்போய்விடும். இன்றைக்கு நடைமுறையில் உள்ள தமிழின் பேச்சு வடிவுகளை ஏற்கவில்லை யாயின், பழம் மரபுப்படி தமிழ் கற்றவர்களால் படைப்பிலக்கியங்களை உருவாக்க இயலாது. ஆங்கில எழுத்தாளர்களும், அமெரிக்கா எழுத்தாளர்களும் உரைநடை வடிவுகள் புதினங்கள், நாடகங்கள், பாக்கள், யாவற்றிலும் பரந்துபட்ட பல்வகை நடைநயங்களை மேற்கொள்ளுவதை நாம் நினைவு. கூற வேண்டும். நாமும் அத்தகைய ஒரு கட்டத்தை எய்த வேண்டுமாயின் நம் மொழியை நாம் நடத்துகின்ற, கற்கின்ற முறைகளில் மாபெரும் மாற்றத்தைக் கொணரவேண்டும்.

நம்முடைய இலக்கியம் பயிற்றுவித்தல் பிறருடைய இலக்கியங்களுடன் தொடர்புடைய தாகவோ, தேவையான பிற அறிவுத் துறைகளுடன் தொடர்புடையதாகவோ இல்லை. நம் இலக்கியங்களை முழுமையாக உணர இத்தகு தொடர்பு தேவை. இராபின்சன் குருசோ ஒரு தீவினில் இருந்ததைப் போல நம் மாணவன் தனிமையில் இருக்கும் தனிமைப்பாடு நிகழ்கிறது. தமிழ் முதுகலை பயிலும் ஒரு மாணவன், இதழியல், கணிப்பொறி அறிவியல், உளவியல், சமூகவியல், மொழியியல், தத்துவ இயல், தருக்கவியல் போன்றவற்றின் அடிப்படைகளையாவது அறிந்து கொள்ள இதுவே சமயமாகும். இந்திய இலக்கியம் பற்றி ஒரு பறவைப் பார்வையாவது அவனுக்குத் தேவை. தனிமைப் பகுதியிலிருந்து முன்னேற இது போதுமானது.

இவையாவும் நம் பாடத்திட்டம் முழுமையாக மாற்றம் பெற வேண்டும் என்பதையும் பாடம் பயிற்றுவிக்கும் முறையிலும் மாறுதல் தேவை என்பதையும் தெரிவிக்கின்றன. ஐந்தாண்டுத் தமிழ் படிப்பொன்றை அமைத்து, தமிழ் இலக்கியங் களுடன், ஒரு திராவிட மொழி, வடமொழி பிராகிருதம், இவற்றில் ஒன்றையும், ஐரோப்பிய

மொழி ஒன்றையும், உலக மொழிகள் பற்றிய பொதுப்பார்வைப் பகுதியையும் வழங்குதல் பற்றிச் சிந்திக்கலாம். இவ்வழியில் ஐந்தாண்டுகள் பயின்று, பொறியாளனாக, மருத்துவனாக, வழக்கறிஞனாக ஒரு துறை வல்லவனாக வருவதைப் போலத் தமிழ் மாணவனும் தமிழ் பற்றிய முழுமையான படிப்பைப் பெற்றுக் கொண்டு வெளிவர முடியும்.

மேலைநாட்டுப் பல்கலைக்கழகங்களில் இப்போது படைப்பிலக்கியம் தொடர்பாக படிப்புகள் ஆரம்பிக்கப் பெற்றுள்ளன. படைப்பாளார்கள் பிறக்கின்றனர். உருவாக்கப்படுவதில்லை. என்றாலும் சிறுகதை, நாடகம், கவிதை போன்றவற்றை முறையான பயிற்சி மூலம் பெறுதலென்பது 'பிறப்பால் எழுத்தாளர்' ஆனவர்களுக்கும் பயன்தரும். படைப்புக் கலைஞர்கள் திறனாய்வாளர்கள் போன்றோரின் உதவியுடன் நமது பல்கலைக்கழகங்களும் அதுபோன்ற படைப்புகளைத் தொடங்கலாம். மேலும் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு அவ்வப்போது பணிக்களங்கள் அமைத்து முறையான செய்முறைப் பயிற்சிகளை நல்கலாம். நோபல் பரிசு பெற்ற சால்பெல்லோ, புகழ்பெற்ற திறனாய்வாளர் லீன் ஈடல் போன்றோர் அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் படைப்பிலக்கியம் பயிற்றும் பணியில் ஈடுபட்டமை நம் கவனத்திற்குரியது.

இலக்கியம் பயிற்றுவிப்போர், நவீன உத்தி முறைகள், வசதிகள் இருப்பதால் புதிய வழிமுறைகளை, அறிமுகஞ்செய்யச் சிந்தனை செய்தல் வேண்டும். மரபுவழி விரிவுரைகள், ஒலி, ஒளி இழைகளையும் தொலைக்காட்சியையும் கூடுதலாகப் பயன்படுத்த வேண்டும். சங்க இலக்கியம், பல மரங்கள், செடிகள், பறவைகள், மிருகங்கள் பற்றிக் குறிப்பிடுகிறது. குறிஞ்சி மலர் நொச்சி இலை இன்னபிறவற்றைப் படம் வாயிலாக மாணவர்க்குக் காட்டினாலன்றி அவற்றை அவர்கள் இனங்காண இயலாது. மாணவர்கள் 'மோப்பக் குழையும் அனிச்சம்' என்பதை அம்மலர் பற்றிய எவ்வித எண்ணமுமின்றி வெறும் கருவிபோலத் திருப்பித் திருப்பிச் சொல்கின்றனர்.

நவீன உத்திகளின் உதவிகளைக் கொண்டு, கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக் கலை கோயிற்கலை போன்றவற்றைச் சிறப்பாகக் கற்பிக்க முடியும். கங்கை கொண்ட சோழபுரம், தஞ்சாவூர், மதுரை, திருவரங்கம், திருப்பதி போன்ற இடங்கட்கும் மாணவர்களை அழைத்துக் கொண்டு கல்விச் சுற்றுலா சென்று வருதல் வேண்டும். தமிழ் எழுத்துக்களைக் கற்பிக்குங்கால் பிராமி, வட்டெழுத்து, கிரந்த எழுத்து, பல்லவர்கால எழுத்து, சோழர் கால எழுத்து விசயநகர மன்னர்கள் எழுத்து போன்ற பழைய எழுத்து முறைகளையும் கற்பித்தால், அம்மாணவர்கள் அவற்றை நேரடியாகக் கண்டுணர்ந்து எளிதாகக் கற்கவியலும். பல்வேறு எழுத்துக்களமைந்த கல்வெட்டுகள் அமைந்துள்ள இடங்களுக்கு மாணவர்களை அழைத்துப் போதல் வேண்டும். கல்வெட்டுப் படிப்பு என்பது இலக்கியப் படிப்பில் ஒரு பகுதியாக அமைய வேண்டும்.

உடனடியாகவும், உன்னிப்பாகவும் நம் கவனத்தை ஈர்க்கும் பிறிதொரு பகுதி தமிழிலிருந்து பிற முக்கிய மொழிகளில் முடிந்தவரையில் மொழிபெயர்ப்புச் செய்யும் பகுதியாகும். சங்கப்பாக்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமயணம் போன்றவை பல நாடுகளில் செல்வாக்குப் பெற்ற தரமான இலக்கியங்கள். சீனா உட்பட பல மேலைநாட்டு மொழிகளிலும், பல இந்திய மொழிகளிலும் திருக்குறள் ஏற்கனவே மொழி பெயர்ப்புச் செய்யபெற்றுள்ளது. சங்கப்பாக்கள் தனிமனிதர்களின் தனிப்பட்ட ஈடுபாட்டாலோ, நிறுவனங்களின் துணை கொண்டோ ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பெற்றன. சிலப்பதிகாரம் ஆங்கிலம், பிரஞ்சு, கிரேக்க மொழிகளில் ஒலிக்கப் பெறுகின்றது. ஓரிரண்டு இந்திய மொழிகளிலும், ஆங்கிலத்திலும் கம்பராமாயணயத்தின் சில பகுதிகள் மொழி

பெயர்க்கப் பெற்றுள்ளன. சிகாகோ நகரிலிருந்து பேராசிரியர் ஏ.கே. இராமானுஜத்தின் மொழி பெயர்ப்புப் பணி குறிக்கத் தக்கது. குறுந்தொகையின் சில பகுதிகளும், நம்மாழ்வாரின் சில பாடல்களும் முறையே Interior Landscape என்றும் Hymns for the Drowning என்றும் தலைப்பிட்டு அவரால் மொழிபெயர்க்கப் பெற்று புகழ் வாய்ந்தவை. ஆனால் இதுவரை தமிழர்கள் மொழிபெயர்ப்பில் மேற்கொண்ட பணிகள் குறைவென்பதால் போதிய நிறைவு தரப்பெறவில்லை.

நம் சைவ, வைணவத் துறவிகளாயிருந்த பாவலர்கள் தந்துள்ள பக்தி இலக்கியங்கள் தமிழில் குறிப்பிட்ட இடத்தைப் பெற்றுள்ளன. தமிழில் குறிக்கத் தகுந்த பணியாற்றி மறைந்த மதிப்பிற்குரிய சேவியர் தனிநாயகம் தமிழைப் 'பக்திமொழி' எனப் புகழுவார். பக்தியியக்கம் என்பது தமிழகத்திலிருந்து பிற பகுதிகளுக்குப் பரவியது என்பதில் ஆய்வாளர்களும் இன்று பொதுவாக உடன்படுகின்றனர்.

புதுமை எழுத்தாளர்களில் புகழ்பெற்ற டி.எஸ்.எலியட், இலக்கியப் பெரும்பணி என்பது கவிதை, இசை, சமயம் ஆகியவற்றின் முறையான கலப்பால் எய்தப்பெறும் என்று கருத்துக் கொண்டுள்ளார். மணிவாசகரின் திருவாச கத்திலும், நம்மாழ்வார் பாடல்களிலும் இத்தகு அரிய கலப்பை நாம் காணலாம். இப்படைப்புகளை முடிந்த அளவு பிற மொழிகளில் மொழிபெயர்த்து அறிவுலகிற்கு வழங்கும் புனிதப் பணியை நமக்குள்ளே தொடங்கல் வேண்டும்.

நம் இலக்கியங்களை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்பதுடன் பிற மொழிகளிலுள்ள நல்ல படைப்புக்களைத் தமிழுக்கு மொழியாக்கல் வேண்டும். அப்பணிக்குரிய மதிப்பு மிகைப்படுத்து வதற்குரியதன்று. பிறருடைய இலக்கியங்களில் கிடைக்கும் கருத்து வளர்ச்சி, புதிய சொல்லாட்சி வளங்கள் பிற மொழிகளுடன் தொடர்பு கொள்ளக்கூடிய வண்ணம் மனம் விரிதல் போன்றவை கிட்டும். நம்மிடையே இருபது நூற்றாண்டுகளாக இருக்கும் வடமொழி இலக்கியங்கள் யாவும் முழுமையாக மொழி பெயர்க்கப்படவில்லை என்பது குறித்தற் குரியது. தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளின் சிறப்பிலக்கியங்களும் தமிழில் வரப்பெறவில்லை. இங்குமங்குமாக ஒரு சிலர் குறிக்கத் தகுந்த பணிகளைச் செய்துள்ளார்கள். ஆனால் எங்கும் பெரும் அளவுக்கு முயற்சி எடுக்கப் பெறவில்லை.

வடமொழியிலுள்ள, முருகியல் கலந்ததும் குறிக்கத் தகுந்ததுமான த்வனி, வக்ரோத்தி போன்ற கோட்பாடுகள் நம் தமிழில் இன்னும் வரையப் பெறவில்லை. இராமாயணம், மகாபாரதம் பலபுராணங்கள் தமிழ் வடிவில் காணப்பட்ட போதிலும், காளிதாசர், பகபூவதி, பாணபட்டர் போன்ற படைப்புகள், எண்ணற்ற அறிவிலக்கியங் கள், வேதாந்த, தத்துவ, தருக்க நூல்கள் போன்றவை தமிழில் இன்னமும் பிறப்பெடுக்க வில்லை.

ஐரோப்பிய மறுமலர்ச்சிக்குக் காரணமான கிரேக்க, ரோமன் இலக்கியங்கள் தமிழில் இன்னமும் உரிய முறையில் உருப் பெறவில்லை. ரோமரின் 'இலியாத்து' பிளேட்டோவின் சில கருத்துரைகள், அரிஸ்டாட்டிலின் கவிதையியல் போன்றவை கிரேக்கத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ள சிலவாகும்.

தமிழ் வாசகர்க்கு, கிரேக்க இலக்கியத்தின் பெரும் பகுதியோ, ரோம, இத்தாலிய இலக்கியங்களில் முழுமையோ அறியப் பெறவில்லை. இஃது ஒரு வருந்தத்தக்க சூழலே. ஏனெனில் பழந்தமிழர்கள் ரோமுடன் வணிக, பண்பாட்டுத் தொடர்பு கொண்டிருந்தனர். அப்பழந்தமிழர்கள் பண்பாடு பிளினி என்பவரால் அவர்தம் நாட்குறிப்பில் குறிக்கப் பெற்றுள்ளனர். நெடுங்காலத்திற்கு முன்பு சீனாவிலிருந்து இந்தியாவிற்கு வந்த பயணிகள், தமிழகத்தில் கண்டுணர்ந்தவற்றைக் குறித்துள்ளனர். ஆனால் அவர்களின் குறிப்புகளில் சிற்சில கிடைக்

கின்றவேயன்றி, முழுவதும் கிடைக்கப் பெறவில்லை. பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியாரின் சிறந்த பணியாக அமைந்த 'தென்னிந்தியாவைப் பற்றிய வெளிநாட்டார் குறிப்புகள்' என்ற நூல் வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்புகளை வரிசைப்படுத்தித் தருகிறது. அந்நூலும் இன்னமும் மொழிபெயர்க்கப் பெறவில்லை. தமிழ்ச் சமுதாயம் வளம் பொருந்தியதாக அமைந்திருந்த போது, பல்வேறு நிலைகளில் அது பெற்ற சாதனைகள் குறிக்கத் தக்கவை. இன்றும் தமிழகத்தின் பல பகுதிகளில் காணப்பெறும் பழங்கோவில்கள், ஓவியங்கள், சிலைகள் பழந்தமிழரின் கலை நுணுக்கத்தையும் படைப்பாற்றலையும் தாங்கியுள்ளன. பழந்தமிழரின் பண்பாடு கலைத்திறன்கள் தமிழகத்துக்குள் மட்டுமே நின்றுவிடவில்லை. அவர்கள் கடல்கடந்து தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் சென்று அங்கு நிறுவிய பண்பாட்டு நிலையங்கள் இன்னமும் அவர்களுடைய கலை மாண்பைப் பேசிக் கொண்டிருக்கின்றன. தமிழகத்தின் நாங்கூர் என்ற இடத்திலிருந்து தமிழர்கள் மலேசியா நாட்டிற்குச் சென்று அங்குள்ள தாங்பா என்ற இடத்தில் அமைந்துள்ள விட்டுணு கோவில் அவனி நாரணம் என்று அழைக்கப்படுகிறது. பர்மாவில் அரிமத்தானபுரம் என்ற ஊரில் கட்டப்பெற்றுள்ள அச்சுதன் கோவிலும் இங்கிருந்து சென்ற தமிழர்கள் கட்டியதே. தென்கிழக்காசிய மொழிகளில் உள்ள சில எழுத்துக்களின் மூலங்கள் பல்லவ காலத்துக் கிரந்த எழுத்தாக அமைந்தவை.

காஞ்சியிலிருந்து அரச மரபினனான போதிவர்மன் சீனா, சப்பான் நாடுகட்குச் சென்று பரப்பிய புத்தமதம் இப்போது சென் புத்தமதம் என்றழைக்கப்படுகின்றது. நம் பாண்டிய மன்னர் பெயராகவே அமைந்த ஸ்ரீராமன் என்ற பெயருடையவர் சம்பா அரசனாக ஆண்ட பகுதியே இன்று வியட்நாம் என்பதாகும். தென்கிழக்கு ஆசிய மன்னர்கள் பெயர்களின் பின்னொட்டாக க் காணப்பெறும் வர்மன் என்பது நம பல்லவ ஆட்சியாளர்களை நினைவூட்டும். தமிழ்நாட்டில் உதித்த தேவராச வழிபாடு கம்போடியா வரை சென்றுள்ளது. தென்கிழக்கு ஆசியாவில் காணப்பெறும் இராமாயணத்திலும், ஜாவாவில் உள்ள பிரம்பன்னான் கோவிலில் செதுக்கப் பெற்றுள்ள இராமாயணக் கதைச் சிற்பங்களிலும் தமிழின் தாக்கங்களைக் காணலாம். தாய்லாந்தின் வழிபாட்டுச் சடங்குகளில் திருப்பாவை. திருவெம்பாவை போன்ற பாடல்கள் பாடப்பெறுகின்றன. 'ஏலோர் எம்பாவாய்' என்பது 'லோரம்பாய்' என்று திரித்துப் பாடப்படுகிறது.

இத்தகு பழம்பெருமை நம்மை முழுமையாக்காது. பழம்பெருமைகள் பேசுவதைத் தவிர்ப்பது இன்று நலந்தரும். பாரதியார் வரிகள் நமக்கு எச்சரிக்கை தருவன.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமையில்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்.

நாம் பாரதியின் பாடலை மேடைதோறும் முழங்குகிறோம். செயல்முறையில் இறங்கும் காலம் இன்று வந்தாகிவிட்டது.

மனம் ஓர் ஆலயம்

பொன்பரமகுரு

காவல்துறை டைரக்டர் ஜெனரலாகவும், தமிழக அரசின் பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் தலைவராகவும், நிர்வாக இயக்குநராகவும் சிறப்பாகப் பணியாற்றி 1984 ஆம் ஆண்டு ஒய்வு பெற்றவர் திரு பொன்பரமகுரு. மிகச் சிறந்த எழுத்தாளர். சிறுகதை, நாடகம், நாவல், மொழிபெயர்ப்பு எனப் பலதுறைகளில் இதுவரை 35 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவர் சித்தராகவும் அருளாளராகவும் வாழ்ந்து மறைந்த தெய்வத்திரு பொன்னையா சுவாமிகளின் அருந்தவப்புதல்வர். சித்தர் இலக்கிய ஈடுபாடும், ஆழ்ந்த இறையுணர்வும் கொண்ட பொன்பரமகுரு தூய வாழ்வினர். தொண்டு மனத்தினர். 'ஆன்மீகக் காவலர்', 'இலக்கிய மாமணி' போன்ற பட்டங்களைப் பெற்றவர்.

ஆண்டவன் அருளாட்சி புரியும் பீடம் ஆலயம். ஆலயம் என்பது ஆ+லயம் ஆகும். 'ஆ'=ஆன்மா: 'லயம்'=லயிப்பதற்குரியது. ஆக, ஆலயம் என்றால் 'ஆண்டவன் திருவடியில் ஆன்மா லயிப்பதற்குரிய இடம்' என்பதாகும். மேலும், 'ஆ' : ஆணவம்' 'லயம்': அடங்குதல். அதாவது, ஆணவ மலம் அடங்குமிடம் ஆலயம் என்றும் கூறலாம். எனவே, நம் நற்கதியை நாட உதவுவது ஆலயம். மனம், வாக்கு, காயம் மூன்றையும் அடக்கி ஒடுக்கி, உள்ளொளியை நாடி, உண்மையைத் தேடி, அறிவை அறிந்து, ஆன்மாவை லயிக்கச்செய்யும் ஒப்பற்ற இடம் ஆலயம். அதற்கு வழிகாட்டுவது மனம்.

மனம் மனிதருக்கே உரித்தான தனிப் பெரும் உடைமை. தனது மனத்தால் மனிதன் உலகிலுள்ள எல்லா உயிர்களிலிருந்தும் விலகித் தனித்து விளங்குகிறான். மனந்தான் மக்களை மாக்களிலிருந்து உயர்த்திக் காட்டுவது. மனம் என்றால் என்ன?

''கடிகாரத்தின் முள் காலங்காட்டிச் செல்வதற்கு அதற்குள் ஒரு சுருள் விசை (ஸ்பிரிங்) இருப்பதுபோல், நமது உடலுக்குள்ளும் ஒரு இயந்திரம் உள்ளது. அதற்கு பெயர் மனம்,'' என்று அருளினார்கள் தபோவனம் தவத்திரு ஞானானந்த கிரி சுவாமிகள்.

மனமே நம்மை நடத்திச் செல்லும் ஒட்டுநர்; சதா முன்னேறும் நோக்குடன் இயங்கும் நம் வாழ்வை நடத்திச்செல்லும் மனமென்னும் ஒட்டுநர் நல்ல விதமாகப்பயிற்சி பெற்று, தேர்ச்சியுற்று, பண்பட்டிருத்தல் வேண்டும். அதற்கு நல்ல கட்டுப்பாடு தேவை. இல்லையெனில் பெரும் விபத்தை விளைவிக்கும் ஆபத்தில் நாம் சிக்கிக் கொள்வோம்.

அமெரிக்க அரசியல் அமைப்பை நிறுவிய ஜெபர்சன், ''மனத்தின் கொடுமைகளை எதிர்த்துப் போராடுவேன். ஆண்டவன் சன்னிதானத்தில் இதைப் பறை சாற்றுகிறேன்,'' என்று பிரகடனம் செய்தார். ஆம், மனமே நம்மை ஆட்டிப்படைக்கும் சூத்திரதாரி. 'மனம் போல் வாழ்வு' எனும் முதுமொழியை அனைவரும் அறிவோம்.

வியாபாரத்தால் தனம் வரும். விவசாயத்தால் தானியம் வரும். தானதருமத்தால் புண்ணியம் வரும். பொதுத் தொண்டால் புகழ்வரும். கல்வியால் அறிவுவரும். அறுசுவை உணவால் ஆரோக்கியம் வரும். பக்தியால் அருள்வரும். அந்த அருளால்

வருவது மனச்சாந்தி, மன அமைதி, இறுதியில் முக்தி.

சினம் இறக்கக் கற்றாலும், சித்தியெல்லாம் பெற்றாலும்
மனம் இறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே"

என்கிறார். தாயுமானவர் ஆகவே, மனத்தை அடக்கக் கற்கவேண்டும்.

சாதாரணமாய் நம்மனம் ஓர் நிலையில் இருப்பதில்லை. இன்று நாவற்பழத்தை நாடும் நம் மனம், நாளை நாரத்தம் பழத்தை நாடுகிறது. நாடி அதை அடைந்த பின்னாவது நிம்மதியுண்டா? அது தானில்லை! கையில் கிடைத்த பலாப்பழம் கசக்கிறது. ஆனால், கையில் கிடைக்காத கொய்யாப்பழம் இனிக்கிறது. இக்கரைக்கு அக்கரை பச்சையாகத் தோன்றுகிறது.

இவ்விதம் சதா அலையும் மனத்தைப் பார்த்து ஒரு பெரியவர்வெகுண்டு, "யாரலைந்தாலும் நீ அலையாதே", என எச்சரிக்கிறார். மற்றொருவர், "மனமெனும் மூடக் குரங்குப் பயலே", எனக் கடிகிறார். கருவைப் பேரொளி தெய்வத்திரு பொதிச்சுவாமிகள், "மனம் குரங்கு, குரங்கிலும் குறும்புமிகு குட்டிக்குரங்கு. யாருக்குமே அடங்காது. அதை அடக்கி, அதன் போக்கை ஒரு நிலைப்படுத்த வேண்டும்", என்று அருளினார்கள். ஆம், மனம் ஒரு குரங்குதான். சதா கிளைவிட்டுக் கிளை தாவும் குரங்கு போல், நம் மனமும் சதா அங்குமிங்கும் அலைந்த வண்ணமே இருக்கும்.

ஒரு குரங்கு பனைமரம் ஒன்றில் ஏறியதாம். அங்கிருந்த பானையிலுள்ள கள்ளை உண்டதாம். போதை தலைக்கேறி ஆட்டம் போட்டதாம். அதனால் வெகுண்ட அங்கிருந்த தேனீ அந்தக் குரங்கைக் கொட்டியதாம் கள்ளுண்ட போதையும், தேள் கொட்டிய வாதையும் வாட்டிவதைக்க, அக்குரங்கு துள்ளிக்குதித்துக் கதறி ஓடியாடி அலறியதாம். அது கண்டு அப்பனையில் குடியிருந்த பாம்பு ஆத்திரம் அடைந்து அக்குரங்கைப் பற்றிப் பற்றிப் பிடித்துக் கொண்டதாம். பின்னர் கேட்பானேன் அக்குரங்கின் குறும்புச்சேட்டைக்கும், அதேபோல், நம் மனக்குரங்கையும் கள் போன்ற ஆணவமும், தேள் போன்ற கன்மமும், மாயையும் ஆட்கொள்ள நாம் விடக் கூடாது.

மாயையாகிய இவ்வுலக இன்பம் கானல் நீர் போன்றது. ஓர் பாழடைந்த நீரில்லாக் கிணற்றில் ஒருவன் தவறி விழுகிறான். ஆனால் கிணற்றுச்சுவரில் முளைத்திருந்த கொடி ஒன்றைப் பற்றிக்கொண்டு ஊசலாடுகிறான். பாவம், அக்கொடியை ஒரு எலி கடித்துக் கொண்டிருந்தது. கொடி அறுந்தால் அவன் நீரில்லா அப்பாழுங் கிணற்றினுள் விழுவான். அங்கோ பல நச்சுப்பாம்புகள் வலம் வருகின்றன. கீழே கிணற்றினுள் விழுவான். அங்கோ பல நச்சுப் பாம்புகள் வலம் வருகின்றன. கீழே கிணற்றினுள் விழுந்தால், அங்குள்ள பாறைகளில் மோதி அவனது தலை கை கால்கள் முறியும். அத்துடன் நச்சுப் பாம்புகளும் அவனை கடித்துக் கொல்லும் பேராபத்தும் காத்திருக்கிறது. அது சமயம் கிணற்றுச் சுவரிலிருந்த ஓர் தேன்கூடு உடைந்து, அதிலிருந்து தேன் சொட்டியது. அதில் ஒரு சொட்டு தேன் அவன் வாயில் விழுந்தது. அதை நாவால் நக்கிச் சுவைத்து ருசித்து ரசித்த அவன்," ஆகா! அசல்தேன்! இது அமிர்தமாய் இனிக்கிறது," என்றெண்ணி அகம் மகிழ்ந்தான். எப்படி இருக்கிறது அவன் கதை? சற்று நேரத்தில் அவனுக்கு ஏற்பட இருக்கும் அபாயக் கதியை அவன் நினைக்கவில்லை. அந்தச் சொட்டு தேன் ருசியை அவன் அனுபவித்து மகிழ்ந்தான். அதுதான் இவ்வுலக இன்பம். வெறும் மாயை! அதனை நாம் நன்கு உணர வேண்டும். ஆகவே, மனத்தைச் சரிவர அடக்கிப் பயன் பெறுதல் வேண்டும். ஆகவே, மனத்தைச் சரிவர அடக்கிப் பயன் பெறுதல் வேண்டும். சதா அலையும் மனதை அடக்குவது மிகக் கடினம்.

இவ்வரிய உண்மையை விளக்க எனது தந்தையார் தெய்வத்திரு பொன்னையா சுவாமிகள், "சும்மா இருக்கிற சுவாமிக்கு சோற்றுக் கட்டி இரண்டு", என்றோர் கதை கூறுவார்கள்.

ஓர் ஊரில் ஒரு தனவந்தர் அன்ன சத்திரம் கட்டி, சமயத் தொண்டாற்றுவோர்க்கு அன்றாடம் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்திருந்தார். ஒரு நாள் அவரது கணக்கர் சத்திரத்திற்கு வந்து வரவு செலவு கணக்கை சரிபார்த்தார்.

ஏட்டில் அன்றாடம், ''சும்மா இருக்கிற சாமியாருக்குச் சோற்றுக் கட்டி ஒன்று'', என்று குறிப்பிட்டிருந்தது.

அதைக் கண்ட கணக்கர், ''நமது முதலாளியின் ஆணையை மீறி, சமயத்தொண்டு எதுவும் புரியாது சும்மா இருக்கிறவர்க்கு ஏன் வீணாய் அன்னம் அளிக்கிறீர்'' எனக் கேட்டார் நிர்வாகி.

''அதோ மூலையில் கண்மூடி அமர்ந்திருக்கும் அந்தச் சாமியாரைக் கூப்பிட்டு நீங்களே கேளுங்கள். உணவு வேளையில் அவர் வந்து அமர்ந்தால், நான் எவ்விதம் இல்லை என்பது?'' எனப்பதிலுரைத்தார் நிர்வாகி.

உடனே அச்சாமியாரை அழைத்து, "ஏன், சாமி! நீங்கள் சமயத் தொண்டு எதுவும் புரியாது, சும்மா இருக்கிறீர்கள்? சமயத் தொண்டு புரிபவருக்குத்தான் அன்னம் வழங்க எங்கள் முதலாளியின் உத்திரவு'', என்றார் கணக்கர்.

அச்சாமியார் புன்னகை புரிந்து, "ஏன், அப்பனே! சும்மா இருப்பதென்ன அவ்வளவு சுலபமா?'' என வினவினார்.

"அதிலென்னசிரமம்? எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் சும்மா இருக்கலாமே!" எனப் பதிலுரைத்தார் கணக்கர்.

"அதிக நேரம் வேண்டாம், அப்பனே! ஒரு ஐந்து வினாடி எவ்விதச் சிந்தனையும், செயலுமின்றி, மனம் வாக்கு காயம் யாவும் அடக்கி நீ இருப்பாயானால், உன் சொற்படி நான் நடப்பேன்," என்றார் சாமியார்.

''இதோ நான் இருக்கிறேன். ஐந்து வினாடியென்ன, ஐம்பது வினாடி வேண்டுமானாலும் நான் சும்மா இருக்கத்தயார்'', எனக்கூறி, கண்களை மூடி அமர்ந்தார் கணக்கர்.

சற்று நேரத்தில் அச்சாமியார், ''அப்பனே! நேற்று நீ தோப்புக் குத்தகைப்பணத்தில் ஆயிரம் ரூபாய் கையாடியதை உன் முதலாளி கண்டு பிடித்து விடுவாரோவென இப்போது நீ ஐயுற வேண்டாம்'', என்றார் கண்டிப்புடன்.

அதைக் கேட்டுத் திகிலுற்றகணக்கர், "சாமி! மன்னிக்கவேண்டாம்! இனி நான் எந்தச் சிந்தனையும் இல்லாது சும்மா இருக்கிறேன்,'' என்றார்.

ஆனால் அடுத்த வினாடியே, ''அப்பனே! இப்போது நீ உன் மனைவிக்குத் தெரியாது உனது கள்ளக் காதலிக்கு தங்கச் சங்கிலிவாங்கிக் கொடுத்ததை, உன் மனைவி அறிந்திருப்பாளோ என்று அஞ்சுவது கூடாது,'' என்றார் ''ஏதேது, இந்தச் சாமியார் நமது அந்தரங்கக்குட்டெல்லாம் அம்பலமாக்கிவிடுவாரோ!'' என அஞ்சி, அவரது திருவடிகளில் விழுந்து வணங்கி,'' சாமி! அடியேனை மன்னியுங்கள்! போதும் இச்சோதனை ஐம்பொறிகளையும் அடக்கிச் சும்மாயிருத்தல் மிகக் கடினமே. நீங்கள் ஓர் திரிகால ஞானி. இனி தாராளமாய் நீங்கள் இச்சத்திரத்தில் தங்கலாம்,'' எனக் கூறி மன்னிப்புக் கோரினார்.

பின்னர் சத்திர நிர்வாகியிடம்,'' இனி, சும்மா இருக்கிற இச்சாமியாருக்கு அன்றாடம் ஒரு சோற்றுக்கட்டிக்குப் பதில் இரண்டு கட்டிகள் கொடுக்கவும்,'' என ஆணையிட்டார்.

"வேண்டாம் அப்பனே! நீ உண்மையை உணர்ந்ததே இத்துறவிக்குப் பரமதிருப்தி. மனம், வாக்கு, காயம் மூன்றையும் அடக்கி, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய உணர்ச்சிகளை ஒடுக்கி, சும்மா இருந்து சுகம் பெறுவது மிக அரிது. ஆனால், முயன்று விடாது பாடுபட்டால் பலனுண்டு. ஐம்புலன்கள் எவராலே அடக்கப்படுமோ, அவர் மனம் அலையாது என்றும் நிலைத்திடும். ஆகவே, மனத்தை நிலை நிறுத்தலே

மாதவம்,'' என அறிவுரை அருளினார் அச்சாமியார். அந்த கணக்கருக்கு ஞானோதயம் ஏற்பட்டது.

ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவது எக்காலம்?

என வினவுகிறார் பத்திரகிரியார்.

ஆகவே, நாம் 'சும்மா இருத்தலை' நன்கு பயின்று கற்றுத் தெளிய வேண்டும் கடலில் அலைகள் எழுகின்றன. அங்கே நீரிலே நீர் எழுவதைக் காண்கிறோம். அவ்விதமே மனத்தில் சிந்தனை அலைகள் எழுதல் வேண்டும். மனத்தை மனத்தாலேயே அறியவேண்டும். தன்னைத்தானே ஊகித்துணர்தல் வேண்டும். மனத்தை தன் வயமாக்கியவன் அமைதியும், சாந்தமும் அடைவான். ''மனவசிய மானவனுக்கு ஜீவவசியமாகும். ஜீவவசியமானவனுக்கு ஜகவசி மாகும். ஜகவசியமானவனுக்கு பரவசியமாகும்'', என்பார்கள் எனது அருமை தந்தையார் அவர்கள்.

மனம் பால் போன்றது பால் தேனிலும் சேரும், நஞ்சிலும் சேரும். அதேபோல் மனம் நல்ல வழியிலும் செல்லும், தீயவழியிலும் செல்லும். ஆனால், பாலை காய்ச்சி, உறையூற்றி, தயிராக்கி, கடைந்து வெண்ணெய் ஆக்கினால், அது தேனிலும் மிதக்கும், நஞ்சிலும் மிதக்கும். வெண்ணெய் வெப்பத்தால் மட்டுமே இளகும். அவ்விதமே மனத்தை அடக்கி, ஓர்மைப் படுத்தி, நிலையிருத்தி, வெண்ணெய் போலாக்கினால், அது வெப்பமாகிய திருவருளால் மட்டுமே இளகும்.

நமக்கு நம் மனமே சுவர்க்கம்: நம் மனமே நரகம், நம் மனமே நண்பன், நம் மனமே பகைவன். ஆகவே, மனத்தை சரிவர அடக்கிச் சவாரி செய்து பயன் பெறுதல் வேண்டும். கட்டுமீறி அலைகின்ற மனத்தை அடக்கி ஒடுக்கி அமைதிப்படுத்த வேண்டும்

அலையும் புலனைப் பின்தொடர்ந்தே
அலையு மனதோ நம்மறிவைத்
கலக்கி இழுக்கின்றது நீர்மேல்
காற்று கலத்தை இழுப்பது போல்,

என்கிறது கீதை.

கடல் நீர் மேல் கப்பலை புயல் காற்று ஆட்டிப் படைத்து அங்குமிங்கும் இழுப்பதுபோல், நிலையற்ற ஐம்புலன்கள் வழியே திரியும் மனமும், நமது அறிவைக் கலக்கிச் சீரழித்து, நிலையின்றி இழுத்தடிக்கின்றது. ஆகவே, அலையும் மனத்தை அடக்குதல் வெகுகடினமே.

உலகிலுள்ள பல்வேறு மாயா சக்திகளைக் கண்டறிந்து வெல்ல வேண்டும் மனம் மனனம் செய்தல் வேண்டும். அறிந்தவற்றிலிருந்து அறியாதவைகளைச் சிந்தித்து அறிதல் வேண்டும். மனத்துடன் ஒன்றிணைந்து புதுப்புதுக் கற்பனைகளை உருவாக்க வேண்டும். நமது பிரதிபிம்பத்தை நம்முள்ளே நாம் காணல் வேண்டும். தீர்க்க தரிசனத்தால் வாழ்வின் பயனையும், முடிவையும் அறிந்து, அவற்றை அடைதல் வேண்டும். நிலையற்ற உலக மாயையை விடுத்து, என்றும் நிலைத்திருக்கும் உண்மைச் சக்தியை உணர்தல் வேண்டும். மனம் மனத்துடன் கலந்து கரைந்திட வேண்டும்.

ஓடும் மாட்டை இழுத்து வந்து கட்டுத்தறியில் கட்டிப் பழக்கினால் நாளடைவில் அந்த மாடு தானே கட்டுத்தறியில் வந்து நின்று வசப்படும். அதுபோல் ஓடும் மனத்தை தினந்தோறும் குறித்த வேளைகளில் இலட்சியத்தில் தானே வந்து லயிக்கும். இன்பத்தைத் தேடிப் புறத்தே அலையும் மனம், இதயத்திலுள்ள அமைதியையும், இன்பத்தையும் சிறிது உணரத் தொடங்கி விட்டால், அதுவே எவ்வித முயற்சியின்றி இலட்சியத்தை நாடி வந்து முடிவில் லயமடையும்.

அலையும் மனத்தை அகத்தடக்குமவனே சரியைக் கடந்தவனாம்
அலையும் மனத்தை அகத்தடக்குமவனே கிரியை முடிந்தோனாம்
அலையும் மனத்தை அகத்தடக்குமவனே யோக தற்பரனாம்
அலையும் மனத்தை அகத்தடக்குமவனே ஞானி அதிசூரன்

என்கிறது நிஷ்டானுபூதி

பாகன் யானையைக்கட்டி ஓரிடத்தில் நிறுத்துகிறான். ஆனால், யானை துதிக்கையை

மட்டும் பல பக்கங்களிலும் வீசிக் கொண்டேயிருக்கும். அதற்காகப் பாகன் யானையின் துதிக்கையில் ஒரு சங்கிலியைக் கொடுத்துவிடுகிறான். அதனால் ஆட்டம் நின்று விடுகிறது. அதே போன்று பல புலன்களிலும் பாய்ந்து திரியும் மனத்தையும் தெய்வசிந்தனையில் நிறுத்தினால் நிலை பெற்றுவிடுகிறது. சீவன் சிவனில் கலந்து விடுகிறது. சும்மா இருக்கும் நிலை ஏற்பட்டு விடுகிறது. மனம் தூய்மையும், அமைதியும் பெறுகிறது.

மனமது செம்மையானால் மந்திரஞ்செபிக்க வேண்டா
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டா
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டா
மனமது செம்மையானால் மந்திரஞ் செம்மையாமே:

என்கிறார். அகத்தியர் தமது ஞானப் பாடலில்.

மனச்சக்தி, மனச்செயல், மனச்சாரம் என்று மூன்று வகையில் பாகுபாடு செய்து மனத்தை அறிதல் வேண்டும். இறைவனை அறிய, அடைய மனமே மார்க்கம், வழிகாட்டி, புலப்படுத்தும் கண்ணாடி. மன ஒளி இறைவனை உருவகப்படுத்தியும், சிந்திக்கவும், தரிசிக்கவும் உதவுகிறது. பரிசுத்தமான மனச்சக்தி உள்ளொறியால் புலப்படுத்துகிறது. மனம் வெளிப்படல், வியாபித்தல், பங்கேற்றல் ஆகிய தன்மைகளால் மலர்ச்சியுறுகிறது. தன்னைத்தானே அலசிப்பார்த்து, ஆய்ந்து, சிந்தித்து தெளிவுறுதல் வேண்டும்.

புத்தியைப் பயன்படுத்தி, மனத்தின் மூலம் அறிந்தால்தான் நாம் யாரென்று விளங்கும். மனத்தின் சாரம் புரியும் புலன்கள் வழி மனம் அலைதல், உள்ளொளி கண்டறிந்து ஆத்ம சக்திபெறல் ஆகிய தன்மைகள் உள்ளன. மனம் முடிவான உள்ளொளி கண்டறிந்து ஆன்மாவில் கலத்தல் வேண்டும். நிரந்தர நிலை பெறுதல் வேண்டும். நான் என்ற அகம் அழிந்து, தான்தனது என்ற சுயநலம் ஒழிந்து, மனத்துடன் மனம் கரைந்து முழுநிம்மதி அடைதல் வேணடும். வீண் நினைவுகள் கூடாது.

மனம் அறிவின் கருவூலம் மனம் தெளிவுற்றால் தீர்க்கதரிசனம் கிட்டும். மனச்சக்தி பெருகியாவும் மனக்கண்முன் தோன்றும். சிலர் மன எழுச்சியும், சக்தியும் பெற தவறாகும் போதைப் பொருள்களையும், ஆவி சக்திகளையும், பில்லசூனியக் கண்கட்டிவித்தைகளையும் கையாளுகின்றனர். அவைகளால் நன்மையைவிடத் தீமைகளே அதிகம் விளையும். அவற்றைவிடுத்து இறைவனிடம் அன்பும், பக்தியும் செலுத்துவதே நன்மை பயக்கும் என்பர் ஆன்றோர்.

“மனம் எங்கிருந்து தோன்றுகிறதோ அங்கு ஒடுக்கப்படுவதே யோகம்'', என்று கூறுகிறது கீதை. தாயுமானாரும் அவ்வாறே கூறுகின்றார்.

சிந்தை பிறந்ததும் ஆங்கே அந்தச்
சிந்தை யிறந்து தெளிந்ததும் ஆங்கே
எந்த நிலைகளும் ஆங்கே - கண்ட
யான்தான் இரண்டற்றிருந்ததும் ஆங்கே.

ஆக, மனம் ஒரு குரங்கு, மனம் ஒரு சக்தி, மனம் ஒரு ஒளி என்பது புலனாகிறது. குரங்குக்குணம் கொண்ட மனத்தை முதலில் கட்டுப்படுத்த வேண்டும். அடுத்து, காமம் போக்கி, கோபம் விலக்கி, பொறாமை நீக்கி, அன்பை பெருக்கி, தொண்டை பரப்பி, பரந்த நோக்கோடு பரிபக்குவ நடு நிலைபெற்று மனச் சக்தியை உணர வேண்டும். மனச்சக்தியை உணர்ந்து, பக்தி செலுத்தி, உள்ளொளியை நாடி அடைதல் வேண்டும். அதனால் மனத்தூய்மையும், அமைதியும், சாந்தியும் பெற்று, இறுதியில் முக்தியும் அடைதயலாம். முக்திக்கு வழிகாட்டுவது ஆலயம். மனம் ஓர் ஆலயமாய் விளங்கி நமக்கு நல்வழி காட்டுகிறது. ''காலையும் மாலையும் கை தொழுவார் மனம் ஆலயம்''

நெஞ்சில் அறமிருந்தால் நடத்தையில் அழகிருக்கும்
நடத்தையில் அழகிருந்தால் இல்லத்தில் இசைவிருக்கும்
இல்லத்தில் இசைவிருந்தால் தேசத்தில் ஒழுங்கிருக்கும்
தேசத்தில் ஒழுங்கிருந்தால் எங்கும் அமைதியிருக்கும்.

உலகமயக் கண்ணோட்டம்

ஜே. எம். சாலி,

மிகச்சிறந்த எழுத்தாளர்: தேர்ந்த பத்திரிகையாசிரியர், சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ் முதுகலை பயின்றபின் சிங்கப்பூரில் பத்திரிகையாளராகப் பணியாற்றினார். 1958 ஆம் ஆண்டில் ஆனந்த விகடனுக்கு அறிமுகமாகி, அதன் துணையாசிரியராக எட்டாண்டுக்காலம் பொறுப்பில் இருந்தார். 1983 ஆம் ஆண்டு மீண்டும் சிங்கப்பூர் சென்று 'தமிழ்முரசு' இதழில் பணியாற்றினார். இப்போது அந்நாட்டின் தொலைக்காட்சி நிலையத்தில் முக்கிய பொறுப்பினை ஏற்று நடத்தி வருகிறார். சிறுகதை, நாவல், வரலாறு போன்ற பல துறைகளிலும் நூல் எழுதியுள்ளார். இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திலும் ஈடுபாடு கொண்டு எண்ணற்ற நூல்களைப் படைத்துள்ளார். சாலி என்றதும், அவரது இலக்கியத் தரம் வாய்ந்த சிறுகதைகள் நம் நினைவில் தோன்றாதிரா.

புதிய நூற்றாண்டும், அடுத்த ஆயிரமாம் ஆண்டும் புலர்ந்துள்ள தருணத்தில் உலகமயம் பற்றி உரத்த குரலில் பேசப்படுகிறது. அறிவியல், தகவல் நுட்ப வளர்ச்சியும், புரட்சியும் அதற்கு ஓர் அடிப்படை பல புதிய அறைகூவல்களுக்கு ஈடு கொடுக்கும் சூழல் இன்று உருவாகியுள்ளது.

புதிய ஆயிரமாம் ஆண்டு - Millennium, ykz - புரட்சி மிகு எதிர்காலம் என வருணிக்கப்படுகிறது. உலகமயம் (Globalisation) எனும் கொள்கையை, சிந்தனையை உணர்ந்து செயல்படாவிட்டால் ஒளிமயமான எதிர்காலம் இல்லை என்ற கருத்தும், கணிப்பும் உலகெங்கும் ஒலிக்கத் தொடங்கிவிட்டது. 'புதியதோர் உலகு செய்வோம்' என்று கவிஞன் பாடியது கற்பனையோ, கனவோ அல்ல. அது காலத்தின் கட்டாயம். உலகமயக் கொள்கையின் ஒரு கண்ணோட்டமே அது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அதற்கு இலக்கணம் வகுத்து, இலக்கியம் படைத்திருக் கிறார் திருவள்ளுவர். அந்த சிந்தனைக்கு புதிய நூற்றாண்டும், புதிய ஆயிரமாம் ஆண்டும் களம் அமைத்திருக்கின்றன.

உலகமயம் பற்றி பலதுறை அறிஞர்களும், ஆய்வாளர்களும் இன்று புதுப்புது விளக்கம் தருகின்றனர். வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களுக்கு, தமிழர்களுக்கு அந்தச் சிந்தனை மிகுதியாகவே இருக்கிறது என்பது பொதுக்கருத்து. திருக்குறள் சிந்தனையும், தாக்கமும் அதற்கு ஒரு காரணம். வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்தது தமிழ்நாடு என்று பாரதியார் பாடினார் உண்மை. உலகியல் உலகமயக் கொள்கையைப் போற்றும் திருக்குறளை உலகம் எந்த அளவுக்கு ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பது வெளிநாட்டு இந்தியர்களுக்கு நன்கு தெரியும். குறிப்பாக சிங்கபூர், மலேசியா உள்ளிட்ட தென்கிழக்கு ஆசிய நாடுகளில் திருக்குறளின் செல்வாக்கு அதிகம்.

பாரதியாரைப் போன்றே திருவள்ளுவரின் உலகமயச் சிந்தனையை மனோன்மணீயம் சுந்தரனார் மற்றொரு கோணத்தில் இசைத் திருக்கிறார். உலகியல் பொது நெறியை, பொது நீதியை திருவள்ளுவர் அன்றே வழங்கிவிட்டார் என்பது அவர் கருத்து.

"வள்ளுவர் செய் திருக்குறளை
மறுவற நன்குணர்ந்தோர்கள்
வள்ளுவரோ மனுவாதி
ஒரு குலத்துக் கொரு நீதி"

என்று உலகமய விளக்கம் தருகிறார் மனோன் மணீயம் பாவலர். ஒன்றே குலம், ஒருவனே தேவன், ஒரு குலத்துக்கு ஒரு நீதி இல்லை என்பதே குறள் விளக்கம்.

உலக நாடுகள் இந்தக் கொள்கையைப் போற்றுகின்றன. திருக்குறள் உயர்தனிச் சிறப்புடைய மக்கள் இலக்கியம் என அவை ஏற்றுக் கொண்டுவிட்டன.

புதிய உலகமயக் கண்ணோட்டத்தின் படி மக்களைத் தரம் பிரிப்பதில் குழப்பம் இல்லை. 'சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்' என்று பாரதியார் சொன்னார். சாதி இரண்டொழிய வேறில்லை என்று பாடிய தமிழ்ப்புலவர் இட்டார், இடாதார் என மக்களை இரு சாராராகப் பகுத்தார். புதிய ஆயிரமாம் ஆண்டுக் கண்ணோட்டத்திலும் இருசாரார் இடம் பெறுகின்றனர். உலகவாதி, உள்ளூர்வாதி என்பது ஒரு கருத்து.

புற உலகத் தொடர்புடையவர்கள் உலகவாதிகள் (Cosmopolitan) என்றும், உள்நாட்டிலேயே வாழ்வோர் உள்ளூர்வாதிகள் (Heart landers) என்றும் குறிப்பிடப்படுகின்றனர். இப்படிக்கூறப்பட்டாலும் அவர்களுக்கிடையே ஏற்றத்தாழ்வு கற்பிக்கப்படவில்லை. நாட்டுக்கும் உலகுக்கும் இருசாராரும் நன்மை செய்வோர் என விளக்கமும் தரப்படுகிறது.

மக்களைப் பற்றியும், மக்கட்பண்பைப் பற்றியும் உலகமய நோக்கில் வள்ளுவர் சொல்லாதவை இல்லை.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் (140)
உலகம் தழீஇய தொட்பம் (425)
உலகத்தோடு அவ்வதுறைவது அறிவு (426)
உலகத்தார் உண்டென்பது..... (850)

இந்தக் குறள்களையும், 'கண்ணோட்டம்' அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள சிலவற்றையும் சிந்தனை செய்தால் வள்ளுவரின் உலகமயக் கொள்கையைத் தெளிவாக உணரலாம்.

உலகப்போக்கை உணர்ந்து அதற்கேற்ப வாழவேண்டும். உயர்ந்தவர்களை, உயர்ந்தவற்றைப் புரிந்து கொண்டு வாழ்வதே அறிவுடமை என்பது வள்ளுவர் கொள்கை. உயர்ந்தவர்கள் யார்? உயர்ந்தவை யாவை? காலம், கருத்து, கண்ணோட்டம், அறிவு ஆகியவற்றின் அடிப்படையில் முடிவு செய்யலாம். 'அளவு கோல்கள் வேறுபடலாம். ஆனால் அறிவுக்குச் சிறப்பிடம் உண்டு. அறிவைப்பற்றி திருவள்ளுவர் வலியுறுத்தும் பாங்கு தனித்து ஆராயத்தக்கது.

உலகம் எவ்வாறு நடைபெறுகிறதோ, அதற்கேற்ப நடந்துகொள்வது அறிவுடைமை அறம், பொருள், இன்பம் ஆகியதுறைகளில் உலகின் இய்க்கம் எவ்வாறுள்ளது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். காலந்தோறும் மாற்றமும் வளர்ச்சியும் தோன்றலாம். அறிவியலும், தொழில்நுட்பங்களும் புதிய தேர்ச்சிக்கும் திறனுக்கும் காலம் அமைத்துள்ளன. எதுதேவையோ, அதைப்பெற்றாக வேண்டும். இல்லையெனில் பின்னடைவுக்கு ஆளாக நேரிடும். இதையே,

எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு (426)

என்றும் வள்ளுவர் உலகத்தோடு ஒட்டியிருக்க வேண்டும்; ஒதுங்கியிருக்கக்கூடாது. உலகத்தோடு பொருந்திய வகையில் மக்களின் வாழ்க்கை, தொழில் இயக்கங்கள் அமையவேண்டும் என்று கூறுகிறார்.

உண்மை நிலைக்கேற்ப வாழ்க்கை முறைகளை, நெறிகளை, அமைத்துக்

கொள்ளாதவர்கள் தோல்வியாளர்கள்; கேலிக்குரியவர்கள்; காலத்தின் தேவையை உணர்வது கடமை.

உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும் (850)

என்ற குறள் இதனை வலியுறுத்துகிறது.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார் (140)

எனும் குறளின் கருத்தையும் மேலே கண்டோம்.

உலகமயக் கண்ணோட்டம் இல்லையெனில் வாழ்க்கை வளம் பெறாது என்பது புதிய நூற்றாண்டில், புதிய ஆயிரமாம் ஆண்டில் தலையெடுத்துள்ள வாதம், விவாதம் பலநூற்றாண்டுக்கு முன்பே இதை உறுதியிட்டுக்கூறிவிட்டவர் திருவள்ளுவர்.

கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை

கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையால் உண்டிவ் வுலகு

கண்ணோட்டம் எனும் சிறந்த, அழகிய பண்பினால் தான் இந்த உலகம் இயங்குகிறது நடைபெறுகிறது இது உலகியல் உண்மை. இதைப் புரிந்து செயல்படாவிட்டால் வாழ்க்கையில் வளம் இல்லை. நலமில்லை.

உலகமயக் கொள்கைக்கு விளக்கமாக அமைந்த சில குறட்பாக்கள் இவை. அறநெறி, பொருளியல், வாழ்வியல் துறைகளில் உலகம் முன்னேறப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே கொள்கை முரசறைந்திருக்கிறார் திருவள்ளுவர்.

தொலைவில், வெளிநாடுகளில் வாழ்ந்துவரும் இந்தியர்கள் வள்ளுவரின் உலகமயத் தொலைநோக்கை நன்கு உணர்ந்துள்ளனர். மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றை வழிவழியாக அவர்கள் பாதுகாத்து வருவது இதற்குக் காரணம். குறிப்பாக தென்கிழக்காசியநாடுகளில் குறள் நெறி பரவியிருக்கிறது. கடாரம், சாவகம், தக்கோலம், கம்போஜம் என தமிழர்களால் முன்னர் அழைக்கப்பட்ட மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, கம்போடியா ஆகிய நாடுகளில் பாரதமும் இராமயணமும், திருமுறைகளும், திருகுறளும் நெடுங்காலமாகவே வழங்கிவரு கின்றனர்

வரலாற்றுக்கால கட்டங்களை வகைப் படுத்தி அந்நாடுகளில் திருமுறை, திருக்குறள் ஆகியவற்றின் செல்வாக்கை ஆராய்வது சுவையான பணியாக அமையும். ஆய்வாளர்கள் அதில் கவனம் செலுத்தலாம். பலமொழி பேசும் பல இன மக்கள் வாழும் நாடுகளாக அவை இருப்பதால் திருக்குறள் மற்ற மொழிகளிலும் இடம் பெற்றிருக்கிறது. 1966 ஆம் ஆண்டில் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் உலக தமிழாராச்சி மாநாடு மலாய், சீன மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்படுவதற்குக் களம் அமைத்துத்தந்தது.

சிங்கப்பூர், மலேசியா பத்திரிகைகளும், சமூக, இலக்கிய அமைப்புகளும் திருக்குறளைப் பரப்புவதில் கடந்த நூற்றாண்டுகளில் பெரும் பங்காற்றியுள்ளன. திருக்குறள், திருமுறை சொற்பொழிவுகள் ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றன. மலாய், சீனமொழி இலக்கியங் களுடன் திருக்குறளை ஒப்பாய்வு செய்யும் பணியும் நடைபெறுகிறது. ஜப்பானியர்கள், கொரியர் களிடையேயும் திருக்குறள் நன்கு அறிமுகம் கண்டுள்ளது.

வள்ளுவர் வழங்கிய உலகமயக் கொள்கை பலநாடுகளில் செயலாக்கம் பெற்று வருகிறது. இதற்கு சிங்கப்பூர் சிறந்த எடுத்துக்காட்டு. உலகமயக் கண்ணோட்டம் இல்லாமல் நாடும் சமூகமும் உயரவும் முன்னேறவும் முடியாது என்பது அரசின் கொள்கை. அதனால் உலகவாத சமுதாயத்தை (Cosmopolitan Society) சிங்கப்பூர்

உருவாக்கிவருகிறது. அறநெறிக் கோட்பாடுகளுக்கு அளிக்கப்படும் முன்னுரிமை அறிவியல் தொழில்நுட்பத்திறனுக்கும் அளிக்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில்லாமல் (Information Technology) வாழமுடியாது; உலக நாடுகளுடன் போட்டியிட்டு முன்னேறமுடியாது என்பதால் உலகமயச் சாளரத்தை சிங்கப்பூர் திறந்து வைத்திருக்கிறது.

கணினி (Computer) இணையம் (Internet) ஆகிய தகவல் தொழில்நுட்பத் துறையில் விரைந்து முன்னெறியுள்ள நாடுகளில் சிங்கப்பூரும் ஒன்று, குறிப்பாக சிங்கப்பூர் இந்திய, தமிழ்ச் சமூகத்தினர் அந்தத்துறையில் சாதித்துவருகின்றனர். இணையப் பக்கங்களில் திருக்குறளையும் திருமுறைகள் உள்ளிட்ட இலக்கியங்களையும் இடம் பெறச் செய்வதில் சிங்கப்பூர் இந்தியர்கள் முன்னோடிகளாகத் திகழ்கின்றனர்.

திருவள்ளுவரின் உலகமயக் கொள்கை களை உலகறிய செய்யும் பணி இனி பரவலாக நடைபெறும் என எதிப்பார்க்கலாம். கணினி தொழில்நுட்பம் அதற்குக் கைகொடுக்கப்போவது உறுதி. ஏறத்தாழ உலகின் எல்லா மொழிகளிலும் திருக்குறள் வரும் ஆண்டுகளில் மொழி பெயர்க்கப்படும் வாய்ப்பை தகவல் தொழில் நுட்பத்துறை உருவாக்கித்திரும்.

திருக்குறள் உரையாசிரியர் கோ.வடிவேலுச் செட்டியார் பற்றி

தகுதியுடையவர்க்குத்தான் பாடம் சொல்வது என்ற திட்டத்தை இவர் ஒரு நாளும் பின்பற்றியதே இல்லை. விருத்திப் பிரபாகரம் என்பது வேதாந்தத்தைத் தருக்க மிடுக்கோடு விரிவாக எடுத்தியம்பும் ஒரு பெருநூல்: பல்லாண்டுகள் வேதாந்தபாடம் கேட்டவர்க்கும் இரும்புக் கடலையைப் போன்றிருக்கும். அந்த நூலைச் சிறிதே தமிழறிவு பெற்ற கன்னியப்பன் என்பவன் கோடை விடுமுறையில் மற்றவர் யாரும் வருவதற்கு விரும்பாத நண்பகல் நேரத்தில் பாடம் சொல்ல வேண்டும் என்று பேரார்வத்துடன் வேண்டிக்கொண்டு அவரை அடைந்தான். செட்டியாரும் அவனுக்குத் தடையொன்றும் சொல்லாமல் அந்த நூலைப் பாடம் சொல்லத் தொடங்கினார். ஐந்து மணித்துளிகள் ஆனவுடனேயே அவன் உட்கார்ந்தபடியே குறட்டை விட்டுத் தூங்கத் தலைப்பட்டான். ஆனால், இவரோ, நிறுத்தாமல் ஒரு மணிநேரம் தொடர்ந்து பாடம் சொன்னார். இக்காட்சியை ஒரு நாள் பொறுமையுடன் தொலைவில் மறைவில் நின்று பார்த்துக் கொண்டிருந்த பல்கலைச் செல்வர் தெ.பொ.மீ அவர்கள், பாடத்தை முடித்து நின்றதும், அவரை அணுகி, “அவன் தூங்கி விழுந்து கொண்டிருக்கிறான். நீங்களோ நிறுத்தாமல் பாடம் சொல்லிக் கொண்டு இருக்கின்றீர்களே, ஈதென்ன விரயம்!” என்று உசாவினார் அது கேட்ட செட்டியாரவர்கள், அவனைச் சார்பாகக் கொண்டு அந்த நூலைத் திருப்பப்படிப்பதற்குத் தமக்கு வாய்ப்பளித்திருப்பதற்கு அவனுக்குத் தாம் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருப்பதாகக் கூறிய விடை, பல்கலைச் செல்வரை வியப்பில் ஆழ்த்தியது. அந்த நிகழ்ச்சியைப் பல்கலைச் செல்வரும் என்றும் மறவாமல், தாமும் யார் எங்கே எந்நேரத்தில் பாடம் கேட்டாலும், ஐயம் எழுப்பினாலும் தம்முடைய வேலை நெருக்கடிகளை ஒத்திவைத்து விட்டு, உடனே கூறும் பழக்கம் உடையவரானார்.

அருட்குறள் : ஒரு பார்வை

டாக்டர். தி. தயானந்தன்

கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தின் பொதுச்செயலாளர் ஆங்கிலத்திலும் தமிழிலுமாக ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். இறையியல், சமயவியல், மொழியியல் முதலியவற்றில் துறைபோய பெரும் புலமை உடையவர். ஐக்கிய இறையியல் கல்லூரி மதுரை மற்றும் அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, ஆசிய நாடுகளில் பல்வேறு இறையியல் கல்லூரிகளில் பேராசிரியராகப் பணியாற்றியவர். 'உலகக் கிறிஸ்தவத் தமிழ்ப் பேரவை', 'நண்பர் வட்டம்' முதலிய அமைப்புகளின் தலைவராக விளங்கும் டாக்டர் தயா சமய நல்லிணக்கத்துக்காக ஆற்றிவரும் அருந்தொண்டு போற்றற்குரியது.

தமிழில் கிறிஸ்தவ இலக்கியம் வீரமாமுனிவர், வேதநாயக சாஸ்திரியார், கிருஷ்ணபிள்ளை போன்றோரின் படைப்புகளால் உருப்பெற ஆரம்பித்து இன்றளவும் வளர்ந்து வருகின்றது. சுவீகரனாரின் முக்திவழி அம்மானை, அந்தோணிகுட்டி அண்ணாவியாரின் சிற்றிலக் கியங்கள், ஜி.எஸ்.வேதநாயகரின் சதக நூல்கள், எஸ்.ஆரோக்கியசாமி போன்றோரின் படைப்புகள் இன்று தமிழ் அறிஞர்களின் பாராட்டுகளைப் பெற்று வருகின்றன. அத்தகையோருள் ஒருவர்தாம் பாவலர் பேராசிரியர் வீ.ப.கா. சுந்தரனார்.

இலக்கியம், இசை சார்ந்த ஆய்வுகள் மூலம் தமிழ் அறிஞர் உலகிற்கு நன்கு அறிமுகமாகியுள்ள இவ் அறிஞர் இறவாப் பேறு பெற்றுள்ள சில கிறிஸ்தவ நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். 'அருட்புகழ்', 'இறையிசைப் பாமலர்' ஆகியவற்றோடு 'அருட்குறள்' என்ற அருமையான குறள்பெட்டகத்தையும் உரையோடு வழங்கியுள்ளார்.

கிறிஸ்து நெறிக் கருத்துக்களைக் குறள் வெண்பாக்களால் தெரிப்பாக எடுத்துரைத்திருப்பது அருட்குறள் ஆசிரியரின் விவிலிய அறிவையும், இறையியல் தெளிவையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றது. அணுவைத் துளைத்து அதற்குள் அருட்கடலை அவர் புகுத்திக்காட்டும் பெற்றியில் ஒரு தனி அழகு உள்ளது. சிறு சிறு சொற்களைச் சிக்கனமாக எடுத்தாண்டு கருத்துச் சரங்களைத் தொகுத்துத் தருகிறார் இந்த அருட்பாவலர்.

இறைப் பெயர்களாகத் தொல்காப்பியத்தில் குறிக்கப் பெற்றுள்ள கொடிநிலை, கந்தழி, வள்ளி ஆகிய பொருள் பொதிந்த தொடர்களைக் கவிஞர் இயேசுவுக்கு ஏற்றிச் சொல்லும் போது, அவற்றின் ஆழ்நிலைப் பொருள் அவரில் முழுமை எய்துவதைக் காட்டும் மாண்பு இதுவரை எந்தக் கிறிஸ்தவக் கவிஞரும் எடுத்துரைத்திராத சிறப்பு என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

கொழுகொம்பாய் நின்று கொடித்தளர்வு தாங்கும்
கொடிநிலையை என்றும் நீ பாடு (271)

தளர்வுறும் கொடியைத் தாங்கியணைத்து நிலைப்படுத்துவது கொடிநிலை; கொடியின் தளர்வு இறப்பையே வருவித்தாலும் கொடிநிலையாம் இயேசுவைப் பற்றுவோர் இறந்தாலும் வாழ்வர் என்கிறார்.

கந்தொன்றும் இல்லாத கந்தழியைக் கந்துதல்
கந்தறக் கந்திடும் கந்து. (274)

இப்பாடல் வள்ளுவரின்,

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு (350)

என்ற குறளை நினைவுபடுத்துவதாய், அதன் மறுபதிப்பாய் அமைந்துள்ளது.

இன்னொரு குறள்:

குன்றிக் கொடியெலாம் வாடினும் வள்ளிமுதல்
நின்றிருந்து நல்கும் துளிர் (277)

கொடி வாடினாலும், வள்ளிக் - கிழங்கு - வாடி உலராமல் துளிர்த்துதவும். மூலவனாம் இறைவன் அத்தகையோன். பாலஸ்தீன நாட்டுச் சூழலில், 'நான் திராட்சைக் கொடி; நீங்கள் கிளைகள்' என்று இயேசு கூறியபோது எடுத்துரைக்க வந்த கருத்தும் இதுதான் (யோ. 15:4,5).

வழி - வாய்மை - வாழ்வு என விளங்கும் அண்ணல் இயேசு, கொடிநிலை - கந்தழி - வள்ளியாகவும் உள்ளார்.

விவிலியப் பகுதிகளைக் குறள் வார்ப்பில் வடித்தெடுத்து வழங்கும்போது கவிஞர் தம் உரிமத்தைப் பயன்படுத்தி மூலத்தில் இல்லாதவைகளைச் சேர்த்துச் சொல்கிறார். அதனால் மூலம் சிதைவுறவில்லை; பொலிவே பெறுகின்றது. எடுத்துக்காட்டுக்கு இதோ ஒரு அருட்குறள்:

தேன்கூட்டில் வார்க்கும் தெளிதேனில் மிக்கினிதாம்
வான்கூட்டு மாமறை வார்ப்பு (31)

இக்குறளில் வரும் 'வான்கூட்டு' என்ற நயம் மிகுந்த தொடர், விவிலியக் கருத்துக்குச் சிறப்புக் கூட்டுவதைச் சுவைத்து மகிழலாம்.

'படித்தேன்', 'சுவைத்தேன்' என்ற தொடர்களைப் 'படிப்பா' லோடு கலந்து, 'தேனோடு பால் கலந்தற்றே' என்னும் வகையில் கவிஞர் வழங்கிடும் குறளின் மூலம் இனிப்புக்கு இருசுவை உண்டு என்பதைக் கண்டு கொள்கிறோம்.

படித்தேன் கலந்த படிப்பால்உண் டாற்போல்
படித்தேன் சுவைத்தேன் மறை (38)

இனி, இயேசு பிறப்புப் பற்றி ஒரு நயமான சொற்றொடர்:

அன்று பாலையில் 'மன்னா' உணவீந்தவர் (யாத்திராகமம்) பெத்தலைக் குடிலில் பிறந்திடும்போது பாலுக்கழுகிறார். அவர் மன்னர். 'மன்னா' என்று விளிப்போர்க்கு அவர் 'மன்னா'வும் ஆவார்:

மன்னா உணவீந்தாய் பாலையில், பெத்தலையில்
மன்னா அழுதாய்ப்பா லுக்கு. (94)

உண்மை மன்னாவாம் அவ்வானமுதம் வையகம் வந்தது ஏன் என்பதைக் கூறும்போது,

தந்தையைக் காட்டிட மந்தையை மீட்டிட
வந்தது வானமுத வாழ்வு (112)

என்கிறார் கவிஞர்.

வானமுத வாழ்வாய் - மெய் மன்னாவாய்த் திகழ்பவர் விண் அப்பமும் ஆவார். யாருக்கு?

விண்ணப்பம் செய்துருகி வேண்டுவோர் கண்டடையும்
விண்அப்பம் இயேசுதிரு வேந்து. (191)

இயேசுவின் துணைக்கரம் பற்றிப் பேசும்போது,

தாக்கும் பகைநீக்கித் தூக்கி எனையெடுத்துக்
காக்கும்ஐங் காயன் கரம். (147)

என்பார் கவிஞர். மாந்தரைத் தூக்கியெடுக்க வந்து, தாக்கப்பட்டு ஐங்காயம் ஏற்ற கரம் ஒன்றே காக்கும் கரம்; அதுவே மாந்தரைத் தாக்கும் பிற பகைகளை நீக்கும்; அவர்களைத் தூக்கியெடுக்கும் என்னும் கருத்துக்கள் ஐங்காயத் தழும்பேற்றவரின் அரும்பெரும் ஆற்றலை எவ்வளவு அழகாக எடுத்துக்காட்டுகின்றன!

அந்த ஐங்காயன் கரத்தை நாசரேத்தூர் 'அருள்தச்சன்' கரமாகவும் காண்கிறார் கவிஞர்.

செதுக்கி இழைத்தது அருள்தச்சா போதும்
புதுக்கிப் பொருத்துஉன் அறத்து (453)

ஐங்காய அன்புத்தச்சன் வாழ்க்கையை வனைபவன்; அதைத் தன் சித்தப்படி புதுப்பித்துத் தருகிறவன். ஐங்காயத் தழும்புகளையும், அருள் இழைப்புகளையும் அதற்கு வழங்குவோன். இதனை ஆழ்நிலையில் அறிந்தோராய்ப் பேசுகிறார் அருட்பாவலர்.

அருட்குறள் விருந்தில் அகத்துறைப் பாக்கள் பலவற்றைச் சேர்த்து வழங்குகிறார் சுந்தரனார். இறுதியில் வரும் எட்டு அதிகாரங்களும் அருட்குறளின் இன்பத்துப்பால் ஆகும். இறையுறவில் தோன்றும் பேரின்பத்தைக் காதல் இன்பத்தால் இனம் காட்டித்தர முயல்கிறார் கவிஞர்.

'உன்னதப்பாட்டு' என்னும் பழைய ஏற்பாட்டுக் குறுந்தொகைக் கொத்து, தமிழ் இலக்கிய மரபுகள் வழியே வழங்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

தீராது அளித்தாலும் தேன்கடல் வான்முத்தம்
ஆரா(து) என்ஆசை அலை. (1142)

பாரிமலைப் பைஞ்சுனைப் பார்வை விதைத்துயிரில்
பாரித்துப் பைம்பயிர் செய் (1157)

கற்பின் புறவுநான்; கற்கூர் மலைவிடரில்
பொற்குரல் செய்தமர்வேன் பூத்து (1186)

கண்டே எனையேகற் கண்டே எனக்கூவிக்
கொண்டுவரு வான்கொண்டல் கோ (1187)

என்பன போன்ற குறட்பாக்களும் அவற்றுக்குக் கவிஞர் தரும் இறையுறவு நெறி விளக்கங்களும் படிக்கும்தொறும் இன்பம் தரவல்லவை.

'இறைவன் - ஆன்மா; இயேசு - திருச்சபை' என்ற நிலையில் நின்று இந்தக் காதல் பாக்களைப் படித்துச் சுவைத்தல் வேண்டும்.

அந்நிலை நின்றே ஆதாம் - ஏவாள் இணைப்புறவையும் இல்லற நெறியையும் விளங்கிக் கொள்ள வேண்டும். இதை அறிவுறுத்தும் வகையில் அமைந்துள்ளன ஆதாமோடு ஏவை என்ற அதிகாரப் பாடல்களும் (881 - 890), அதைத் தொடர்ந்து வரும் மனைமாட்சி, காக்கும் கணவன், கணவன் மனைவி ஒன்றிப்பு இல்லத்தலைவன் இயேசு, விருந்தும் நலமும் என்னும் அதிகாரங்களும். (90 - 95)

அனைத்துலகும் ஈந்தாலும் ஏவையின்றி ஆதாம்
மனத்துலவு மோஓர் மகிழ்வு (885)

மாமணம் தூயது; மாண்பிறையால் ஆயது;
சேமமே செய்வ(து) உயிர்க்கு (911)

நல்லாயன் நம்மில்லம் நாளும் நடத்துங்கால்
இல்லதென்? எல்லாம் உள (919)

இத்தகு குறட்பாக்கள் திருமண வழிபாடுகளில் ஓதுவதற்கும் பாடுவதற்கும் உரியவை ஆகும்.

வள்ளுவப் பெருந்தகையின் திருக்குறளிலும் சந்தான குரவர் உமாபதி சிவாசாரியாரின் திருவருட்பயனிலும் மூழ்கித் திளைத்த தமிழ்த்தென்றல் திரு.வி.க யாத்தளித்த கிறிஸ்து நெறிக்குறளையும் அவற்றோடு சேர்த்துச் சுவைத்தறிந்தோராய்ச் சுந்தரனார் தம் அருட்குறளை கிறிஸ்தவத் தமிழ் இலக்கியத்திற்குத் தம் பங்களிப்பாக்கியுள்ளார்.

பண்டிதமணியின் நாடகத்தமிழ்

பிரேமா நந்தகுமார்

திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த அறிஞர். கே.ஆர். சீனிவாச ஐயங்காரின் திருமகளார். தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, இந்தி, கன்னடம் முதலிய மொழிகளை அறிந்தவர். ஆங்கில இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ள இவர் மொழிபெயர்ப்புப் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். மணிமேகலை காப்பியத்தையும் பாரதி பாடல்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். எண்ணற்ற திறனாய்வுக் கட்டுரைகளை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதியுள்ளார். சிறந்த படைப்பாளரும் ஆவார்.

தமிழில் நாடகங்களைப் பற்றிய ஆய்வு நூல்கள் குறைவே. அவற்றில் ஆ. பழநியின் பண்டிதமணியின் நாடகத்தமிழ் சிறந்து விளங்குகிறது. இந்நூல் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் மொழிபெயர்த்த மண்ணியல் சிறுதேர் நாடகம் பற்றியது. மூலம் சூத்திரகன் வடமொழியில் இயற்றிய மிருச்சகடிகை.

ஆ.பழநி அவர்கள் தமிழ் தவிர வேறு மொழி கற்றதில்லை. அதனால் ஒரு மொழிபெயர்ப்பு நூலை ஆய்வு செய்யத்தயங்கினாராம். அப்பொழுது வ.சுப. மாணிக்கம் அவர்கள் மறைமலை அடிகளின் சாகுந்தல ஆராய்ச்சியை முன்னோடியாகக் கொள்ளுமாறு கூறினாராம். பழநி நல்ல கவிஞர், நாடகாசிரியர், சிலம்பு பற்றி இரண்டு ஆய்வு நூல்கள் இயற்றியவர். இவரது நடை சற்று தூயதமிழ் வாசம் கொண்டது. படிப்பதற்கு சிறிது சிரமம். ஆனால், அவரது ஆழ்ந்து சிந்திக்கும் திறமை நம்மைக்கவர்ந்து விடுவதால், படிக்கும்போது அலுப்பு ஏற்படுவதில்லை.

எடுத்துக்கொண்ட பொருள் சாமானிய மானதல்ல, சூத்திரகன் வடமொழி நாடக அரங்கில் இந்த ஒரு நாடகம் மூலம் அழியாப்புகழ் பெற்றவன். மொழிபெயர்த்த பண்டிதமணி தமிழுக்குப் பன்முகமாகத் தொண்டாற்றியவர். அற்புதமான பேச்சாளர். சிறந்த எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர். அவரது நூற்றாண்டு சமயம் ஏனைய நூற்றாண்டு விழாக்கள் போல் இல்லாமல், அவரது நூல்களை அச்சிடுவதில் முனைப்புக் காட்டியது நல்லதாயிற்று.

விழா எடுத்த பெரியவர்கள் மற்றுமொரு நல்லகாரியம் செய்தனர். பண்டிதமணியின் நூல்களுக்குத் திறனாய்வு நூல்களைத் தக்க புலவர்களைக் கொண்டு எழுத வைத்தனர். மண்ணியல் சிறுதேர் குறித்து எழுத ஆ. பழநி அவர்கள் கிடைத்தார்கள். நமக்கும் நல்லதொரு திறனாய்வு நூல் கிடைத்தது.

இயற்கையின் படைப்பாற்றல் என்பதே நாடகம். இப்புற நாடகத்தையும், தன் அகத்துள் நிகழும் நாடகத்தையும் கண்டுணர்ந்து மனிதன் இலக்கியப் புலவன் ஆகிறான் என்று பழநியின் திறனாய்வு தொடங்குகிறது. மேலும், இலக்கியப் புலவனது எழுத்தின் தோற்றுவாய் நாட்டுப் பாடல்கள், அதாவது எளிய மாந்தர்கள் தம் வாழ்க்கையை அறிந்தபடி கூறியவையே இலக்கியப் புலவனின் மூலதனம் என்றும் கூறுகிறார். உயர்ந்த இலக்கியம், நல்ல இலக்கியம் கொண்டுள்ள

நோக்கம் ''மனித மனத்திருத்தமும் அதன் வாயிலாகச் சமுதாயத்தின் திருத்தமே'' என்கிறார்.

நாடகக்கலை தான் சமுதாயத்தின் அனைத்துப்பிரிவுகளையும் ஈர்க்கிறது. அதனால், நாடகமூலம் நல்ல உணர்வுகளைப் பரப்புவது எளிதாகிவிடுகிறது. சாருதத்தன் என்கிற பாத்திரம் மூலம் 'பொருள் பெரிதன்று, ஒழுக்கமே பெரிது' வசந்தசேனை மூலம் 'பிறந்த குலம் பெரிதன்று: சிறந்த ஒழுக்கமே பெரிது' என்னும் நல்லியல்புகள் மக்களைச் சென்றடைவது எளிது. இதையே அரிச்சந்திர நாடகம் பார்த்த காந்தியடிகள் சரிதத்தில் காண்கிறோம்.

பழநி அவர்கள் இந்நாடகத்தின் குருதியோட்டம் சமுதாயப் புரட்சி என்கிறார். புரட்சிக்கு வித்திடும் நாடகம். இந்நாடகம் பற்றி சொல்லத் தொடங்கும் போது பழநி ஒரு மகாகாவிய உவமையை (epic simile) அமைக்கிறார்.

''நாடக இலக்கிய உலகில் நீடுபுகழ் கொண்ட மன்னன் சூத்திரகன் தன்னுடைய தேரைப் (மண்ணியல் சிறுதேர்) படிப்பவர் நெஞ்சமெனும் அரச வீதியில் எங்ஙனம் செலுத்துகின்றான் என்பதையும், தேர் திரும்ப வேண்டிய திருப்பங்களில் அத்தேரைக் குலுங்காமல் குலையாமல் எப்படித் திருப்புகின்றான் என்பதையும், அவ்வாறு திருப்புங்கால் தச்சனாக இருந்து தேர்க்காலில் கட்டையிடும் நுணுக்கத்தையும், ஓடுகின்ற வீதியிலே அத்தேர் ஆடிவரும் பேரழகையும், எல்லாம் கடந்து இறுதியிலே வந்து நிலை கொள்ளும் பெற்றியினையும் நாம் அறிய வேண்டியது இன்றியமையாததாகும்.

இந்த உவமை பழநியின் நூல் முழுவதும் தொடர்வது படித்து ரசிக்க முடிகிறது. அவர் இந்நாடகத்தை தொகை (வாழ்த்துப்பகுதி), வகை (முதலங்கம்), விரி (ஏனைய ஒன்பது அங்கங்கள்) என்று பிரிக்கிறார். வாழ்த்துப்பகுதியில் முதல் சுலோகம் :

"வீராசனத்தில் வீற்றிருந்து, பாம்புக்கச்சால் இணைக்கப்பட்ட முழுந்தாள்களுடையவனாய், உளநிகழ் உணர்வெல்லாம் நீங்கியோனாய், பொறிகளை அடக்கியோனாய், தன்னையே தான் தெளிந்துணர்ந்தவனாய், வேறுபாடற்ற தன்மையினாலே வேதனை வித்துக்களை அழியச் செய்பவனாய், உயிரெல்லாம் அவனே செம்பொருள் என்று பற்றிக் கொள்ளும் இடத்தனாய் சங்கரன் மேற்கொண்டுள்ள (சங்கற்பம்) சமாதி நிலை இனிது காத்தருள்க''.

இந்த சமாதி நிலை சாருதத்தன் வசந்தசேனை காதலையே உள்ளுறையாகக் கொண்டுள்ளது என்று பண்டிதமணி கூறுவதை பழநி அவர்கள் எடுத்து விளக்குகிறார்.

இனி 'வனக' சாருதத்தனிடம் தன் அணிகலன்களை அடைக்கலம் வைத்தாள் வசந்தசேனை, அது திருட்டுப் போயிற்று, அப்பொழுது கதை முளைத்தது. இக்கதையில் வரும் திருப்பங்களால் இந்நாடகத்தை அடைக்கலக்காப்பியம் எனலாம் என்று திறனாய்வாளர் கூறுகிறார். முதலில் நடப்பது அணிகலன்களை அடைக்கலம் வைப்பது என்றாலும், உண்மையில் வசந்தசேனைதான் அடைக்கலம் கேட்டுப்பெறுகிறார். ஆதலின் இங்கு ''பொன்னணி அடைக்கலம் பெண்மணி அடைக்கலமாக'' மாறிப்போனது.

வசந்த சேனை சூதனுக்கு அடைக்கலம் தருதல், ஆரியகனுக்கு சந்தனகன் அடைக்கலம் தருதல், ஆரியகனுக்குச் சொல்லாமலேயே சாருதத்தன் அடைக்கலம் தருதல், வசந்தசேனை விடனிடம் அடைக்கலம் புகுந்து ஏமாற்றப்படுதல், சகாரனுக்கு சாருதத்தன் அடைக்கலம் தருதல் எனப் பல காட்சிகள்.

"ஆக முதலங்கத்தின் தலைப்பாக உள்ள அணிகலன், அடைக்கலம் என்ற இரண்டு சொற்கள் வகையாக நின்றும், ஏனைய

அங்கங்களில் விரியாக நின்றும் கதை நடத்தும் பாங்கினை'' இந்நாடகத்தில் காண்கிறோம்.

இதேபோல் நாடகப் பாத்திரங்கள், நிகழ்ச்சிகள் முதலியன இம்முதலங்கத்தில் சிறப்பாக வகுக்கப்பட்டுள்ளன. இப்பாத்திரங்களில் கெட்டவர்கள் இடையிலோ, இறுதியிலோ திருந்திவிடுகின்றனர். ''மனம் மாறித் திருந்துதல் என்பது ஒரு சிறந்த நிகழ்ச்சியாக, இந்நாடகத்துள் காட்டப்படுகின்றது''.

சூத்திரகன் எழுதிய மிருச்சகடிகையின் மூலம் வாஸகவி எழுதிய சாருதத்தம் எனும் நாடகம் ஏன் சூத்ரகன் பெயரை மாற்றினாள் என்பதற்கு பழநி அவர்களின் விளக்கம் :

''சாருதத்தம் என்றால் சாருதத்தன் என்ற தனி மனிதன் வரலாறு என்ற பொருள்படுகின்றது. மண்ணியல் சிறு தேர் என்பதோ இந்நாடகத்துள் வறுமையின் குறியீடாகக் காட்டப்பட்டுள்ளது. தனிமனித வரலாற்றைச் சுட்டும் சாருதத்தம் என்ற பெயரை விடச் சமுதாயத்தின் பொதுவியல்பாகிய வறுமையை சுட்டும் மண்ணியல் சிறுதேர் என்ற தலைப்பில் சமுதாய மணம் கமழ்வதாக ஆசிரியர் எண்ணியிருக்கலாம்''.

மண்ணிலே பிறந்தாலும் விண்ணைமுட்டும் தகுதியுடைய சாருதத்தன் பாத்திரத்திற்குக் குறியீடாகவும் நாடகத் தலைப்பைக் கொள்ளலாம்.

அடுத்து வரும் இயலில் நாடகக்காப்பிய அறம் பற்றி பழநி பேசிகிறார். ''குறிக்கோள் இல்லாத நூல் உயிரில்லாத உடல்'' என்கிறார். நூலில் அறம், பாலில் நெய்போல் படர்ந்திருக்க வேண்டும்.

''கற்பவன் தன் உணர்வுகளால் அக்காப்பியப்பாலைச் சூடேற்றி அறிவு மத்தால் கடைந்து பெற வேண்டியதாக இருக்கும். அவ்வாறு திரட்டி எடுக்கப்படும் வெண்ணெய்த்திரளே காப்பிய அறம் எனப்படும்''.

வறுமையிற் செம்மை, ஊழ்வினை ஊட்டல் எனும் இரண்டு அறக்கூறுகளை முன்வைத்து, ஆங்காங்கே சிலம்பிலிருந்து மேற்கோள்கள் காட்டுவதால், இந்நூல் சிறந்த ஒப்பியல் திறனாய்வாக அமைந்துள்ளது.

இந்நாடகம் காட்டும் சமுதாயம் முழுமையானது. மேல்தட்டிலிருந்து கீழ்த்தட்டு வரை மக்கள் இருக்கிறார்கள். நல்லது தீயது இரண்டும் உள்ளன. அனைத்து சாதிகளிலும் நல்லவர்கள், இழிந்தவர்கள் வருகிறார்கள். சாருதத்தன் உயர்பண்புகள் உள்ளவன்; அழகுச்சுவைஞன், அருள் உள்ளம் படைத்தவன்; பண்பாடு உள்ளவன்; பொருள் இழந்துவிட்டதால் சற்று தாழ்வு மனப்பான்மையுள்ளவன். அவனுக்கும் குறைபாடுகள் உள்ளன. தன்னை தண்டித்தவர் களை சபிப்பது எனும் குணத்தை ''மதியிலே ஒரு மறு'' என்று பழநி கூறுகிறார். வசந்த சேனையும் சிறந்த குணங்கள் உடையவள். ஆனால் அவளுக்கும் ஒட்டுக்கேட்பது, சகாரனை உதைப்பது போன்ற குறைபாடுகள் உள்ளன.

பண்டிதமணியின் மொழிபெயர்ப்புத்திறன் பற்றிக் கூறும் போது, தமிழில் நாடகங்கள் இல்லை எனும் வசை தீர்க்கும் வழியாக இந்நூல் அமைந்துள்ளது என்கிறார் பழநி. இருமொழிகளும் நன்கறிந்த வி.சுப்பிரமணிய ஐயர் ''இந்நூல் வழி நூலாயினும் முதல்நூல் போலவே விளங்குகிறது'' என்பதைக்காட்டி, இச்சிறப்பிற்குக்காரணம் பண்டிதமணியின் இருமொழிப்புலமை, ''தன் உள்ளத்தில் தோன்றிய சித்திரத்தை அப்படியே படிப்பவன் உள்ளத்திலும் தோற்றுவிக்கக்கூடிய வெளிப்பாட்டுத்திறன்'' ஆகும்; அதனால் நாடகம் முழுவதும் ''தமிழ்மை தவழ்கிறது'' என்று கூறுகிறார்.

சூத்திரகன் - பண்டிதமணி - ஆ. பழநி: இந்தியாவின் இலக்கியப் பரப்புக்கு எல்லையே இல்லை.

சிங்கப்பூர் பள்ளிகளில் தமிழ் கற்பிக்கும் முறை

ஆண்டாள் ஞானசேகரன்

உ.வே.சா. பிறந்த உத்தமதானபுரத்தில் பிறந்து, குடந்தைக் கல்லூரியில் முதுகலை பயின்று, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ள இவர் இப்போது சிங்கப்பூர் பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள் முதலியவற்றைத் தொகுக்கும் பணியிலும் இவர் ஈடுபட்டுள்ளார். இளம் சிறுவருக்குக் கணினி வாயிலாகத் தமிழ் கற்பிப்பதில் இவர் தேர்ச்சி பெற்றுள்ளார்.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை **(400)**

என்ற குறளுக்கிணங்க சிங்கப்பூரில் கல்விச் செல்வம் பேணி வளர்க்கப்படுகிறது. இங்கு கல்விக்கு மட்டுமன்றி கற்பிக்கும் முறைக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஆம் இங்கு கல்வி கற்பிக்கும் முறை மிகச் சிறந்துள்ளது. இதற்கு அரசு அளிக்கும் ஊக்கம், உதவி, உறுதுணை நிறைவாகவும் ஆக்கப்பூர்வமாகவும் உள்ளது. இங்கு முக்கிய மொழியாக ஆங்கிலம் இருப்பினும் தமிழ், சீனம், மலாய் ஆகிய மூன்று மொழிகளும் தாய்மொழி என்ற அளவில் அரசின் அங்கீகாரம் பெற்ற மொழியாகத் திகழ்கின்றன. இவற்றில் நம் தமிழ் மொழி பள்ளிகளில் எவ்வாறு கற்பிக்கப்படுகிறது எனக் காண்போம்.

தொடக்கப் பள்ளிகளில்

தொடக்கப் பள்ளிகளில் தமிழ் சிறந்த முறையில் கற்பிக்கப்படுகிறது. முதலில் தமிழில் எழுத்துக்களுக்குப் பதிலாகச் சொற்கள் கற்பிக்கப்படுகின்றன. சொற்கள் மூலமாகத்தான் எழுத்துக்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. உயிர் எழுத்துகள் உயிர்மெய் எழுத்துகள் அனைத்தும் சொற்கள் மூலமாகவே கற்றுத்தரப்படுகின்றன. அடுத்து சிறு சிறு வாக்கியங்கள் அமைக்கப் பயிற்சி தரப்படுகிறது. படத்தைப் பார்த்து வாக்கியங்கள் அமைத்துப் பழகுவர். தொடக்க நிலை ஒன்று மற்றும் இரண்டில் இப்பயிற்சிகள் கொடுக்கப்படும்.

தொடக்க நிலை மூன்றில் நாற்பது சொற்களில் கட்டுரை எழுதும் பயிற்சி தரப்படு கிறது. ஆசிரியர் கொடுக்கும் நான்கு படங்களை மையமாக வைத்து, படத்தைப் பார்த்துக் கட்டுரை எழுதுவர். இதே வகுப்பில் செய்யுள் அறிமுகப் படுத்தப்படுகிறது. திருக்குறள், கொன்றை வேந்தன், மூதுரை, ஆத்திச்சூடி, முதலியன கற்றுத்தரப்படுகின்றன. இங்கு 'கல்வி' என்ற கணினி வட்டு பயன்படுத்தப்படுகின்றது. இது எழுத்துகளை ஒளிவேறுபாட்டுடன் மாணவர்கள் ஆர்வமுடன் கற்கப் பயன்படுகிறது.

தரநிலைப்படுத்துதல்

தொடக்க நிலை நான்கில் இறுதியாண்டுத் தேர்வில் தரம் பிரிக்கப்படுகிறது. இங்கு மாணவர் கள் தாய்மொழி, கணிதம், ஆங்கிலம், அறிவியல் ஆகிய நான்கு பாடங்களில் தேர்வு எழுதுவர்.

இதில் தாய்மொழி, ஆங்கிலம், தமிழ் இந்த மூன்றிலும் நூற்றுக்கு எண்பது மதிப்பெண்கள் வாங்கியவர்கள் EM1 (Elementary One) என்ற பிரிவில் படிப்பர். இவர்களே மிகச்சிறந்த பிரிவில் படிப்பவராகக் கருதப்படுவர். இதில் படிக்கும் மாணவர்கள் உயர்தமிழ் என்ற சிறப்புப்பாடத்தை எடுத்துப் படிப்பர். இதேபோல் மேற்குறிப்பிட்ட நான்கு பாடங்களிலும் நூற்றுக்கு ஐம்பது மதிப்பெண்கள்களுக்குக் குறையாமல் பெறுபவர்கள் EM2 (Elementary Two) என்ற பிரிவில் படிப்பர். இவர்கள் தரமான ஆனால் EM1 பிரிவின் அடுத்த நிலையில் உள்ள மாணவர்களாகக் கருதப்படுவர். மேற்குறிப்பிட்ட இரண்டுபிரிவிலும் உள்ள மாணவர்கள் உயர்நிலைப்பள்ளியில் அவர்கள் பெறும் மதிப்பெண்களுக்கு ஏற்ப விரைவுநிலை (Express) வழக்கநிலை (Normal Academic), என்ற பிரிவுகளில் சேர்ந்து படிப்பர். இதுபோல் மேற்குறிப்பிட்ட நான்கு பாடங்களில் ஒன்றில் அதுவும் முக்கியமாகக் கணிதம், ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறவில்லை என்றால் அவர்கள் EM3 (Elementary Three) என்ற வகுப்பில் சேர்ந்து கற்பர். இவர்களுக்கு மிகவும் எளிமையான பாடங்களே கற்றுத் தரப்படும். இவர்கள் தாய்மொழிப் பாடத்தில் எளிய வாசிப்பு, கேட்டல், பேசுதல் முதலிய தேர்வுகளையே செய்வர். உயர்நிலைப் பள்ளிகளில் இவர்கள் வழக்கநிலைத் தொழில்நுட்பம் (Normal Technical) என்ற பிரிவில் படிப்பர்.

மீண்டும் வாய்ப்புகள்

தொடக்கநிலை ஆறில் மீண்டும் ஒருமுறை தரம் பிரிக்கக்கப்படுகிறது. அப்பொழுது மாணவர்கள் தங்களை முன்னேற்றிக் கொள்ள மீண்டும் வாய்ப்புத் தரப்படுகிறது.

இங்கு வழக்கநிலை (Normal) படிப்பவர்கள் அதிக மதிப்பெண்கள் பெற்றால்விரைவு நிலைக்கு (Express) மாற்றப்படுவர். வழக்கத் தொழில்நுட்பம் (Normal Technical) படிப்பவர்கள் அதிக மதிப்பெண்கள் பெற்றால் வழக்கநிலைக்கு மாற்றப்படுவர். இதுபோல் விரைவு நிலை படிப்பவர்கள் குறைந்த மதிப்பெண்கள் பெற்றால் வழக்கநிலைக்கும் வழக்கநிலை படிப்பவர்கள் குறைந்த மதிப்பெண்கள் பெற்றால் வழக்கத் தொழில் நுட்பப் பிரிவுக்கும் மாற்றப்படுவர். எனவே மாணவர்கள் தாங்கள் படிக்கும் காலங்களில் தங்கள் திறமைகளைத் தக்க வைத்துக் கொள்வது மிகவும் அவசியமாகிறது. இந்தத் தரம் பிரித்தல் அடிப்படையில்தான் அந்தந்தப் பிரிவுக்குரிய பாடங்களின் கடினத்தன்மையும் அளவும் அமைந்திருக்கும். கற்பித்தல் முறைகளும் மாறுபடும்.

பாட அமைப்பு

உதாரணத்திற்கு உயர்நிலை மூன்றில் உள்ள பாடம் ஒன்றை எடுத்துக்கொள்வோம்.

கருப்பொருள் கலையும் பண்பாடும்

துணைக் கருப்பொருள் கிராமியக் கலைகள்

பாடத் தலைப்பு தமிழகக் கிராமியக் கலைவிழா

இப்படி இருக்கும் பாடங்களில் பல நடவடிக்கைகள் இடம்பெறும்.

1. **வாசித்தல்** பாடத்தை மௌனமாகவும் பிறகு உரக்கவும் படிப்பர்.

2. **கேட்டல்** ஒலித்தட்டில் இடம்பெற்றுள்ள பல இசைகளைக் கேட்பவர்.

3. **பேசுதல்** ‘உன் பள்ளியில் ஒரு நடனப் போட்டி நடைபெற உள்ளது. அப்போட்டியில் நீயும் உன்குழுவினரும் ஒரு கிராமிய நடனத்தை ஆட விரும்புகிறீர்கள். அதற்குத் திட்டமிடுதல் பற்றிக் கலந்துரையாடுங்கள்’ என்றிருக்கும்; மாணவர்கள் கலந்துரையாடுவர்.

4. **எழுதுதல்** நீ பார்த்த கலைநிகழ்ச்சியில்

உன்னைக் கவர்ந்த நடனம் பற்றிக் கட்டுரை எழுதுக என்றிருக்கும்.

தொடக்க நிலை மூன்றில் பாடங்களைப் படிக்கத் தெரிந்திருக்கும் மாணவர்கள் உயர்நிலைகளில் பாடங்களைப் படித்து இந்த நடவடிக்கைகளையெல்லாம் நன்கு செய்வர். ஆசிரியர்கள் வழிகாட்டுதல்களை மட்டுமே செய்வர். மாணவர்கள் நன்கு செயல்படுகின்றனர். எனவே மேற்குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளில் நல்ல திறன் பெற்றிடுவார்கள்.

இந்த நான்கு திறன்கள் மட்டுமன்றி நோக்கல், சிந்தித்தல், பிரச்சினைக்குத் தீர்வு காணல். போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படுகின்றன. இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆசிரியர்களுக்கு உதவியாகப் பல அணுகு முறைகள் இருக்கின்றன. அவை

1. இணைநடவடிக்கை (Listen, Think Pair Share)

2. எண்களைக் கூறி அழைத்தல் (Numbered Heads Together)

3. வரிசை வட்ட மேசை (Sequential Round Table)

4. அறிவுவட்டம் (Circle of Knowledge)

5. உடன் நிகழ்வு வரிசை மேசை (Simultaneous)

6. மூன்று படிநிலைப் பெட்டி (Three Step interview)

7. பிரச்சினையை அனுப்புதல் (Sent a Problem)

8. மூலைகள் (Corners)

9. குழு கலந்துரையாடல் (Group Discussion)

இத்தனை அணுகுமுறைகளில் ஆசிரியர் தான்நடத்த இருக்கும் பாடத்திற்கு ஏற்ற அணுகுமுறையைப் பயன்படுத்தித் தன் பாடத்தை நடத்துவர். இத்தனை அணுகுமுறைகளையும் பயன்படுத்தாமல் ஆசிரியர் தன் பாடத்திற்கு ஒரு புது அணுகுமுறையைப் பயன்படுத்த விரும்பினால் அதைத் தாராளமாகப் பயன்படுத்துவர்; பயன்படுத்தலாம். இங்கு பாடங்களும், அதற்குப் பயன்படுத்தும் அணுகுமுறைகளும் ஒரு நெகிழ்வுத் தன்மையுடனேயே அமைக்கப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சு உருவாக்கிக் கொடுத் திருக்கும் தரமான பாடநூல்களும் உள்ளன. எனினும் அதில் உள்ள பாடம் ஒன்றை விட்டுவிட்டு ஆசிரியர் தான் விரும்பிய ஒரு பகுதியைப் பாடமாக நடைமுறைக்கு ஏற்ப கொடுக்க விரும்பினாலும் கொடுக்க இயலும். அந்த அளவுக்கு நெகிழ்வுத் தன்மையுடையதாக இக்கல்வி முறை உள்ளது.

இங்குக் கல்விமுறையில் அவ்வப்போது புதுமைகள் பல புகுத்தப்படுகின்றன. அதில் முக்கியமானதாகக் கருதப்படுவது 1. சிந்தனைத் திறன் 2. தேசியக்கல்வி என்பவையாகும். பாடம் நடத்தும்போதே இந்த இரண்டும் பாடத்துடன் இணைத்து நடத்தப்படுகிறது.

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்.
அஃதறி கல்லா தவர் (843)

எதிரதாகக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய் (429)

இக்குறள்களுக்கேற்ப வாழ்க்கையில் வரக்கூடிய சிக்கலென்ன? அதனை எப்படிச் சமாளிக்க வேண்டும்? நாம் எடுக்கும் முடிவினால் நன்மை அதிகமா? தீமை அதிகமா? என்று சிந்தித்து நன்மை தரக்கூடியதைச் செய்ய வேண்டும் என்பதையெல்லாம் சிந்தனைத்திறன் கல்வி கற்றுத்தருகிறது. எனவே இந்தக் கல்வியைக் கற்றவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள திருக்குறள் கூறும் அறிவுடையோராக விளங்குவர். இப்படி விளங்கச் செய்கிறது இங்குள்ள கல்வி முறை.

இதுபோல் தமிழ்மொழியைக் கற்கும் பொழுதே சிங்கப்பூர், அதன்வரலாறு, அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டோர், நாட்டின்மேல் பற்றுக் கொள்ளக் கூடிய அவசியம் போன்ற நாட்டைப் பற்றிய தேசியக்கல்வியும் கற்றுத்தரப்படுகிறது. தேசியக் கல்வி பற்றி மாணவர்கள் கட்டுரை எழுதுகின்றனர். திட்டப் பணி செய்து ஆய்வேடு களை ஒப்படைக்கின்றனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, தகவல் தொழில்நுட்பத்தைப் பாடங்களில் புகுத்திக் கற்பிப்பது அதிவிரைவில் வளர்ந்து வருகிறது. எல்லாப் பள்ளிகளிலும் இரண்டு ஆசிரியர்களுக்கு ஒரு கணினி (Laptop) வீதம் வழங்கப்பட்டிருக் கிறது. எந்தப் பாடமாக இருந்தாலும் மாணவர்கள் மனம் விரும்பும் வகையில் நடத்தப்படுகிறது. பாடங்கள் மாணவர்களுக்குச் சலிப்பை ஏற் படுத்தாமலிருக்க் ஒலித்தட்டு, தொலைக்காட்சி, ஒளிநாடா, ஒளியூடுருவித் தாள்கள் போன்ற பல துணைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றோடு இன்று கணினி ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது.

தகவல்தொழில் நுட்பத்தைப் (IT) பயன் படுத்திப் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. கூட்டுக் கணினிக் கூடத்திலும் தனிக்கணினிக் கூடத்திலும் மாணவர்கள் பாடங்களைப் படிக்கிறார் கள். வகுப்பறைகளிலும் கணினி மூலம் பாடங்கள் நடத்த வசதிகள் செய்துதரப்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் கணினியில் Power Point Slides மூலம் பாடங்கள் நடத்தப்பட்டன. தற்பொழுது இணையப் (Internet) பகுதிகள் போல் தயாரித்து நடத்துப்படுகிறது. உயர்தகவல் தொழில் நுட்பம் தமிழ்க் கற்றலில் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. இணையப்பகுதியிலிருக்கும் படங்கள் மற்றும் அரிய தகவல்களைத் துணையாகக் கொண்டு மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது. இங்குப் படிப்பது மாணவர்கள் மட்டுமல்ல அதைவிட ஆசிரியர்கள்தான் அதிகம் கற்றுக்கொள் கிறார்கள். ஆசிரியர்கள் பாடத்தைக் கணினிவழி எப்படியெல்லாம் தயாரித்து நடத்தலாம் என்று திட்டமிடுகின்றனர். ஆசிரியர்களுக்குக் கல்வியமைச்சு தொடர்ந்து தொழில் நுட்பத்தைக் (IT) கையாளும் பயிற்சிகளைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. ஆசிரியர்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயிற்சி பெறுகிறார்கள். ஒவ்வொரு ஆசிரியரும் வருடத்திற்கு 100 மணி நேரம் பயிற்சிகள் பெற்றிருக்க வேண்டும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. அதற்கேற்ப பல பட்டறைகள் (workshops), கருத்தரங்குகள் (Seminars), பணியிடைப் பயிற்சிகள், (In Service Courses), பகிர்வரங்குகள் (Sharing sessions) போன்றவை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. சில ஆசிரியர்கள் இந்த 100 மணிநேரத்திற்கும் அதிகமாகவே பயிற்சிகள் பெற்றுவிடுகின்றனர்.

ஆர்வமுடன் பயிற்சிபெறும் ஆசிரியர்கள் இப்பயிற்சிகளையெல்லாம் உடனுக்குடன் வகுப்பறைகளில் நடைமுறைப்படுத்துகின்றனர். கற்பித்தலில் இது முக்கிய இடத்தைப் பெற்று வருகிறது. ஒவ்வொரு பள்ளியிலும் தமிழாசிரியர் கள் கணினியைப் பயன்படுத்தி எப்படிப் பாடம் நடத்தினர்? அதில் மாணவர்களின் ஈடுபாடு எப்படி இருந்தது? பாட நோக்கத்தில் ஆசிரியர் எவ்வளவு வெற்றி பெற்றார் என்பதையெல்லாம் மற்ற பள்ளி தமிழாசிரியர்களுடன் பகிர்ந்து கொள்ள பகிர்வரங்குகள் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகின்றன. பெரும்பாலும் எல்லாப்பள்ளி களிலும் இரண்டு ஆசிரியர்க்கு ஒரு கணினி என்று வழங்கப்பட்டுள்ளது. அதே போல் ஆறு மாணவர்க்கு ஒரு கணினி என்ற அளவில் பெரும்பாலும் எல்லாப் பள்ளிகளிலும் உள்ளன. இன்னும் ஒருசில ஆண்டுகளில் இரண்டு மாணவருக்கு ஒரு கணினி என்பது அமைச்சின் இலக்காக உள்ளது. இனி வருங்காலங்களில் தகவல் தொழில்நுட்பமும் உயர்தொழில் நுட்பமும்

முக்கிய பங்கு வகிக்கும். இப்பொழுதே சில பள்ளிகளில் இணையம் வழி கற்பித்தல் நடைபெறுகிறது. திட்ட வேலைகளை (Projects) கணினி மூலம் செய்து கணினி வட்டில் சேமித்து ஒப்படைக்கின்றனர். நடத்தப்பட்ட பாடங்களுக்கான வீட்டு வேலைகளை மாணவர்கள் தங்கள் வீட்டில் இருக்கும் கணினியில் செய்து மின்னஞ்சல் மூலம் ஆசிரியர்களிடம் ஒப்படைக்கின்றனர். இதற்கேற்ப மாணவர்களுக்கும் பள்ளியில் கணினி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. மாணவர்கள் தட்டச்சு செய்ய அறிவதோடு கணினியை நன்கு பயன்படுத்தவும் அறிந்திருப்பர்.

தற்போது எழுதுதல் நடவடிக்கை இணையம் மூலம் சிறப்பாகச் செய்யப்படுகிறது. ஆசிரியர் மாணவர்களைக் கணினிக்கூடத்திற்கு அழைத்துச் சென்று கட்டுரை எழுதுவதற்கான கட்டுரையின் தலைப்பைக் கொடுத்து விடுவார். கணினியில் மாணவர்கள் இணையத்திற்குச் சென்று கட்டுரைத் தலைப்புக்கான செய்திகளைச் சேகரித்து கட்டுரையைச் சிறப்பாகத் தட்டச்சு செய்து கொடுத்து விடுவர். இவ்வேலை குழு நடவடிக்கையாக நடைபெறுகிறது. எப்பொழுதும் கட்டுரை எழுதும் பயிற்சி இங்குச் சிறப்பாக நடைபெறுகிறது. முதலில் கட்டுரைக்கான கருத்துகளை மாணவர்களே தங்களுக்குள் கலந்துரையாடி வகுப்பில் கூறுவர். அந்தக் கருத்துகள் அவர்களாலேயே தொகுக்கப்படும். அதைக் கொண்டு அவர்களே சொந்தமாகக் கட்டுரை எழுதிவிடுவர். அதே முறை இப்பொழுது இணையத்தின் வழி சிறப்பாகச் செயல்படுத்தப் படுகிறது.

இங்கு மாணவர்களை மதிப்பிடுவதற்குத் தேர்வு முறைகள் உள்ளன. தாள் ஒன்றில் கடிதம், கட்டுரை எழுதச்செய்து மதிப்பிடப்படுகிறது. தாள் இரண்டில் பெரும்பாலும் மொழியறிவைச் சோதிக்கும் கேள்விகள் கேட்கப்படும். இங்கு ஒவ்வொரு வகுப்பிற்கும் பாடநூல்கள் உள்ளன. ஆனால் இந்தப் பாடநூல்களை மாணவர்கள் மனப்பாடம் செய்யத் தேவையில்லை. தேர்வுக்கு அதிலிருந்து கேள்விகள் வராது. பாடத்தைப் படித்துப் புரிந்து கொள்ளும் திறன் பெற்றிருக்கும் மாணவர்கள் மொழித்தொடர்பாகக் கேட்கப்படும் கேள்விகளுக்கு விடை அளிப்பர். இதற்கேற்ப தமிழ் இலக்கணமும் நடைமுறையில் பேசுவது போல் எளிமைப்படுத்தி மிக அருமையாகக் கற்றுத்தரப் படுகிறது. இலக்கணத்தின் பெயர் குறிப்பிடப் படாமலேயே அதனைப் பயன்படுத்தி எழுதச் செய்து மாணவர்கள் மதிப்பிடப்படுகிறார்கள். இங்கு தமிழை இரண்டாம் மொழியாகப் படிக்கும் மாணவர்களுக்கு ஏற்ற எளிய அதே நிலையில் மிகவும் பயனுள்ள முறைகளே கற்பித்தலில் பின் பற்றப்படுகிறது.

இக்கல்வி முறையால் மாணவர்கள் ஆற்றல் உடையவர்களாகவும் சிந்திக்கும் திறன் உடையவர்களாகவும், தேசியத்தைப் பற்றிய ஞானம் உடையவர்களாகவும் விளங்குகின்றனர். இத்தகைய கல்விமுறையால் மாணவர்கள் தம் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினை, நெருக்கடி ஆகியவற்றைச் சமாளிக்கும் திறன் உடையவர் களாகவும் உருவாகின்றனர்கள்.

தமிழ் படிக்கட்டும் நம் குழந்தைகள்

பேரா. ச. முத்துக்குமரன்

பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் முன்னைத் துணைவேந்தர்: இப்போது தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் உறுப்பினர் - செயலர். பொறியாளராக வாழ்க்கையைத் தொடங்கிய இவர் மண்ணியல் தொடர்பான ஆய்வில் முனைவர் பட்டம் பெற்றார். தமிழ், தமிழ்நாடு, தமிழர் மேம்பாடு என்பதே இவரது இலட்சியமாகும். 'நெஞ்சில் நிறுத்துங்கள்', 'தமிழனே இது கேளாய்' போன்ற பல நூல்களின் ஆசிரியர். கல்வியாளராகவும் தமிழ்த் தொண்டராகவும் விளங்கும் இவரால் தமிழ்நாடு மேலும் பெருமைபெறும்.

"நான் ஏன் தமிழ் படிக்க வேண்டும்? அதனால் என்ன பயன்" என்று வெளிநாட்டில் அல்லது வெளி மாநிலத்தில் வாழும் தமிழர் கேட்டால் அதில் பொருள் இருக்கலாம். ஆனால் இவ்வாறு தமிழ் நாட்டில் வாழ்பவரே கேட்கும் அவல நிலையில் இன்று நாம் உள்ளோம்.

ஒவ்வொரு சுதந்திர நாட்டிலும் அந்நாட்டில் பெரும்பான்மையான மக்கள் பேசும் மொழியில் அரசு, நீதிமன்றம், சட்டமன்றம், கல்வி நிலையங்கள் இவை யாவும் இயங்க வேண்டும் என்பது வெளிப்படை. ஆனால் நம் ஊழ்வினை, நம் நாட்டில் இவையாவும் பெரும்பாலும் மக்களுக்கு புறம்பான மொழியில் நடைபெறுவதுடன் அவ்வேற்று மொழியைப் பயின்றவர்கள்தான் பொறுப்புள்ள பதவிகள் வகிக்கலாம் என்ற நிலையும் இருக்கிறது.

பொருள் சேர்த்தால் வாழலாம் என்று பலரும் நினைக்கிறார்கள். ஆகவே "பதவி வேண்டும். அதைப் பெற நான் ஆங்கிலம் படிக்க வேண்டும். படிக்கிறேன். ஆங்கிலத்தில் பேசுவேன். எனக்கு ஆங்கிலம் தெரியும் என்பதைப் பிறர் தெரிந்து கொள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழில் கலந்து பேசுவேன். ஆங்கிலம் கற்கத்தான் என் நேரம் சரியாக இருப்பதால், நான் தமிழ் கற்பதில்லை. மேலும், தமிழ் படிக்க வேண்டிய அவசியமே இல்லை" என்று பேசுகிறார்கள். ஆனால் ஆங்கிலக் கல்வி பொருள் சேர்க்கப் பயன்படலாம். பொருள், உயிருடன் இருக்கப் பயன்படலாம். வாழ்வது என்பது உயிருடன் இருப்பது மட்டுமன்று. வாழ்வாங்கு வாழ்தலும் ஆகும். நமக்கு வாழும் வழியைத் தெரிவிப்பது பண்பாடு.

ஒவ்வொரு மொழியும் அம்மொழி பேசுபவர்களுடைய பண்பாட்டை ஒட்டியே வளரும். ஆகவே, நமது பண்பாட்டை நாம் அறியவும் உணரவும் நம் மொழியை நாம் கற்க வேண்டும். பொருள் சேர்க்க ஆங்கிலம் கற்க வேண்டிய நிலை இருந்தாலும், நம் பண்பாட்டை உணர, நம் தாய் மொழியை நாம் கற்க வேண்டும்.

ஆங்கில மொழி பயின்று அம்மொழி பண்பாட்டிலேயே வளர்ந்தால், வாழ்ந்தால் என்ன தவறு? மக்களின் பண்பாடு என்பது அவர் தம் முன்னோர் அவர்களுக்கு விட்டுச் சென்ற சொத்து. பண்பாடு என்பது வழிவழியாக வந்த ஒன்று. நம் முன்னோர் தம் அனுபவத்தால் அறிந்து வளர்த்தவையே நமது பண்பாடு. அத்தகைய

பரம்பரைச் சொத்தை இழப்பது அறிவுடைமை ஆகுமா?

"நம்முடைய பண்பாட்டை நாம் விரும்பி தெரிந்து கொண்டு அதைப் பாராட்டிய பின்னரே, மற்ற பண்பாடுகளை நாம் புரிந்து கொண்டு பாராட்ட முடியும் என்று நான் வாதாடுவேன் நம் 'பண்பாடு' போன்ற ஒரு சிறந்த புதையல் வேறு எந்தப் பண்பாட்டிலும் இல்லை என்பது எனது அசைக்க முடியாத கருத்து. நாம் நம் பண்பாட்டுப் புதையலைத் தெரிந்து கொள்ளவில்லை; அதுபற்றித் தெரிந்து கொள்ளும் வாய்ப்பை மறுக்கப்பட்டிருக் கிறோம்; அதுபற்றித் தெரிந்து கொள்ளும் வாய்ப்பை மறுக்கப்பட்டிருக்கிறோம்; அதன் மதிப்பைச் சிறுமைப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளோம்". (மகாத்மா காந்தி, Young India 1.9.1921)

"இந்தியப் பண்பாட்டை அழிக்கும் ஒரு தவறான கல்வியினால் நம் மக்களுக்கு இழைக்கப்படும் தொடர்ந்து பெருகும் தீமைக்கு சான்றுகளைத் தினமும் காண்கிறேன்" (மகாத்மா காந்தி, Harijian 9.7.1938)

தமிழின் அழகு

நம் தாய் மொழியின் அழகைப் பாருங்கள். ஒரு அலுவலகத்தில் இலஞ்சம் பெறுகிறான் ஒருவன். அடுத்தவன் இலஞ்சம் பெறாது தன் பணியைச் சிறப்பாக ஆற்றுகிறான். இரண்டாமவனை யாவரும் பிழைக்கைத் தெரியாதவன் என்கிறார்கள். ஆங்கிலத்திலே சொன்னால் "He does not know, how to get on" தமிழிலே பிழைக்கத் தெரியாதவன் என்று தான் சொல்லுவார்கள். வாழ்வாங்கு வாழ்பவனை 'வாழத்தெரிந்தவன்' என்றும், பிழையான வழியில் வாழ்பவனை 'பிழைக்கத் தெரிந்தவன்' என்றும் தமிழில் சொல்கிறோம். ஆங்கிலத்தில் இவ்வாறு இல்லை. இதைத் தான் பண்பாடு என்கிறோம்.

சில மாதங்களுக்கு முன் "Book: Reading and Thinking" என்ற பொருள் பற்றி என்னிடம் ஒரு கட்டுரை எழுதித் தருமாறு கேட்டார்கள். நான் இந்த மூன்று சொற்களுக்கும் தமிழ் சொற்கள் யாவை என்று எண்ணினேன். அவை முறையே நூல்கள், படித்தல், எண்ணுதல்.

நூல் என்பது நேர் கோட்டைக் கண்டறியப் பயன்படுத்தும் கயிறு. அது போன்றே நூலைப் படித்தால் படித்தவரின் எண்ணங்கள் நேர்படுத்தப்பட்டு ஐயங்கள் தீர்க்கப்படும். படி என்பது மேலே ஏறிச் செல்ல ஓர் அமைப்பு. படிக்கப் படிக்க நாம் நம் குறிக்கோளை நோக்கி முன்னேறுவோம். படிப்பதால் நாம் நம்மையே உயர்த்திக் கொள்வோம்.

எண் என்பது ஒன்று முதலான எண்களையும் குறிக்கும். எண்கள் என்பவை பல நிகழ்ச்சிகளில் உள்ள ஒற்றுமையைக் கண்டு அவற்றைக் கருத்தியல் அடிப்படையில் ஆராய்வதாகும். (அதாவது : நான்கு மாடுகளும் மூன்று மாடுகளும் சேர்ந்தால் ஏழு மாடுகள் ஆகும். நான்கு படி பரிசியும் மூன்று படி அரிசியும் சேர்ந்தால் ஏழு படி அரிசி ஆகும். அல்லது நாலும் மூன்றும் சேர்ந்தால் ஏழு ஆகும்.) ஆக எண்ணம் என்பது படித்தவற்றைப் பற்றிச் சிந்தித்து, பகுத்தும் விரித்தும் உணருதல், அவ்வாறு உணரும்போது அக்கருத்துக்கள் நம் கருத்துகளாக மிளிரும். நாம் எழுதுவோம். அது நூலாகும். இவ்வாறு, நூல், படித்தல், எண்ணுதல் இவை ஒரு வட்டமாகச் சுழலும்.

தமிழில் இம்மூன்று சொற்களைப் பற்றி சிந்திக்கும் போது இவற்றின் வேர்களை அறிந்து இவற்றுடன் தொடர்புடைய மற்ற சொற்களை நினைக்கும்போது, கொடுக்கப்பட்ட தலைப்பில் ஒரு அருமையான கட்டுரை எனக்குக் கிடைத்தது. ஏன் எனில் தமிழ் ஒரு பண்பட்ட மொழி.

(இதற்கெதிராக அந்த மூன்று ஆங்கில சொற்கள் நமக்கு இக்கருத்துக்கள் எவற்றையும் உணர்த்தவில்லை என்பது சிந்திக்கத்தக்கது.)

வளமான தமிழ்

தமிழில் வளரும் அறிவியல் கருத்துக் களைச் சொல்வதற்கு, தகுந்த சொற்கள் இல்லை என்று நம் தமிழரில் சிலர் சொல்வதை நாளும் கேட்கிறோம். நம் மொழியைப் பற்றி வேற்று மொழி பேசும் ஒருவர் கூறியதை இங்கு நினைவு கூறலாம்.

"Tamil is admitted even by accomplished orientalists to be one of the most copious, refined and polished languages of the world" (S.R. Arnold.)

ஆர்னால்டு என்ற பெரியார் கூறியதாவது: ''திறமை மிக்க கீழ்நாட்டின் வரலாறு மொழி ஆராய்ச்சியாளர்களால் தமிழ் ஏராளமான சொற்களையுடைய, மென்மையான, நாகரிகமான உலக மொழிகளில் ஒன்று என்று ஒப்புக் கொள்ளப்படும்.''

தமிழ் மொழியின் வளத்தை உணர, யானையைக் குறிக்க தமிழில் எத்தனை சொற்கள் உள்ளன என்று பார்ப்போம்:

யானை, கரி, கயம், ஆம்பல், கள்வன், களவன், தோல், உவா, எறும்பி, பெருமா, பெருவிலங்கு, தும்பி, புழைக்கை, பூட்கை, கைம்மலை, குஞ்சரம், தூங்கல், நால்வாய், கறையடி, பொங்கடி, புகர் முகம், வேழம், வழுவை, கடிவை, வயமா, பகடு, மந்தமா, களிறு, மதக்கயம், மருண்மா, மற்றும் கம்பமா.

ஒருவன் யானையைக் குறிக்கும் முப்பதுக்கும் மேற்பட்ட தமிழ்ச் சொற்களை அறிந்தால் யானையைப் பற்றிய பல செய்திகளையும் அறிந்து கொள்வான். யானை கரிய நிறத் தோற்றத்தை உடைய விலங்கு (யானை, கரி, கயம், ஆம்பல், கள்வன், களவன்). அது உயரமான விலங்கு (உம்பல், உவா). அது பெரிய விலங்கு (எறும்பி, பெருமா, பெருவிலங்கு). அது துருத்தியைப் போன்ற தோற்றம் உடையது (தோல்). அது துளை அமைந்த தொங்கும் கையினை உடையது. (தும்பி, புகைழக்கை, பூட்கை, கைம்மா, குஞ்சரம், தூங்கல்). அது மலை போன்ற தோற்றமுடையது (கைம்மலை). அதன் தும்பிக்கை தொங்கும் வாய் போன்றும் அமையும் (நால்வாய்). அது பருத்த அடிகளை உடையது (கறையடி, பொங்கடி). அதன் முகத்தில் புள்ளிகள் பொருந்தி இருக்கும் (புகர் முகம்).

யானை வலிமை பொருந்தியது (வயமா). பெருமையுடன் விளங்குவது (பகடு). ஆனால் அது பெரும்பாலும் அமைதியாக இருக்கும் (மந்தமா). அது மதத்தை உடையது (களிறு, மதக்கயம் மதமா). அது மருண்டு நோக்கும் இயல்புடையது (மருண்மா). யானையைக் கம்பத்தில் கட்டுவார்கள் (கம்பமா). (யா.....! வேர்ச்சொல் விளக்கவுரை, ப.அருள், அறிவன் பதிப்பகம், புதுச்சேரி).

இதற்கெதிராக ஒருவன் ஆங்கிலச் சொல் 'elephant' ஐ கற்றுக்கொண்டால் யானையைப் பற்றிய இந்தச் செய்திகள் எல்லாம் அச்சொல்லின் அடிப்படையில் அவனுக்கு விளங்குமா? இவ்வளவு பயனுள்ள தமிழையும் தமிழ்ச் சொற்களையும் மறந்து, ஆங்கில மோகத்தில் அலைவது எத்தகைய அறியாமை!.

சொல்வளம் காப்போம்

நம் முன்னோர் எவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள விழைந்தார்களோ அவற்றை ஆராய்ந் தார்கள். தாங்கள் கண்டவற்றைச் சொல்ல நல்ல தமிழ்ச் சொற்களை ஆக்கிக் கொண்டார்கள். அதானால் தான் யானையைக் குறிக்க முப்பதுக்கும் மேற்பட்ட சொற்களை ஆக்கினார்கள். நாம் ஆராய மறுத்து, சிந்திக்க இயலாது இருப்பதால், நாம் நம் தமிழ்ச் சொற்களை

இழப்பதுடன் பிறமொழிச் சொற்களை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் கையாண்டு சிந்திக்க மறுந்து இவ்வுலகில் நடமாடியபடி இருக்கிறோம். இந்நிலமையில் இருந்து விழித்தெழுந்து, இன்று நமக்குத் தேவையானவற்றைப் பற்றி ஆராயவேண்டும். உண்மைகளைக் கண்டு அறிய வேண்டும். அறிந்தவற்றைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். நாம் சிந்தித்துக் கண்டறிந்தவற்றை எழுத வேண்டும்.

பிறமொழிச் சொற்களைப் பற்றிக்கொண்டு, நம் மொழிச் சொற்களை இழந்ததால், ஏற்கனவே, சில சங்க நூல்களை நாம் இன்று புரிந்து கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். விடுதலை பெற்ற பின் நாம் நம் சொற்களை இழக்கும் வேகம் அதிகரித்துள்ளது. நமது பழந்தமிழ் நூல்கள் நம் முன்னோர் நமக்கு விட்டுச் சென்ற சொத்துக்கள் ஆகும். நாம் பல தமிழ் சொற்களை இழப்பதால், நாமும் நம் சந்ததியினரும் பழம் தமிழ் நூல்கள் பலவற்றைப் புரிந்துகொள்ள முடியாமல் போனால், அது நமது முன்னோர் நமக்கு விட்டுச் சென்ற சொத்துக்களை இழந்ததற்கு நேராகும். இதை நாம் உணர வேண்டும். உணர்ந்து நம் தமிழ்ச் சொற்களைப் பாதுகாத்து, பயன்படுத்தி, வளர்க்க வேண்டும். நம் முன்னோர் எவ்வளவு அழகாக இன்றும் அறிவியலார் வியக்கும் வண்ணம் சொற்களை ஆக்கி இருக்கிறார்கள் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். அம்முறை களைக் கையாண்டு இன்று அவசியமான புதுத் தமிழ்ச் சொற்களை ஆக்கிக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தால் நமது தமிழ்ச் சொற்களை நாம் இழக்க மாட்டோம். பழந்தமிழ் நூல்களையும் இழக்க மாட்டோம். தமிழும் வளரும். தமிழர்களும் வளர்வார்கள்.

தூய மொழி பேசுவோம்; உயர்வோம்!

பேச்சு மொழியும், இலக்கிய மொழியும் மாறுபடுவது இயற்கை. சாதரண மக்களின் பேச்சு மொழி கொச்சையாக இருக்கும். கல்வி, பேச்சு மொழியைத் தூய்மை ஆக்கும்.

மொழியில் தூய்மை ஏன் வேண்டும்? தாய் மொழியை நன்றாகக் கையாளும் திறமை பெற்றவனால் தானாகச் சிந்திக்க முடியும். மொழியை ஆளும் திறமை, சிந்திப்பதற்குத் தொடர்புடைய தர்க்கம், வாதம், ஆராய்தல் அவற்றிலும் திறமையை வளர்க்கும். தான் நினைப்பதைச் சரியாகவும், எளிமையாகவும், தெளிவாகவும் சொல்வதற்கு மொழி அறிவு வேண்டும். தாய்மொழியில் ஓரளவு பயிற்சி பெற்றவர் மற்ற மொழிகளைக் கற்றுக் கொள்வது எளிது.

தனது தாய் மொழியை இலக்கணப் பிழையின்றிப் பேச பழக்கப்படுத்திக் கொண்டவர் புதிய மொழியைக் கற்கும் போது அம்மொழியையும் இலக்கணப் பிழையின்றி பயன்படுத்துவர். கலப்பட மொழி பேசுபவருக்கு சிந்தனைக் குழப்பமே மிஞ்சும்.

தான் இயல்பாகப் பேசுவதாக எண்ணி ஆங்கிலம் கலந்து பேசுவோர் சொல்லும் ஒரு வாக்கியத்தைப் பார்ப்போம். "தனது மாருதி காரைத் தானே செல்ப் டிரைவிங் செய்தார்". இவர் சொல்ல நினைத்தது "தனது மாருதி வண்டியைத் தானே ஓட்டினார்". சொன்னது 'செல்ப் டிரைவிங்' இந்த ஆங்கில சொல்லின் பொருளை முழுமையாக உணர்ந்து பேசாததால் 'தானே செல்ப் டிரைவிங்' என்று ஒரு குழப்பமான சொற்றொரைப் பயன்படுத்துகிறார்.

சிந்தித்துப் பேசுபவன் சுருக்கமாகப் பேசுவான். சிந்திக்காது பேசுபவன் சில வார்த்தைகளில் சொல்ல வேண்டுவதைப் பல வார்தைகளில் சொல்லுவான் ''என்னுடைய ஒவ்வொரு மூவ்மெண்டையும் வாட்ச் செய்து'' என்று ஒருவர் பேசுகிறார் அவர் பேச நினைத்தது, ''என்னுடைய ஒவ்வொரு செய்கையையும்

கவனித்து'' என்பதாகும். 'கவனித்து' என்ற ஒரு சொல்லில் சொல்ல வேண்டியதை 'வாட்ச்' என்கிறார். அவர் சிந்திக்காது பேசுகிறார் என்பதில் என்ன ஐயம்?

ஆகவே, தூய மொழியில் நம் தாய்மொழியைப் பேசினால், சிந்திக்கும் ஆற்றல் வளரும்; சிந்தனையில் தெளிவு பிறக்கும்; அயல் மொழியையும் இலக்கணப் பிழையின்றி கற்கலாம். மொழியில் தூய்மையைக் காப்பாற்றும் பழக்கம் வளர்க்கப்பட்டால் இரு மொழியைக் கற்றவரும் எந்த மொழியைப் பேசினாலும் அதில் தூய்மைக் காப்பார். சிந்திக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்வர். நாமும் நம் குழந்தைகளைத் தூய தமிழில் பேசப் பழக்கினால் அவர்கள் இயல்பாகவே தூயமொழி பேசுவார்கள். சிந்தனைக் குழப்பம் இன்றி சுருக்கமாகப் பேசுவார்கள். அதன் பயனாக உயர்வார்கள்.

தெய்வத்தமிழ்

தமிழ் மொழி தெய்வீக மொழி. பண்டுதொட்டே எல்லாப் பெரும் சமய நூல்கள் பலவும் கொண்ட மொழி தமிழ். திருவிளையாடல் புராணம் "கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோடு அமர்ந்து பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழ்'' என்று பாடுகிறது. அதாவது இறைவனே முதல் தமிழ் சங்கத்தில் அமர்ந்து தமிழ் ஆய்ந்ததாக சொல்லுகின்றார் பரஞ்சோதி முனிவர். இறைவனைத் தமிழ்மொழியால் வழிபட்ட நாயன்மார்களும் ஆழ்வார்களும் நிகழ்த்திய அற்புதங்களை நமது நூல்கள் சொல்கின்றன. இவற்றை நம்புகின்றவர்கள் தமிழ் மொழி ஒரு தெய்வமொழி என்பதை ஒப்புக் கொள்வார்கள். நம்பாதவரும் இந்நூல்களைப் படித்தால் தமிழ் மொழி எவ்வாறு உயர்ந்தவற்றை சிந்திக்க, மேலானவற்றைப் பற்றிக் கொண்டு மேலே செல்ல உதவும் என்பதை உணர்வார்கள். தெய்வத் தமிழைக் கற்பதன் மூலம் மனிதனும் தெய்வத் தன்மை பெறலாம்.

முடிவுரை

மொழியும் பண்பாடும் ஒன்றோடு ஒன்று இணைந்தவை. நம் பண்பாட்டை உணர நம் குழந்தைகள் நம்மொழி இலக்கியங்களைப் படிக்க வேண்டும். நம் பண்பாடு நம் முன்னோர் நமக்கு விட்டுச்சென்ற சொத்து, அதைக் கட்டிக்காத்து வளர்ப்பது நம் கடமை. ஆகவே நம் குழந்தைகள் நம் மொழியைக் கற்க வேண்டும். நம் தமிழ் மொழி ஓர் அழகான மொழி. பண்பட்ட மொழி. நம் முன்னோர் இயற்கையை ஆராய்ந்தார்கள். தாங்கள் கண்டவற்றைச் சொல்ல நல்ல தமிழ்ச்சொற்களை ஆக்கிகொண்டனர். நம் முன்னோர் போன்று நாமும் நமக்குத் தேவையானவற்றை ஆராய வேண்டும். உண்மைகளைக் கண்டு அவற்றைப் பற்றிச் சிந்தித்து அவற்றை நம் மொழியில் எழுத வேண்டும். நம் அறிவை நாம் பெருக்கி நமது மொழியையும் வளர்க்க வேண்டும். நமது பழந்தமிழ்ச் சொற்களை இழக்காது பயன்படுத்த வேண்டும். மொழியைச் சரியாகக் கையாள்பவரே தானாகச் சிந்திக்க முடியும். அவர் சிந்தனையில் தெளிவு இருக்கும். மேலும் நமது மொழி ஒரு தெய்வீக மொழி. அதை நம் குழந்தைகள் கற்றால் அவர்கள் மேலானவற்றைப் பற்றிச் சிந்திப்பார்கள். அதனால் மேன்மை பெறுவார்கள். நம் பண்பாட்டைக் காத்து வளர்க்கவும், நம் குழந்தை களின் சிந்தனையில் தெளிவும் மேன்மையும் ஓங்கவும் நம் குழந்தைகள் நம் மொழியைக் கற்க வேண்டும்.

விடுபூக்கள்

தமிழ்நாடு திருக்குறள் பேரவை தோற்றமும் வளர்ச்சியும்

குறள் மாமணி திருக்குறள் சண்முகனார்

திருவள்ளுவர், வரலாறு போற்றும் வால்டேர், ரூஸோ, லெனின் போன்ற புரட்சியாளர்களுக்கெல்லாம் முன்னோடி. அவர்கள் தங்கள் நாட்டில் புரட்சிக்கு வித்திட்டார்கள் திருவள்ளுவர் உலக மக்கள் அனைவரின் புரட்சிகரமான மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்.

திருவள்ளுவர் உலகிற்கு வழங்கிய திருக்குறள் மனித வாழ்வின் கோட்பாடுகள் அடங்கிய சட்டநூல். மனிதன் வாழ, வளர வழிநடத்தும் வாழ்வியல் நூல். மனிதனின் எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வு காணும் அறநூல். இறைவன் முதல் இல்லறம் வரை தெளிவான சிந்தனைகளைத் தரும் சீரிய நூல்.

இத்தகைய பெருஞ்சிறப்பிற்குரிய திருக்குறள் உலகப்பொதுமறையாக அறிஞர்களால் போற்றப்பட்டு வந்தாலும், சராசரி மக்களிடையே போய்ச் சேராமலிருந்தது. திருக்குறள் ஆய்வாளர்கள் உள்ள நகரங்களில் மட்டுமே அமைப்புகள் இயங்கி வந்தன. ஆனால் இந்த அமைப்புகளுக்குத் திட்டமிட்டுக் கொடுக்கும் தலைமை அமைப்பு இல்லாமலிருந்தது. இந்தச் சிந்தனை பலரிடம் இருந்தன. ஆனால் அதற்குச் செயல் வடிவம் கொடுக்க முடியாத நிலை தொடர்ந்தது.

1973ஆம் ஆண்டு திருப்பத்தூர் தமிழ்ச் சங்கத்தின் கூட்டம் திருத்தளிநாதர் திருக்கோவிலில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து திருக்குறள் ஆர்வலர் கூட்டம் தமிழ்மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடைபெற்றது. மாநில அமைப்பு இல்லாத குறையைப் பல எடுத்துக்காட்டுகள் மூலம் வற்புறுத்தினேன். மகாவித்துவான் தண்டபாணி தேசிகர், திருக்குறள்வேல் ஜி. வரதராசப்பிள்ளை ஆகிய இரு பெரியவர்களும் இக்கருத்துக்கு உறுதுணையாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த நாள் திருக்குறள் ஆர்வலருக்கு ஒரு பொன்னாள். திருக்குறள் இயக்கமாகச் செயல்படத் தொடங்கிய திருநாள். மாநில அமைப்பின் தலைவராகத் தமிழ் மாமுனிவர் குன்றக்குடி அடிகளார் அவர்களும் பொதுச்செயலாளராக திருக்குறள் நா. சண்முகனாரும் பொருளாளராக பு.ரெ. மனோகரனும் ஒரு மனதாகத் தேர்வு செய்யப்பட்டனர். இவ்வமைப்பு விரைந்து செயல்படத் தொடங்கியது. திருச்சியில் விதிமுறைகள் உருவாக்கப்பட்டது தொடர்ந்து திருச்சிராப்பள்ளியில் மூன்று முறை பொதுக்குழுவும் மூன்றுமுறை செயற்குழுக் கூட்டங்களும் நடைபெற்றன.

முதல் மாவட்ட மாநாடு திருச்சிராப்பள்ளியில் நடைபெற்றது. முதல் தமிழ் பயிற்று மொழி மாநாடு நடைபெற்றது. திருக்குறள் இயக்க வரலாற்றில் முதன் முறையாக மாநிலத் திருக்குறள் மாநாடு திருச்சியில் சூலை-1978 -15, 16, ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது. மாநாட்டையொட்டிப் பேராளர்கள் கூட்டம் நடைபெற்றது. அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பேராளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். பின்னர் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்டத்திருக்குறள் பேரவை அமைக்கப்பட்டன. மாநாட்டில் தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார், பேரூர் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.

விசுவாநாதம் திருக்குறளார் வி.முனுசாமி, நீதிபதி இராமகிருஷ்ணன் பாவலரேறு பெருஞ்சித்திரனார், பேராசிரியர்கள் சி. நயினார் முகம்மது, ச. சாமிமுத்து, முனைவர். அவ்வை நடராசன், முனைவர் மெ. சுந்தரம் ஆகியோர் பங்கேற்று அரிய கருத்துக்கள் வழங்கிச் சிறப்பித்தார்கள். அம்மாநாடு திருக்குறள் இயக்க எழுச்சிக்கு வித்திட்டது என்றால் மிகையாகாது. இதைத் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மாநாடுகள் நடைபெற்றன. மாவட்ட மாநாடுகள் நடந்து முடிந்த பின் முறையாக இரண்டாவது மாநில மாநாடு வடஆற்காடு மாவட்டம் இரத்தினகிரியில் 1980 அக்டோபர் 11, 12 ஆகிய இருநாட்கள் நடைபெற்றன. இரத்தினகிரி தவத்திரு பாலமுருகன் அடிமை சுவாமிகள் முழுப்பொறுப்பேற்று நடத்திக் கொடுத்தார்கள். திரு.கொ.மு.நடராசன், புலவர் கன்னியன் செயல்பட்டனர். பொதுச்செயலாளர் என்ற முறையில் அடியேன் 15 நாட்கள் இரத்தினகிரியில் தங்கி மாநாட்டுப் பணிகளுக்குத் துணை நின்றேன். அனைத்து மாநாடுகளுக்கும் முன் கூட்டிச் சென்று துணை நின்ற வேண்டுமென்பது அடிகளார் ஆணை. திருச்சி மாநில மாநாடு போன்றே இரத்தினகிரி மாநில மாநாடும் க.இராசாராம், ஆர்.எம்.வீரப்பன், மதுரை ஆதிமை அமைச்சர்கள் தமிழ்மாமுனிவர், தவத்திரு அழகரடிகள்; திருக்குறளார் திரு.ச.வே. சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க நன்கு நடத்தப்பெற்றது.

தமிழகத்தில் நடைபெற்ற முப்பதுக்கும் மேற்பட்ட மாநாடுகள் அனைத்தும் தமிழ் மாமுனிவர் ஒப்புதலோடு நடைபெற்றதோடு அனைத்து மாநாடுகளிலும் தமிழ்மாமுனிவர் தலைமையேற்றுச் சிறப்பித்தார்கள் (பேரூர் அடிகளார் முயற்சியில் தொடர்ந்து மாநில புலவர் இளங்கீரன் பொறுப்பேற்க கோவையில் பேராளர்கள் மாநாடு நடந்தேறியது. அதனைத் தொடர்ந்து சென்னை மாநகரில் மாவட்டத் தலைவர் கவிஞர் வி.செ.கந்தசாமி அவர்கள் முயற்சியில் மாநிலமாநாடு சீரிய முறையில் நடைபெற்றது.

5வது மாநில மாநாடு மதுரை மாநகரில் 13, 14 - 3 - 93 ஆகிய நாட்களில் நடைபெற்றது முந்தைய மாநாடுகளைப் போன்றே மதுரை மாநாடு சிறப்புற நடைபெற்றது. அறநெறி அண்ணல் லெ.நாராயணன் செட்டியார் திருக்குறள் செம்மல் மணி மொழியன் திருக்குறள் மணி ஆகியோரின் செயற்பாட்டால் மாநாடு முழுப்பொலிவு பெற்றது.

தமிழ் மாமுனிவர் தலைமையில் திரு.பி.டி.ஆர்.பழனிவேல்ராசன், கலையன்னை இராதா தியாகராசன் முனைவர். தமிழண்ணல், முனைவர் முருகரெத்தினம், திருமதி மீனாட்சி முருகரெத்தினம், முனைவர் அவ்வை நடராசன், பேராசிரியர் குழந்தை நாதன், முனைவர் சு.ப. அண்ணாமலை மற்றும் பலர் பங்கு பெற்றுச் சிறப்பித்தார்கள். வழக்கம் போல் மதுரை மாநில மாநாடும் மைல் கல்லாக அமைந்தது. தொடர்ந்து மதுரை மாநாகரில் மாவட்ட மாநாடும் பெருவிழாக்களும் நடத்தி திருக்குறள் இயக்கத்திற்கு வலுவூட்டி வருகிறார்கள். இது போன்று தென்னாற்காடு மாவட்டமும் இரண்டு மாநாடுகளையும் சிறப்பு விழாக்களையும் நடத்தி பேரவைக்குப் பெருமை சேர்த்து வருகிறார்கள். டாக்டர் சி.எம்.பாலதண்டாயுதம் புலவர் நயம்பு அறிவுடை நம்பி ஆகியோரின் பெரும் பணிகள் பாராட்டிற்குரியன. நீண்டகாலத் தொண்டிற்கு சொந்தக்காரர் குறளடியார் புலவர் மொ.பழனிமாணிக்கம் அவர்கள். தஞ்சையில் ஆண்டுதோறும் சிறப்பாக விழாக்கள் எடுப்பதோடு மாணவர் போட்டிகள் வைத்து ஊக்கப்படுத்தி வருவது திருக்குறள் இயக்கத்திற்கு மேலும் வலிமை ஏற்படுத்தி வருகிறது. பெரியார் பிறந்த மண் ஈரோடு. ஈரோடு மாவட்டத்தலைவர் சண்முக சுந்தரம் அவர்கள் திங்கள்தோறும் கூட்டங்கள் நடத்தி குறள் நெறி

பரப்பும் பணியில் முழுமையாக ஈடுபட்டுவருகிறார்.

சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்கள் பிரிக்கப்படாமல் இருந்த பொழுது அம்மாவட்டத்தின் தலைவராகவும் மாநில பேரவையின் பொருளாளராகவும் பணியாற்றி வரும் திரு.ம.பொன்னையா, கவிஞர் நாவுக்கரசு, கவிஞர் ம.முத்தரசு ஆகியோரின் பணிகள் வரலாற்றில் நிற்பவை. நெல்லையில் புலவர் சங்கரன் அவர்களும் தூத்துக்குடியில் புலவர் வேலாயுதம் அவர்களும் தென்கோடியிலிருந்து இயக்கத்திற்கு குரல் கொடுத்து வருகிறார்கள். இவ்வாறு மாவட்டப் பணிகளுக்கென தனிகையேடுகள் வெளியிடவேண்டும். அந்த அளவு பணிகள் நடைபெற்று வருகின்றன.

எங்கள் இதயத்தில் என்றும் கொலுவீற்றிருக்கும் தமிழகத்தின் சமூக விஞ்ஞானி தமிழ் மாமுனிவர் திருக்குறள் இயக்கத்தின் தந்தை - தலைவர் - வழிகாட்டி அடிகளார் பெருமான் முக்தியடைந்தச் செய்தி எங்களை உலுக்கியது. உருகுலையச் செய்தது. நீண்ட சோகத்தில் ஆழ்ந்திருந்தோம். திருக்குறள் இயக்கம் எழுந்து நிற்க முடியுமா? என்று ஏங்கித் தவித்தோம்.

சில நாட்களில் எங்கள் ஏக்கத்தைத் - போக்கும் வகையில் தமிழ்மாமுனிவர் போன்று அதே இலட்சிய நோக்கு அதே உறுதி கொள்கை அருளொழுகும் முகம் கனிந்த பார்வை தாயின் பரிவு, தந்தையின் அரவணைப்பு சொல்லாற்றல் இத்தனையின் மொத்த உருவமாக தமிழ்மாமுனிவரின் மறு உருவமாக, மறுபதிப்பாக கருவூலமாக தவமுனிவராக தவத்திரு பொன்னம்பல அடிகளார் தோற்றமளித்தார்கள். தமிழ்மாமுனிவர் வழியில் சிறிதளவும் பிறழாமல் சுவாமிகள் தோளில் சுமந்தவற்றையெல்லாம் தமது தோளில் சுமந்து தமிழகம் முழுவதும் வலம் வருகிறார்கள்.

அதே விறுவிறுப்போடு தமிழ்நாடு திருக்குறள் பேரவையின் தலைமைப் பொறுப்பேற்று இயக்கி வருகிறார்கள். முப்பது ஆண்டு காலமாகத் தமிழ் மாமுனிவருக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றி வந்தது போல் இன்றும் எங்கள் தவமுனிவர் தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கட்கும் துணையிருந்து பணியாற்றி வருகிறேன். தற்பொழுது தமிழ்நாடு திருக்குறள் பேரவையின் செயல் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளேன். மேலும் முழுநேர ஊழியனாக இருந்து பணியாற்றித் திருக்குறள் இயக்கத்தை வலிமையடையச் செய்வேன். உங்கள் பகுதியில் திருக்குறள் நெறி பரவ என்னை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்களுக்கு முழுநேரமும் பயன்படுவேன்.

இனிமேல்..

ஆர். ஆறுமுகம்

திருச்சிராப்பள்ளி காவல்துறை துணை ஆணையராகப் பணியாற்றும் இவர் சிறந்த கவிஞர் ஆற்றல் மிக்க பேச்சாளர். தமிழின் மீது தணியாத காதலும், திருக்குறள் நெறியில் ஈடுபாடும் கொண்டவர்.

உலகப் படத்தின் எல்லைக் கோடுகள்
உள்ளங் கையின் ரேகைகள் போன்றவை
என்பதை உணர்ந்தால் பிரிவினை வருமா?
வன்முறை வருமா? போர் வெறிதான் வருமா?
இரும்புக் கருவியின் ரத்தப் பசிக்கு
விருந்து படைக்க மனித இறைச்சியா?
சோதனைக் குழாயில் கருவை வளர்ப்பது
துப்பாக்கிக் குழாய்க்குப் பலியாய்க் கொடுக்கவா?
அஞ்ச வைக்கும் அணுகுண் டுகளைநம்
பிஞ்சுக் குழந்தைகள் கோலியா டட்டும்
குண்டுகள் பொழியும் பீரங்கி வாயில்
வெண்பு றாக்கள் இனி முட்டையிடட்டும்
டாங்கி இனிமேல் படைவண்டி அல்ல!
தண்ணீர் வண்டியாய் மாற்றி அமைப்போம்!
எறிகுண்டு களை இனிபூச் செண்டாக்குவோம்
ஏவுகணைகளை அடுப்பில் எரிப்போம்!
எதிரி என்கிற வார்த்தையை இனிநம்
உதடுகளும் பழக்கிட வேண்டாம்.
ரிவால்வர்கள் இல்லாது - காவல் துறையின்
சவால்களை நாம் சமாளிக்க முயல்வோம்

வள்ளுவனை எண்ணின் நலம் கோடி!

முப்பாலை மொழிந்த நல்முனி வன்தமிழ்
மூன்றின் தனித்த நற் பெருந் தலைவன்
மூவறம் கூறும் முதல்நூலாம் குறளைக்
குவலயம் வாழநெறி வகுத்தோனே வள்ளுவன்
திருக்குறள் தமிழனின் தனிச்சொத் ததுவாம்
தித்திக் கும்தமிழ் மலர்க்கொத் ததுவாம்
இரண்டே இரண்டு அடிதா னிருக்கும்
இந்த உலகே அதனுள் இருக்கும்
அறத்துப் பாலோ நல்லறம் உரைக்கும்
அடுத்தது பொருட்பால் இருளையே விலக்கும்
முறைப்படி இன்பத் துப்பால் இருக்கும்
முப்பாலும் வாழ்வாங்கு வாழ வைக்கும்
நெஞ்சைக் குறளிடம் தாரீர்! நமது
சஞ்சலம் போக்கும் பாரீர்! வள்ளுவன்
தஞ்சமீந்து நம்மைக் காப்பான். அவனைக்
கொஞ்சம் எண்ணின் கோடி நலம்வரும்.

குரு. கல்யாணசுந்தரம்
செயலாளர்.
திருக்குறள் அஞ்சல்வழிக் கல்விமையம்
திருச்சிராப்பள்ளி.